# திருவாசக

## ஒளிநெறிக் கட்டுரை

3138

3138

T03138

R001H01

கழக
வெளியீடு

கழக வெளியீடு : கஉஎ௬

# திருவாசக ஒளிநெறிக் கட்டுரை

தணிகைமணி, ராவ்பகதூர்

வ சு செங்கல்வராய பிள்ளை,

எழுதியது

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

திருநெல்வேலி - 6. சென்னை - 1.

1966

வடக்குப்பட்டு சுப்பிரமணிய செங்கல்வராய பிள்ளை (1883)

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.

Ed 1 December 1966

Q23:417x5,1:g
K6

TIRUVAASAGA OLINERIK KATTURAI

Appar Achakam, Madras-1.

# பதிப்புரை

சித்தாந்த சைவச் செந்நெறியினுக்குரிய முதல்வர் நால்வர். துணைவராய்க் காணப்படுபவர் இருபத்து மூவர். இவ் விருபத்தெழுவராலும் திருவருளால் பாடப்பட்டுள்ள திருமுறைகள் பன்னிரண்டு. இப் பன்னிரண்டனுள்ளும் நால்வரால் பாடியருளப்பட்ட திருமுறைகள் எட்டு. இவ் வெட்டும் ஒருபுடை யொப்பாகச் சிவபெருமான்றன் எண்குணமென ஓதுப. இவற்றுள் மூவர் முதலிகள் அருளியன ஏழு திருமுறைகள். இவ்வேழும் திருத் தேவாரம் எனவும், அடங்கன்முறை எனவும் வழங்கப் பெறும். அடங்குதலென்பது திருவடிக்கீழ் மீளா அடிமை ஆளாய் அடங்குதல். அப்பேறு அருள அவன் திருச் செவியில் நம் காதலை அறிவித்தல் வேண்டும்.

அவ் வுண்மை பெறப்படுபவதை நாம், முதற் றிருமுறை முதற்கண் "**தோடுடைய செவியன்**" எனத் தொடங்கி ஏழாந் திருமுறையின் முடிவில் "**அறிவிப்பதே**" என முடிந்து காணப்படும் இருபெருந் தனித்தமிழ் மந்திரங்கள் நின்று திகழ்வதான் உணரலாம். எட்டாந் திரு முறையாகத் திருவாசகமும் திருக்கோவையாரும் விளங்கு கின்றன. மீளா ஆளாம் மெய்யடியார்கள், அவன் திருவடிப்பேறும் பேரின்பப் பேரூதியத்தினைப் பெற்று வாழ்வர். அதற்குத் துணையாந் தனித்தமிழ் மந்திரம் "**நமசிவய**" என்ப. திருவாசகம் திருவருளால் அம் மந்திரத்தால் தொடங்கப்பெற்று, அதுவே பேரூதியம் என்னும் உண்மையினைத் திருக்கோவையாரின் முடிவில் "**ஊதியமே**" என்னும் மறைமொழியான் முற்றுப்பெறு கின்றது. அம்முறையான் அஃது எட்டாந் திருமுறையாக அமைந்தது திருவருட் பொருத்தமுடையதேயாம். அம் மட்டுமன்று, திருவாசகத்தின்கண் காணப்படும் செழுந் தமிழ் மந்திரப் பாட்டுக்கள் அறுநூற்று ஐம்பத்தாறுகும். சூ௫சூ + கஎ + அ. இவ்வெண்கள் கூட்டுமுறையான் அமைந் துள்ள முடிவில் காணப்படும் எண் எட்டு. அதனானும் திருவாசகம் எட்டாந் திருமுறையாம் அமைவு காண்க.


இத் திருமுறைக்கண் காணப்படும் சிவபெருமானின் திருப்பெயர்கள், தன்மைகள், அருளிப்பாடுகள், உலகுயிர் களோடு அவனும் அவன்றன் அறிவாற்றலாகிய திரு வருளும் ஒன்ருய் வேருய் உடனுய் இயைந்து நிற்கும் மெய்ப்புணர்ப்பு நிலையும், வரலாற்று முறைகளும், பழைமை எனப்படும் புராணக் கதைகளும், வேறு பல குறிப்புக் களும், ஒப்புமைப் பகுதிகளும், இலக்கணப் பகுதிகளும் தெளிவாய்த் தெரிந்து அத் திருமுறைகளை உலகோர் ஓதி உய்தி பெறுதற்கு மிகத் தெளிவாம் விளக்கக் கருவி நூலாகத் திகழ்வன சைவச் சான்ருேராம் **தணிகைமணி. வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள் யாத்த தேவார ஒளி நெறிக் கட்டுரைகளும், ஒளிநெறி நூல்களுமாகும்.**

அவைபோன்று இப்பொழுது **"திருவாசக ஒளிநெறிக் கட்டுரை"** அப்பெரியாரைக்கொண்டு எழுதுவித்துக் கழக வழி வெளிவருகின்றது. இத்தகைய அரியபெரிய திருத் தொண்டினுக்கு அப்பெரியாரவர்களே நனிமிகப் பொருந்திய தக்காராவர். அவர்கட்குக் கழகத்தாருடைய உளங்கனிந்த நன்றியும் வணக்கமும் என்றென்றும் உரியவாகுக.

இந் நூலின்கண் பெருந்தலைப்புக்களாக ௩௭௨ தலைப் புக்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு தலைப்புக்கும் பல்வேறு உட்டலைப்புக்களும் காணப்படுகின்றன. இவையனைத்தும் திருவாசகம் பயில்வார்க்குப் பெருந்துணையாக இருக்கும்.

இப் பெரியரால் யாக்கப்பட்ட "திருவாசக ஒளி நெறியும்" அச்சாகி வருகின்றது. திருக்கோவையாருக்கும் எழுதிவருகின்றனர். இவர்களுக்குத் திருத்தணிகைத் திருமுருகப்பெருமான் திருவருளால் அமைந்த ஞான முதிர்ச்சி போன்று அகவை முதிர்ச்சியும் அமைந்துள்ளது. இப் பெரியாரவர்கட்குச் சிவனருளால் நூற்ருண்டின் மேல் அகவையும், உடல் வலிமையும, உள்ளத்துரனும், திருத் தொண்டின் சீரும் அமைய அன்னவன் அருள்வாருக.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**



தணிகைமணி,

திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.

உ

திருத்தணிகேசர் துணை

# முகவுரை

தேனூறும் வாசகங்கள் அறுநூறும் திருக்கோவை
நானூறும் அமுதூற மொழிந்தருளும் நாயகனை
வானூறுங் கங்கைநிகர் மாணிக்க வாசகனை
யானூறு படாதவகை இருபோதும் இறைஞ்சிடுவேன்.

செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூர் அன்ப!
பா எனப் படுவ(து) உன் பாட்டு
பூ எனப் படுவது பொறிவாழ் பூவே.

எனச் சிவப்பிரகாச சுவாமிகளாற் பாராட்டப்பட்டதும், அம்பலவாணரே தம் கைப்பட முதல் முதல் உகந்து எழுதினதுமான நூல்கள் திருவாசகமும் திருக்கோவை யாரும். இந்நூல்கள் பன்னிரு திருமுறைகளுள் 8 ஆவது ஆகும்; திருத்தணிகேசர் திருவருளால் சம்பந்தர், அப்பர், சுந்தரர் அருளிய ஏழு திருமுறைகளுக்கு உரிய ஒளிநெறியும், ஒளிநெறிக் கட்டுரையும் எழுதி முடித்து அச்சேற 31 ஆண்டுகள் ஆயின. 1932 ஆம் ஆண்டில் ஆரம்பித்த இப்பணி எனக்கு 80 வயது முடிந்து ஒரு மாதத்தில் நிறைவேறிற்று.

பின்னர்த், திருவாசக ஒளிநெறியும் அதன் கட்டுரையும் எழுதிமுடிக்கச் சுமார் மூன்று ஆண்டுகள் ஆயின. மூப்பின் காரணமாகப் பலவித நோய்களுக்கு ஈடாகிக், கை எழுத முடியாத நிலையிற் போனபடியால் நான் சொல்லி எழுது வதற்கு ஓர் ஆள் வேண்டி இருந்தது. நூல்கள் முடியுமோ முடியாதோ என்ற ஐயம் நிகழும் நிலையில் இரண்டொரு முறை பலத்த நோய் உற்றது. அப்போது தணிகையெம் பெருமானை வேண்டிப் பத்துப் பாடல்கள் சென்ற ஆண்டு

(1965) ஜனவரி ஆண்டவன் அருளால் பாடினேன். அதிலிருந்து ஒரு பாடல் பின்வருமாறு :

என்னை ஆண்டருள் தணிமலை முருக !
 என்னை நீஒரு பொருளெனக் கருதிப்
பொன்னை யேநிகர் வாசக நூலின்
 பொருளை ஆய்ந்து வகுத்திடும் வேலை
தன்னை முன்தந்து பின்னரே நோயைத்
 தடைசெ யும்படி தந்ததும் ஏனோ !
உன்னை யேநம்பும் ஏழையை இங்ஙன்
 ஒறுப்பதும் உன்றன் அருளினுக் கழகோ !

ஏழைக்கிரங்கும் பெருமாள் திருவருள் புரிய நூல்கள் ஒருவாறு முடிந்தன. நோயிடையே எழுதப்பட்டபடியால் நூல்களிற் பிழைகள் இருக்கக்கூடும்; சில விஷயங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தலைப்புக்களில் வரவேண்டி இருந்தன. அவைதமைக் "கூறியது கூறல்" என்னும் குற்றத்திற் படா என ஆன்றோர் கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

இந்நூல்களை எழுதுவதில் எனக்கு அடிக்கடி ஊக்கம் தந்தவரும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளரும், சைவம் தழைக்கவும் தமிழ் ஓங்கவும் ஆண்டவனால் இம் மண்ணுலகிற்கு அனுப்பப்பட்டவருமான திருவாளர் வ. சுப்பையா பிள்ளை அவர்களும், அவர்கட்கு உறுதுணையாக நிற்கும் கழக அன்பர்களும் தணிகையெம்பெருமான் திருவருளால் நோயின்றிப் பல்லாண்டு சகல இன்பத்துடன் வாழ்வார்களாக.

18, வெங்கடராமன் தெரு
சிவாலயா
சென்னை-28.
4—12—1966

வ. சு. செங்கல்வராய பிள்ளை.

# உள்ளுறை

## I. சிவபிராற் பகுதி


| கட்டுரைத் தலைப்பின் எண் | பொருள் | ஒளிநெறியில் இத்தலைப்பிற்குரிய தலைப்பின் எண் | பக்க. எண் |
|---|---|---|---|
| 1. | சிவபிரான் அட்டமூர்த்தி | 1 | 1 |
| 2. | ,, அட்ட வீரச் செயல் | 2 | ,, |
| | (1) அந்தகாசுரனைச் சங்கரித்தது | 2 (1) | ,, |
| | (2) காமனை எரித்தது | 2 (2) | ,, |
| | (3) காலனை அட்டது | 2 (3) | 2 |
| | (4) சலந்தரனைத் தடிந்தது | 2 (4) | ,, |
| | (5) தக்கன் வேள்வியைத் தகர்த்தது | 2 (5) | ,, |
| | (6) திரிபுரத்தை எரித்தது | 2 (6) | 6 |
| | (7) பிரமன் சிரத்தை அறுத்தது | 2 (7) | 7 |
| | (8) யானையை அட்டது | 2 (8) | 8 |
| 3. | (1) சிவபிரான் அணிவன, சூடுவன | 3 | ,, |
| | (2) அரையில் அணிவன | 4 | ,, |
| | (3) காதில் அணிவன | 5 | ,, |
| | (4) காலில் அணிவன | 6 | ,, |
| | (5) கையில் அணிவன-ஏந்துவன | 7 | 9 |
| | (6) சிரசில்-சடையிற் சூடுவன | 8 | ,, |
| 4. | சிவபிரான் அபிடேகப் பொருள்கள் | 9 | 10 |
| 5. | ,, அர்த்த நாரீசுரர் | 10 | ,, |
| 6 | ,, அறம் உரைத்தது | 11 | 11 |
| 7. | ,, ஆடை, உடை | 12 | ,, |
| 8. | ,, இருவர்க்கு அரியர் | 13 | 12 |
| 9. | ,, உறைவிடம் | 14 | ,, |
| 10. | ,, எடுத்த வேடமும், செய்த லீலைகளும் | 15 | 13 |
| 11. | ,, ஐந்தெழுத்து | 16 | 16 |
| 12. | ,, ஐந்தொழில் | 17 | ,, |
| 13. | ,, கருணை [19(76)42] | 18 | 17 |

| | | |
|---|---|---|
| 14. சிவபிரான் குலம் | 19 | 17 |
| 15. ,, கொடி | 20 | ,, |
| 16. ,, சடை | 21 | ,, |
| 17. ,, சுடர்-ஒளி-சோதி | 22 | 18 |
| 18. ,, தசாங்கம் | 23 | 19 |
| 19. ,, தன்மை-பெருமை | 24 | 20 |
| (1) அச்சம் ஊட்டுபவர் | 24 (1) | ,, |
| (2) அட்டமூர்த்தி | 24 (2) | ,, |
| (3) அண்மை | 24 (3) | ,, |
| (4) அணு | 24 (4) | 21 |
| (5) அத்துவிதம் | 24 (5) | ,, |
| (6) அந்தணர் | 24 (6) | ,, |
| (7) அப்பால் நின்றவர் | 24 (7) | ,, |
| (8) அமுது (தலைப்பு 40) | 24 (8) | ,, |
| (9) அரசு ( ,, 41) | 24 (9) | ,, |
| (10) அரியர் | 24 (10) | 22 |
| (11) அருமை | 24 (11) | ,, |
| (12) அருவம், உருவம் [தலைப்பு 19 (48)] | 24 (12) | ,, |
| (13) அருள் | 24 (13) | ,, |
| (14) அல்லல்-இடர் களைவர் | 24 (14) | 23 |
| (15) அழகு | 24 (15) | ,, |
| (16) அழித்தல், அழிப்பர் | 24 (16, 17) | ,, |
| (17) அழிவு இல்லாதவர் | 24 (18) | ,, |
| (18) அளவிலாதவர் | 24 (19) | ,, |
| (19) அறிந்தவர் | 24 (20) | ,, |
| (20) அறியப்படாதவர் -அகப்படாதவர் | 24 23) | ,, |
| (21) அறிவு | 24 (22, 23) | 24 |
| (22) ஆசை | 24 (24) | ,, |
| (23) ஆசை தீர்ப்பார் | 24 (25) | ,, |
| (24) ஆட்கொள்ளுதல் | 24 (26) | ,, |
| (25) ஆட்டி வைப்பவர் | 24 (27) | ,, |
| (26) ஆண்-பெண்-அலி | 24 (28) | ,, |

| | | |
|---|---|---|
| (27) ஆதி-அந்தம்-நடு | 24 (29) | 25 |
| (28) ஆள்வார் | 24 (30) | ,, |
| (29) ஆற்றல் | 24 (31) | ,, |
| (30) ஆறு | 24 (32) | ,, |
| (31) ஆனந்தம் | 24 (33) | ,, |
| (32) இயல்பு | 24 (34) | ,, |
| (33) இயற்கை | 24 (35) | ,, |
| (34) இருள் (அஞ்ஞானம்) மையல் நீக்குவர் | 24 (36-1) | 26 |
| (35) இருளாவார் | 24 (36-2) | ,, |
| (36) இன்ப உருவத்தினர் | 24 (37) | ,, |
| (37) இன்ப துன்பம் ஆயினோர் | 24 (38) | ,, |
| (38) இன்ப துன்பம் இல்லாதவர், உள்ளவர் | 24 (39) | ,, |
| (39) இன்பம் பயத்தல் | 24 (40) | ,, |
| (39A) இன்பவெள்ளம், இன்பக்கடல் | 24 (41) | ,, |
| (40) இனியர் | 24 (42) | 27 |
| (41) ஈசன் | 24 (43) | ,, |
| (42) உடைமை, உடையான் | 24 (44) | ,, |
| (43) உணர்ச்சியில் கொள்ளப் படாதவர் | 24 (45) | ,, |
| (44) உணர்வு | 24 (46) | ,, |
| (45) உம்பரான் | 24 (47) | ,, |
| (46) உயர்த்துவர்-தாழ்த்துவர் | 24 (48) | 28 |
| (47) உயிர் | 24 (49) | ,, |
| (48) உருவம், அருவம் [தலைப்பு 19(12)] | 24 (50) | ,, |
| (49) உரை-உணர்வு | 24 (51) | ,, |
| (50) உறவு | 24 (52) | ,, |
| (51) ஊர் | 24 (53) | ,, |
| (52) ஊனை உருக்குதல், ஊனிற் புகுதல் | 24 (54) | ,, |
| (53) எங்கும் நிறைந்தவர் | 24 (55) | 29 |
| (54) எட்டுதற்கு அரிய தூரத்தில் உள்ளவர் | 24 (56) | ,, |

| | | |
|---|---|---|
| (55) எத்தர் | 24 (57) | 29 |
| (56) எதிரான பொருளினர் | 24 (58) | ,, |
| (56A) எல்லா உயிருமாய் அல்லையாய் | 24 (59) | ,, |
| (57) எல்லாம் அறிவர் | 24 (60) | ,, |
| (58) எல்லாம் கடந்தவர் | 24 (61) | 30 |
| (59) எல்லாம் கேட்டல் | 24 (62) | ,, |
| (60) எல்லாம் தருவர் | 24 (63) | ,, |
| (61) எல்லாம் தானே | 24 (64) | ,, |
| (62) எல்லையில்லாதவர் | 24 (66) | ,, |
| (63) எழில் | 24 (67) | ,, |
| (64) எளியர் | 24 (68) | ,, |
| (65) ஒப்பு-ஒப்பிலி | 24 (69) | 31 |
| (66) ஒருவன்-ஒன்று | 24 (70) | ,, |
| (67) ஒளி (தலைப்பு 17) | 24 (71) | ,, |
| (68) ஒளித்தல்-மறைத்தல் [19(74)] | 24 (72) | ,, |
| (68A, B) என்றும் இலார், அல்லர் | | ,, |
| (69) ஓங்காரம் | 24 (75) | 32 |
| (70) கட லாவர் | 24 (76) | ,, |
| (71) கதியாவர் | 24 (77) | ,, |
| (72) கரணம் ஆவார் | 24 (78) | ,, |
| (73) கரணம் கடந்தவர் | 24 (79) | ,, |
| (74) கரத்தல் [19 (68)] | 24 (80) | ,, |
| (75) கரு | 24 (81) | ,, |
| (76) கருணை (13, 42) | 24 (82) | 33 |
| (77) கருத்து | 24 (83) | ,, |
| (78) கரும்பு | 24 (84) | ,, |
| (79) கலை | 24 (85) | ,, |
| (80) கள்ளம் | 24 (86) | ,, |
| (81) கன்னல் | 24 (87) | ,, |
| (82) கனி (பழம்) | 24 (88) | 34 |
| (83) காத்தல் | 24 (89) | ,, |
| (84) காரணன் | 24 (90) | ,, |
| (85) காலம் ஆவார் | 24 (91) | ,, |
| (86) குணம் | 24 (92) | ,, |

| | | |
|---|---|---|
| (87) குற்றம் இல்லாதவர் | 24 (93) | 34 |
| (88) குறி | 24 (94) | ,, |
| (89) கேடிலி | 24 (95) | 35 |
| (90) கொடை | 24 (96) | ,, |
| (91) கொழுந்து | 24 (97) | ,, |
| (92) கொள்கை | 24 (98) | ,, |
| (93) கோயில் | 24 (99) | ,, |
| (94) கோலம்-திரு ஓலக்கம் | 24 (100, 126) | ,, |
| (95) சாந்து அணி சுந்தரம் | 24 (101) | ,, |
| (96) சார்தல் | 24 (102) | 36 |
| (97) சிட்டர் | 24 103) | ,, |
| (98) சித்தர் (தலைப்பு 61 பார்க்க) | 24 (104) | ,, |
| (99) சிவபதம் | 24 (105) | ,, |
| (100) சீர் | 24 (106) | ,, |
| (101) சீலம் | 24 (107) | ,, |
| (102) சுற்றத் தொடர்பு | 24 (108) | ,, |
| (103) செயல் | 24 (109) | 37 |
| (104) செல்வம்-செல்வர் | 24 (110) | ,, |
| (105) சேவகன் | 24 (111) | ,, |
| (106) சொற்பதம் கடந்தவர் | 24 (112) | ,, |
| (107) ஞானம் | 24 (113) | ,, |
| (108) தகவு (பெருந்தன்மை) | 24 (114) | ,, |
| (109) தத்துவர் | 24 (115) | ,, |
| (110) தந்தை-தாய் | 24 (116-1-3, 122) | 38 |
| (111) தயை | 24 (117) | ,, |
| (112) தலைவர் | 24 (118) | ,, |
| (113) தற்போதம் ஒழிப்பர் | 24 (119) | ,, |
| (114) தன்மை | 24 (120) | ,, |
| (115) தனியர் | 24 (121) | 39 |
| (116) திகைப்பு | 24 (123) | ,, |
| (117) திசை | 24 (124) | ,, |
| (118) திரு | 24 (125) | ,, |
| (119) திறம் | 24 (127) | 40 |
| (120) தீ | 24 (128) | ,, |

| | | |
|---|---|---|
| (121) தீமை-நன்மை | 24 (129) | 40 |
| (122) துஷ்ட நிக்ரகம் | 24 (130) | ,, |
| (123) துணை | 24 (131) | ,, |
| (124) துயர்-துன்பம் துடைப்பார் | 24 (132) | 41 |
| (125) துரியம் கடந்தவர் | 24 (133) | ,, |
| (126) துவந்துவங்கள் தூய்மை செய்தல் | 24 (134) | ,, |
| (126A) துன்பம் ஆயினர் | 24 (135) | ,, |
| (127) தூயர் | 24 (136) | ,, |
| (128) தேசு | 24 (137) | ,, |
| (129) தேர்தல் | 24 (138) | ,, |
| (130) தேவர்க்கு மூத்தவர் | 24 (139) | 42 |
| (131) தேற்றம்-தெளிவு | 24 (140) | ,, |
| (132) தேன் | 24 (141) | ,, |
| (133) தொன்மை | 24 (142) | ,, |
| (134) தோழம் | 24 (143) | ,, |
| (135) தோழன் | 24 (144) | 43 |
| (136) தோற்றம் | 24 (145) | ,, |
| (137) நலம் | 24 (146) | ,, |
| (138) நன்மை | 24 (147) | ,, |
| (139) நாற்றம் | 24 (148) | ,, |
| (140) நித்தர் | 24 (149) | ,, |
| (141) நிலையர்-நிலைத்திருப்பவர் | 24 (150) | ,, |
| (142) நிற்பது-செல்வது | 24 (151) | 44 |
| (143) நிறைவு | 24 (152) | ,, |
| (144) நினைவு | 24 (153) | ,, |
| (145) நினைவு-மறதி | 24 (153) | ,, |
| (146) நீதி | 24 (154) | ,, |
| (147) நுண்மை | 24 (155) | ,, |
| (148) நெறி | 24 (156) | ,, |
| (149) நேரிலார் | 24 (157) | ,, |
| (150) நோக்கு | 24 (158) | 45 |
| (151) பசு-பாசம் அறுப்பவர் | 24 (159) | ,, |
| (152) படைத்தல் | 24 (160) | ,, |

| | | |
|---|---|---|
| (153) படையாட்சி | 24 (161) | 45 |
| (154) பண்பு | 24 (162) | ,, |
| (155) பத்தி | 24 (163) | ,, |
| (156) பந்தம் அறுப்பார் | 24 (165) | ,, |
| (157) பந்தமும்-வீடும் | 24 (166) | ,, |
| (158) பரப்பு அறுப்பார் | 24 (167) | 46 |
| (159) பரம்-பராபரம் | 24 (168) | ,, |
| (160) பரிசு | 24 (169) | ,, |
| (161) பலவாகி நிற்பவர் | 24 (170) | ,, |
| (162) பவளம் | 24 (171) | ,, |
| (163) பழைமை | 24 (172) | 47 |
| (164) பளிங்கு | 24 (173) | ,, |
| (165) பாசம்-பற்று அறுப்பார் | 24 (175) | ,, |
| (166) பாதி-முற்று | 24 (176) | ,, |
| (167) பார்ப்பான் | 24 (177) | ,, |
| (168) பால் | 24 (178) | ,, |
| (169) பாவம் அறுப்பார் | 24 (179) | 48 |
| (170) பிணக்கு | 24 (180) | ,, |
| (171) பிணி தீர்ப்பவர் | 24 (181) | ,, |
| (172) பித்தர் | 24 (182 1) | ,, |
| (173) பித்து ஏற்றுவர் | 24 (182 2) | ,, |
| (174) பிழை பொறுப்பர் | 24 (183) | 49 |
| (175) பிறக்க வைப்பார் | 24 (184) | ,, |
| (176) பிறப்பு அறுப்பார் | 24 (185) | ,, |
| (177) பிறப்பு இறப்பு, தோற்றம் அழிவு இலாதவர் | 24 (186) | ,, |
| (178) புகழ்-புகழ்ச்சி-கீர்த்தி | 24 (187) | ,, |
| (179) புதுமையர்-பின்னுனவர் | 24 (188) | ,, |
| (180) புலன்களுக்கு எட்டாதவர்-புலன்களை வென்றவர் | 24 (189) | 50 |
| (181) புனிதர் | 24 (190) | ,, |
| (182) பூமிக்கு எழுந்தருளுதல், பூமியில் பயிலுதல் | 24 (191) | ,, |
| (183) பெருமை | 24 (192) | ,, |

| | | |
|---|---|---|
| (184) பெற்றி (தன்மை பார்க்க) | 24 (193) | 51 |
| (185) பேச்சு | 24 (194) | ,, |
| (186) பேதம் | 24 (195) | ,, |
| (187) பொய்ம்மை | 24 (196) | ,, |
| (188) பொருள் | 24 (197) | ,, |
| (189) பொறுமை | 24 (198) | 52 |
| (190) பொன் | 24 (199) | ,, |
| (191) போக்கு-வரவு-புணர்வு இலாதவர் | 24 (200) | ,, |
| (192) போகம் | 24 (201) | 53 |
| (193) மணவாளன்-மணாளன் | 24 (202) | ,, |
| (194) மணி | 24 (203) | ,, |
| (195) மரகதம் | 24 (204) | ,, |
| (196) மருந்து | 24 (205) | ,, |
| (197) மருள் கொடுப்பர் | 24 (206) | ,, |
| (198) மலம் அறுப்பர் | 24 (207) | ,, |
| (199) மலை | 24 (208) | 54 |
| (200) மனவாசகம் | 24 (209) | ,, |
| (201) மாணிக்கம் | 24 (210) | ,, |
| (202) மால் | 24 (211) | ,, |
| (203) முத்தன், முத்தி | 24 (212) | ,, |
| (204) முத்து | 24 (213) | ,, |
| (205) முத்தொழில் | 24 (214) | ,, |
| (206) முழு முதல்-முதல்வர்-முன்னவர் | 24 (215) | 55 |
| (207) முனிவர் | 24 (216) | ,, |
| (208) மூர்த்தி | 24 (217) | ,, |
| (209) மூவேந்தர் ஆவர் | 24 (218) | ,, |
| (210) மெய்யர் | 24 (219) | ,, |
| (211) மேகம் | 24 (220) | ,, |
| (212) யாவரும் பெற உற்றவர் | 24 (221) | 56 |
| (213) யோகம் | 24 (222) | ,, |
| (214) வண்ணம் | 24 (223) | ,, |
| (215) வயிரம் | 24 (224) | ,, |

| | | | |
|---|---|---|---|
| (216) | வள்ளல் | 24 (225) | 56 |
| (217) | வார்த்தை | 24 (226) | ,, |
| (218) | வாழ்வு | 24 (227) | ,, |
| (219) | வானம் பரவெளி ஆவர் | 24 (228) | 57 |
| (220) | விகிர்தர் | 24 (229) | ,, |
| (221) | வித்தகர் | 24 (230) | ,, |
| (222) | வித்து | 24 (231) | ,, |
| (223) | விருத்த குமாரர் | 24 (232) | ,, |
| (224) | விளக்கு | 24 (233) | ,, |
| (225) | விளைவு | 24 (234) | ,, |
| (226) | வினையை ஒழிப்பவர் | 24 (235) | 58 |
| (227) | வீடு ஆவர்-வீடு அருளாவர் | 24 (236) | ,, |
| (228) | வீரம் | 24 (237) | ,, |
| (229) | வெள்ளம் | 24 (238) | ,, |
| (230) | வெளி | 24 (239) | ,, |
| (231) | வேடம்-வடிவு | 24 (240) | ,, |
| (232) | வேறுனவர் | 24 (241) | 59 |
| (233) | வைப்பு | 24 (242) | ,, |
| 20. (i) | சிவபிரான் திருவுருவம் | 25 (1) | ,, |
| 20. (ii) | ,, நிறம் | 25 (2) | 61 |
| 21. | சிவபிரான் நாமமும், விளியும் | 26, 27 | 62 |
| 22. | ,, நாம விசேடம் | 28 | 63 |
| 23. | ,, திருவடி | 29 | 64 |
| 24. | ,, நஞ்சண்டது | 30 | 65 |
| 25. | ,, நடம் | 31 | 66 |
| 26. | ,, படை | 32 | 68 |
| 27. | ,, பாம்பாட்டியது | 34 | 70 |
| 28. | ,, மாலைகள் | 35 | ,, |
| 29. | ,, முத்தொழில் | 36 | ,, |
| 30. | ,, மூவர் கோ | 37 | ,, |
| 31. | ,, வாகனம் | 38 | 71 |
| 32. | ,, வியாபகம் | 39 | 72 |
| 33. | ,, விரும்பின-விரும்புவன | 40 | ,, |
| 34. | ,, விளையாட்டு | 41 | ,, |

| | | | |
|---|---|---|---|
| 35. | சிவபிரான் வேடம் | 42 | 72 |
| 36. | சிவபிரானல் தண்டிக்கப் பட்டவர்கள் | 43 | 73 |
| 37. | சிவனும் அண்டங்களும் | 44 | ,, |
| 38. | ,, அடியாரும் | 45 | ,, |
| 39. | ,, அடியர் அல்லாதாரும் | 46 | 74 |
| 40. | ,, அமுதும் [19(8)] | 47 | ,, |
| 41. | ,, அரசும் [19(9)] | 48 | 75 |
| 42. | ,, அருளும் [19(76)] | 49 | ,, |
| 43. | ,, அன்பும் பத்தியும் | 50 | ,, |
| 44. | ,, ஆகமமும் | 51 | ,, |
| 45. | ,, இசையும் | 52 | ,, |
| 46. | ,, இந்திரனும் | 53 | 76 |
| 47. | ,, இருவரும் | 54 | ,, |
| 48. | ,, உயிரும், ஊனும் | 55 | ,, |
| 49. | ,, உலகமும் | 56 | ,, |
| 50. | ,, எரியும் | 57 | 77 |
| 51. | ,, ஐம்புலனும் | 58 | ,, |
| 52. | ,, கங்கையும் | 59 | ,, |
| 53. | ,, கங்கையும், திங்களும் | 60 | ,, |
| 54. | ,, கடலும் | 61 | 78 |
| 55. | ,, கணங்களும் | 62 | ,, |
| 56. | ,, கல்வியும் | 63 | ,, |
| 57. | ,, காலமும் | 65 | ,, |
| 58. | ,, காளியும் | 66 | 79 |
| 59. | ,, கொன்றையும் | 67 | ,, |
| 60. | ,, சமயங்களும் | 68 | ,, |
| 61. | ,, சித்தரும் [19(98)] | 69 | ,, |
| 62. | ,, சுடுகாடும் | 70 | ,, |
| 63. | ,, ஞாயிறும் | 71 | 80 |
| 64. | ,, ஞானமும் | 72 | ,, |
| 65. | ,, தமிழும் | 73 | ,, |
| 66. | ,, தலமும் | 74 | ,, |
| 67. | ,, தவமும், தவத்தினரும் | 75, 76 | ,, |

| | | | |
|---|---|---|---|
| 68. | சிவனும் தானவரும் | 77 | 80 |
| 69. | ,, திங்களும் | 78 | ,, |
| 70. | ,, திருநீறும் | 79 | 81 |
| 71. | ,, திருமாலும் | 80 | ,, |
| 72. | ,, தேவர்களும் | 81 | ,, |
| 73. | ,, தேவியும் | 82 | 82 |
| 74. | ,, தேவியும், அடியார்களும் | 83 | 83 |
| 75. | ,, தேவியும் கங்கையும் | 84 | ,, |
| 76. | ,, நரகமும் | 85 | ,, |
| 77. | ,, நூலும் | 86 | 84 |
| 78. | ,, பஞ்ச பூதமும் | 87 | ,, |
| 79. | ,, பலியும் | 88 | 85 |
| 80. | ,, பாட்டும் | 89 | ,, |
| 81. | ,, பாண்டிய நாட்டு அரசாட்சியும் | 90 | ,, |
| 82. | ,, பாண்டியனும் | 91 | 86 |
| 83. | ,, பாதாளத்தாரும் | 92 | ,, |
| 84. | ,, பிரமனும் | 93 | ,, |
| 85. | ,, புலனும் | 94 | ,, |
| 86. | ,, மணமும் | 95 | 87 |
| 87. | ,, மலையும் | 96 | ,, |
| 88. | ,, மறையும் | 97 | ,, |
| 89. | ,, மனமும் | 98 | 88 |
| 90. | ,, மாயமும் | 99 | ,, |
| 91. | ,, முத்தியும் | 100 | ,, |
| 92. | ,, முருக வேளும் | 101 | ,, |
| 93. | ,, முனிவர்களும் | 102 | ,, |
| 94. | ,, மெய்ம்மையும் [19(210)] | 103 | 89 |
| 95. | ,, மேகமும் | 104 | ,, |
| 96. | ,, ராவணனும் | 105 | ,, |
| 97. | ,, வாத்தியமும் | 106 | 90 |
| 98. | ,, வானும் | 107 | ,, |
| 99. | ,, விசயனும் | 108 | ,, |

| | | | |
|---|---|---|---|
| 100. | சிவனும் வெண்மையும் | 109 | 91 |
| 101. | ,, வேட்டுவ உருவமும் | 110 | ,, |
| 102. | ,, வேடமும் | 111 | 92 |
| 103. | ,, வேதமும் | 112 | ,, |
| 104. | ,, வேள்வியும் | 113 | ,, |


## II. மணிவாசகப் பகுதி


| | | | |
|---|---|---|---|
| 1. | மணிவாசகரும் அடியாரும் சிவனும் | 1 | 93 |
| 2. | ,, அடியார் அல்லாதவரும் | 2 | 104 |
| 3. | மணிவாசகர் தம் குறை கூறல் | 3 | 105 |
| 4. | மணிவாசகர்—தம்மைப்பற்றியவை, தம்மை இகழ்தல், தம்மைவைதல் | 4 | 112 |
| 5. | மணிவாசகர் தம்மைப்பற்றிய வினுக்கள் | 5 | 113 |
| 6. | மணிவாசகரும் பொய்யும் | 6 | ,, |
| 7. | மணிவாசகரும் மாதரும் | 7 | 114 |
| 8. | மணிவாசகர் நெஞ்சோடு கிளத்தல் | 8 | 116 |
| 9. | மணிவாசகர் பிரிவாற்ருமை | 9 | 117 |
| 10. | மணிவாசகரின் கொள்கையும் சிவனுர் கொள்கையும் இன்னதென்று அவர் கூறுவதும் | 10 | 120 |
| 11. | மணிவாசகர் நிலை | 11 | 121 |
| 12. | மணிவாசகரின் பக்திநிலை | 12 | 123 |
| 13. | மணிவாசகரும் பித்தும் மத்தமும் | 13 | 13 |
| 14. | மணிவாசகர் விரும்புவன | 14 | ,, |
| 15. | மணிவாசகரின் வேண்டுகோளும், முறையீடுகளும் | 15 | 132 |
| 16. | மணிவாசகரும் சிவனும் பாண்டியனும் | 16 | 139 |
| 17. | மணிவாசகரும் தேவியும் | 17 | 140 |
| 18. | மணிவாசகர் சிவபிரானையும் தேவியையும் பலபட உரிமை பாராட்டுவது | 18 | ,, |
| 19. | மணிவாசகர் கண்ட அதிசய நிகழ்ச்சிகள் | 19 | 141 |

| | | | |
|---|---|---|---|
| 20. | மணிவாசகர் கண்ட அற்புத நிகழ்ச்சிகள் | 20 | 142 |
| 21. | மணிவாசகர் பெற்ற தரிசனப் பேறுகள் | 21 | 143 |
| 22. | மணிவாசகர் பெற்ற பேறு, பெறும் பேறு, நன்றி பாராட்டல், கருணையை வியத்தல் | 22 | ,, |
| 23. | மணிவாசகர் தமது சென்னி பெருமான் சேவடிக்கண் மன்னி மலரும் என்றது | 23 | 152 |
| 24. | மணிவாசகர் தமக்குத் தலைவர் யார் என்று கூறுவது | 24 | ,, |
| 25. | மணிவாசகரின் திரம் | 25 | 154 |
| 26. | மணிவாசகர் போர்த் தலைவராக நின்று சேனைகளுக்குக் கட்டளை இடுதல் | 26 | 155 |
| 27. | மணிவாசகர் (சிவபிரானோடு) அசதி ஆடல் | 27 | 156 |
| 28. | மணிவாசகர் சிவபிரானை ஏசுதல் | 28 | ,, |
| 29. | மணிவாசகர் (பெருமான் தம்மைஆட் கொண்டு அருளிய விதத்தை எண்ணி எண்ணி) மனம் நெகிழ்தல் | 29 | 157 |
| 30. | மணிவாசகர் வரலாறு | 30 | 158 |
| | (1) சிவனுர் தம்மிடமிருந்து நீக்கிப் பூமியில் தன்னை வாழச் செய்தது | 30 (1) | ,, |
| | (2) ஆட்கொள்ளும் முன் மணிவாசகர் நிலை | 30 (2) | ,, |
| | (3) சிவபிரான் (தமக்காகவும் பிறருக்காகவும்) ஆட் கொண்டு அருள இப்பூமிக்கு வந்தது | 30 (3) | 159 |
| | (4) திருப்பெருந்துறையில் இறைவனைத் தரிசித்தும், இறைவனுடைய திரு உருத் தோற்றமும், தரிசித்ததனுல் தன் நிலையும் | 30 (4) | 160 |
| | (5) திருஉருவத் தரிசனம் | 30 (5) | 162 |

| | | | |
|---|---|---|---|
| (6) | திருவடித் தரிசனமும் சிலம்பொலி கேட்டதும் | 30 (6) | 162 |
| (7) | ஆட்கொண்டதும், ஆட்கொண்ட வகையும் | 30 (7) | 163 |
| (8) | அந்தணனாய் ஆட்கொண்டது | 30 (8) | 165 |
| (9) | குருமணியாக வந்து உபதேசித்தது | 30 (9) | 166 |
| (10) | கண்ணோக்க தீட்சை சட்சு தீட்சை | 30 (10) | 167 |
| (11) | மணிவாசகரும் திருநீறும் | 30 (11) | ,, |
| (12) | திருவடிதீட்சையும் அதனால் பெற்ற பயனும் | 30 (12) | ,, |
| (13) | அருள்பாலித்தது, அருளித் தன்னை மேம்படுத்தியது, அருளியவகை | 30 (13) | 168 |
| (14) | குடி முழு தாண்டது | 30 (14) | 172 |
| (15) | தேவியும் பிரானுமாக ஆட்கொண்டு அருளியது | 30 (15) | ,, |
| (16) | நரிபரியாக்கிப் பாண்டியன் முன் பிரான் வந்தது | 30 (16) | ,, |
| (17) | சிவபிரான் குதிரைமேல் வந்தது | 30 (17) | 173 |
| (18) | சிவபிரான் பிட்டுக்கு மண் சுமந்தது | 30 (18) | 174 |
| (19) | இறைவன் ஜோதியைக் காட்டி ஏனைய அடியார்களினின்றும் தன்னைப் பிரித்து, அவ்அடியார்களுடன் ஜோதியில் மறைந்ததும், தனது ஆற்றாமையும் | 30 (19) | 175 |
| (20) | மணிவாசகர் தமது யாக்கையை வெறுத்தல் | 30 (20) | 177 |
| (21) | மணிவாசகரும் உலக மக்களும் | 30 (21) | 178 |
| (22) | தம்மைத் தில்லைக்கு வா எனப் பிரான் அழைத்தது | 30 (22) | ,, |
| (23) | மணிவாசகரும் திருக்கழுக் குன்றமும் | 30 (23) | ,, |
| (24) | மணிவாசகரும் தில்லையும் | 30 (24) | 179 |
| (25) | மணிவாசகர் மறைவு | 30 (25) | 180 |

| | | | |
|---|---|---|---|
| 31. | மணிவாசகரின் விசேடச் சொற்களிற் சில | (31) | 181 |
| 32. | மணிவாசகரின் அருமைக் கருத்துக்கள் | (32) | ,, |
| 33. | மணிவாசகரின் உபதேசங்கள் | (33) | 182 |

## III. திருவாசகப் பதிகப் பகுதி

### (1) பதிகங்களிற் சிலவற்றின் கட்டுரை 186—196

| பதிக எண் | | |
|---|---|---|
| 7. | திருவெம்பாவை | 186 |
| 8. | திருவம்மானை | ,, |
| 9. | திருப்பொற் சுண்ணம் | 187 |
| 10. | திருக்கோத்தும்பி | 189 |
| 11. | திருத்தெள்ளேணம் | ,, |
| 12. | திருச் சாழல் | 190 |
| 13. | திருப் பூவல்லி | 191 |
| 14. | திருவுந்தியார் | 192 |
| 15. | திருத்தோணேக்கம் | ,, |
| 16. | திருப் பொன்னூசல் | 193 |
| 17. | அன்னைப் பத்து | ,, |
| 18. | குயிற் பத்து | 194 |
| 19. | தசாங்கம் | ,, |
| 35. | அச்சப் பத்து | ,, |
| 46. | திருப்படை எழுச்சி | 195 |
| 49. | திருப்படையாட்சி | ,, |
| 51. | அச்சோப் பதிகம் | 196 |

குறிப்பு : (1) 25. ஆசைப் பத்து. 26. அதிசயப் பத்து. 27. புணர்ச்சிப் பத்து. 30. திருக்கழுக்குன்றப் பதிகம். 31. கண்டபத்து. 38. திருவேசறவு. 41. அற்புதப் பத்து. 42. சென்னிப்பத்து. 43. திருவார்த்தை. 46. திருப்படையெழுச்சி. இவைகளின் கட்டுரை "II மணிவாசகப்" பகுதியிற் காணலாகும்.

குறிப்பு : (2) ஏனைய பதிகங்களைப் பற்றிய கட்டுரை II மணிவாசகப் பகுதியில் ஆங்காங்கு விரவிக் கிடக்கின்றது.

### (2) பதிக விசேடங்கள், கருத்துக்கள் 196—213

## IV. பிறபொருட் பகுதி


| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அக்கினி | 1 | | 214 |
| 2. | அப்கபொருள் | 2 | | ,, |
| 3. | அங்கங்கள், மனம் முதலியவற்றின் தொழில் | 3 | | 217 |
| 4. | அடியார் | 4 | | 218 |
| | (1) அடியாரைக் குறிப்பன | 4 | (1) | ,, |
| | (2) அடியார் தன்மை | 4 | (2A) | 219 |
| | (3) அடியார் இலக்கணம் | 4 | (2B) | ,, |
| | (4) அடியார் நிலை | 4 | (3) | 220 |
| | (5) அடியார் பெற்ற பேறு | 4 | (4A) | ,, |
| | (6) அடியார் பெறும் பேறு | 4 | (4B) | ,, |
| 5. | அடியார் அல்லாதார் | 5 | | 221 |
| 6. | அடுக்குச் சொற்கள் | 6 | | ,, |
| 7. | அண்டம் | 7 | | ,, |
| 8. | அணு | 8 | | ,, |
| 9. | அமுது | 10 | | ,, |
| 10. | அரக்கர் - அசுரர் | 11 | | ,, |
| 11. | அரசர் | 12 | | 222 |
| 12. | அருவி | 13 | | ,, |
| 13. | அருள் | 14 | | ,, |
| 14. | அறம் | 16 | | ,, |
| 15. | அறிவு | 17 | | 223 |
| 16. | அன்பு - நேசம் - பாசம் | 18 | | ,, |
| 17. | ஆகமம் | 19 | | ,, |
| 18. | ஆடல் - நடனம் | 20 | | ,, |
| 19. | ஆடைவகை | 21 | | ,, |
| 20. | ஆயுத எழுத்து | 22 | | 224 |
| 21. | ஆவ, ஆவா என்னும் சொற் பிரயோகம் | 24 | | ,, |
| 22. | ஆறு | 25 | | ,, |
| 23. | ஆன்மா | 26 | | ,, |
| 24. | ஆனந்தம் | 27 | | ,, |
| 25. | இசை - பண் - கீதம் | 28 | | ,, |

| | | | |
|---|---|---|---|
| 26. | இந்திரன் | 29 | 225 |
| 27. | இருவர் | 31 | ,, |
| 28. | இருள் - அஞ்ஞானம் | 32 | 226 |
| 29. | இலக்கணம் | 33 | ,, |
| 30. | இலக்குமி | 34 | ,, |
| 31. | இன்பம் | 36 | ,, |
| 32. | இனச் சொல் | 37 | ,, |
| 33. | உடல், ஊன் | 38 | 227 |
| 34. | உணர்வு | 40 | ,, |
| 35. | உயிர் - உயிர்ப்பு | 41 | ,, |
| 36. | உலகங்கள் | 42 | ,, |
| 37. | உலகின் தன்மை | 43 | 228 |
| 38. | உலோகம் | 44 | ,, |
| 39. | உவமைச் சொற்கள் | 45 | ,, |
| 40. | உவமை உருபு தொக்கது | 46 | ,, |
| 41. | உவமைப் பொருளும், உவமையும் | 47 | 229 |
| 42. | உறவு - உறவினர் | 48 | ,, |
| 43. | எண்கள் | 49 | ,, |
| 44. | எதிர் மொழிகள் | 50 | 230 |
| 45. | 'என்கோ' என்னும் சொல் ஆட்சி | 51 | ,, |
| 46. | ஐம்புலன் | 52 | ,, |
| 47. | ஒரு சொல் - ஒரு சொற்றொடர் இரு பொருளில் | 53 | 231 |
| 48. | ஒரு பொருள், - இரட்டைச்சொல் | 54 | 232 |
| 49. | ஒலி - ஒலிக்குறிப்பு | 55 | ,, |
| 50. | ஒளி | 56 | 233 |
| 51. | ஒற்றுமை அடிகள் | 57 | ,, |
| 52. | ஒன்று, ஒன்றும் என்னும் சொற்களின் ஆட்சி | 58 | ,, |
| 53. | ஓம், ஓங்காரம் | 59 | 234 |
| 54. | ஓர் என்னும் சொல்லாட்சி | 60 | ,, |
| 55. | கங்கை | 61 | ,, |
| 56. | கடல் | 62 | ,, |
| 57. | கணங்கள் | 63 | 235 |

| | | | |
|---|---|---|---|
| 58. | கதி | 64 | 235 |
| 59. | கயிறு | 65 | ,, |
| 60. | கரும்பு, கட்டி | 67 | ,, |
| 61. | கல்வி | 68 | ,, |
| 62. | கலக்கம் | 69 | ,, |
| 63. | கலை | 70 | ,, |
| 64. | கலைமகள் | 71 | 236 |
| 65. | கனு | 73 | ,, |
| 66. | காடு | 74 | ,, |
| 67. | காமம் | 76 | ,, |
| 68. | காமன் | 77 | ,, |
| 69. | காலம் - ஊழி - காலத்தைக் குறிப்பன | 78 | ,, |
| 70. | காலன் | 79 | 237 |
| 71. | காளி | 80 | ,, |
| 72. | குடி | 81 | ,, |
| 73 | குணம் | 82 | 238 |
| 74 | கொடி | 83 | ,, |
| 75. | கோயில் | 84 | ,, |
| 76. | சங்கு | 85 | 239 |
| 77. | சந்திரன் | 86 | ,, |
| 78. | சமயம் - சமயவாதிகள் | 87 | ,, |
| 79. | சாத்திரம் | 88 | 240 |
| 80 | சாதி, - குலம் | 89 | ,, |
| 81. | சித்தர் | 90 | 241 |
| 82. | சித்தாந்தம் | 91 | ,, |
| 83. | சித்திகள் | 92 | ,, |
| 84. | சிவபதம் | 94 | ,, |
| 85. | சுழி | 95 | ,, |
| 86. | சூரியன் (ஞாயிறு) | 96 | 242 |
| 87. | செல்வம் | 97 | ,, |
| 88. | சொல்லழகு, பொருள்அழகு | 98 | ,, |
| 89. | சொல் விளக்கம் | 99 | 243 |
| 90. | சோதி - சுடர் - கதிர் - ஒளி | 100 | ,, |

| | | | |
|---|---|---|---|
| 90A. | சோலை ("பொழில்" என்னும் தலைப்பு 157 பார்க்க) | 100A | 243 |
| 91. | ஞானம் | 101 | ,, |
| 92. | தமிழ். [தலைப்பு 1-65] பார்க்க | 102 | 244 |
| 93. | தலங்கள் | 103 | ,, |
| 94. | தலமும் பதிகமும் ("பதிகமும் தலமும்" என்னும் தலைப்பு 134 பார்க்க) | 104 | 253 |
| 95. | தவம் - தவத்தினர் (தலைப்பு I 67 பார்க்க) | 105 | 254 |
| 96. | தானியம் | 107 | ,, |
| 97. | திசை | 108 | ,, |
| 98. | திரு நீறு | 110 | ,, |
| 99. | திருமால் | 111 | ,, |
| 100. | திருவிளையாடல் | 112 | 256 |
| 101. | துன்பம், துயர் | 114 | 257 |
| 102. | தெய்வம் | 115 | ,, |
| 103. | தேர் | 116 | 258 |
| 104. | தேவதைகள் | 117 | ,, |
| 105. | தேவர் பொது | 118 | 259 |
| 106. | தேவர் சிறப்பு | 119 | ,, |
| 107. | தேவர் செய்கை முதலிய | 120 | 260 |
| 108. | தேன் | 121 | ,, |
| 109. | தொகை | 122 | 261 |
| 110. | தோத்திரம் | 123 | 262 |
| 111. | தோத்திர வகைகள் | 124 | ,, |
| 112. | நகர லக்ஷணம் | 125 | 263 |
| 113. | நகைகள் | 126 | 264 |
| 114. | நரகம் | 128 | ,, |
| 115. | நாகரிக நிலை | 129 | ,, |
| 116. | நாடு, நாட்டவர், தேசம், தீவு | 130 | ,, |
| 117. | நாயன்மார் | 131 | 265 |
| 118. | நிதி | 132 | ,, |
| 119. | நீதி வாக்கியம், பழமொழி முதலிய | 135 | 266 |

| | | | |
|---|---|---|---|
| 120. | நீர்நிலை, ஆறு முதலிய (கங்கை தனித் தலைப்பு 55 பார்க்க) | 136 | 267 |
| 121. | நெஞ்சம், மனம், சித்தம் முதலிய | 139 | ,, |
| 122. | நெறி | 141 | 268 |
| 123. | நோய், பிணி, மூப்பு | 142 | ,, |
| 124. | பசு பாசம் | 143 | ,, |
| 125. | பஞ்ச பூதங்கள் | 144 | ,, |
| 126. | படை (ஆயுதம், சேனை) | 145 | 270 |
| 127. | படையெழுச்சி - (சேனை) | 146 | 271 |
| 128. | பத்தி - பத்திமை | 147 | ,, |
| 129. | பத்திநிலை மெய்ப்பாடு | 148 | ,, |
| 130 | பதவி - பதம் | 149 | 272 |
| 131. | பதிகத்தொடக்கம் | 150 | ,, |
| 132. | பதிக பாகுபாடு - இயற்றமிழ்வழி | 151, 152 | ,, |
| 133. | பதிக முடிவு | 153 | 273 |
| 134. | பதிகமும் தலமும் | 154 | ,, |
| 135. | பதிகவிசேடங்கள் | 155 | ,, |
| 136. | பழக்க வழக்கங்கள் | 156 | ,, |
| 137. | பழங்கள் | 157 | 274 |
| 138. | பாடல் - பாட்டு | 158 | ,, |
| 139. | பாடல் - கரந்துறை பாடல்கள் | 159 | ,, |
| 140. | பாடல் - சுவைவகை | 161 | 275 |
| 141. | பாடல் விசேடங்கள் | 162 | ,, |
| 142. | பார்வதி | 163 | ,, |
| 143. | பார்வதியும், சிவனும், அடியார்களும் | 164 | 278 |
| 144. | பால் | 165 | ,, |
| 145. | பிணக்கு | 166 | ,, |
| 146. | பிணம் | 167 | ,, |
| 147. | பிரமன் | 169 | ,, |
| 148. | பிறப்பு இறப்பு | 171 | 279 |
| 149. | புகழ் | 172 | 280 |
| 150. | பூசை (மலர்ப்பூசை) | 173 | ,, |
| 151. | பூதம் - பூதப்படை | 174 | 281 |
| 151A. | பூமி | 174A | ,, |

| | | | |
|---|---|---|---|
| 152. | பேதம் | 175 | 281 |
| 153. | பேய் | 176 | ,, |
| 154. | பேய்த்தேர் | 177 | ,, |
| 155. | பொய் - பொய்ம்மை | 178 | ,, |
| 156. | பொருள் (தலைப்பு I-19-188, பார்க்க) | 179 | 282 |
| 157. | பொழிலும் சோலையும் (சோலை - தலைப்பு 90A பார்க்க) | 180 | 283 |
| 158. | பொன் - மணி - முத்து முதலிய நவரத்தினங்கள் | 181 | ,, |
| 159. | போகம் | 182 | 284 |
| 159A. | போற்றி முதலிய | 182A | ,, |
| 160. | மக்களைக் குறிப்பன | 183 | ,, |
| 161. | மங்கலப் பொருள்கள் | 184 | 285 |
| 162. | மத்தம் - உன்மத்தம் | 185 | ,, |
| 163. | மரம், செடி, கொடி, வித்து முதலியன | 186 | ,, |
| 164. | மருள் - மயக்கம் | 187 | 286 |
| 165. | மலம் - அழுக்கு - குற்றம் | 188 | 287 |
| 166. | மலர் | 189 | ,, |
| 167. | மலை | 190 | 290 |
| 168. | மறை | 191 | 291 |
| 169. | மறையோர், அந்தணர் | 192 | ,, |
| 170. | மனப்பாடத்துக் குரிய பாடல்கள் | 193 | ,, |
| 170A. | மனம், சித்தம் முதலிய | 193A | 292 |
| 171. | மாதர் | 194 | ,, |
| 172. | மாயை | 195 | 296 |
| 173. | மாலை | 196 | ,, |
| 174. | முத்தி, வீடு, பேரின்பம் | 197 | ,, |
| 175. | முருகவேள் | 198 | ,, |
| 176. | முனிவர், தவத்தினர் - பெரியோர் | 199 | 297 |
| 177. | மெய், மெய்யர் [சிவனும் மெய்யரும் என்னும் தலைப்பு I (19) 210), 49-94] பார்க்க | 200 | ,, |
| 178. | மேகம், மின், இடி, மழை | 201 | 298 |
| 179. | யாக்கை (உடல்: ஊன்: தலைப்பு 33 பார்க்க) | 202 | ,, |

| | | | |
|---|---|---|---|
| 180. | யான், எனது | 203 | 299 |
| 181. | யோகம் :—யோகியர் | 204 | ,, |
| 182. | ராவணன், வண்டோதரி | 205 | ,, |
| 183. | வடமொழிச் சொற்கள் சில | 206 | 300 |
| 184. | வடவா முகாக்கினி | 207 | ,, |
| 185. | வண்டோதரி | 208 | ,, |
| 186. | வயல் | 209 | ,, |
| 187. | வர்ணனை | 210 | ,, |
| 188. | வரலாறுகள் | 211 | 302 |
| 189. | வலை | 212 | 309 |
| 190. | வழிபாடு - வழிபாட்டு வகை | 213 | 310 |
| 191. | வழிபாட்டுக்குரிய மங்கலச் செயல்கள், அலங்காரம் முதலியன | 214 | ,, |
| 192. | வழிபடுவோர் | 215 | 311 |
| 193. | வழிபாட்டினால் வரும் பயன் | 216 | ,, |
| 194. | வாத்தியங்கள் | 217 | 312 |
| 195. | வாழ்க்கை வர்ணனை | 218 | ,, |
| 196. | வாழ்த்து | 219 | 313 |
| 197. | விரதம் | 220 | ,, |
| 198. | விழா | 221 | 314 |
| 199. | விளக்கு | 222 | ,, |
| 200. | வினாவிடை | 225 | ,, |
| 201. | வீணை | 226 | 316 |
| 202. | விஜயன் | 227 | 317 |
| 203. | வெள்ளம் | 228 | ,, |
| 204. | வேதம் - தலைப்பு I-103 பார்க்க | 229 | ,, |
| 205. | வேள்வி | 230 | ,, |
| 206. | ஜீவராசிகள் | 231 | 318 |
| | I. ஊர்வன | | ,, |
| | II. நீர் வாழ்வன | | 319 |
| | III. பறவை | | ,, |
| | IV. மக்கள் - தலைப்பு 160 பார்க்க | | 321 |
| | V. விலங்குகள் | | ,, |

## V. இலக்கணப் பகுதி


| | | | |
|---|---|---|---|
| 1. | அசைச் சொற்கள் | (1) | 327 |
| 2. | அணிகள் | (2) | ,, |
| | (1) இல்பொருள் உவமை அணி | (i) | ,, |
| | (2) உருவக அணி | (ii) | ,, |
| | (3) உவமை அணி | (iii) | ,, |
| | (4) முரண் அணி | (iv) | ,, |
| 3. | அல் ஈறு எதிர்மறைப் பொருளில் | (3) | 328 |
| 4. | அளபெடை | (5) | ,, |
| 5. | அன்மொழித் தொகை | (6) | ,, |
| 6. | ஆகுபெயர் | (7) | ,, |
| 7. | இசையெச்சம் | (8) | ,, |
| 8. | இடை நிலைத் தீபம் | (9) | ,, |
| 9. | எதுகை | (10) | 329 |
| 10. | ஏகாரம் | (11) | ,, |
| 11. | ஓகாரம் | (12) | ,, |
| 12. | குறை - (1) இடைக்குறை | (14) | 330 |
| | (2) கடைக்குறை (3) முதற்குறை | | ,, |
| 13. | சாரியை | (16) | ,, |
| 14. | தன்வினை பிறவினைப் பொருளில் | (17) | 331 |
| 15. | திணை - திணைபால் வழுவமைதி | (18) | ,, |
| 16. | துணைச்சொற்கள் | (19) | ,, |
| 17. | மரூஉ, போலி, விகாரம் | (21) | 332 |
| 18. | மாட்டு | (22) | ,, |
| 19. | முதனிலைத் தொழிற் பெயர் | (23) | 333 |
| 20. | முற்று எச்சப் பொருளில் வந்தது | (24) | , |
| 21. | மோனை | (25) | ,, |
| 22. | விகுதி | (26) | ,, |
| 23. | வியங்கோள் வினைமுற்று | (27) | 334 |
| 24. | வினைத் தொகை | (28) | 335 |
| 25. | வினைமுற்று | (29) | ,, |
| 26. | வினையாலணையும் பெயர் | (30) | ,, |
| 27. | வேற்றுமை | (33) | ,, |

# பிழை திருத்தம்

| பக்கம் | தலைப்பு, வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 28 | வரி 9 | 10 (12) | 19 (12) |
| 45 | வரி 8 | உடைய எழுந்தருள | எழுந்தருள |
| 120 | தலை. 10, வரி 3 | தலைப்பு 3-19(42) | 1-19 (92) |
| 188 | தலை. 5, வரி 3 | செயகளான | செயல்களான |
| 260 | தலை. 108 (3) | நறவறம் | நறவம் |
| 281 | தலை. 151A வரி 1 | 125-3 | 125-1 |
| 318 | தலை. 206 (7) | பழு | புழு |
| 325 | தலை. 28 மான் வரி 5 | பேய் தேரை | பேய்த்தேரை |

## திருவாசகச் சிறப்பு

விளங்கிழை பகிர்ந்த மேய்யுடை முக்கட்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனே
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கல் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே.

—நால்வர் நான்மணிமாலை.

# திருவாசக ஒளிநெறிக் கட்டுரை

## 1. சிவபிராற் பகுதி

### 1. சிவபிரான் அட்டமூர்த்தி [1]

நிலம், நீர், தீ, காற்று, வான், திங்கள், ஞாயிறு, இயமானன் (ஆன்மா-உயிர்) என்னும் எட்டுமாய் நிறைந்து நிற்பவர் இறைவர். ஆதலால் அவர் *"அட்டமூர்த்தி" எனப்படுவர்.

### 2. சிவபெருமான் அட்டவீரச் செயல் [2]

#### 1. அந்தகாசுரனைச் சங்கரித்தது [2(1)]

அந்தகாசுரனுடைய பெருமை குலையவும், அவன் அழிபட்ட பேச்சு என்றும் (உலகில்) நிலவவும், அவனுக்கு கேடு விளைவித்த இறைவனுடைய பெரும் புகழைப் பாடி, நாம் கொடிப் பூக்களைக் கொய்வோமாக.

#### 2. காமனை எரித்தது [2(2)]

†காமனுடலை இறைவர் தமது செங்கண்ணால் நெருப்பெழ எரித்து அங்ஙனம் தாம் எரித்த பேச்சு என்றும் (உலகில்) நிலவும்படி செய்தார். அப்படித் தண்டித்து

---

* "எட்டு மூர்த்தியர் இன்னம்பர் ஈசனே"—அப்பர், 5-21-2.

"இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமானனாய் எறியும் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாசமாய் அட்ட மூர்த்தியாகி"—அப்பர் 6-94-1.

† காமன், அனங்கன் - மன்மதனைக் குறிக்கும் சொற்கள்.

அவனைப் பரிசுத்தமாக்கிய திருவருளைப் பாடி நாம் தோணோக்கம் ஆடுவோமாக.

### 3. காலனை அட்டது [2(3)]

எதிர்த்து வந்த கூற்றைக் காய்ந்து, பெருமான் தமது தாமரைத் தாளால் அவனுடைய உயிர் போம்படி உதைத்து வென்று அழகாக வீற்றிருந்தார்; இங்ஙனம் அவனுடைய பெருமை அழிபட அவனை அடக்கிய இறைவனுடைய பெரும் புகழைப் பாடி நாம் கொடிப் பூக்களைக் கொய்வோமாக. அப்படி அவனைத் தண்டித்துப் பரிசுத்தம் ஆக்கிய திருவருளைப் பாடி நாம் தோணோக்கம் ஆடுவோமாக. அப்பெருமான் அங்ஙனம் காலனை உதைத்ததைப் பாடி நாம் அவர்க்குப் பொற்சுண்ணம் இடிப்போமாக. இவ்வாறு தம்மால் காலன் அழிபட்ட பேச்சு என்றும் உலகில் நிலவுமாறு பெருமான் செய்தார்.

### 4. சலந்தரனைத் தடிந்தது [2(4)]

தீய செயலை மேற்கொண்டிருந்த சலந்தரனுடைய உடலைப் பிளந்தழித்த சிறந்த சக்கரத்தை நற்செயல் புரிந்த நாரணற்கு அன்று சிவபிரான் அளித்த காரணம் என்ன?

### 5. தக்கன் வேள்வியைத் தகர்த்தது [2(5)]

#### வேள்வி

தக்கன் செய்த வேள்வி கொடிய கோபத்திற்கு ஏதுவாயிற்று. அவ்வேள்வி வீரபத்திரரால் தாக்கப்பட்டுக் கலங்கிற்று, மயங்கிற்று, மடிந்தது. அவ்வேள்வியில் மூன்று பேர் (தக்கன், எச்சன், பிரமன்) தலையிழந்தனர்.

#### வேள்வியில் தண்டனை அடைந்தவர்

(1) **அக்கினி**

அவியை விழுங்கத் திரட்டிய இவன் கை வீரபத்திரரால் தறிக்கப்பட்டதைப் பாடி உந்தி பறப்பீராக; இங்ஙனம்

புண்பட்டு அவன் பெருமையை இழக்கும்படி செய்த பெருமானுடைய பெரும் புகழைப் பாடி நாம் கொடிப் பூக்களைக் கொய்வோமாக. அப்படி அடைந்த தண்டனையால் இவன் பரிசுத்தப்படுத்தப்பட்ட விதத்தைப் பாடி நாம் தோணோக்கம் ஆடுவோமாக.

(2) இந்திரன்

பிரமனும், யாகத்து எஜமானும் பட்ட பாட்டைப் பார்த்துப் பயந்து ஓடிப்போம் வழியை இந்திரன் தேடி ஒரு மரத்தின்மேல் குயிற் பறவையின் உரு எடுத்து ஏறினன் என்பதைப் பாடி உந்தி பறப்பீராக. அவன் தோளை நெரித்திட்டார் வீரபத்திரர். இங்ஙனம் தண்டித்து அவன் பெருமையை அழித்த பெருமானுடைய பெரும் புகழைப் பாடி நாம் கொடிப்பூவைக் கொய்வோமாக.

(3) இயமானன் (யாகத் தலைவன் - தக்கன்)

வேள்வியில் அழிபட்டான்.

(4) எச்சன் (யாக அதிதேவதை - திருமால்)

வேள்வியில் இவன் தலையை (வீரபத்திரர்) அறுத்து வேறு தலை ஒன்றைக் கொடுத்தருளினர். இங்ஙனம் தண்டிக்கப்பட்டு இவன் புண்பட்டதைப் பாடியும், இவன் பெருமை அழியும்படி செய்த பெருமானுடைய பெரும் புகழைப் பாடியும், நாம் கொடிப் பூக்களைக் கொய்வோமாக. இவ்வாறு தண்டித்து அவனைப் பெருமான் பரிசுத்தமாக்கிய தன்மையைப் பாடி நாம் தோணோக்கம் ஆடுவோமாக.

(5) கூற்றன்

இவன் பெருமை அழிபட இவனை அடக்கிய பெருமானுடைய பெரும் புகழைப்பாடி நாம் கொடிப் பூக்களைக் கொய்வோமாக.

(6) சந்திரன்

வேள்வியில் இவன் முகம் நெரிபடத் தேய்த்து அருளினர் வீரபத்திரர் என்று, (நமது பழவினை கெடும்படி)

உந்தி பறப்பீராக. இவ்வாறு அவரால் அவன் புண்பட்ட செய்தியைப் பாடியும், அவனுடைய பெருமையை இங்ஙனம் அழித்த பெருமானுடைய பெரும் புகழைப் பாடியும் நாம் கொடிப் பூக்களைக் கொய்வோமாக; சந்திரனுடைய கலையை அழித்து அவனைப் பரிசுத்தமாக்கிய திருவருளைப் பாடி நாம் தோணோக்கம் ஆடுவோமாக. இவ்வாறு தம்மால் சந்திரன் தண்டனை அடைந்த பேச்சு உலகில் என்றும் நிலவுமாறு பெருமான் செய்தார்.

(7) சூரியன்

வீரபத்திரர் ஒரு சூரியனுடைய வாயினிற் பற்களைத் தகர்த்து, வாரி நெரித்துப் பறித்ததைப் பாடி உந்தி பறப்பீராக; அங்கு உண்ணப் புகுந்த பகன் என்னும் சூரியன் ஒளித்து ஓட முடியாதபடி அவனுடைய கண்ணைப் பறித்த செய்தியை (நமது பிறப்பற)ப் பாடி உந்தி பறப்பீராக. இங்ஙனம் அவர்கள் பெருமானால் புண்பட்ட செய்தியைப் பாடியும், அவர்களுடைய பெருமை அழியும்படி செய்த பெருமானுடைய பெரும் புகழைப் பாடியும், நாம் கொடிப் பூக்களைக் கொய்வோமாக. இங்ஙனம் கதிரோனைத் தண்டித்து அவனைப் பரிசுத்தமாக்கிய திருவருளைப் பாடி நாம் தோணோக்கம் ஆடுவோமாக.

(8) தக்கன் (யாக கர்த்தா)

தன் மகள் பார்வதியிடம் பகைமை கொண்ட தக்கனைப் பார்த்தல் கூடாது என்று பாடி உந்தீ பறப்பீராக; வேள்வியில் தலையறுபட்டு மாண்ட தக்கனை இழந்த அவன் மக்களைச் சூழ்ந்து நின்று உந்தீ பறப்பீராக. தலை இழந்த தக்கனுக்கு ஆட்டின் தலையைக் கூட்டிய அற்புதச் செயலைப் பாடி உந்தீ பறப்பீராக; மதிப்புக்கு உரியவனாக இருந்த தக்கன் பூதப்படையுடன் வந்த வீரபத்திரரால் புண்பட்ட செய்தியைப் பாடியும், அவன் பெருமையை அப்படி அழித்த பெருமானுடைய பெரும் புகழைப் பாடியும் நாம் கொடிப் பூக்களைக் கொய்வோமாக; இவ்வாறு தக்கனைத்

தண்டித்து அவனைப் பரிசுத்தமாக்கிய பெருமானுடைய திருவருளைப் பாடி நாம் தோணோக்கம் ஆடுவோமாக.

(9) திருமால் - எச்சன்

ஐயோ பாவம்! வேள்வியில் அவிப்பாகத்தைப் பெற்ற திருமால் (வீரபத்திரரால்) மொத்துண்டு மூர்ச்சையாய் வீழ்ந்தார். இங்ஙனம் அவர் உயிர் போகாது எஞ்சி நின்றதைப் பாடி உந்தீ பறப்பீராக.

(10) தேவர்கள்

வேள்வி தாக்கப்பட்டு அலங்கோலம் ஆனதைக் கண்டு தேவர்கள் சிதறுண்டு திசை திசையே ஓட்டம் பிடித்த வேடிக்கையைப் பாடி உந்தீ பறப்பீராக. தேவர் கூட்டத்தை அப்படி கலக்கிப் பின் அருள்புரிந்தார் இறைவர்.

(11) நாமகள்

நாமகளுடைய மூக்கு அழியும்படி நெரித்ததை (நமது பழவினை கெடும்படி) பாடி உந்தீ பறப்பீராக. இங்ஙனம் அவளைத் தண்டித்துப் பரிசுத்தமாக்கிய பெருமான் திருவருளைப் பாடி நாம் தோணோக்கம் ஆடுவோமாக.

(12) பிரமன்

வேள்வியில் பிரமன் அழிபட்டதை (நமது பழவினை கெடும்படி) பாடி உந்தீ பறப்பீராக. இங்ஙனம் அவனுடைய பெருமை அழியும்படி செய்த பெருமானுடைய பெரும் புகழைப் பாடி நாம் கொடிப் பூக்களைக் கொய்வோமாக. இவ்வாறு அவனைத் தண்டித்துப் பரிசுத்தமாக்கிய பெருமானுடைய திருவருளைப் பாடி நாம் தோணோக்கம் ஆடுவோமாக. அங்ஙனம் பிரமன் தண்டனை அடைந்த பேச்சு என்றும் உலகில் நிலவுமாறு பெருமான் செய்தார்.

(13) வியாத்திரன் (யாகத் தொழில் செய்பவன் - பிரமன்)

கோபத்திற்கு ஏதுவான அந்த வேள்வியில் வியாத்திரனுடைய தலை ஒழிந்ததை (நம்மைத் தொடர்ந்த பிறப்பு அறப்)பாடி உந்தீ பறப்பீராக.

### தண்டித்தவர்

தண்டித்தவர் விண்ணினுள்ள பூதப்படையைக் கொண்ட வீரபத்திரர்.

### ஏன் தண்டித்தார்

பண்பு வாய்ந்த தில்லைப்பதியின் தலைவராம் சிவபிரானைப் பரவிப் போற்றாத காரணத்தால் தக்கன் முதலானோர் புண்பட்டார்கள்.

### தண்டனை அடைந்தவர் அருள் பெற்றது

காமன், காலன், கதிரோன், நாமகள், பிரமன், எரி, சோமன் (சந்திரன்), தக்கன், எச்சன் இவர்கள் பெருமான் அளித்த தண்டனையால் பரிசுத்தமாக்கப் பட்டும், எச்சன் பிறிதொரு தலைபெற்றும் பெருமானுடைய திருவருளுக்குப் பாத்திரரானார்கள்.

## 6. திரிபுரத்தை எரித்தது [2(6)]

கொற்றச் சேவகனும் இறைவன் ஒருவராய் நின்றே புரங்கள் மூன்றையும் ஒருங்கே (ஒருசேர) வெந்தழியும்படி தமது அழகிய நகையால் செந்தீ எழுப்பி ஒரு நொடிப் பொழுதில் கோபக்குறியுடன் வீழ்த்தினார்.

சமைத்த தேர்மிசை பெருமான் அடி வைத்தவுடன் அத்தேரின் அச்சு முறிந்தது. புரத்தை எரித்த அந்நாளில் பெருமானைத் திருமால் இடபமாய்த் தாங்கினார். எரிபட்ட திரிபுராதிகள் அரக்கர்கள். அவர்களில் மூவர் மாத்திரம் எரிபட்டு அழியாதபடி அத்துணைத் திறமையுடன் பெருமான் அம்பை எய்தினார்.

(1) புரத்தைப் பற்றிய குறிப்புக்கள்

புரம், மதில், ஊர்—எனக் குறிக்கப்பட்டுளது: ஊர் பழமையான தென்றும், புரம் மூன்றென்றும், புரத்தில் எரிபட்ட அரக்கர்கள் பலரென்றும், அவர்கள் நிரம்பப்

போர் புரிந்தனரென்றும், புரங்களைச் சுற்றி விளங்கின மதில்கள் மூன்றென்றும், அவை விசாலமும் திண்மையும் வாய்ந்தவை என்றும் கூறப்பட்டுளது.

(2) வில்லைப்பற்றிய குறிப்புக்கள்

பெருமான் ஏந்திய வில் திண்மையும் வலிமையும் வாய்ந்த பொன்மலையாம் மேருமலை.

(3) அம்பைப் பற்றிய குறிப்புக்கள்

பெருமான் திருக்கரத்தில் இரண்டு அம்புகள்கூட இல்லை; முப்புரங்களை எய்ய ஒரே ஒரு அம்புதான்; ஆனால் அதுவும் வேண்டாதாயிற்று.

(4) மூவரைப் பற்றிய குறிப்புக்கள்

மூன்று அரக்கர்களும் மதிக்கத்தக்கவர்கள்; ஆதலால் எரிபடாது பிழைத்தனர்; அவர்கள் பிரானுடைய வாயில் காப்பாளர்கள் ஆயினர்.

(5) திரிபுரம் எரித்த காலம்

எரிபடாது பிழைத்த மூவரும் கண்ணுதல் எந்தையுடைய கோயில் காவலாளர்கள் ஆனபின், கணக்கற்ற இந்திரர்களும், எவ்வளவோ பிரமர்களும், பூமியை உண்ட மால் பலரும் இறந்தனர்.

## 7. பிரமன் சிரத்தை அறுத்தது [2 (7)]

நல்ல மலர்மேல் வீற்றிருக்கும் நான்முகன் (பிரமன்) தலையைப் பெருமான் தனது நகத்தால் விரைவில் அரிந்ததைக் கூறி, உந்தீ பறப்பீராக. பிரமன் தலையைக்கொண்டு இறைவன் செண்டாடினதை (பந்தாடினதை)ப் பாடி நாம் அவற்குப் பொற்சுண்ணம் இடிப்போமாக; பிரமன் தலையை இறைவன் அறுத்த பேச்சு என்றும் (உலகில்) நிலவும்படி செய்தார்; அங்ஙனம் தண்டித்து அவனைப் பரிசுத்தமாக்கிய திருவருளைப் பாடி நாம் தோணோக்கம் ஆடுவோமாக; பிரமனுடைய பெருமையைக் குலைவித்த இறைவனுடைய

பெரும் புகழைப் பாடி நாம் கொடிப் பூக்களைக் கொய்வோமாக.

### 8. யானையை அட்டது, அதன் தோலை உரித்ததும், போர்த்ததும் [2 (8)]

பெரிய அடிகளையும், தொளை உள்ள துதிக்கையையும் கொண்டு சிறந்த மலைபோன்ற கொடிய யானையைக் கொன்று அதன் தோலை உரித்துப் போர்த்துக்கொண்டார் இறைவர்; அங்ஙனம் உரித்துத் தேவியை அஞ்சும்படி செய்தார்.

அத்தி, கயம், கரி, வேழம் இவை யானையைக் குறிக்கும் சொற்கள்.

## 3. சிவபிரான் அணிவன, சூடுவன [3]

### 1. அணிவன

எலும்பு, ஓடு, தோள்மேல் கங்காளம் (எலும்பு ஆபரணம்), நரம்பு, ஏனத்து எயிறு, கங்கணம், குடல் மாலை, சந்தனச் சாந்து, திருநீறு, பாம்பு, மலர் (ஆத்தி, கொன்றை).

### 2. அரையில் அணிவன [4]

ஆடு நாகம், படஅரவுக் கச்சை, புலித்தோல்.

### 3. காதில் அணிவன [5]

குண்டலம், குழை.

### 4. காலில் அணிவன [6]

(1) கழல்

அருட் பெய்கழல், கனை கழல், செறி கழல்.

(2) சிலம்பு

திண் சிலம்பு, சேவடிச் சிலம்பு, பாதச் சிலம்பு.

## 5. கையில் அணிவன—ஏந்துவன [7]

(1) அங்கி (தீ)
*'அங்கி தங்கிய கை.'*

(2) அரவம்
*'கைம்மேல்....அரவம்;' 'மாசுணக் கங்கணம்.'*

(3) உடை தலை
*'ஊனார் உடை தலை.'*

(4) கழுக்கடை (சூலம் பார்க்க)
*'கழுக்கடை கைப்பிடித்து.'*

(5) சிலை ('வில்' பார்க்க)
*'திண் சிலை யேந்தி'.*

(6) சூலம் (கழுக்கடை பார்க்க)
*'மூவிலை வேல்.'*

(7) தாளம்
*'அடிகளார் தம் கையில் தாளம்.'*

(8) மான்
*'மான் இடன்.'*

(9) வாள்
*'ஞானவாள் ஏந்தும் ஐயர்.'*

(10) வில் ('சிலை' பார்க்க)

## 6. சிரசில் - சடையிற் சூடுவன [8]

அரவு, கங்கை, கூவிளம் (வில்வம்), கொக்கிறகு, கொன்றை, மத்தம், மதி, மலர், வெண்தலை.

இவற்றுள் அரவு, வெண்தலையின் பொந்தில் பதுங்கி இருக்கும். வெண்தலை மாலையாகத் தலையில் அணிந் துள்ளார்.

## 4. சிவபிரான் - அபிடேகப் பொருள்கள் முதலிய [9]

(1) தழல் (நெருப்பு)

[ஊழி யிறுதியில் வடவாமுகாக்கினியே மஞ்சனமாக ஆடுவார். 330 தக்கயாகப் பரணி, குறிப்பு.]

(2) திருநீறு

(3) பொற்சுண்ணம்

சிவபிரான் ஆடுதற்குப் பொற்சுண்ணம் இடிக்கப்படும். மங்கல நீராடி அறுகம் புல்லை நறுநெய்யில் அல்லது பாலில் தோய்த்து சென்னியில் வைத்தல் மரபு.

## 5. சிவபிரான்—அர்த்தநாரீசுரர் [10]

உலகம் உய்யச் சிவபிரான் மங்கையோர் பங்கன் ஆயினர். மங்கையைத் தமது இடது பாகத்தில் கொண்டுள்ளார்; ஆதலால் பிரான் திருமேனி ஒன்றல்லன். மங்கை பச்சை நிறம், பிரான் செந்நிறம்; எனவே, "மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்" என்கின்றார். (பிரானுடைய திருவுருவை நினைந்து).

அர்த்தநாரீசுரர் திருக்கோலம்:

(1) தோல் ஒரு பால்—துகில் ஒருபால்.

(2) குழை ஒரு காதில்—தோடு ஒரு காதில்.

(3) நெற்றியில் பால் வெள்ளை நீறு ஒருபுறம்—பசுஞ் சாந்து ஒருபுறம்.

(4) சூலம் ஒரு கையில்—கிளியும் வளையும் ஒரு கையில்.

இத் தொன்மை இரட்டைக் கோலத்தை நாம் தியானிப்போமாக.

## 6. சிவபிரான் அறம் உரைத்தது [11]

ஆல நீழலில், அருந்தவராம் நால்வர்க்கு, நான்மறையின் உட்பொருளை, அறம் முதலாம் நான்கினைச் சிவபிரான் உரைத்தருளினார்.

## 7. சிவபிரான் ஆடை, உடை [12]

(1) ஆடை

வெள்ளைக் கலிங்கம், புலித்தோல் நல்லாடை.

(2) கச்சை

பட அரவக்கச்சை.

(3) குப்பாயம்

பள்ளிக் குப்பாயம்.

(4) கோவணம்

துன்னம் பெய் (தைக்கப்பட்ட) கோவணம்; கோவணத்தின் சரடு மறை நான்கும், தான் தானே கோவணமாவார் பெருமான்.

(5) தோல்

உடை தோல். தோலுடைப் பிச்சன் பெருமான்.

(6) புலித்தோல்

பிரான் புலித்தோல் உடை கொண்டவன்.

(7) மான்தோல்

பிரான் புள்ளி மான் தோலுடையவன்.

(8) யானை உரித்தோல் (போர்வை)

யானையின் தோலை உரித்து அதைப் போர்த்தருளினார் பெருமான்.

## 8. சிவபிரான் இருவர்க்கு அரியர் [13]

[தலைப்பு 54 பார்க்க]

பிரமனும், திருமாலும் அறியமுடியாத வண்ணம் நிலம் முதல் அண்டம் வரை அழல் உருவாகப் பெருமான் நின்றனர். அவ் விருவரின் அகங்காரம் தவிர்ப்பதற்காக அங்ஙனம் நின்றனர். ஆணோ, பெண்ணோ, அலியோ என்று அவ் விருவரும் காணாத கடவுள் பெருமான். அவ் விருவரும் சாரமாட்டாத் தன்மையர் பெருமான். மாலும் அயனும் கீழும், மேலும், அகழ்ந்தும் பறந்தும் காண மாட்டாத பெருமான் அவர். திருமால் பன்றியாய்ப் பூமியைப் பிளந்து சென்று இளைத்தும், 'ஊழிமுதல்வ சய சய' என்று வழுத்தியும் உணரமுடியாத திருவடியை உடையவர் பரமன்.

## 9. சிவபிரான் உறைவிடம் [14]

(1) அடியாரின் உடலே தமது இல்லமாகக் கொண்டுள்ளார் பெருமான். அடியாரின் உள்ளத்தின் உள்ளிருக்கின்றார்: தம்மை ஓயாது விரும்பி நினைப்பவர் தம் உள்ளத்தில் உள்ளார்:

(2) உலகுக்கு அப்புறத்தில் உள்ளார்.

(3) அவருடைய ஊர் தமது (மணிவாசகர்) சிந்தையும் உத்தரகோச மங்கையும் என்பர்.

(4) அவருக்குக் கோயில் சுடுகாடு.

(5) அவர் லோகம் சிவலோகம்.

(6) அவர் வீற்றிருக்கும் தலங்கள் ஆரூர், இடைமருது, உத்தரகோச மங்கை, (திரு) ஐயாறு, கச்சி, கயிலை, குற்றாலம், சிவபுரம், (பொன்னகர்), தில்லை, (திருத்) துருத்தி, (திருப்) பராய்த்துறை, (திருப்)பெருந்துறை.

(7) அவர் நாடு தென்பாண்டி நாடு.

(8) அவர் உடையாள் (பார்வதியின்) நடுவுள் இருப்பர்.

(9) மாணிக்கவாசகருடைய உடலிலும், கண்ணிலும், சொல்லிலும், சிந்தையிலும், (மனத்திலும், நெஞ்சிலும்) வீற்றிருக்கின்றார்; அவர் நடுவுள் சிவனும் தேவியும் இருப்பதானால் அடியார் நடுவுள் தாம் இருக்கும்படியான திருவருளைப் புரிக என இறைவனை வேண்டுகின்றார்.

(10) மலரிலும், மலையிலும் (கயிலை, மந்திரமலை), வானிலும் உள்ளார்.

## 10. சிவபிரான் எடுத்த வேடமும், அவ்வத்தலங்களில் செய்த லீலைகளும் [15]

[64 திருவிளையாடலிற் சேராதவை]

தலங்கள்

(1) இடைமருது

இத் தலத்தில் மணிவாசகர் திருவடி தீட்சை பெற்றார்.

(2) ஈங்கோய் மலை

இத் தலத்தில் பெருமான் தமது திருவுரு அழகைக் காட்டினர்.

(3) உத்தரகோச மங்கை

இத் தலத்தில் தமது ஞான உருவான கோலத்தைக் காட்டினர்.

(4) திரு ஐயாறு

இத் தலத்தில் சிவபூசை செய்யும் அந்தணராய் வந்தனர் பெருமான். [இதன் விவரம் 'வரலாறு' என்னும் தலைப்பிற் காணலாகும்.]

(5) கச்சி யேகம்பம்

ஏகம்பத்தில் பாகம் பெண்ணோடாயினர்.

(6) கடம்பூர்

இத் தலத்திற் கோயில் கொண்டருளினர்.

(7) கல்லாடம்

இத் தலத்திற் பெருமான் இனிது வீற்றிருப்பர்.

(8) கழுமலம் (சீகாழி)

இத் தலத்தில் தமது திருவுருத் தரிசனம் தந்தனர்.

(9) குற்றாலம்

குற்றாலத்திற் சிவவடிவம் கொண்டனர். [‘வரலாறு’ என்னும் தலைப்புப் பார்க்க.]

(10) சந்திர தீபம்—பாலை

சந்திர தீபம் என்னும் பதியிற் பாலை என்னும் இடத்திற் சாத்திரம் கூறினவனாக இறைவன் விளங்கினர்.

(11) சாந்தம் புத்தூர்

இப் பதியில் வேடன் ஒருவனுக்குப் பெருமான் (தர்ப்பணத்தில்) கண்ணாடியிற் காட்சியளித்தனர்.

(12) திருப்பனையூர்

இத் தலம் இறைவனுக்கு விருப்பமுள்ள தலம்.

(13) திருவாஞ்சியம்

இத் தலத்தில் மருவார் குழலியாம் தேவியுடன் இறைவன் மகிழ்ந்து வீற்றிருப்பர்.

(14) திருவாரூர்

இங்குப் பெருமான் ஞானோபதேசம் செய்தனர்.

(15) துருத்தி

இங்குப் பெருமான் விருப்புடன் வீற்றிருக்கின்றார்.

(16) தேவூர்

இத் தலத்துக்குத் தென்பால் உள்ள தீவில் அரச கோலம் கொண்டனர் பெருமான்.

(17) நந்தம் பாடி

இத் தலத்தில் வேதம் வல்ல அந்தண ஆசிரியராக இறைவன் வீற்றிருக்கின்றார்.

(18) பஞ்சப் பள்ளி

இத் தலத்தில் தேவியுடன் அமர்ந்து அருள் புரிகின்றார் இறைவர்.

(19) பாண்டூர்

இத் தலத்தில் இறைவன் விளக்கமுடன் வீற்றிருக்கின்றார்.

(20) பாலை

(10) "சந்திர தீபம்" பார்க்க.

(21) புறம்பயம்

*இத் தலத்தில் பெருமான் பல்வகை அறங்களை உபதேசித்தார்.

(22) பூவலம்

இங்குப் பெருமான் ஓர் அடியானுடைய பாவத்தைத் தீர்த்தருளினர்.

(23) மந்திரமாமலை

மகேந்திர வெற்பு. இங்கு மந்திர நூலாகிய ஆகமம் வெளிப்படுதற்கு இடமான மகேந்திர மலையை இருப்பிடமாகக் கொண்ட பெருமையுடையவன் பெருமான்.

(24) †மொக்கணி

இங்குப் பெருமான் தமது அழகிய திருவுருவத்தைக் காட்டி அருளினர்.

---

* "அறம்பயனுரைத்தனை புறம்பய மமர்ந்தோய்"
—சம்பந்தர், 2-30-1.

† "வரலாறு" என்னும் தலைப்புப் பார்க்க.

(25) வாதவூர்

இங்குப் பெருமான் தமது திருவடிச் சிலம்பின் ஓசையைக் (தனக்கு - மணிவாசகருக்குக்) காட்டினர்.

(26) (திரு) வெண்காடு

இத் தலத்திற் புதிதாய் வந்து குருந்தமர நீழலில் பெருமான் இடம் கொண்டனர்.

### வேறு

(1) வெவ்வேறு திரு உருவங்களுடனும், வெவ்வேறு காரணமாகவும் இவ்வுலகம் உய்யவேண்டித் தானும் உமையும் ஒருங்கு போந்தருளியும், குதிரைச் சேவகனுக வந்து மேல்நாட்டுக்கு எழுந்தருளியும் பெருமான் லீலைகள் புரிந்தனர்.

(2) சந்தர வேடம் தனது நெருப்பு உருவை மறைத்துச், சுந்தர வேடம்கொண்டு இந்திர ஜாலம் புரிவதுபோல யாவரையும் தன்வசப்படுத்தித் தானே ஆகிய தயாபரன் பெருமான்.

## 11. ஐந்தெழுத்து [16]

("ஓம்) நமச்சிவாய," "சிவாயநம" இவை சிவனது திருநாமங்களாகக் கூறப்பட்டுள்ளன. பிறவிக் கடலைத் தாண்ட உதவும் ஒரு தெப்பம் ஐந்தெழுத்து. அதை நன்கு ஓதவேண்டும்.

'நமச்சிவாய' என்று செபித்துச் சிவனது திருவடியைப் போற்ற விரும்பாத பேயன் என்று மணிவாசகர் தம்மை நொந்து கொள்கின்றார்.

## 12. ஐந்தொழில் [17]

ஆக்குதல், காத்தல், அழித்தல், அருள் பாலித்தல், மறைத்தல் இந்த ஐந்தொழில்களையும் இறைவன் இயற்றுவர்.

## 13. கருணை [18]

[19 (7), 42 என்னும் தலைப்புக்களைப் பார்க்க]

பெருமான் கருணாலயர். அவருடைய கருணைக்கு எல்லையில்லை. "கருணைத் தடங்கடல்", "கருணை வான் தேன்", "கருணை வெள்ளப் புதுமது", "கோதில் பரங் கருணை,"—என்றெல்லாம் அவருடைய கருணை வருணிக்கப் பட்டுள்ளது.

## 14. சிவபிரான் குலம் [19]

(குலமிலியாம்) சிவபிரானுடைய குலத்தை (அந்த ணன், வேடன், வலைஞன், பன்றி முதலிய வேடங்களைப்) பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோம் என்கின்றார்.

## 15. சிவபிரான் கொடி [20]

சிவபிரானுக்குக் கொடி 'ஏறு' (விடை). அக் கொடி, "வெல் கொடி", "கோதிலாக் கொடி" எனக் கூறப்பட் டுள்ளது. அதைக் கண்டால் பகைவர் துண்ணென மிகவும் அஞ்சுவர்.

## 16. சிவபிரான் சடை [21]

(1) சடை

அவிர்சடை, கற்றைவார் சடை, கோலச் சடை, தாழ் சடை, திருச்சடை, தெற்றார் சடை, படர்சடை, புரிசடை, வார்சடை, விரிசடை, வெறிகமழ் சடை—என விளக்கப் பட்டுள்ளது.

இதனால், சிவனுடைய சடை விளக்கமுடையது; திரண் டுள்ளது; அழகுடையது; தாழ்ந்து விளங்குவது; லட்சுமீ கரம் வாய்ந்தது; பின்னியுள்ளது; படர்ந்துள்ளது; சுருண்டு உள்ளது; நீண்டது; விரிந்துள்ளது; நறுமணம் வீசுவது என அறிகின்றோம்.

(2) சடையின் நிறம்

நெருப்புப் போன்றது; செந்நிறத்தது; பொன்னின் நிறத்தை வென்றது.

(3) சடைமீது விளங்குவன

கங்கை, கொன்றை, பாம்பு, பிறை, மந்தார மலர், மலர், வண்டு.

(4) சடையின் வர்ணனை

(1) "நறுமணம் பொருந்திய மந்தார மலரில் எடுத்த விசை பாடிப் பின் படுத்தலிசை ஒலிக்கும் வண்டுகள் அமிழ்தற்கு (மொய்த்தற்கு) ஏதுவாகிய செழித்த தேன் விளங்கும் சடை".

(2) கங்கை ஒருபால் இரைச்சலிட அதைக் கேட்டு பாம்பு ஒருபால் இரைச்சலிடும் சடை.

(3) வெண்டலையின் தொளையில் தங்கியிருக்கும் ஒளி பொருந்திய பாம்பு பிறையைப் பார்த்து எடுத்த படத்தைச் சிறிது சுருக்கிக்கொள்ள, அதைக் கண்ட பிறை அதற்குப் பயந்து கங்கை நீரில் மூழ்கி மறையும் சடை.

## 17. சிவபிரான் சுடர்—ஒளி—சோதி [22]

### 1. சோதி

பெருமான் - அருள் துறையளிக்கும் சோதி; ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி; ஆனந்தம் ஆக்கும் சோதி; ஈண்டிய மாய இருள்கெட எப்பொருளும் விளங்கத் தூண்டிய சோதி; எழில் கொள் சோதி; எழுதரு சுடர்ச் சோதி; ஒளி வளர் சோதி; கதிரை மறைத்தன்ன சோதி; கருவார் சோதி; கேழில் பரஞ்சோதி; தூய மேனிச் சுடர் விடு சோதி; தெரிய அரிய பரஞ்சோதி; மாசற்ற சோதி; மாமலர் மேய சோதி; முத்துமாமணி மாணிக்க வயிரத்த பவளத்தின் முழுச்சோதி, முதற் சோதி; யாவராயினும் அன்பரன்றி அறியொணு மலர்ச்சோதி; வஞ்சப் புலனைந்தின்

வழியடைத்து அமுதே ஊறி நின்று தன்னுள் (மாணிக்க வாசகரின் உள்ளத்தில்) எழுபரஞ்சோதி.

### 2. சுடர்

பெருமான் - அமுது ஊறு பரஞ்சுடர், அருளுடைச் சுடர், ஆதி முதல் பரமாய பரஞ்சுடர், இலங்கு சுடர், ஈறிலாக் கொழுஞ் சுடர், உலவா இன்பச்சுடர், எழிற் சுடர், கொழும் சுடர்க்குன்று, செஞ்சுடர் வெள்ளம், சொல்லும் பொருளும் இறந்த சுடர், ஞானச் சுடர், தனிச் சுடர், துரியம் இறந்த சுடர், தூண்டா விளக்கின் சுடர், தோளா முத்தச் சுடர், பரஞ் சுடர், பொய்யிருள் கடிந்த மலர்ச் சுடர், மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடர், விரிந்தே எரியும் சுடர்.

### 3. ஒளி

பெருமான் - உரை மாண்ட உள் ஒளி, ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளி, காண்பரிய பேரொளி, கிளர் ஒளி, துளங்கொளி வயிரத்து ஒப்பன், தோற்றச் சுடர் ஒளி, நீளொளி, படர் ஒளிப் பரப்பு, பருதி வாழ் ஒளி, மாணிக்கத்து ஒளி, மின் ஒளி கொண்ட பொன் ஒளி, விளங்கு ஒளி.

### 4. பிற

பெருமான் - சூழொளி விளக்கு, செம்பவள வெற்பின் தேசு, திணிந்ததோர் இருளில் தெளிந்த தூவெளி, தேசன், தேனுந்து செந்தீ.

## 18. சிவபிரான் தசாங்கம் [23]

(1) **ஆறு**

**ஆனந்த ஆறு.**

(2) **ஊர்**

**உத்தர கோச மங்கை ஊர்.**

(3) ஊர்தி

இருள் கடிந்தருளிய இன்ப ஊர்தி, வான் புரவி.

(4) கொடி

ஏறு - கொடி, நீற்றுக் கொடி.

(5) நாடு

பாண்டி நாடு

(6) படை

கழுக்கடை.

(7) பறை

நாதப் பறை.

(8) பெயர்

தேவ தேவன், தேவர் பிரான்.

(9) மலை

இன்பமரு முத்தி அருளு மலை.

(10) மாலை

கழுநீர் மாலை, தாளி அறுகு.

## 19. சிவபிரான்—தன்மை—பெருமை முதலிய [24]

### 1. அச்சம் ஊட்டுபவர் [24(1)]

இறைவர் தம் புகழை இகழ்பவருக்கு அச்சம் ஊட்டுவர்.

### 2. அட்டமூர்த்தி [24(2)]

அட்டமூர்த்தி அழகர் பெருமான்.

### 3. அண்மை [24(3)]

அண்மையில் விளங்குபவர் பெருமான்.

## 4. அணு [24(4)]

அணுவினும் நுண்மையர், அணுவைப் போன்ற சிறியராம் பெரியர்; சென்று சென்று அணு அணுவாகத் தேய்ந்து தேய்ந்து முடிவில் பூரண ஒருவனுகி நிற்கும் பெரியோன் இறைவன்.

## 5. அத்துவிதம் [24(5)]

'என் (மணிவாசகருடைய) நெஞ்சிற் பொருந்தியானுகி' நின்றவர்.

## 6. அந்தணர் [24(6)]

அந்தணர் உருவுடன் வந்து வா எனக் கூறி வீடு அருளும் கருணையாளர் பெருமான். அந்தணராய் இங்கு வந்து அழகிய சேவடியைக் காட்டியவர். மறையோர் கோலங் காட்டி ஆண்டவர். மறை ஈறு அறியாத மறையவர். மனம், வாக்குக் கடந்த மறையவர். விண் ஆளும் தேவர்க்கு மேலாய வேதியர். வினை கடிந்த வேதியர். வெண்ணீற்று மேனி வேதியர்.

## 7. அப்பால் நின்றவர் [24(7)]

உலகுக்கு அப்பால் நின்றவன் இறைவன்.

## 8. அமுது [24(8)]

[தலைப்பு 47 பார்க்க.]

பரமன் அடியாருக்கு அமுதன்; அமுது அளித்து ஊறும் ஆனந்தன்; அருள் நனி சுரக்கும் அமுது; அன்பினில் விளைந்த ஆரமுது; எங்கும் நிறைந்து அமுதூறு பரஞ்சுடர்; எப்பாலவர்க்கும் அப்பாலாம் ஆரமுது; கடல்வாய் அமுது; கோதிலா அமுது; செறியும் கருத்தில் உருத்து அமுதாம் சிவபதம்; தேனர் அமுது; தொழும்பர்க்கு அமுது; பாண்டியற்கு ஆரமுது.

## 9. அரசு [24(9)]

[தலைப்பு 19(112), 41 பார்க்க.]

பெருமான் அருந்தவர்க்கு அரசு; அளவிறந்த பல்லுயிர்க்கும் கோன்; உம்பர்கட்கு அரசு; கோகழி எங் கோமான்; சிவபுரத்து அரசு; பூவார் சென்னி மன்னன்; பேரரையன்.

## 10. அரியர் [24(10)]

அரியதில் அரிய அரியோன்; அரியவன் யாவர்க்கும்; அளவு அறுப்பதற்கு அரியவன் இமயவர்க்கு, ஆராலும் காண்டற்கு அரியன்; அரி, அயன், இந்திரன் வானோர்க்கு அரிய சிவன்; உணர்வு அரிதாம் ஒருவன், உணர்வார்க்கு உணர்வு அரியவன்; உன்னற்கு அரியான்; கனவேயும் தேவர்கள் காண்பரிய கனை கழலோன்; செப்புதற்கு அரிய செழுஞ்சுடர் மூர்த்தி; சொல்லற்கு அரியான், ஞாலமே, விண்ணே, பிறவே அறிவரியான், தெரிய அரிய பரஞ்சோதி, தொடர்வு அரியான், நினைப்பு அரிய தனிப் பெரியோன், நூலே நுழைவரியான், பெறுதற்கு அரியன், மாலுக்கு அரியான், வானோர்க்கு அரிய மருந்து, விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா விழுப்பொருள்.

## 11. அருமை [24(11)]

பெருமான் அருமையில் எளிய அழகர்.

## 12. அருவம் உருவம் [24(12)]

[அருவமும் உருவமும் ஆவார். 19, (48) பார்க்க]

## 13. அருள் [24(13)]

['கருணை' என்னும் தலைப்புப் பார்க்க]

அருட்பெய் கழல் தாளிணை உடையவன்; அருளார், அமுதப் பெருங்கடல், இருள்கெட அருளும் இறைவன்

தீதிலா நன்மைத் திருவருட் குன்று, பேரருளாளன், மன்னிய திருவருள் மலை, மெய்ம்மையார் விழுங்கும் அருளை உடையவன்.

### 14. அல்லல் - இடர் களைவர் [24(14)]

அல்லற் பிறவி அறுப்பவன்; இடரைக் களையும் எந்தை.

### 15. அழகு [24(15)]

சந்தனச் சாந்தின் சுந்தரர், நிரம்ப அழகியர், மட்டு வார் குழல் மங்கையாளை ஒரு பாகம் வைத்த அழகர்.

### 16. அழித்தல் - அழிப்பர் [24(16, 17)]

கரப்பார் முழுதும்; தான் தனியன் ஆயிடினும் காயில் உலகனைத்தும் கல் பொடி காண்.

### 17. அழிவு இல்லாதவர் [24(18)]

பேரா, ஒழியா, பிரிவில்லா, மாளா, இன்ப மாகடல்.

### 18. அளவிலாதவர் [24 (19)]

அளவிலா இன்பமா கடல்.

### 19. அறிந்தவர் [24(20)]

வேதி.

### 20. அறியப்படாதவர் - அகப்படாதவர் [24(21)]

அறிதற்கரிதென எளிதென அமரரும் அறியார் பெருமானை. உணர்ந்த மாமுனிவர், உம்பரோடு ஒழிந்தார், உணர்வுக்கும் தெரிவரும் பொருள் அவர். கேட்டறியோம் அவரைக் கண்டறிவாரை; நான்மறையும் அவர் பாலணுகா; அவர் நாலுணர்வு உணரா நுண்ணியர்; மூவராலும் அறியொணா முதலாய ஆனந்த மூர்த்தி, அவரை மூவரும்

அறிகிலர் யாவர் மற்று அறிவார், மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த தேவரும் காணுச் சிவன் அவர். யாரும் மலரடி காணு மன்னர் அவர். யார் அவனை அறியகிற்பார்; அவர் யாவராயினும் அன்பரன்றி அறியொணு மலர்ச்சோதி; யாவரும் சிந்தையாலும் அறிவரும் செல்வர். வான நாடரும் அறியொணுத மூர்த்தி.

## 21. அறிவு [24(22, 23)]

அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவு, ஆணு அறிவு.

## 22. ஆசை [24(24)]

பேராசை வாரியன்.

## 23. ஆசை தீர்ப்பார் [24(25)]

ஆசையெல்லாம் அடியார் அடியோம் எனும் அத்தனையில் நிற்கும்.

## 24. ஆட் கொள்ளுதல் [24(26)]

பிரானைப் போல ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்! ஏழை அடியோமை ஆண்டுகொண்ட நயத்தினர் அவர். போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்களாம் திருவடியினர். மனிதரை ஆட்கொண்ட வள்ளல் அவர்.

## 25. ஆட்டி வைப்பவர் [24(27)]

யானெனதென் றவரவரைக் கூத்தாட்டுவானாகி நிற்பர் பெருமான்.

## 26. ஆண் - பெண் - அலி [24(28)]

பிரான் ஆணெனத் தோன்றி, அலியெனப் பெயர்ந்து பெண்ணெனை ஒளிப்பர்; ஆணோ, பெண்ணோ, அலியோ

என இருவர் (அயனும், அரியும்) காணுக் கடவுள் அவர். பெண், ஆண், அலி எனும் பெற்றியர் அவர்.

## 27. ஆதி - அந்தம் - நடு [24(29)]

பிரான் அடியொடு நடு ஈருனர், ஆதி, அந்தம், நடுவாகி, அல்லர் ஆனர்.

## 28. ஆள்வார் [24(30)]

பிரான் உலகேழும் ஆவார், ஆள்வார்.

## 29. ஆற்றல் [24(31)]

விச்ச தின்றியே விளைவு செய்குவார், விண்ணும், மண்ணகம் முழுவதும், யாவையும் வைச்சு வாங்குவார்.

## 30. ஆறு [24(32)]

பிரான் ஆனந்தம்மே ஆறு அருளுவர்; பெருங்கருணைப் பேராறு அவர்.

## 31. ஆனந்தம் [24(33)]

பிரான் அந்தமிலா ஆனந்தர். அருள்நிதி தரவரும் ஆனந்த மலை, ஆனந்தத் தேன்சொரியும் குனிப்புடையார், ஆனந்த மாகடல், ஆனந்த மாலேற்றும் அத்தர்.

## 32. இயல்பு [24(34)]

எவ்வுயிர்க்கும் இயல்பான ஈசர் நூறு நூறுயிரம் இயல்பினர்.

## 33. இயற்கை [24(35)]

பிரான் வேறு வேறுருவும், வேறுவே றியற்கையும் கொண்டவர்.

### 34. இருள் (அஞ்ஞானம், மையல்) நீக்குவர் [24 (36-1)]

இறைவர் அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவு, இருள் கடிந்து அருளிய இன்ப ஊர்தி, இருள்கெட அருளும் ஒளி, திணிந்ததோர் இருளில் தெளிந்த தூவெளி, தொழுவார் மையலைத் துணித்து, நெஞ்சத்து இருளகல வாள்வீசி, பொய்யிருள் கடியும் மெய்ச்சுடர் அவர்.

### 35. இருளாவார் [24(36-2)]

இருளும் வெளியும் ஆயினர்; சோதியும் இருளும் ஆயினர்.

### 36. இன்ப உருவத்தினர் [24(37)]

பிரான் இன்ப மாகடல், உலவா இன்பச் சுடர், குணங்கள் தாம் இல்லா இன்பம்.

### 37. இன்பதுன்பம் ஆயினோர் [24(38)]

பிரான் துன்பமுமாய் இன்பம் ஆயினர்.

### 38. இன்பதுன்பம் இல்லாதவர், உள்ளவர் [24(39)]

பிரான் இன்பமும் துன்பமும் இல்லார், உள்ளார்.

### 39. இன்பம் பயத்தல் [24(40)]

அழகமர் வண்டோதரிக்குப் பேரருள் இன்பம் அளித்த....பிரான், ஆராத இன்பம் அருளும் மலை, எய்தினர்க்கு ஆரமுது அளிப்போன், மெய்யடியார்கட்கு இன்பம் தழைத்திடும் சேவடியினர்.

### (39A) இன்ப வெள்ளம், இன்பக்கடல் [24(41)]

பிரிவிலாத, அளவிலாத, மாளாத, ஒழியாத, இன்ப மாகடல் பெருமான்.

## 40. இனியர் [24 (42)]

இனியான், (மணிவாசகர்க்கு இனிய) ஆனே, அவர் கண்ணிலே அமுதூறித் தித்தித்து அவர்பிழைக்கும் இரங்கும் அங்கணன், கண்ணுக்கு இனியான், கரும்புதரு சுவை தனக்குக் காட்டினவர், கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தாற்போலச் சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று, பிறந்த பிறப்பறுக்கும் பெருமான்; சித்தம் புகுந்து தித்திக்கவல்ல கோன், தித்திக்கும் சிவபெருமான், தேன், அமுது, கரும்பின் தெளிவு; நினைதொறும், காண்டொறும், பேசுந்தோறும், எப்போதும் அனைத்தெலும்புள் நெக ஆனந்தத் தேன் சொரியும் குனிப்புடையான், வந்திப்பார் மதுரக்கனி.

## 41. ஈசன் [24 (43)]

எல்லார்க்குந் தானீசன்.

## 42. உடைமை—உடையான் [24(44)]

தன்னைஉள்கி உள்ளம் உருகும் பெருங் காதல் உடையாருடையான், பிரான்.

## 43. உணர்ச்சியில் கொள்ளப்படாதவர் [24 (45)]

உணர்வார்க்கு உணர்வு அரியவன்; உள்ளத்து உணர்ச்சியில் கொள்ளப்படாதவன்.

## 44. உணர்வு [24 (46)]

இருவர்க்கு உணர்வு இறந்த.......பெருமான்; உரை உணர்வு இறந்த ஒருவன்; உணர்வது ஆய ஒருவன்; நுணுக்கரிய நுண் உணர்வு.

## 45. உம்பரான் [24 (47)]

உம்பரான்.

### 46. உயர்த்துவர் — தாழ்த்துவர் [24 (48)]

புன்மையரை மிகவே உயர்த்தி விண்ணோரைப் பணிவிப்பர் பெருமான்.

### 47. உயிர் [24 (49)]

அளவிறந்த பல்லுயிர்க்கும் கோனாகி நின்றவர்; எல்லா உயிர்க்கும் உயிர்; எல்லா உயிருமாய்த் தழைத்து அவற்றுள் சில பிழை செய்யின் அவற்றின் வேறானவராய் நிற்பவர்.

### 48. உருவம் அருவம் [24 (50)]

['அருவமும் உருவமும்' என்னும் தலைப்பு 10(12) பார்க்க;] வேறு வேறு உருவுடன்...நூறு நூறாயிரம் இயல்பினர் பெருமான்.

### 49. உரை—உணர்வு [24 (51)]

உரை உணர்வு இறந்த ஒருவர்.

### 50. உறவு [24 (52)]

(சுற்றமும் பார்க்க) யாவர்க்கும் தந்தை, தாய், தம்பிரான், ஆனால் தனக்கு அஃதிலாதவன் பிரான்.

### 51. ஊர் [24 (53)]

தம்முடைய (மணிவாசகருடைய) சிந்தையே ஊராகக் கொண்டவர், உத்தரகோச மங்கை அவருடைய ஊர்; அவருக்கு ஊர் ஏது? (இல்லை என்றபடி.)

### 52. ஊனை உருக்குதல், ஊனிற் புகுதல் [24 (54)]

பிரான் ஊன் புகுந்து கருணையினால் ஆண்டு கொண்டவன்; ஊனும் உயிரும் ஆனவன்; தெளிந்தாருடைய ஊனை உருக்குபவன்.

### 53. எங்கும் நிறைந்தவர் [24 (55)]

ஒழிவற நிறைந்த யோகம் அவர் ; நடுவிலும், கீழும், மேலுளும், யாவுளும் எள்ளும் எண்ணெயும் போல் நிற்பவர்.

### 54. எட்டுதற்கு அரிய தூரத்தில் உள்ளவர் [24 (56)]

சித்தமும் செல்லாத தூரத்தில் உள்ளவர் பிரான்.

### 55. எத்தர் [24 (57)]

பிரான் எல்லா உயிருமாய்த் தழைத்து, பிழைத்து, அவை அல்லையாய் நிற்கும் எத்தன் ; பெருமான் எத்தனாகி வந்து தனது (தலைவியாம் மாணிக்கவாசகருடைய) இல்லத்திற் புகுந்தார்.

### 56. எதிரான பொருளினர் [24 (58)]

ஆக்குவார் அழிப்பார்; ஆதி ஆவார் அந்தம் ஆவார்; இல்லார் உள்ளார் ; உண்மையாவார் இன்மையாவார் ; முன்னவர் பின்னவர் : சேயார் நணியார்; சோதியாவார் இருளாவார் ; தீமையாவார் நன்மையாவார்; தேறும் வகையவர் திகைப்பும் வகையவர் ; துன்பமாவார் இன்ப மாவார் ; நன்றியே செய்வார் பிழை செய்வார் ; பந்தம் ஆவார் வீடு ஆவார் ; பாதியும் ஆவார் முற்றும் ஆவார்; மெய்யாவார் பொய்யாவார் ; வெம்மை யாவார் தண்மை யாவார்.

### 56 A. எல்லா உயிருமாய், அல்லையாய் ஆனவர் [24(59)]

எல்லா உயிருமாய்த் தழைத்து, பிழைத்து அல்லை யாய் நிற்கும் எத்தர் பெருமான்.

### 57. எல்லாம் அறிவர் [24 (60)]

எல்லாம் அறியும் ஆண்டவன் அவர்.

## 58. எல்லாம் கடந்தவர் [24(61)]

ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பம் அவர்; எப்பாலவர்க்கும் அப்பாலாம் ஆரமுது; முழுவதும் இறந்த முதல்வர்.

## 59. எல்லாம் கேட்டல் [24 (62)]

கேளாமலே எல்லாம் கேட்டவர்.

## 60. எல்லாம் தருவர் [24 (63)]

நெஞ்சமே! பெருமானுடைய இணையடியே சிந்தித்து இருந்தால் அவர் எல்லாம் தருவர்.

## 61. எல்லாம் தானே [24(64)]

எப்பொருளும் தானே ஆவர்; ஒரு பொருளும் அல்லர் அவர்; ஆனால் அவர் அன்றி ஒரு பொருளு மில்லை. நா முதலான கரணங்களெல்லாம் அவர்; பாதியும் முற்றும் அவர்.

## 62. எல்லை யில்லாதவர் [24(66)]

எண்ணிறந்த எல்லையில்லாதவர் இறைவர்.

## 63. எழில் [24(67)]

எழில்கொண்ட சோதி அவர்; எழில் நகை எரியிற் பகைவனுடைய ஊரை அழித்தவர். கழுநீர் மாலையை எழில்பெற அணிந்தவர்.

## 64. எளியர் [24(68)]

அடியவர்க்கு எளியார்; பத்தி வலையிற் படுவார்; மெய்ம்மையாளரால் விழுங்கப் படுவார்; வானோர்க்கு அரியர், ஆனால் ஏனோர்க்கு எளியர்.

## 65. ஒப்பு—ஒப்பிலி [24(69)]

அத்தன் ஒப்பார் அன்னை ஒப்பார்; இணங்கிலி (ஒப்பிலி) இணையிலி; ஒப்பில் அப்பன்; ஒப்பிலாமணி; மின்னை ஒப்பார்.

## 66. ஒருவன்—ஒன்று [24(70)]

உரை உணர்வு இல்லா ஒருவன்; உன்னற்கரிய ஒருவன்; ஊழி முதல்வனாய் நின்ற ஒருவன்; ஒப்பிலா ஒருவன்.

ஒன்றுமிலாதவர்; ஒன்றாய் முளைத்து எத்தனையோ கவடு விட்டவர்.

## 67. ஒளி [24(71)]

['சுடர் சோதி' என்னும் தலைப்பும் பார்க்க]

முகவொளி; சீர் ஒளி.

## 68. ஒளித்தல்—மறைத்தல் [24(72)]

['கரத்தல்' என்னும் தலைப்பு 19(74) பார்க்க]

அருந் தவசிகளுடைய காட்சியிலும் ஒளிப்பர்; இன்ன தந்திரத்தில் காணமுடியும் என்று இருந்தவர்க்கு அன்ன தந்திரத்தில் அப்பொழுதே ஒளிப்பர்; தன்னை அறியாதவருடைய உள்ளத்தில் ஒளிப்பர்; தேடின பிரமனுக்கு ஒளிப்பர்; 'கண்டு கொண்டேன், தொடர்மின் பற்றுமின்' என்றவர்க்கு முற்றும் ஒளிப்பர்; மறைத் திறம் அறிந்தோர்க்கும் ஒளிப்பர்; விண்ணோர்கள் ஏத்த மறைந்திருப்பார்.

## 68A. ஒன்றும் இலாதவர் பெருமான்

## 68B. ஒன்றும் நீ அல்லை; நீஅன்றி ஒன்றுமில்லை

## 69. ஓங்காரம் [24(75)]

ஓங்காரத்து உட்பொருள்; ஓங்காரமாய் நின்ற மெய்யர்.

## 70. கடலாவர் [24(76)]

மாகடலும் ஆவர் பிரான்.

## 71. கதியாவர் [24(77)]

சிவகதி; பாண்டியனுக்குப் பரகதி அளித்தவர்; மலர் பறித்து இறைஞ்சிப் பக்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப் பரகதி கொடுத்து அருள்செய்யும் சித்தர்.

## 72. கரணம் ஆவார் [24(78)]

நா முதலான கரணம் எல்லாம் அவர்.

## 73. கரணம் கடந்தவர் [24(79)]

கரணங்கள் எல்லாம் கடந்து நின்றவர் பெருமான்.

## 74. கரத்தல் [24(80)]

[19(68) பார்க்க]

அன்பர் உள்ளத்தில் கரந்து நில்லாத கள்வர்; சோதியிற் கரந்த கள்வர்; காட்டிற் கரந்த கள்வர்; காப்பார், படைப்பார், கரப்பார்; நிரந்த ஆகாயம், நீர், நிலம், தீ, காற்று இவை ஆகியும் அல்லாமலும் ஆங்கே கரந்த உருவினர்.

## 75. கரு [24(81)]

தமது (மாணிக்கவாசகரது) உள்ளக் கரு; கருவார் சோதி.

## 76. கருணை [24(82)]

['அருள்' என்னும் தலைப்புப் பார்க்க]

இடவை மட நல்லாட்குச் சிலம் மிகக் கருணை அளித்தவர். எல்லாம் தருவர்; பெருங் கருணையாளர்; எல்லையில்லாத கருணைக் கடல்; உணர்வாய் உருக்கும் கருணை வெள்ளம்; கருணையிற் பெரிய ஒருவன்; தாயிற் சிறந்த தயாவான தத்துவன்; பிரான் பருகற்கு இனிய பரங் கருணைத் தடங்கடல்; மரணம் பிறப்பு என்ற இவை இரண்டின் மயக்கறுத்த கருணைக் கடல்; மாதின் கூறுடைய மாப்பெருங் கருணையர்; மாறிலாத மாக்கருணை வள்ளல்; வேண்ட முழுதும் தரும் வான் கருணை வெள்ளம்; பாண்டிப் பிரானாகிய சிவன் தன் அடியவர்க்கு மூல பண்டாரம் வழங்குகின்றார், முந்துங்கள்.

## 77. கருத்து [24(83)]

கரப்பவை கருதாத கருத்துடைக் கடவுள்.

## 78. கரும்பு [24(84)]

ஞானக் கரும்பின் தெளிவு பெருமான்; தீங்கரும்பின் கட்டி அவர்.

## 79. கலை [24(85)]

பெருமான் பொருளுடைக் கலை.

## 80. கள்ளம் [24(86)]

கருவார் சோதிக் கரந்த கள்ளத்தினர்; காடது தன்னில் கரந்த கள்ளத்தினர்.

## 81. கன்னல் [24(87)]

பெருமான் கன்னலின் தெளிவு; தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்த இனிமை உடையவர் பெருமான்.

## 82. கனி (பழம்) [24(88)]

அளிந்ததோர் கனி பெருமான், அவர் கல் நார் உரித்த கனி, நெல்லிக்கனி, பழச்சுவை, (வந்திப்பார்) மதுரக்கனி.

## 83. காத்தல் [24(89)]

ஆக்குவார், காப்பார்; காக்கும் எம் காவலர், காத்தாட் கொள்ளும் குருமணி; வானும் பூமியும் எல்லாமும் காக்கும் கூத்தர்; வல் வினைப்பட்டு ஆழாமற் காப்பார்.

## 84. காரணன் [24(90)]

பழமையர், காரணர்.

## 85. காலம் ஆவார் [24(91)]

மண் விண் இவை வந்து போம் காலம் ஆவார் அவர்.

## 86. குணம் [24(92)]

பரமனூர் அம்பலத் தாடுகின்ற குணத்தைப் பாடுவோம்; குணங்கள் இல்லா இன்பப் பரமன் அவர்.

குணங்களும் குறிகளும் இல்லாத குணக் கடல் பிரான்; குன்றனைய பெரிய குற்றங்களைக் குணம் என்று பெருமான் கொண்டால் அவருக்கு என்ன கெட்டுப் போகும்; தமது அடியார்களுடைய குற்றங்களை நீக்கிக் குணங்களை ஏற்றுப் பாராட்டுவர் பெருமான்; நீதியான குணங்களைப் பெருமான் நல்குவார்.

## 87. குற்றம் இல்லாதவர் [24(93)]

குற்றம் இல்லாதவர் பெருமான்.

## 88. குறி [24(94)]

குறி ஒன்றும் இல்லாத கூத்தர் அவர்.

## 89. கேடிலி [24(95)]

கேடு ஒன்றும் இல்லாதவர் அவர்.

## 90. கோடை [24(96)]

பாண்டியனுக்கும் பெரும்பதவி மாத்திரமா, உலக முழுவதுமே பெருமான் தருவார் கொடையாக, ஆதலால் சென்று முந்துங்கள்.

## 91 கொழுந்து [24(97)]

இளமைச் செவ்வி நிறைந்தவர் பெருமான்.

## 92. கோள்கை [24(98)]

'மணிவாசகர்' என்னும் பகுதியிற் பார்க்க.

## 93. கோயில் [24(99)]

தமது (மணிவாசகருடைய) மனத்தையே கோயிலாகக் கொண்டு ஆண்டார் பெருமான்.

## 94. கோலம்—திரு ஓலக்கம் [24(100, 126)]

பெருமானுடைய திருக்கோலம் கணக்கு இலாதது; காணொணாதது. வானவரும் அறியாதது; தெய்வத்தன்மை விளங்குவது; அன்பர்கள் சூழ்ந்திருப்பது;

தோல் - துகில், குழை - தோடு, நீறு - சாந்து, சூலம் - கிளி, வளை இவை தமைக்கொண்ட அர்த்த நாரீசுரர் கோலம் பெருமானுடைய பழைய கோலம்.

## 95. சாந்து அணி சுந்தரம் [24 (101)]

சந்தனச் சாந்தணி சுந்தரர் பெருமான்.

96. சார்தல் [24 (102)]

திறமையால் (உயிரோடு) சார்பவன்; (மறைத்தல்) தொழிலால் உயிர்களோடு உடனுகி (சார்ந்து) நிற்கின்ருனதலின் சதுராலே சார்பவனுனன்.

97. சிட்டர் [24 (103)]

பெரியோர்க்குப் பெரியர் பெருமான்.

98. சித்தர் [24 (104)]

(தலைப்பு 61 பார்க்க.)

பெருமான் முடிவிலாத சித்தர்.

99. சிவபதம் [24 (105)]

இனிமை தரும் செம்மையாய சிவபதத்தை அளிக்கும் செல்வர் பெருமான்.

100. சீர் [24 (106)]

ஒப்பிலாத, நினைத்தற்கரிய, குறையாத, அளவிலாத அரும்பெரும் சீரை உடையவர் பெருமான்; சிந்தனையை உருக்கும் சீரை உடையவர் பெருமான்; சீருருவானவர் பெருமான்; தனிப் பெரியவர் அவர்; திருவாஞ்சியத்திற் சீர்பெற இருப்பவர்; நிறை மலர்க் குருந்த மேவிய சீர் ஆதி அவர்; யாவர்க்கும் மேலான சீரை உடையவர் அவர்.

101. சீலம் [24 (107)]

இடவை மட நல்லாட்குச் சீலம் அளித்தவர் பெருமான்; நம்மை ஆட்கொண்டு அருளிச் சீராட்டும் அவரது சீலத்தைப் பாடுவோம்.

102. சுற்றத் தொடர்பு [24 (108)]

உறவு, சுற்றத் தொடர்பு இவை தமை அடியார்கட்கு ஒழிப்பர் பெருமான்.

## 103. செயல் [24 (109)]

பொய்யான சமயங்களிலும், ஒன்றோடொன்று மாறுபடும் சாத்திரங்களிலும் கிடந்து தடுமாறும் கவலையை ஒழித்துத் தமது கழலிணையைத் தந்தருளும் செயலை உடையவர் பெருமான்.

## 104. செல்வம்—செல்வர் [24 (110)]

அழியாத ஆனந்தமான தேனைச் சொரியும் செல்வர் பெருமான். குறைபடாத செல்வத்தை உடையவர் அவர். பக்தர் சிக்கெனப் பிடித்த செல்வர் அவர்.

## 105. சேவகன் [24 (111)]

அச்சம் தவிர்க்கும் சேவகன் பெருமான்: குதிரைச் சேவகன் அவர்; சேவகனாகி, வலிய வில்லை ஏந்திப், பல பல தோற்றங்களைக் காட்டினவர் பெருமான்; தண்ணீர்ப் பந்தரை வெற்றி உண்டாகும் வகையில் வைத்து நல்ல நீரை வழங்கிய சேவகன் அவர்.

## 106. சொற்பதம் கடந்தவர் [24 (112)]

சொற்பதம் கடந்த தொன்மையர் பெருமான்.

## 107. ஞானம் [24 (113)]

ஞானக் கரும்பின் தெளிவு, ஞானச் சுடர், மெய்ச் சுடர் பெருமான்.

## 108. தகவு (பெருந்தன்மை) [24 (114)]

நாயனைய தம்மை (மணிவாசகரை) ஆண்ட தகவை உடையவர் பெருமான்.

## 109. தத்துவர் [24 (115)]

தாயான, தாயினும் சிறந்த, தயவை உடைய தத்துவர் பெருமான்.

## 110. [I] தந்தை—தாய் [24 (116-1-3)]

அச்சன், அத்தன், அப்பன், தகப்பன், தந்தை-தாதை அவர்.

அம்மை, அன்னை, தாய் அவர். வேலனும் குமாரக் கடவுளின் தந்தை அவர். 'சீ' என்று சொல்லாது தனது (மணிவாசகரது) பணிகளைக் கொண்டருளும் தாய் அவர். தாயினும் சிறந்த தயவை உடைய தத்துவர் அவர். பன்றிக் குட்டிகளுக்குத் தாயாகி முலையைத் தந்தவர் அவர். பால் நினைந்தூட்டும் தாயினும் மிக அன்புடையவர் அவர்.

## 110. [II] தாய்—தந்தை [24 (116-1-3;) 122]

அம்மை அப்பர் பெருமான்; மூவேழுலகுக்கும் தாயும் தந்தையும் அவர்; அவர் வானகத்து அமரர்தாய்; கன்றை நினைந்தெழு தாய்; தாயும் இலி தந்தை இலி அவர்; யாவர்க்கும் தந்தை, தாய், பிரான் (தலைவர்) அவர், ஆனால் தமக்கு, அவை இலாதவர்.

## 111. தயை [24 (117)]

தாயினும் மிக்க தயவுடைய தத்துவர் அவர்.

## 112. தலைவர் [24 (118)]

தேன், பால், கன்னல் இவை ஒத்த இனிமை உடைய தலைவர் அவர், யாவர்க்கும் தலைவர் அவர்.

## 113. தற்போதம் ஒழிப்பர் [24 (119)]

தம்மை (மணிவாசகரை) உருக்கி உயிரை உண்ட தலைவர் அவர்.

## 114. தன்மை [24 (120)]

அந்தரத்தினின்றும் இறங்கி வந்து 'பாலை' என்னும் தலத்தில் அழகிய தன்மையோடு வீற்றிருப்பர் பெருமான்.

அருக்கனில் (சூரியனில்) சோதியும், மதியில் தண்மையும், தீயில் வெம்மையும், வானில் கலப்பும், காற்றில் ஊக்கமும் (கிளர்ச்சியும்), நீரில் சுவையும், மண்ணில் கடினமும் வைத்த தன்மையை உடையவர் அவர். இருளை (அஞ்ஞானத்தைக்) கடிந்து உள்ளத்தில் எழுகின்ற ஞாயிறு போன்ற தன்மையை உடையவர் பெருமான்; உடலில் இருந்தே, மலரினின்றும் எழுகின்ற நறுமணம் போன்று பற்ற முடியாத, நிலைத்தல் இல்லாத, தன்மையை உடைய பரம்பொருள் அவர். எப்படிப்பட்ட தன்மையையும் எப்படிப்பட்ட திறத்தையும், அத்தகைய தன்மையாலும் திறத்தாலும் ஆண்டருளும் தன்மையை உடையவர் அவர். எதை உடுத்து, எதைச் செய்திடினும் தம் பெருமையைத் தாம் அறியாத தன்மையை உடையவர் அவர்; எவ்வகைப் பட்டவர் தன்மையையும் தம்பாலாக்க வல்ல தயாபரர் அவர்; தமது திருவடிகளைத் தப்பாமல் சிந்திப்பவர்களுடைய நெஞ்சை உருக்கும் தன்மையை உடையவர் அவர். தமது தன்மையைப் பிறர் அறியாத தலைவர் அவர்; அவர் தமக்கு நிகரில்லாது தாமே ஆன தன்மையை உடையவர். பாலில் நெய் போல மறைந்து இருக்கும் தன்மையை உடையவர். ஐம்பூதங்கள் (வான், காற்று, தீ, நீர், மண்) கெடினும் தாம் கெடுதலின்றி விளங்கும் தன்மையை உடையவர்.

### 115. தனியர் [24 (121)]

பெருமான் தாம் தனியர்;

### 116. திகைப்பு [24 (123)

திகைப்பு அவர்.

### 117. திசை [24 (124)]

திசைகளும் அவர்.

### 118. திரு [24 (125)]

திருவான தேவர் அவர்.

## 119. திறம் [24(127)]

'அரி, அயன் முதலான தேவர்களுக்கு அரிய சிவன் தம்மை உருக்கிப் பணி கொண்டார் என்பது கேட்டு உலக மெல்லாம் சிரிக்கும் திறத்தினைப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோமாக; இடவை மடநல்லாட்கு அருளிய கருணைத் திறத்தை யார் அறிவாரோ, அவர் தமக்கு (மணிவாசகருக்கு)ப் பிரான் ஆவாராம். சிறு தெய்வங்களை ஏத்தாமல் பெருமானுடைய திறத்தை நினைந்து தமது (மணிவாசகருடைய) சித்தம் உய்ந்தது; தம்மை உய்யக் கொண்ட பிரானுடைய மெய்ம்மை மிகுந்த திறமையைக் காட்டுகின்றது அவருடைய சேவடி; ஒரு பாண்டியன்பால் வந்து அவனுடைய உயிரைத் தன்பால் அடக்கிக்கொண்ட பெருமையை உடையவர் பெருமான். தனது சித்தமாகிய கயிற்றைக்கொண்டு அவரது திருப்பாதத்தைக் கட்டுவித்தது அவருடைய திறம்; அவர் பெருந்திறல் அரசு; அவருடைய கழல்களைத் தாம் மறந்தும் மறவாத வண்ணம் அருள் பாலித்த அவருடைய திறத்தை நாம் பாடுவோமாக.

## 120. தீ [24(128)]

பெருமான் தேன் உந்து தீ.

## 121. தீமை நன்மை [24(129)]

தீமை நன்மை முழுதும் ஆவர் பெருமான்.

## 122. துஷ்ட நிக்ரகம் [24(130)]

ஆலின் கீழிருந்து அறம் உரைத்தார் ஆயிடினும் புரம் மூன்றையும் கூட்டோடே எரித்தார் பெருமான்.

## 123. துணை [24(131)]

பெருமான் - அருந்துணை, உறுதுணை, தனித்துணை.

## 124. துயர் - துன்பம் துடைப்பார் [24(132)]

உள்ளத்து உறுதுயர் எல்லாவற்றையும் ஒழிக்கும் அவருடைய திருக்கழல்; என்றும் பெருமான் நமது துன்பத்தைத் துடைப்பார்; கை தொழுவார் துன்பத்தைத் துடைப்பார்; தமது துன்பப் புயல் வெள்ளத்தைப் பெருமானுடைய கழல்களாம் தெப்பத்தைக்கொண்டு கடந்து கரையேறுவர் அன்பர்கள்; வருந் துயரத்தைத் தீர்க்கும் மருந்து பெருமான்.

## 125. துரியம் கடந்தவர் [24(133)]

துரியம் கடந்த சுடர் அவர். (நனவு, கனவு, உறக்கம் இவற்றைக் கடந்த நான்காவது நிலை துரியம் என்பது)

## 126. துவந்துவங்கள் தூய்மை செய்தல் [24(134)]

துவந்துவங்களை (பற்றுக்களை) ஒழித்துத் தூய்மை செய்வார் பெருமான்.

## 126 A துன்பம் ஆயினர் [24(135)]

துன்பமும் இன்பமும் ஆயினர் பெருமான்.

## 127. தூயர் [24(136)]

தூயர் பெருமான்.

## 128. தேசு [24(137)]

['சுடர், சோதி, ஒளி' என்னும் தலைப்புப் பார்க்க]

## 129. தேர்தல் [24(138)]

தேர்தலை அளிப்பவர் பெருமான்.

## 130. தேவர்க்கு மூத்தவர் [24(139)]

விண்ணோர்க்கெல்லாம் முற்பட்டவர் பெருமான்.

## 131. தேற்றம் - தெளிவு [24(140)]

தெரிவரிதாகிய தெளிவு அவர்.

## 132. தேன் [24(141)]

அவயவங்களுக்குச் சுவைதரும் கோற்றேன் அவர்; ஆனந்தத்தேன் இருக்கும் பொந்து அவர்; ஆனந்தத் தேன் சொரியும் நடனம் உடையவர் அவர்; மூன்று மலங்களையும் ஒழிக்கும் தேன் வெள்ளத்தைத் தருபவர் அவர். கண்ணி னின்று களிப்பினை ஊட்டும் தேன் அவர். கருணைத்தேன் அவர்; சிறந்த அடியார் சிந்தனையுள் ஊறும் தேன் அவர். தேன் போலத் தித்திப்பவர் அவர்; நந்தாத (கெடாத) தேன் அவர்.

## 133. தொன்மை [24(142)]

இறைவனுடைய சோதி மணிமுடி சொல் இறந்த தொன்மையது; தோல் - துகில், குழை - தோடு, திருநீறு - சாந்து, சூலம் - கிளி, வளை இவை விளங்கும் கோலமே அம்மை அப்பருடைய தொன்மைக் கோலம்; திருப்பூவணத் திற் பெருமான் தமது தூவண்ண மேனியைக் காட்டினது ஒரு தொன்மைக் கோலம்; மொக்கணியில் தமது தழல் மேனியைக் காட்டினது ஒரு தொன்மைக் கோலம்.

## 134. தோழம் [24(143)]

ஓத உலவா ஒரு *தோழம் தொண்டர் உளன்; (சொல்லிறந்த, கணக்கிலாத தொண்டர்களை உடையவர் பெருமான்).

* 'தோழம்' என்பது ஒரு பேரெண்.

## 135. தோழன் [24(144)]

ஒப்பற்ற தோழனுகவும், தொண்டர்களின் உள்ளத்தில் இருப்பவனுகவும் விளங்குபவர் பெருமான்.

## 136. தோற்றம் [24(145)]

பொன்னும், மின்னும் போன்ற தோற்றத்தை உடைய செழுஞ்சுடர் பெருமான்; எல்லா உயிர்க்கும் தோற்றமாகி நிற்பர், ஆனல் அவரோ தோற்றம் இல்லாதவர். அவருடைய திருவடிதான் எல்லா உயிர்க்குந் தோற்றம் தருவது. மெய்ப்பொருள்களின் தோற்றம் ஆவார் அவர்.

## 137. நலம் [24(146)]

நாடுதற்கு அரிய நலம் ஆவர் பெருமான்.

## 138. நன்மை [24(147)

தண்ணீர்ப் பந்தல் வைத்து நன்னீர் அளித்த நன்மை உடையவர் அவர்; திருவாரூரில் ஞானம் அளித்த நன்மையர் அவர்; தீது இலாத நன்மைத் திருவருட் குன்று அவர்; தீமை நன்மை முழுதும் அவர்; நரியைக் குதிரையாக்கிய நன்மைச் செயலாளர் அவர்.

## 139. நாற்றம் [24(148)]

பூவின் மணம்போன்ற நேர்மை உடையவர் பெருமான்.

## 140. நித்தர் [24(149)]

விடமுண்ட நித்தன் அவர்; நிரந்தரமாய் நிற்கும் ஆதி அவர்.

## 141. நிலையர் - நிலைத்திருப்பவர் [24(150)]

வானவர்க்கெல்லாம் நிலையன் (ஆதார இருப்பிடமானவர்) அவர். நீங்காது நிலைத்திருப்பவர் அவர்.

### 142. நிற்பது - செல்வது [24(151)]

நிற்பதும் செல்வதும் ஆனவர் அவர்.

### 143. நிறைவு [24(152)

குறைவிலாத நிறைவு அவர்.

### 144. நினைவு [24(153)

நினைவு ஊட்டுபவர்-நினைவிற் கலந்து இருப்பவர் அவர்.

### 145. நினைவு - மறதி [24(153)]

மறப்பு, நினைப்பு இல்லாத இன்பமா கடல் அவர்.

### 146. நீதி [24(154)]

நீதியையே குணமாகக்கொண்டு அருள்புரிகின்ற புண்ணியர் அவர். அயனும் மாலும் அறியாத நீதி அவர்.

### 147. நுண்மை [24(155)]

அணுவின் தன்மைபோன்ற நுண்மை உடையவர். நூலுணர்வு உணராத நுண்மையர் அவர்.

### 148. நெறி [24 (156)]

தமக்கு உய்யும் நன்னெறி காட்டியவர் பெருமான்; சிறு நெறிகள் சேராமல் திருவருளால் காத்தருளும் பெருமான்; அயனும் மாலும் அறியாத நெறியினர் பெருமான்; மறையவரின் கோல நெறியில் வந்தவர் அவர்.

### 149. நேரிலார் [24 (157)]

['ஒப்பிலி' என்னும் தலைப்பு-19(65) பார்க்க.]

தன்னேர் இல்லோன் பெருமான்.

## 150. நோக்கு [24 (158)]

காணுதற்கு அரிய காட்சிப் பொருள் அவர்.

## 151. பசு பாசம் அறுப்பவர் [24 (159)]

தனது பசு பாசத்தை அறுத்தார் பரமன்.

## 152. படைத்தல் [24 (160)]

விண்ணும் மண்ணும் முழுதும் படைப்பார் பெருமான்.

## 153. படையாட்சி [24 (161)]

பாண்டி நன்னாடுடையான் உடைய எழுந்தருளப் பெற்றால். (அப்பெருமானுடைய) படைகளை (தொண்டர்கள், பக்தர்கள், யோகிகள், சித்தர்களை) நாம் பாடுவோம்.

## 154. பண்பு (24 (162)]

திருவாதவூரில் தமது பாதச் சிலம்பொலி காட்டியருளிய பண்பினை உடையவர் பெருமான்.

## 155. பத்தி [24 (163)]

தன்னைப் பத்திக் கடலுள் பதித்த பரஞ்சோதி பெருமான்; அவர் பத்தி செய்யும் அடியாரைப் பரமுத்தியிற் சேர்ப்பார். தாம் பத்தி வலையிற் படுவார்.

## 156. பந்தம் அறுப்பார் [24 (165)]

அடியார்களுடைய பந்தங்களை அறுக்கும் ஆனந்த மாகடல் பெருமான்.

## 157. பந்தமும் - வீடும் [24 (166)]

பந்தம்—வீடு இரண்டையும் உண்டாக்குபவர் அவர். அவை இரண்டிற்கும் காரணமானவர் அவர்.

## 158. பரப்பு அறுப்பார் (24 (167)]

பலவிதமான மனப் பிரிவுகளை (பரபரப்புகளை) நீக்குபவர் பெருமான்.

## 159. பரம் - பராபரம் [24 (168)]

ஆதிமுதற் பரமாய பரஞ்சுடர் பெருமான்.

## 160. பரிசு [24 (169)]

அடியவளுக்காக அன்புடன் மண் சுமந்தருளிய பரிசினை (பண்பினை) உடையவர் பெருமான்; கடவுள் தனது பிரான் எனவும், தான் அவருக்கு அடியான் எனவும் யாவரும் தெரிந்து சொல்லும்படியான பரிசை (முறையை)ச் சொல்வோமாக. ஒரி ஊரில் பாலகனாகிய பரிசாம் திருவிளையாடலைப் பெருமான் கொண்டனர்; வண்டோதரிக்குப் பெருமான் அருளிய பரிசை அறிபவர் தனக்குத் தலைவராவர். தமது பாகம் பெண்ணோடாயின பரிசை உடையவர் பெருமான்; பூவலம் என்னும் தலத்தில் பாவநாசம் ஆக்கின பரிசை உடையவர் அவர். பெருமானுடைய திருவடிப் பரிசு பெற்ற மெய்யடியார்கள் உண்மை இன்பத்தைப் பெற்றுள்ளார்கள். பெருமானுடைய திருவடியைப் போற்றி விரும்பினால் தடையின்றி நாம் வேண்டியதைக் கொடுப்பார், அவர் அடியார்களுக்கு அருள்செய்கின்ற முத்தியின் பரிசு இதுவே.

## 161. பலவாகி நிற்பவர் [24 (170)]

ஒருவனும் அவர் ஏழுலகங்களாகவும், பத்துத் திசைகளாகவும், பின்னும் பலவாகவும் நிற்பர்.

## 162. பவளம் [24 (171)]

செம்பவள மலைபோன்ற ஒளியினை உடையவர் பெருமான்; பவளத்தின் முழுச்சோதி அவர்.

## 163. பழமை [24 (172)]

பரமானந்தப் பழங்கடல் பெருமான்; அவருடைய மணிமுடி சொல்லிறந்து நின்ற பழமையது; மிகப் பழமையான பெரிய பரதேசி என்று பழிக்கின்றார் பெருமானை மணிவாசகர். பழம்பொருளுக் கெல்லாம் முன்னைப் பழம் பொருள் பெருமான். முழுவதும் படைக்கும் அயனைப் படைக்கின்ற பழையோன் அவர்.

## 164. பளிங்கு [24 (173)]

ஒளி வீசும் பளிங்கின் திரட்சிப் பிழம்பு அவர்.

## 165. பாசம் - பற்று அறுப்பார் [24 (175)]

பாசம் பற்று அறுப்பதற்கு நாம் பற்றவேண்டிய பற்று அவர். பாசத்தின் வேரறுக்கும் பழம் பொருள் அவர். அவரது புகழைச் சொல்லி அவரைப் பணிந்து இறைஞ்சினால் நம் பாவங்களையும், பற்றையும் அறுப்பார், அவர்.

## 166. பாதி - முற்று [24 (176)]

பாதியும் அவரே, முற்றும் அவரே.

## 167. பார்ப்பான் [24 (177)]

இந்த உலகுக்கு எழுந்தருளிவந்த பார்ப்பான் - அந்தணர் அவர்.

## 168. பால் [24 (178)]

கறந்த பாலுடன் கற்கண்டு, நெய் இவைகளைக் கலந்தாற் போன்ற இனிமையைத் தந்து அடியார்களின் சிந்தனையுள் தேனூறி நிற்பர் பெருமான்; தேன், பால், கருப்பஞ்சாறு ஒத்த இனிமை உடையவர் பெருமான்.

## 169. பாவம் அறுப்பார் [24 (179)]

பரவிப் பணிந்து இறைஞ்ச நம் பாவங்களை அறுத்து ஒழிப்பர் பெருமான்; பூவலம் என்னும் தலத்தில் (ஓர் அடியானுடைய) பாவத்தை அழித்து அருளினர் பெருமான்.

## 170. பிணக்கு [24 (180)]

(யாவரிடத்திலும்) மாறுபாடு இலாதவர் பெருமான்.

## 171. பிணிதீர்ப்பவர் [24 (181)]

பாரும் விண்ணும் பணிந்தேத்தப் பாருளோர், விண்ணுளோர் தம்பிணிகெட அருளும் பேருளாளர் பெருமான்; தம்மைப் பணிபவருடைய பிணிதீர்த்தருளுவர் பெருமான்; பிணி, மூப்பு, உறவு இவை ஒழிய அருளுவர் அவர்; பிறவிப் பிணிநீக்கும் மருந்து அவர்.

## 172. பித்தர் [24 (182-1)]

பெண்பால் உகந்த பெரும் பித்தர், மண்சுமந்த பெரும் பித்தர் பெருமான்.

புலித்தோல் உடுத்து, பித்து மேற்பட அலைந்து திரிவார் பெருமான். பித்த வடிவு கொண்டு இவ்வுலகில் *பிள்ளையும் ஆவர் அவர்.

## 173. பித்து ஏற்றுவர் [24(182-2)]

தனக்கு (மணிவாசகருக்குப்) பெரும் பித்து ஏற்றினவர் பெருமான்.

---

* "விருத்த குமார பாலரான திருவிளையாடல்"; 'திருவிளையாடல்' என்னும் தலைப்புப் பார்க்க. 'வரலாறு' என்னும் தலைப்பும் பார்க்க.

### 174. பிழை பொறுப்பர் [24(183)]

தனது பிழைக்கிரங்கும் கருணையாளர் பெருமான் தனது உள்ளப் பிழை பொறுக்கும் பெருமை உடையவர் அவர்.

### 175. பிறக்க வைப்பார் [24(184)]

காயத்திடுவார் பெருமான்.

### 176. பிறப்பு அறுப்பார் [24(185)]

தேவியுடன் கூடி அடியார்களின் இறப்பு பிறப்பு இவைகளை நீக்குவர் பெருமான்; தன் பிறவியின் வேரை அறுத்தவர் அவர். மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அவர்.

### 177. பிறப்பு - இறப்பு - தோற்றம் - அழிவு இலாதவர் [24(186)]

அழிவதும் ஆவதும் கடந்தவர் பெருமான். மாளா இன்ப மாகடல் அவர்.

### 178. புகழ் - புகழ்ச்சி - கீர்த்தி [24(187)]

செம்மை வாய்ந்த நாவலர் புகழும் திருப்பெருந்துறை உறைபவர் பெருமான்; புகழில் திகழும் அழகன் அவர்; புகழ்ச்சியைக் கடந்த போகம் அவர். விண்ணுலகிலும் நிலைபெற்ற கீர்த்தியை உடையவர் அவர். அவர் புகழைக் கூறிப் பணிந்து இறைஞ்சினுல் அவர் நம் பவங்களை அறுத்து ஒழிப்பர். ஏதில் பெரும் புகழ், தூய புகழ், தொல் புகழ், பெரும் புகழ், விண்சுமந்த கீர்த்தி - எனப் பெருமானுடைய புகழ் பாராட்டப்பட்டுளது.

### 179. புதுமையர் - பின்னனவர் [24(188)]

பிரான் புதுமைக்கும் புதியர்; முற்றுக்கும் பின்னனவர்.

## 180. புலன்களுக்கு எட்டாதவர் - புலன்களை வென்றவர் [24(189)]

பிரான் ஐம்புலன்களையும் வென்றவர்; கண் முதலிய பொறி அறிவினால் காணப்படாதவர்.

## 181. புனிதர் [24(190)]

புனிதர் இறைவன்.

## 182. பூமிக்கு எழுந்தருளுதல் - பூமியிற் பயிலுதல் [24(191)]

சிவன் பூமிக்கு எழுந்தருளி நம்போலியரை ஆட்கொள்வர்; *பூமியின்கண் வந்து பயிலும் தோற்றம் உடையவர். இவ் வையகத்தே எழுந்தருளி வந்த பெருமானுடைய திருவடிகளை வந்திக்க இன்பம் மிகும்.

## 183. பெருமை [24(192)]

முடிவிலாப் பெருமையை உடையவர் இறைவர்; அவர் ஒப்பிலாப் பெருமை உடையவர்; தம் பெருமையைத் தாமறியாத் தன்மையர் அவர்; வெளித் தோன்றாப் பெருமையர் அவர்; பூவின் மணம்போல எங்கும் நிறைந்து விளங்கும் பெருமை உடையவர் அவர்; எல்லா மாறுபாடுகளும் ஆகித், தாம் ஒரு மாறுபாடும் இல்லாத பெருமை உடையவர் பெருமான். தமது (மாணிக்கவாசகருடைய) பிழைகளைப் பொறுத்த பெருமை உடையவர் பெருமான். பெருமானுக்கு அடியார் இல்லையா என்ன! அங்ஙனம் இருந்தும் தாம் (மணிவாசகர்) கடையன் என்றறிந்திருந்தும் தம்மை ஆட்கொண்ட பெருமை உடையவர் இறைவன். வெறுப்பனவே செய்யும் சிறுமையைப் பொறுத்து அருளும் பெருமை உடையவர் பெருமான்.

---

* இது குதிரை விற்க வந்தது, வளையல் மாணிக்கம் விற்றது, வலை வீசினது முதலிய திருவிளையாடல்களைக் குறிக்கும்.

## 184. பெற்றி (தன்மை பார்க்க) [24(193)]

பிரமனும் மாலும் அறியாத பெற்றியர் பெருமான்; பெண், ஆண், அலி எனும் பெற்றியர் அவர்; பிறர்க்கரிய பெற்றியர் அவர்; முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளாய் பின்னைப் புதுமைக்கும் புதுமையராம் பெற்றியர் அவர்.

## 185. பேச்சு [24(194)]

பேசும் பொருளுக்குக் குறிக்கோளாக விளங்கும் பேச்சினைக் கடந்த மாசிலாமணி அவர்.

## 186. பேதம் [24(195)]

எல்லா மாறுபாடுகளும் ஆகித், தான் ஒரு மாறுபாடும் இல்லாத பெருமை உடையவர் பெருமான். வேறுபாடு அறியாத ஒப்பற்ற கற்புநிலையைத் தமக்கு அளித்தவர் பெருமான். பேதங்களைக் கெடுத்து அருள் செய்கின்ற பெருமை இத்தன்மைத்து என அறியவல்லவர் தமக்குத் தலைவர் ஆவர் என்கின்றார் மணிவாசகர்.

## 187. பொய்ம்மை [24(196)]

பொய் தீர்க்கும் மெய்யர் பெருமான்; பொய்யர்தம் பொய்யர் அவர்; பொய்ம்மையும், மெய்ம்மையும் ஆவார் அவர்; பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடர் அவர்.

## 188. பொருள் [24(197)]

பெருமான் அரும்பெரும் பொருள்; அழியும் ஆக்கையை ஒழியச் செய்த ஒண்பொருள் அவர்; உணர்ந்த மாமுனிவர், தேவர்கள், பிறர் ஆக யாவர் உணர்வுக்கும் தெரிவரும் பொருள் பிரான்; உடலிற் பொருந்திய பொருளவர்; ஓங்காரத்து உட்பொருள் அவர்; கண்காட்சிக் கடங்காத ஒளி நிலவும் பொருள் அவர்; அவர் சேவடிதான் பொருள்; செவ்விய பொருள்களின் துணிவு அவர்; செல்வம் - வறுமை என்பது இல்லாமல், விண்ணோர், புழு,

புல் என்னும் வரம்பில்லாமல் யார்க்கும் எதற்கும் அரும் பொருள் அவர். மலரினின்று எழும் மணம்போலப் பற்ற முடியாத, ஒரு நிலையில் நிற்காத, பரம்பொருள் அவர்; பூதேவரும் நாடரும் பொருள் அவர்; பாசவேரறுக்கும் பழம்பொருள் அவர்; பெருமறை தேடிய அரும்பொருள் அவர்; அவர் திருமுடி எல்லாப் பொருளின் முடிவாகும்; தனது மறுமை இம்மையைக் கெடுத்த பொருளர் அவர்; முன்னைப் பழம்பொருளுக்கு முன்னைப் பழம்பொருள் அவர்; வெறுப்பற்ற பெரும்பொருள் அவர்; மெய்ப்பொருள் களில் தோற்றமாய் நிற்பவர் அவர்; யாவைக்கும் வீடாகும் பொருள் அவர்; விண்ணவரும் அறியாத விழுப்பொருள் அவர்; வேதப்பொருள் அவர்.

## 189. பொறுமை [24(198)]

சிறியனும் தன்னுடைய பிழை பொறுக்கும் தலைவர் பெருமான். பிழைத்தால் பொறுத்தல் பெரியோர் கடமை. சிறு நாய்களின் பொய்தனைப் பெரியோர் பொறுப்பர்; ஆதலால் பிழைத்தால் பொறுக்க வேண்டாமோ என்கின் றார் மணிவாசகர்.

வெறுப்பனவே செய்யும் தனது சிறுமையைத் தம் பெருமையாற் பொறுப்பவர் பெருமான்.

## 190. பொன் [24(199)]

பொன்னே திகழும் திருமேனி உடையவர் பெருமான். பொன்னை வென்ற நன்மேனி உடையவர் என்னும் புகழ்தனைக் கொண்டவர் பரமன்; கனகக்குன்று. சுடர் பொற்குன்று அவர்; எய்ப்பினில் வைப்பாம் பொன் அவர் என நினைந்து, மனத்திடை உருகுதல் வேண்டும்.

## 191. போக்கு—வரவு—புணர்வு இலாதவர் [24 (200)]

போக்கும் வரவும் புணர்வும் இல்லாத புண்ணியர் பெருமான்; போக்கிலன் வரவிலன் என அவர் புகழைப் புலவோர் கீதங்கள் பாடுவர்.

## 192. போகம் [24(201)]

புகழ்ச்சியைக் கடந்த போகம் பெருமான்.

## 193. மணவாளன்—மணாளன் [24(202)]

பிரான் மலையாள் மணவாளர்; நித்த மணாளர்.

## 194. மணி [24(203)]

அருமாமணி; ஏதாமணி; ஒப்பிலாமணி; குருமணி; பொல்லாமணி; மாசிலாமணி; மாமணி; முத்துமாமணி; மேதாமணி என்றெல்லாம் இறைவன் விளக்கப்பட்டுள்ளார். ஊழிக்காலத்திற்கு அதிபனாய்த் தாம் என்றும் அழியாத நன்மணியாக விளங்குபவர் பிரான். பேச்சிறந்த மணி வார்த்தையை உடையவர் அவர்.

## 195. மரகதம் [24(204)]

துன்பங்களை நீக்கி ஆண்ட மரகத ஒளி பிரான். தமது செம்மேனியின் ஒருபால் மரகத நிறம் விளங்குபவர் அவர்.

## 196. மருந்து [24(205)]

அருமருந்து; நல்ல மருந்து; பிறவிப் பிணிக்கு ஒரு மருந்து; மண்ணோர் மருந்து; வானோர்க்கு அரிய மருந்து; வருந்துயரம் தீர்க்கும் மருந்து; தமது (மணிவாசகருடைய) வாழ்வற வாழ்வித்த மருந்து.

## 197. மருள் கெடுப்பர் [24(206)]

பெருமானுடைய கமல பாதத்தை வாழ்த்தினால் நமது மருள் கெடும்.

## 198. மலம் அறுப்பர் [24(207)]

மலம் மூன்றையும் மாள்விப்பர் பெருமான்; கடலின் திரைபோல வரும் கலக்கம், மலம் இவைகளை அறுப்பர் அவர். மூலமாகிய மும்மலத்தை அறுப்பர்.

### 199. மலை [24 (208)

அருள் நிதியைத் தரும் ஆனந்த மலை பெருமான்; ஆராத இன்பத்தை அருளும் மலை அவர்; ஈறிலாத கொழுஞ் சுடர்க்குன்று, கனகக்குன்று, சுடர்ப் பொற்குன்று, தீதிலா நன்மை திருவருட்குன்று, மாசற்ற மணிக்குன்று அவர்.

### 200. மனவாசகம் [24 (209)]

மனவாசகம் கடந்தவர் பெருமான். மாற்றம், மனம் கழிய நின்ற மறையோன் அவர்.

### 201. மாணிக்கம் [24 (210)]

மாணிக்க முழுச்சோதி பிரான்.

### 202. மால் [24 (211)]

நீங்காத ஆனந்த மாலை (இன்பத்தை) மிகுவிப்பவர் அவர்.

### 203. முத்தன், முத்தி [24 (212)]

முத்தி முதல்வர் பெருமான்; முழுதுமாய்ப் பரந்த முத்தன் அவர்; தமது திருவடியை விரும்பினோர்க்குப் பெருமான் தருகின்ற பரிசு முத்தி.

### 204. முத்து [24 (213)]

அருமா மணி முத்து, தோளா முத்து-பெருமான்.

### 205. முத்தொழில் [24 (214)]

படைப்பார், காப்பார், துடைப்பார்; படைப்போனைப் படைப்பார்; காப்போனைக் காப்பார்; கரப்போனைக் கரப்பார்; மண், விண் முழுதும் படைப்பார், அழிப்பார் அவர்.

## 206. முழுமுதல்—முதல்வர்—முன்னவர் [24(215)]

ஆண்டவன்—ஆதிமுதற் பரமாய பரஞ்சுடர். உல குடைய ஒரு முதல்; முடிவிலா முதல்; முத்தி முழுமுதல்; முதலாய முதல்வர்; முழுதும் கடந்த முதல்வர்; முன்பு மாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த முத்தர்; மூவர்க்கும் முன்னேன். முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருள்; முனிவர் முழுமுதல், மூவர் கோனய் நின்ற முதல்வர். மூவராலும் அறியொணு முதலாய ஆனந்த மூர்த்தி. மூவா முதலாய் நின்ற முதல்வர்; விண்ணேர் முழுமுதல்.

## 207. முனிவர் [24 (216)]

பெருமான் முனிவர்.

## 208. மூர்த்தி [24 (217)]

அட்டமூர்த்தி; செழுஞ்சுடர் மூர்த்தி; மூவராலும் அறியொணு ஆனந்த மூர்த்தி.

## 209. மூவேந்தர் ஆவர் [24 (218)]

பாண்டியன், சேரன், சோழன் ஆகிய மூவரும் ஆவார் பெருமான்.

## 210. மெய்யர் [24 (219)]

['சிவனும் மெய்ம்மையும்' என்னும் தலைப்பு 94 பார்க்க.]

அண்டம் கடந்து விரிசுடராய் நின்ற மெய்யர் பெருமான்; அவர் அன்பருக்கு மெய்யர், பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடர்; மெய்ச் சேவகன்; மெய்யே நிலை பேருய் நின்றவர்.

## 211. மேகம் [24 (220)]

அவர் அண்டத்து அரும்பெறல் மேகம், குணமாம் பெருந்துறைக் கொண்டல்.

## 212. யாவரும்பெற உற்றவர் [24 (221)]

யாவரும் பெற உற்றவர் ஈசன்.

## 213. யோகம் [24 (222)]

ஒழிவற நிறைந்த யோகம் அவர்; யோகத்தின் பொலிவு அவர்.

## 214. வண்ணம் [24 (223)]

அவர் பரிமாவின் மிசைப் பயின்ற வண்ணத்தர்; மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணத்தர்.

## 215. வயிரம் [24 (224)]

தூய வெண்ணீறு துளங்கொளி வயிரம் அன்னவர் பெருமான், முத்து மாமணி, மாணிக்க, வயிரத்த பவளத்தின் முழுச் சோதி அவர்.

## 216. வள்ளல் [24 (225)]

தம்மைப் போலும் பொய்யரை ஆட்கொள்ளும் வள்ளல்; பரியின் மேல் வந்த வள்ளல்; வான் பழித்து இம் மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்.

## 217. வார்த்தை [24 (226)]

பேசும் பொருளுக்குக் குறிக்கோளாய் உள்ள பேச்சைக் கடந்த, குற்றம் இல்லாத, மணி வார்த்தையை உடையவர் பிரான்.

## 218. வாழ்வு [24(227)]

யார்க்கும் வாழ்வு பெருமான், அவரைப் போற்றுவோம்.

## 219. வானம், பரவெளி ஆவர் [24 (228)]

பிரான் பராகாயத்து விளங்கும் பழமையர்; வான் திசை, மாகடல் ஆயவர்.

## 220. விகிர்தர் [24 (229)]

மின்போலும் ஒளி செய்கின்ற திருமேனியில் (பல உருவ) வேறுபாடுகளை காட்டுபவர் பெருமான்.

## 221. வித்தகர் [24 (230)]

உத்தரகோச மங்கையில் குரு வேடத்தைக் காட்டினவர் பெருமான்; தனது சித்தம் என்னும் கயிற்றினல் பெருமானுர் தமது திருப்பாதத்தைக் கட்டுவித்த சதுரினை உடையவர்; தனது சித்த விகார கலக்கத்தைத் தெளிவித்தவர் அவர்; அவரைப்போல ஆரொருவர் ஆட்கொள்ளும் வித்தகத்தை உடையவர்! மால் அயனும் காண்பரிய வித்தகத்தை உடையவர் அவர்.

## 222. வித்து [24 (231)]

பெருமான் பாதாளத்தார் வித்து, முதல் வித்து; வித்து இல்லாமலே விளைவு செய்ய வல்லவர்.

## 223. விருத்த, குமாரர் [24 (232)

விருத்தராகவும் குமாரராகவும் விளங்க வல்லவர் பெருமான்.

## 224. விளக்கு [24 (233)]

பெருமான் - சூழொளி விளக்கு, தூண்டா விளக்கு, தேசுடை விளக்கு.

## 225. விளைவு [24 (234)]

கடல்சூழ் உலகின் பயன் ஆவார் பெருமான். வித்து இல்லாமலே விளைவு காட்ட வல்லவர் அவர்.

## 226. வினையை ஒழிப்பவர் [24 (235)]

பிரான் கடிய வினையை அகற்றுவர். முன்னை வினை இரண்டின் வேரினை அறுப்பர். வல்வினைப் பகையை மாய்ப்பர். வினைக்கேடர். வினை கெடக் கைதரவல்ல கடவுள்.

## 227. வீடு ஆவர், வீடு அருளுவர் [24 (236)]

பிரான் யாவைக்கும் வீடு ஆவார்; வா எனக் கூவி அழைத்து வீடு அருளும் கருணையாளர்; மீண்டு வாரா வழியை அருள்பவர்; வாரா உலகம் தந்து ஆட்கொள்பவர் அவர்.

## 228. வீரம் [24 (237)]

பெருமான் புலியைக் கொன்ற வீரர்.

## 229. வெள்ளம் [24(238)]

பெருமான் அருள்வெள்ளம், இன்பவெள்ளம், கருணை வெள்ளம், செஞ்சுடர் வெள்ளம், பேரின்ப வெள்ளம், மது வெள்ளம் ஆவர்.

## 230. வெளி [24 (239)]

பெருமான் திணிந்த இருளில் தெளிந்த தூவெளி.

## 231. வேடம்—வடிவு [24 (240)]

கிராத வேடம் (வேட்டுவ வேடம்), சுந்தர வேடம், தாபத வேடம் (தவவேடம்), வித்தக வேடம் கொண்டவர் பெருமான். ஆடும் அரவை ஆபரணமாகக் கொண்டு, தோலை உடுத்துத் திருநீறு பூசிய அழகிய வேடம் கொண்டவர். இவ்வுலகில் பித்த வடிவு கொண்டு சிறு பிள்ளையானவர்.

### 232. வேறானவர் [24 (241)]

பெண்ணாகி, ஆணாகி, அலியாகி, விண்ணாகி, மண்ணாகி இத்தனையும் வேறாகிக் கண்ணுக்கினிய அமுதமயமாய் நிற்பவர் பெருமான்.

### 233. வைப்பு [24 (242)]

அயனுக்கும் மாலுக்கும் வைப்பு (சேமநிதி) பிரான். அன்பர்களுக்கு இளைத்த காலத்து உதவும் சேமநிதி அவர்.

## 20(i). சிவபிரான் திருவுருவம் [25]

(1) உருவம் [25(1)]

ஆற்றல் வாய்ந்தது, உருவம் மூன்று கொண்டது; எண்ணுதற்கு அரியது; எவ்வுருவும் தன் உருவம் ஆயது; ஏழ்உலகும் ஏத்துவது; ஐம்பூதங்களில் ஒளித்து நிற்பது; ஓர் உருவமும் இல்லாதது; சுந்தர வேடத்தது; செங்கமலம் போன்றது; செந்தழல் போல்வது; தனித்த (ஒப்பற்ற) தன்மையது; தேவரும் அறியாதது; தேன்போல இன்பம் தரும் செந்தீப் போன்றது; பல்வேறு உருவத்தது; பொற் குன்றம் போன்றது; மின் போன்றது; வருணனுக்குத் தீயில் தோன்றிய அழகிய மங்கையர்களின் தோள்களைச் சேர்ந்தருளும் திருவுருவத்தது; வேடுவ உருவம் கொண்டது.

(2) கண்

அழகியது; மை பூசியது. கருணை காட்டுவது, நெற்றியில் ஒரு கண், காமன் எரிபட விழித்த செங்கண், கண் மூன்று:

(3) கண்டம்

கரியது, நஞ்சு அமர்ந்தது.

(4) குஞ்சி (தலைமயிர்)

சுருண்டது.

(5) கை (கரம்)

நீண்டது, தீ தங்குவது, கருணைகாட்டுவது, மேருவை வில்லாக வளைத்தது.

(6) சென்னி (தலை)

கொன்றை, வெண்மதியின் ஒற்றைக் கலை, கூவிளம் (வில்வம்), ஊமத்தமலர் இவை விளங்குவது; சென்னியில் உள்ள ஊமத்தம் (அடியார்களுக்கு) ஆசை மயக்கத்தைத் தருவது.

(7) திருவடி [தனித் தலைப்பு பார்க்க.]

(8) தேசு

செம்பவளமலை போன்றது.

(9) தோள்

திரண்டுள்ளது நீறு பூசியது, தோள் எட்டு.

(10) தோற்றம்

பொன் மலை போன்றது; தெளிவுள்ள பொன்னும், மின்னும் போன்றது; மரகதக் குவியலும் (பச்சை மணிச் செறிவும்), மாணிக்க (செம்மணி)ப் பேரொளியும், மின்னின் ஒளியும், பொன்னின் ஒளியும் கொண்டது:

(11) நகை

திருமுகத்தில் அருள்பாலிக்கும் அழகிய நகை. (புன் சிரிப்பு)

(12) நுதல் (நெற்றி)

கண்ணுடன் விளங்குவது.

(13) புருவம்

அழகானது.

(14) மார்பு

கொன்றை மாலை அணிந்தது தேவியின் கொங்கைச் சுவடுகள் இரண்டும் திருநீறு பூத்த தீயில் (மார்பில்) இரண்டு புள்ளிகள் போல விளங்குவன.

(15) முகம்

உமைக்கும், காளிக்கும் அருள்பாலித்தது; அழகுள்ளது, ஒளி கொண்டது; மலர் போன்றது. முகங்கள் ஐந்து.

(16) முடி

அழகிய முடி, சடைமுடி, சோதிமுடி, நீண்முடி, பின்னிய சடைமுடி, நறுமணம் கொண்டது; வெண்மதிக் கொழுந்து விளங்குவது; தேன் உண்ணும் வாயினை உடைய வண்டுகள் கிண்டுகின்ற பூக்களை அணிந்தது. சொல் இறந்த பழமையது; எல்லாப் பொருள்களுக்கும் முடிவானது.

(17) மேனி

அழகிய தாமரை போன்றது; செந்நிறத்தது; செந்தாமரைக் காடு போன்றது; செந்தீப் போன்றது; கடுந் தழற் பிழம்பு போன்றது; வெட்சி மலர் போன்றது; ஆத்தி மலர் அணிந்த அழகிய பொன்மேனி; தூயது; நீறுபட்டு ஒளி வீசுவது; வெண்ணீற்று அபிஷேகம் கொள்வது. தேவி ஒருபால் இருப்பதால் இரண்டுபட்டு விளங்குவது; புகழும் அழகும் வாய்ந்தது. மண்சுமந்து கூலிகொண்டு அந்த அரசனால் (பாண்டியனால்) மொத்துண்டு புண்சுமந்தது. வெண்மை, கருமை, பச்சை, செம்மை ஆய நிறங்களைக் கொண்டது.

(18) வாய்

அழகுள்ளது. பவளம்போலச் செந்நிறத்தது.

## 20(ii) சிவபிரான்—நிறம் [25(2)]

செந்தழல் போன்றது, செம்பவளமலை போன்றது; திருநீறுபூசி வெண்ணீற்றுடன் விளங்குவது; நிறம் செம்மையன்று (வெண்ணீறு பூசப்பட்டபடியால்), வெண்மையன்று (இயற்கையாக செந்நிறத்தவர் பெருமான் ஆதலால்);

பெருமானுடைய நிறங்கள் ஐந்து. ஐம்பூதங்களொடு கலந்து பெருமான் நிற்பதால் அவை தமக்கு உரிய ஐவகை நிறங்களும் அவருக்கு உரியனவாம். நிலம், நீர், தீ, காற்று, வான் இவைகளின் நிறம் முறையே பொன்மை, வெண்மை, செம்மை, கருமை, புகைமை.

## 21. சிவபெருமானுடைய நாமமும், நாமவிசேடமும் [26]

மணிவாசகர் திருப்பதிகங்களிற் போந்துள்ள சிவ பெருமானுடைய திரு நாமங்கள் பின்வருமாறு.

### 1. பொதுவாகக் கடவுளைக் குறிக்கும் திருநாமங்கள் [26 (1)]

அட்ட மூர்த்தி, அப்பன், அமுதன், இறை, உடையான், உம்பரான், எம்பிரான், ஏகன், ஐயர், ஒருவன், கடவுள், குணமிலி, சதுரன், செல்வன், தயாபரன், தீர்த்தன், நாதன், நிமலன், பரன், பார்ப்பான், முத்தன், முதல்வன், வள்ளல்—போல்வன.

### 2. சிறப்பாகச் சிவபெருமானைக் குறிக்கும் திருநாமங்கள் [26 (2)]

அம்பலவன், ஆலமுண்டான், இளமுலைபங்கன், ஈசன், ஏகம்பர், ஏற்றன், கண்ணுதலான், காபாலி, சடையன், சைவன், தீமேனியர், தேய்மதியன், நீற்றன், பரிப்பாகன், பிச்சன், பிஞ்ஞகன், புயங்கன், மலைக்கு மருகன், மூவர் கோன், விடையான்—போல்வன.

### 3. இறைவனை விளிக்கும் சொற்களும் சொற்றொடர்களும் [27]

(1) சிறியன (264)

உ-ம். அண்ணா, ஆனே, இறைவா, ஏக, கதியே, சைவா, தேவா, நாதா, பவனே, மன்னா, விடங்கா போல்வன.

(2) ஒரு சீரால் அமைவன (நடுத்தரத்தன) (149)

(உ - ம்.) அரவாட்டீ, கடலமுதே, சிவலோகா, தேசுடையாய், நின்மலனே, படர்சடையாய், பொடியாடீ, முழுமுதலே, விரிசடையாய்—போல்வன.

(3) இருசீரால் அமைவன (நடுத்தரத்தன) (253)

(உ - ம்.) அமுதக்கடலே, ஆனந்தமலையே, இன்பப் பெருமானே, ஊழிமுதல்வ, எய்ப்பில் வைப்பே, குறைவிலா நிறைவே, கோதிலா அமுதே, சிந்தைக் கரியாய், ஞானச்சுடரே, தேவர்பிரானே, நாடரும் பொருளே, பிறைசேர் சடையாய், பொல்லாமணியே, மழவிடையானே, யானுகின்றானே, வேழத்து உரியாய்—போல்வன.

(4) பெரியன (227)

அடியொடு நடுஈறுனாய், உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே, கண்ணகத்தே நின்று களிதரு தேனே, கழுநீர் மாலைக் கடவுளே, சேட்டைத் தேவர் தம் தேவர்பிரானே, தாயிற் சிறந்த தயாவான தத்துவனே, நினைவதேல் அரிய நின்மலா, பிறவியை வேர் அறுப்பவனே! மறையோர் கோல நெறியே, யாதும் ஈறில்லாச் சித்தனே, வாழ் முதலாகிய பொருளே—போல்வன.

(5) தலங்களைப் பற்றியவை (72)

(உ - ம்.) அண்ணமலை எம் அண்ணா, அவிநாசி அப்பா, திருவாரூர் உடையானே, உத்தரகோச மங்கைக் கரசே, ஐயாற்றரசே, குற்றாலத்தெம் கூத்தா, சிவபுரத்தரசே, தில்லையுட் கூத்தனே, தென்பராய்த் துறையாய், பழனத்தழகா, பூவணத்தரனே, தென்பெருந் துறையாய், ஆடக மதுரை அரசே—போல்வன.

## 22. சிவபிரான் நாம விசேடம் [28]

அயனும் திருமாலும் இந்திரனும் ஏனையோரும் பெருமானுடைய திருநாமங்களைச் சொல்லித் துதிப்பார்கள்.

அயனும், மாலும் அவரைத் 'தேவர்பிரான்' என்று போற்றுவர். தேவதேவன் என்பது அவருடைய திருப் பெயர். அடியார்கள் வெவ்வேறிருந்து அவர் திரு நாமத்தைத் தரிப்பார்கள். 'பொன்னம்பலத்தாடும் தலைவா' என்பார்கள். அவருடைய திருநாமத்தைப் பாடித்திரியும் பக்தர்களே! உங்கள் பாசம் தீர அவரைப் பணிமின்கள். அவர் திருநாமங்களைப் பாடிப் பாடி நாம் பொற்சுண்ணம் இடிப்போமாக. ஒரு நாமம், ஓர் உருவம் இல்லாத பெருமா னுடைய திருநாமங்களை ஆயிரக்கணக்காகப் பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக. அவருக்கு ஊரேது; பேரேது; அவருக்கு யார் உற்றார்; யார் அயலார். அவரை என் சொல்லி எப்படிப் பாடுவது? என்னுடைய அறியாமை யினால், பெருமானே! உன் ஐந்தெழுத்தாம் திருநாமத்தை நான் எண்ணுவதில்லை, பேராயிரம் உடைய பெருமானே! போற்றி! உன்னுடைய பேராயிரத்தையும் பரவித் திரிந்து 'எம்பெருமான்' என உன்னைப் போற்ற நான் ஆசைப் பட்டேன். உன் திருநாமங்களைப் பேசுவார்க்கு நிகரற்ற இன்பமும் விளைந்து பெருகும்.

## 23. சிவபெருமான் திருவடி [29]

### 1. அடி

(கழலடி, சேவடி, திருவடி, பொன்னடி, மலரடி, கழல், கால், சரணம், தளிர், தாள், பதம், பாதம், மலர்)

அழகு உள்ளது, சிவந்தது, தூயது, உள்ளம் நிறைந் தது, கருணைவாய்ந்தது, அறிவுக்கு இடமானது, ஒப்பற்றது, ஒய்வு இலாதது, பழிப்பற்றது, திருந்துவதற்கு ஏதுவானது, தெய்விகம் வாய்ந்தது, தளிரபோன்றது, புதுமலர் போன்றது, செங்கமலம், செங்கழுநீர் மலர் போன்றது, நறுமணம் வாய்ந்தது, பொன்போன்றது; மின்போன்றது, தில்லைமூதூரில் ஆடல் பூண்டது, (விசயன்பொருட்டு) கானகத்தே நடந்தது, திருவடியே இறைவனாகப் பாவிக்கப் பட்டது.

## 2. திருவடிச் சிறப்பு [29]

அறைகூவி வீடு அருளுவது, இந்திரன் தோளை நெரித்தது, ஈறுஇனது, உண்மைத் திறமை வாய்ந்தது, உள்ளத்தில் உறும் துயர் அனைத்தையும் ஒழிப்பது, எண்ணுதற்கு எட்டாதது, எல்லை கடந்து எப்புறத்ததென்று அறிய முடியாதது, எல்லாவுயிர்க்கும் தோற்றத்தையும், போகத்தையும் தருவது, காலனுடைய உயிரை மாய்த்தது, குதிரையின்மீது ஏறி நிலவுலகத்தே இறங்கி வந்தது, அச்செயலை நினைக்க இன்பம் தருவது, சுடர்களுக்கு எல்லாம் ஒளி தருவது, திருமால் ஏனமாகி ஏழுதலம் உருவித் தேடியும், வழுத்தியும் காணுதற்கு அரிதாய் நின்றது, திருமால் காண வேண்டி ஓலமிட்டு அலறுவது, தேவர்களின் சிரத்தில் விளங்குவது, தேவர்களுக்கு வான்பொருள் போன்றது, தேவர்கள் கனவிலும் காணுதற்கு அரியது, தேன், அமுதம் இவற்றின் தெளிவு போன்றது, தொண்டர்க்கு வழுவின்றி விளங்குவது; நாரணன், இந்திரன், பிரமன், நான்மறைகள், தானவர், கலைமகள் இவர்களால் அறிய முடியாதது, பாதாளம் ஏழுக்கும் அப்பாற்பட்டுச் சொல்லும் சொல்லுக்கு அடங்காதது; பேரின்ப வெள்ளத்துள் விளங்குவது, முதலும், நடுவும், முடிவும் ஆனது; மூவரும் முப்பத்து மூவரும், தேவர்களும் காணாதது, மெய்யடியார்களுக்கு இன்பம் பெருக்குவது.

## 24. சிவபிரான் நஞ்சு உண்டது [30]

### (1) நஞ்சு உண்டது

கடல் நஞ்சை உண்டு உகந்த காபாலி பெருமான்; விடமுண்ட நித்தன் அவர்; பித்தன் அவர்; அவருடைய சதுரை (திறத்தை) என்னென்று வியப்பது. அத்திறத்தை நாம் பாடித் தெள்ளேணம் கொட்டுவோமாக.

### (2) நஞ்சை அமுதாக உண்டது

சுடு தீப்போல் எழுந்த நஞ்சை, விண்ணும் மண்ணும் கலங்க எழுந்த நஞ்சை, அமுதமாக நயந்து உண்டனர் பிரான்.

(3) நஞ்சை உண்டு கண்டம் கறுத்தது

நஞ்சை உண்டு பெருமான் கறைக் கண்டர், மணி கண்டர் ஆயினர்.

(4) உயிர்களை (தேவரையும் மற்றவரையும்) காக்க நஞ்சுண்டது

விண்ணிலும் மண்ணிலும் உள்ள சிற்றுயிர்களுக்கு இரங்கிப் பெருமான் தமது கருணையினால் அவைகள் உய்ய வேண்டி நஞ்சை ஊணாக உண்டார்.

(5) நஞ்சை உண்டு வானோர்க்கு அமுதம் அளித்தது

தாம் நஞ்சை உண்டு தேவர்க்கு அமுதத்தை அளித்தனர் பெருமான்.

(6) நஞ்சு எழுந்த இடம்

ஒலி செய்யும் கடலில் அன்று கோலாகலமாக எழுந்தது விடம்.

(7) நஞ்சின் கொடுமை

திருமாலும், பிரமனும் நண்ணுதற்கு அரிதாய் இருந்தது அந் நஞ்சு.

(8) நஞ்சை உண்ணுவிட்டால் என்ன ஆயிருக்கும்?

பிரான் அந்த ஆலாலத்தை உண்டிலனேல், திருமால் உள்ளிட்ட மேலாய தேவரெல்லாம் இறந்துபட்டிருப்பர்.

(9) நஞ்சின் வர்ணனை

காய்சின ஆலம், கோலாலம் ஆகி எழுந்த ஆலாலம்; நண்ணரிய ஆலம்; கடற்கு அரிதாய் எழு நஞ்சு; மிக்க நஞ்சு.

## 25. சிவபிரான் நடம் [31]

### 1. நடமும் சிவனும்

பதஞ்சலிக்கு அருளிய பரமநாடகர் பெருமான்.

## 2. இரவில், இருளில் நடம்

இரவில் எரி ஆடுவர் இறைவர். கூர் இருளில் நள்ளிருளிற் கூத்தாடுவர், நட்டம் பயில்வர்.

## 3. உமையோடு காளிக்கு அருளிய நடம்

தில்லை அம்பலத்தே அணங்குடன் ஆடுகின்ற குணத்தை உடையவர் பெருமான். உமையுடன் காளிக்கு அருளிய திருமுகத்து அழகுஉறு சிறுநகையினர் இறைவர்.

## 4. எரி ஆடுதல், எரிஏந்தி ஆடுதல்

இரவில் கைவீசி எரி ஆடுவர் இறைவர்.

## 5. சித்தர் சூழ நடம்

தில்லையிற் சித்தர்சூழப் பிரான் நடமாடுவர்.

## 6. காட்டில் பேயுடன் நடம்

காட்டிற் பேயுடன் நட்டம் ஆடுவர்.

## 7. கூத்தர்

அம்பலக் கூத்தர் ; ஆனந்தக் கூத்தர் ; குறி ஒன்றும் இல்லாத கூத்தர் ; பிறைச் சென்னிக் கூத்தர் ; பொன்னம்பலக் கூத்தர் ; மாணிக்கக் கூத்தர் ; தமது (மாணிக்கவாசகருடைய) பிறப்பறுத்து ஆண்டுகொண்ட கூத்தர்.

## 8. தலங்களில் நடம்

(1) குற்றாலம்

குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தர் பெருமான்.

(2) தில்லை (புலியூர்)

இமயமலைபோல் அழகுடன் பொலிதரும் புலியூர் அம்பலத்தில் ஆடிய நடனத்தில் உமைக்கும் காளிக்கும்

அருளிய திருமுகத்து அழகுஉறு சிறுநகையினராய் இறைவர் தமது நெருங்கிய அடியாருடன் புலியூரில் புக்கு இனிது அருளுகின்றார். தில்லைச் சிற்றம்பலத்தே மன்றி னுள் தென்பால் உகந்து ஆடுவர் பெருமான். அவர் பதஞ்சலிக்கு அருளிய கூத்தினை உடையவர். பொன்னம் பலத்தே கூத்து உகந்து ஆடும் அமுது.

(3) (திருப்)பெருந்துறை

சீரார் திருவடித் திண்சிலம்பு சிலம்பொலிக்கத் தேரோடும் வீதிப் பெருந்துறையில் ஆராத ஆசையுடன் தமது அகமகிழப் பெருமான் திருநடம்செய் பேரானந் தத்தைப் பாடிப் பூவல்லி கொய்வோம் என்கின்றார் (மணி வாசகர்.)

9. நிருத்தம்

பெருமானுடைய நிருத்தம் நீள்ஒளி ஆகிய நிருத்தம். (நெடிய சோதிக் கூத்து). அவருடைய நடம் திருமால் அறியாத 'புயங்க நடனம்'.

**குறிப்பு:** 'புயங்க நடனம்' என்பது சிவபெருமான் ஆடும் நடனத்தில் ஒருவகை அரிய நடனம். புயங்கம்-பாம்பு. புயங்க நடனம் - சிவபிரான் பாம்பு அணிந்து ஆடும் நடனம் போலும். 'அந்த ஒண் புயங்க நட்டம் ஆடிட வேண்டும்' (திருஆலவா 32-8); ('பொருவில் புயங்கப் புனிதநடம்'. கோயிற் புராணம்-நடராச 18).

## 26. சிவபிரான் படை [32]

1. அம்பு

2. ஆழி (சக்கரம்)

சலந்தரனுடைய உடலைத் தடிந்த நல்ல ஆழியைத் தமது திருவடிக்கீழ்த் தன்னுடைய கண்ணை இடந்து மலராக வைத்துப் பூசித்த திருமாலுக்கு அருளினர் பெருமான்.

### 3. *கழுக்கடை (சூலம் பார்க்க)

இது பெருமான் திருக்கரத்தில் உள்ளது. தம்மை வேண்டுகின்ற பரிசுத்த நெஞ்சினராம் அன்பருடைய மும்மலங்களை அழிக்கவல்லது.

### 3A. சக்கரம் (ஆழி பார்க்க)

### 3B. சிலை (வில் பார்க்க)

### 4. சூலம் (கழுக்கடை பார்க்க)

கழுக்கடையைக் கைப்பிடித்து குதிரையின்மேல் எதிரில் பெருமான் வருவாராயின் அவரைக் கண்டவர்களது பிறப்பு நாசமாகும்; அவரது சூலம் மூவிலைச் சூலம். அதை வலக்கையில் ஏந்தி உள்ளார்.

### 5. மழு

பிரானுடைய வலக்கையில் உள்ளது; ஊன் படிந்தது.

### 6. வாள்

ஞானவாள், நெஞ்சத்து இருளகல ஒளிவீசும் வாள்; அறிவு ஒளி வீசும் வாள்.

### 7. வில்

மலையே பிரானுக்குச் சிலை (வில்), அது கொற்றச் சிலை, வலிநின்ற திண்சிலை, இத்தகைய வில்லைச் சேவகன் ஆகி ஏந்தினர் பெருமான்.

### 8. வேல்

அருந் தகை வேல்; அது உறையுள் இருக்கும். அதனைக் கண்டால் அஞ்சுவர் பகைவர்.

---

* கழுக்கடை - சூலம், ஈட்டி.

## 27. *சிவபிரான் பாம்பாட்டியது [34]

பிரான் ஆட்டிய பாம்பு நச்சரவு, பச்சைத்தாள் அரவு.

## 28. சிவபிரான் மாலைகள் [35]

சிவபெருமானுடைய மாலைகள்: அறுகு, ஆர் (ஆத்தி), [செங்]கழுநீர்மாலை, கொன்றை, தலைமாலை, தாளிஅறுகு, மத்தம், மதிக்கண்ணி (குளிர்ந்த பிறை), மந்தாரம்.

இவை தம்முள் சிவபெருமான் உகந்தது தாளி அறுகு.

அவர் ஆசையுடன் தமக்குப் பொருந்தியதாக அழகுடன் அணிவது [செங்]கழுநீர்மாலை.

அவர் அணிந்துள்ள மாலைகளில் வண்டுகள் சூழ்ந்து ஒலி செய்யும்.

அவர் அணிந்துள்ள கொன்றை மாலையில் உள்ள மலர் தேனைக் கொண்டுள்ளது; பொன் நிறமுள்ளது; வட்டமானது.

## 29. சிவபிரான் முத்தொழில் [36]

விண், மண் மற்று எல்லாவற்றையும் காத்தும், படைத்தும், கரந்தும் (துடைத்தும்) விளையாடுவர் அம் மூவர் கோனாய் நின்ற முதல்வர்.

## 30. சிவபிரான் மூவர்கோ [37]

உலகங்களைப் படைத்து, காத்து, அழிக்கும் மூவர்க்கும் தலைவர் பிரான். மூவரும் அறியாத சேவடி அவருடைய செவ்விய திருவடி. மூவரும் அறியொணாத ஆனந்தமூர்த்தி

---

* "பாம்பும் ஆட்டுவர் பாசூர் அடிகளே" —அப்பர், 5-25-9.

கரிகால் சோழனுக்கு எதிரியான குறும்பராஜன் ஒருவனுக்கு உதவியாக, ஒரு பெரும் பாம்பைக் குடத்தில் விட்டுச் சமணர்கள் சோழனிடம் அனுப்ப, அச்சோழனுக்கு உதவியாக சிவபெருமான் அப்பாம்பை எடுத்து ஆட்டி அருளிய தலம் திருப்பாசூர்.

அவர். மூவா முதலாய் நின்ற முதல்வர் அவர். மூவரில் ஒருவர் எம்பெருமான் என்று தவறாக எண்ணுகின்றனர் (உலகினர்); என்ன பாவம் இது!

## 31. சிவபிரான் வாகனம் [38]

சிவபிரான் வாகனம் விடை. இது 'இடபம், ஏறு, சே, என' விளக்கப்பட்டு உள்ளது. பசுவும் (ஆ, ஆன்) வாகனமாம்.

### வாகனத்தின் வர்ணனை

ஆனந்த மா, (ஆனந்தம் + ஆ), கோலமா (கோலம் + மா; கோலம் + ஆ), மானமா (மானம் + ஆ), ஆர்க்கின்ற தார் விடை (ஆர்ப்பரிக்கின்ற கிண்கிணி மாலையை அணிந்த இடபம்), ஒல்லை விடை (வேகமாகச் செல்கின்ற விடை), சினமால் விடை (சினம் பொருந்திய பெரிய விடை), திண் போர் விடை, மழவெள்ளை விடை (இளமை பொருந்திய வெள்ளை விடை), மால்விடை (திருமாலாகிய விடை) என்றெல்லாம் விளக்கப்பட்டு உள்ளது.

குறிப்பு: சிவபிரானுடைய ஊர்தியைக் கூறுமிடத்து "தெய்வப்பெண் ஏத்திசைப்ப வான்புரவி யூரும் மகிழ்ந்து" எனத் திருத்தசாங்கம் (6)ல் வருகின்றது. வான்புரவி என்றதற்கு ஞானாகாசமாகிய புரவி (குதிரை) எனப் பொருள் காண்பர். ஏத்திசைப்ப 'வான்புரவி' என்பதை ஏத்திசைப்ப 'ஆன்புரவி' என்று பிரித்தும் பொருள் காணலாம். ஆன் புரவி-பசு வாகனம்.

### சிவபிரான் ஏன் விடை வாகனம் கொண்டார்?

சிவபிரான் திரிபுரம் எரித்தபொழுது திருமால் விடையாக அவரைத் தாங்கின காரணத்தால் விடையை வாகனமாகக் கொண்டார் எனத் 'திருச்சாழலில்' விளக்கி உள்ளார் மணிவாசகர். சிவபெருமான் விடை வாகனப் பிரியர் என்பது "விடை விடாது உகந்த விண்ணவர் கோவே" எனப் 'பிடித்த பத்தி'ல் வருவதால் அறிகின்றோம்.

## 32. சிவபெருமான் வியாபகம் [39]

(எங்கும் நிறைந்திருத்தல்)

இங்கும் அங்கும் இறைவன் அல்லது வேறில்லை.

## 33. சிவபிரான் விரும்பின, விரும்புவன [40]

கங்காளம், வான்புரவி, விடைவாகனம், தாளி அறுகின் மாலை, பெண்பால் தேவி, பொன்னம்பலக்கூத்து இவையாவும் அவர் விரும்பியவை; விடையை; விடாது எப்போதும் உகப்பர்.

தலங்களுள் திருப்பனையூரில் அவர்க்கு விருப்பம்.

மணிவாசகருடைய சிந்தையை அவர் உகந்து ஊராகக் கொண்டார்.

மணிவாசகருக்கு ஏதாவது வேண்டி இருந்தால் அதுவும் சிவபெருமான் விருப்பமே.

## 34. சிவபிரான் விளையாட்டு [41]

பிரானுக்கு ஆட்கொண்டு அருளுதல் ஒரு விளையாட்டு; அவர், விண்ணும், மண்ணும் மற்று எல்லாவற்றையும் காத்தும் படைத்தும் மறைப்பித்தும் விளையாடுவார். தனது (மணிவாசகரது) சித்தம் என்னும் வலிய கயிற்றைத் தமது திருப்பாதத்திற் கட்டுவித்த விளையாடலைக் கொண்ட வித்தகனார் அவர்.

## 35. சிவபிரான் வேடம் [42]

[சிவனும் வேடமும் பார்க்க]

காட்டகத்து வேடனாகவும், நாட்டில் குதிரைப் பாகனாகவும், கடலகத்தே வலைஞனாகவும் வந்த வேடம் உடையவர் பிரான்.

## 36. சிவபிரானல் தண்டிக்கப் பட்டவர்கள் [43]

அங்கி (அக்னி) கரம் இழந்தான்; அந்தகாசுரன் சூலத்தால் மாய்ந்தான்; அயன் (பிரமன்) தலையை இழந்தான்; அரி (திருமால்) தம் மதிப்பை இழந்தார்; அருக்கன் (சூரியன்) ஒருவன் (பூடன்) தன் பற்களை இழந்தான்; மற்றொருவன் (பகன்) கண்ணை இழந்தான்; அனங்கன் (மன்மதன்) தன் உடலை இழந்தான்; இந்திரன் குயிலானுன் (தன் சிறகை இழந்தான்); இந்து (சந்திரன்) காலாற் கலைகள் தேய்க்கப்பட்டான்; எச்சன் தலை இழந்தான்; காலன் உயிர் இழந்தான்; சலந்தரன் உடல் தடியப்பட்டு இறந்தான்; தக்கன் தலை இழந்தான்; திரிபுரத்தவர் எரிபட்டுச் சாம்பராயினர்; தேவர்கள் வேள்வியினின்றும் ஓட்டப் பட்டனர்; நாமகள் (கலைமகள்) மூக்கு அறுபட்டனள்; மகத்து இயமான் அழிதலுற்றான்; ராவணன் மலையின் கீழ் அழுத்தப் பட்டான்; வியாத்திரனர் தலை இழந்தார்.

## 37. சிவனும் அண்டங்களும் [44]

அண்டம் முதலாய், அண்டரண்டமாய் நின்றவர் பிரான். அண்டம் அனைத்துமாய்ப் பரந்த ஒளிப்பரப்பு அவர்.

## 38. சிவனும் அடியாரும் [45]

பெருமான் தேவியுடன் கூடி அடியவர்களின் நெஞ்சில் நின்று கருணை செய்து அவர்களுடைய இறப்பு, பிறப்பை அறுப்பார். அடியவர்க்கு எளியவர் அவர். அவர் திருவடியில் நமது நெஞ்சைப் புகட்டினல் அவர் நம்மைச் சிவலோகத்தில் வைப்பார். அடியாரை விட்டு நீங்காத பெருமை உடையவர் அவர். அந்தமிலா ஆனந்தத்தைப் பழைய அடியார்களுக்கு ஈந்து அருளுவார். மெய்யடியார்களுக்கு இன்பம் தழைத்தருளும் அவரது சேவடி. ஆளானவர்க்கு ஆரமுது அவர். தம்மை நினைப்பவர் மனத்தில் உறு சுவை அளிப்பார். 'என் ஆனை, என் அப்பன்' என்பவர்களுக்கு இன் அமுது அவர். கணக்கற்ற தொண்டர்களை

உடையவர் அவர். அடியார்களின் கண்ணகத்தே நின்று களி தரு தேன் அவர். அடியார்களின் சிந்தனையில் தேன் ஊறி நின்று அவர்களுடைய பிறப்பை அறுக்கும் பெருமான் அவர். அவர்களுக்கு எய்ப்பினில் வைப்பு அவர். தப்பாமே தமது தாள் அடைந்தவர் நெஞ்சை உருக்கும் தன்மையர் அவர். தம் அடியார்களின் குற்றங்களை நீக்கிக் குணங்களைப் பாராட்டி அவர்களுடைய சுற்றமாம் பாசத் தொடர்பை அறுப்பர் அவர். முழு அன்பை உடைய அன்பர்களுக்கு அவர்களைக் காட்டிலும் மிக்க அன்புடையவர் பெருமான். தம்மைத் தொழுபவர் களின் மயக்க உணர்வைத் துணித்து அருளுவர் அவர்.

பத்தர் சிக்கெனப் பிடித்த செல்வம் அவர். பத்தி செய்யும் அடியார்களை மேலான நிலையில் வைப்பவர் அவர். தேவியும் தாமும் அடியார்களின் இல்லங்கள்தோறும் எழுந் தருளும் தன்மையர் அவர். மெய்யடியவர்களுக்கு அண்மையர் அவர். மொட்டறு மலர் பறித்து இறைஞ்சிப் பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப் பரகதி கொடுத் தருள் செய்யுஞ் சித்தர் அவர். யாவராயினும் அன்பரன்றி அறியொணு மலர்ச்சோதியார் அவர். வந்திப்பவர் தம் மதுரக்கனி அவர். தம்மை விடாத அடியவருடைய உடலே இன்பமாகக் கொண்டு வீற்றிருப்பர் அவர். தம்மை விரும்பும் அடியார்களின் எண்ணத்தில் இருப்பவர் அவர்.

## 39. சிவனும் அடியர் அல்லாதாரும் [46]

பெருமான் அன்பருக்கு மெய்யர், அல்லாதார்க்கு அல்லாத வேதியன் அவர். ஏதிலர்க்கு (தம்மைச் சாராத வர்க்கு) ஏதிலர் அவர்.

## 40. சிவனும் அமுதும் [47]

[தலைப்பு 119 (8) பார்க்க]

நஞ்சை அமுதாக நயந்த கண்ணுர் அமுதக் கடவுள் அவர்.

## 41. சிவனும் அரசும் [48]

[தலைப்பு 19(9) பார்க்க]

மண்ணை ஆளும் அரசர்களுக்கு மேன்மை தருபவராகி நிற்பவர் பெருமான்.

## 42. சிவனும் அருளும் [49]

ஊனங்களை ஒழிக்கும் ஆனந்தத்தை ஆருக அருள் பவர் பெருமான். தாய் போல இன்னருள் புரியும் தலைவர் அவர். மீண்டு வாரா வழியை அருள்பவர் அவர். மூல மாகிய மும்மலங்களை அறுக்கும் தூய சோதி அவர்.

## 43. சிவனும் அன்பும், பத்தியும் [50]

அருச்சனை வயலுள் அன்பு வித்திட்டு உழுதால் கிடைப்பர் பெருமான். அன்பினில் விளைந்த ஆரமுது அவர். நேயத்தே நின்ற நிமலர் பெருமான். முழு அன்புடைய அன்பருக்கு அவரினும் மிகுந்த அன்பர் பெருமான்.

## 44. சிவனும் ஆகமமும் [51]

ஆகம நூல்களாய் நின்று (அவைகளைப் படித்து உணர்பவரை) அணுகி அருள்புரிபவர் பெருமான். ஆகமங்களை ஐந்து முகங்களாலும் அருளியவர் அவர்.

## 45. சிவனும் இசையும் [52]

பெருமான் இன்னிசை வீணையின் நாதத்தில் பொருந்தி விளங்குபவர். அந் நாதத்தில் மிக்க *ஈடு பட்டவர். *பண் நிறைந்த பாடலுக்குப் பரிசு தந்து அருளுவர் பெருமான்.

---

* இது இராவணனுடைய வீணை இசைக்குப் பெருமான் இரங்கியது. விறகு விற்ற திருவிளையாடல், இசைவாது வென்ற திருவிளையாடல் முதலியவற்றைக் குறிக்கும் போலும்.

## 46. சிவனும் இந்திரனும் [53]

இந்திரன் போற்றி செய்யும் பித்தர் இவர். இந்திரன் இவருக்கு வழி அடியான்.

## 47. சிவனும் இருவரும் [54]

அயனுக்கும் மாலுக்கும் சேமநிதி ஆவர் பிரான். அயன், மால், இந்திரன் இம் மூவரும் பிரானுக்கு வழி அடியார். பிரமனும், மாலும் பிரானைக் கண்டு மால் (ஆசை) கொள்வர்; அவர்களுடைய கால முடிவில் அவர்களுடைய கங்காளத்தை (எலும்புக் கூட்டை)க் காதலுடன் தோள்மேல் அணிவர் பிரான். பிரமனும் மாலும் அவரைக் கண்டதில்லை. அவருடைய திருவடி இத்தன்மைத்து என அவர்கள் அறியார்கள்.

## 48. சிவனும் உயிரும் ஊனும் [55]

அளவிறந்த பல்லுயிர்க்கும் தலைவராக இருக்கின்றார் இறைவர். எவ்வுயிர்க்கும் அருளும் இயல்பினை உடையவர் அவர். ஊனாய், உயிராய், உணர்வாய் உட்கலந்து இருப்பவர் அவர். எல்லா உயிர்களுடன் கலந்து விளங்கி அவை தழைத்து இருப்பதற்குக் காரணமாய்த் தாம் அவையல்லாமல், வேறு பொருளாய் நிற்கும் தந்திரத்தை உடையவர் அவர். எவ்வுயிர்க்கும் தோற்றமாய், ஈறாய் இருந்து தாம் தோற்றமும், ஈறும் இலாது விளங்குபவர் அவர்.

## 49. சிவனும் உலகமும் [56]

அனைத்து உலகும் ஆயவர் பிரான். பாண்டி நாட்டு அரசப் பெரும்பதவி மாத்திரம் அல்ல, மற்று முழுதுலகமும் கொடையாகத் தருவார் அவர். (சென்று முந்துமின்கள் என்று கூறுகின்றார் மணிவாசகர்). அயன், அரி இவர்கள் உணர்வுக்கு எட்டாதவராய், உலக முழுதும் ஊடுருவி நிற்பவர் பெருமான்; உலகுக்கு உயிராய்

உலகுடைய ஒரு முதலாய், உலகினுக்கு அப்புறமாய் நிற்பர் பெருமான். ஏழுலகு ஏத்த எவ்வுயிரும் தன்னுருவாய் அமைந்தவர் பெருமான். ஏழுலகுக்கும் நாதன் அவர். ஏழுலகும் முழுதும் ஆள்பவர் அவர். பாதாளத்தார் வித்து அவர். உலகு இன்ப வெள்ளம் கொள்ள குதிரைமேல் வந்த பிரான் அவர். விண்ணினின்று இறங்கி வந்து மண்ணில் உள்ள அடியவர் ஆசையை அறுப்பவர் அவர். பத்தர் சூழ மண்ணுலகுக்கு வந்து அந்தணராய்க் கூத்து இழைத்தவர் அவர். மண்ணோர் மருந்து அவர். விண்ணுலகைப் பழித்து மண் உலகிற் புகுந்து மனிதரை ஆட்கொள்ளும் வள்ளல் அவர். விண்ணோர் முழு முதல் அவர். மூவுலகுக்கும் தலைவர் அவர். 'பூமியிற் பிறவாமையால் நாளை வீணுக்குகின்றோம்; பூமியில்தான் சிவன் உயிர்களை உய்யக் கொள்கின்றார்' என்னும் உண்மையை அறிந்து திருமாலும் பிரமனும் மண்ணில் வந்து சிவனைப் பூசிக்க ஆசை கொள்வர்.

## 50. சிவனும் எரியும் [57]

ஊர்ச் சுடு காட்டு எரிப்பிச்சன் பெருமான்.

## 51. சிவனும் ஐம்புலனும் [58]

ஐம்புலன்களும் பெருமானைக் காண்கிலா; ஐம்புல ஆசையர் அவரை அடைய முடியாத தன்மையை உடையவர் அவர். ஐம்புலனுக்கும் காரணமாய் மூலமுதலாக உள்ளவர் அவர்.

## 52. சிவனும் கங்கையும் [59]

கங்கையின் நாயகர் பெருமான்; கங்கையை மணந்த புயங்கன் அவர்.

## 53. சிவனும் கங்கையும் திங்களும் [60]

கங்கை பொங்கி வந்த நீர் மடுவுள் எதிர்த்து உலவும் சிறு தோணிபோல் தோற்றத்தைத் தரும் வெண்ணிறப்

பிறை தவழும் சடையை உடைய நல்ல மாணிக்கம் பெருமான்.

## 54. சிவனும் கடலும் [61]

பிரான் அருள் நிறைந்த அமுதப் பெருங் கடல். கடலில் மீன் பிடிக்க வலை வீசின பெரு விருப்பினர். அவர் அளவிலா, மாளா இன்ப மா கடல்; பருகற்கு இனிய பரங் கருணைத் தடங் கடல்; கருணைக் கடல்; குணக் கடல்; பெருங்கடல்; பரமானந்தப் பழங் கடல்; அழிவிலா ஆனந்த வாரி. வானம், திசைகளும், மா கடலும் ஆயவர்.

## 55. சிவனும் கணங்களும் [62]

பதினெட்டுத் தேவ கணங்களுள் ஒரு வகையராகிய இயக்கியர் (இயக்கப் பெண்கள்) அறுபத்துநால்வர்க்கு* †எண்குணம் தந்து ஆண்டவர் பெருமான்.

## 56. சிவனும் கல்வியும் [63]

மண்ணும் விண்ணும் அடைந்து உள்ள கல்வியைத் தோற்றுவிப்பவரும் அவர், அழிப்பவரும் அவரே.

## 57. சிவனும் காலமும் [65]

ஊழிமுதல்வர் பெருமான். ஊழி நிகழ்ச்சியையும், முடிவையும், கண்டவர் அவர். மண் விண் இவை வந்து போம் காலம் அவர். பாண்டியனுடைய நல்ல நாட்டில் பெருமான் விளங்குகின்ற காலம் இக்காலம்.

---

* உத்தர கோச மங்கையில் அறுபத்து நான்கு இயக்கியர் பெண்களுக்கு ஞானோபதேசம் செய்தனர் பெருமான் என்பது வரலாறு.

† எண் குணங்கள்: முற்றறிவு, இயற்கை அறிவு, தம் வய முடைமை, இயல்பாகக் கட்டின்மை, வரம்பிலாற்றல், வரம்பில் இன்பம், தூய உடம்பு உடைமை, பேரருள் உடைமை என்பன.

## 58. சிவனும் காளியும் [66]

*அணங்கொடு - (காளியொடு அல்லது உமையொடு) தில்லை அம்பலத்தில் ஆடுகின்ற குணத்தை உடையவர் பெருமான். அவ்வாறு ஆடும்பொழுது காளிக்கும் உமைக்கும் தமது சிறுநகை விளங்க அருளிய திருமுகத்தை உடையவர் அவர்.

## 59. சிவனும் கொன்றையும் [67]

தேனும் வண்டும் நீங்காத கொன்றை மலரை அணிந்தவர் பெருமான். கொன்றை, திங்கள், கூவிளம், (வில்வம்) மத்தம் இவை நிறைந்துள்ள சென்னியர் அவர்.

## 60. சிவனும் சமயங்களும் [68]

அறுவகைச் சமயத்து அறுவகை யோருக்கும் வீடு பேறாய் நின்றவர் பெருமான். அறுவகைச் சமயங்களும் தம்மை வணங்கும்படி செய்கின்றவர் பெருமான்.

## 61. சிவனும் சித்தரும் [69]

[தலைப்பு 19 (98) பார்க்க]

சிவபிரான் தில்லையில் சித்தர் சூழ நடம் செய்வார்.

## 62. சிவனும் சுடுகாடும் [70]

சிவபிரானுடைய பதி (சுடு) காடு. அவர் சுடுகாட்டு அரசு. ஊர்ச் சுடுகாட்டு எரிப் பிச்சன்.

---

* "மன்றுள் மாதோடு அண்ணல்...
ஆடுகின்ற......நிருத்தம்"

—கோயிற்புராணம் நடராச. 10.

இதன் உரையில் "உமாதேவியாரொடு நடிக்கின்ற" என இருக்கின்றது. ஆதலால் அணங்கு உமை எனக் கொள்ளலாம்.

## 63. சிவனும் ஞாயிறும் [71]

ஞாயிறு வாழும் ஒளி பெருமான். ஞாயிறுக்கு நாள் தொறும் ஒளி தருபவர் அவர். அஞ்ஞான இருளை நீக்கி உள்ளத்தில் ஞாயிறுபோல ஒளி வீசி எழும் தன்மையை உடையவர் அவர்.

## 64. சிவனும் ஞானமும் [72]

பெருமான் ஞான வாள் ஏந்துவர். அவர் மெய்ஞ் ஞானம் ஆகி ஒளி வீசும் சுடர். திருவாரூரில் ஞானோப தேசம் செய்த பெருமான் அவர்.

## 65. சிவனும் தமிழும் [73]

குளிர்ந்த தமிழைத் தந்து பாதுகாக்கும் பாண்டி நாட்டுக் கருணைப் பெருமான் அவர்.

## 66. சிவனும் தலமும் [74]

அம்பலவன், ஆரூர்ப் பிச்சைத் தேவன், உத்தர கோச மங்கைக்கரசு.

## 67. சிவனும் தவமும், தவத்தினரும் [75, 76]

அருந்தவர்க்கு அரசு, தாபதவேடத்தர்.

## 68. சிவனும் தானவரும் [77]

பெருமானுடைய பொன்னார் திருவடியை அறியார் தானவரும்.

## 69. சிவனும் திங்களும் [78]

பெருமான் திங்களில் (சந்திரனில்) தண்மை வைத்தவர்; சந்திரனுக்கு அழியாத வடுவைச் செய்தவர்.

## 70. சிவனும் திருநீறும் [79]

பெருமான் தூயவெண்ணீறு விளங்கும் பொன்மேனி உடையவர், சுண்ணப்பொன் நீற்றர், திருநீற்றை உத்தூளித்து ஒளிமிளிரும் வெண்மையர், தோட்கொண்ட நீற்றர், பால்கொள் வெண்ணீற்றர், வெண்ணீற்று மேனியர், உமையம்மையின் இரு கொங்கையின் நுனிகள் அழுந்திய தழும்புகள், அனலின் நடுவில் இரண்டு புள்ளிகள்போல, விளங்கும் ஒளி தங்கிய திருநீற்று மார்பினர், பலநூறு கோடி தேவர்களும், முனிவர் குழாங்களும் இருக்கத், தமது திருநீற்றைத் தனக்கு (மணிவாசகருக்கு) அளித்தவர்.

## 71. சிவனும் திருமாலும் [80]

திரிபுரத்தைப் பெருமான் எரித்தபோது திருமால் அவரை இடபமதாய்த் தாங்கினர். சலந்தராசுரனுடைய உடலை அழித்த சக்கரத்தைப் பெறவேண்டித் திருமால் ஆயிரம் தாமரைப் பூக்கொண்டு சிவபிரானைப் பூசித்தபோது ஒரு பூ குறைய அவர் தம் கண்ணையே பறித்து மலராகப் பெருமான் திருவடிக்கீழ் வைத்துப் பூசிக்கப், பெருமான் அச் சக்கரத்தைத் திருமாலுக்கு அளித்தனர். தக்கன் வேள்வியில் தம் பெருமை அழியத் திருமால் தண்டனை அடைந்தனர் (வீரபத்திரரால்).

திருமால் அறுகு எடுத்துப் போற்றி செய்து பெருமானுடைய திருவடியைப் புகழ்வார். திருமால் பன்றியாய் நிலத்தைப் பிளந்து சென்றும் காணமுடியாத சேவடியை உடையவர் பெருமான்; அத் திருவடியைக் காண ஓலமிட்டு அலறுவர் திருமால். திருமாலுக்குத் தலைவர் சிவபிரான். திருமால் முதலிய யாரினும் முன்னவர் சிவபிரான்.

## 72. சிவனும் தேவர்களும் [81]

சிவபெருமான் — அண்டத்தவருடைய (விண்ணவருடைய) அரசு, ஏறு, குரு, கோமான், கோன், தம்பிரான்,

தாய், நாதன், பிரான், பெம்மான், பெருமான், மருந்து, முழு முதல்.

பெருமான் தேவர்க்கு அரியர்; தேவரால் அறிய ஒண்ணுதவர்; தேவர்கள் அவர் முன்பு புழுக்கூட்டம் போல்வர்; தேவர்கள் பெருமானுடைய திருவடித் தாமரையை வணங்குவர்; பெருமானுடைய திருவடி தேவர்களின் சிரத்திற் பொலியும்.

தேவர்களுக்கெல்லாம் ஆதாரம் ஆனவர் பெருமான்; தேவர்கள் தம் கனவிலும் காணுதற்கரிய சேவடியை உடையவர் பெருமான்; தேவர்கோ (இந்திரன்) அறியாத தேவதேவன் அவர். பொன்னேரனைய மலர்கொண்டு தேவர்கள் பெருமானைப் போற்றுவர்; தேவர் அறியாத கோலத்தவர் அவர்; தேவர்கள் வணங்கி ஏத்தப், பெருமான் பெருங்கருணைக் கடலாய் விளங்கி அடியார் களுடைய வினைக்கட்டு நீங்க அருளுவர். தேவர்கள் அறியாத விழுப்பொருள் அவர்; தேவர்கள் தம்மை ஏத்த *மறைந்திருந்த பெருமான் அவர்.

## 73. சிவனும் தேவியும் [82]

பெருமான் தேவியுடன் கூடி அடியார்களின் நெஞ்சில் அமுதூறிக் கருணையுடன் அவர்களுடைய இறத்தலையும், (பிறத்தலையும்) அறுப்பார். தேவியுடன் அவர் தில்லை யம்பலத்தில் ஆடுகின்ற குணத்தை நாம் பாடிப் பூவல்லி கொய்வோமாக. தேவிக்கு அவர் கணவன், மகன், தகப்பன்,

---

* பூதவடிவுடன் கயிலைக் கோயிலின் வாயிலில் நின்றார் இறைவர். இறைவனைத் தரிசிக்க வந்த இந்திரன் அப்பூதத்தை நீ யார் என வினவ அப்பூதம் விடை ஒன்றும் கூறுது நிற்க, இந்திரன் கோபித்து அப்பூதத்தின் மீது வச்சிரப்படையை ஏவினன். பூதவுடலுடன் நின்ற இறைவர் தம் உருத்திர வடிவத்தைக் காட்ட, இந்திரன் அஞ்சித் தன் குற்றத்தைப் பொறுத்தருளும்படி வேண்டி அவரை வணங்கினன். இறைவன் கோபம் தணிந்து, 'அஞ்சல்' என்று கூறினர்.

[கந்தபுராணம். 6-13—199—211.]

தலைமையன் ஆவார். தேவி பெருமானுடைய நடுவில் வீற்றிருப்பாள். தேவியின் நடுவில் பெருமான் வீற்றிருப்பார். தேவிக்கும், காளிக்கும் அருளிய சிறுநகையை உடையவர் பெருமான். கல்லாடம் என்னும் தலத்தில் பெருமான் தேவியுடன் இனிது சேர்ந்திருப்பர். வேட உருவுடன் தேவியை அணைந்திருப்பர். தேவியுடன் வந்து தம்மை (மணிவாசகரை) ஆண்டு கொண்டார். கூற்றையும், ஐம்புலன்களையும் வென்றவராய்ப் பெருமான் தேவியுடன் அழகாக வீற்றிருப்பார். பெருமான் தேவியினின்றும் பிரியார். அவரும் தேவியும் மகிழ்ச்சியுடன் திருவாஞ்சியம் என்னும் தலத்தில் வீற்றிருக்கின்றனர். தென்பாலுகந்தாடும் தில்லை அம்பலவர் பெண்பாலுகந்த பெரும் பித்தர் ஆவார். பெருமானுடைய திருமார்பில் தேவியின் கொங்கைச் சுவடு இரண்டு புள்ளிபோல் விளங்கும்: மலை அரசன் மகளாகிய தேவியைப் பெருமான் உலகறிய மணம் செய்தனர்; அங்ஙனம் அவர் செய்திராவிட்டால் உலகிலுள்ள பொருள்கள் எல்லாம் கலக்கம் உற்றிருக்கும்.

## 74. சிவனும் தேவியும் அடியார்களும் [83]

பெருமானும் தேவியும் தம் பழைய அடியார்களுடைய இல்லங்கள்தோறும் எழுந்தருளுவார்கள்.

## 75. சிவனும் தேவியும் கங்கையும் [84]

ஏலவார் குழலிமாராகிய தேவிக்கும் கங்கைக்கும் நாயகன் சிவபெருமான். மலைமகளாகிய தேவியைப் பெருமான் ஒரு பாகத்தில் வைத்தவுடன் மற்றொருத்தி (கங்கை) பெருமானுடைய சடையிற் பாய்ந்துள்ளாள். அங்ஙனம் பாய்ந்திராவிட்டால் கங்கை நீர் எங்கும் பாய்ந்து பெருங்கேடு விளைவித்திருக்கும்.

## 76. சிவனும் நரகமும் [85]

கொடிய நரகத்து அழுந்தாமல் தம்மை (மணிவாசகரை)க் காத்த குருமணி பெருமான். நரகத்தில் விழ

இருந்த தமது சிந்தையைத் தெளிவித்துச் சிவமாக்கித் தம்மை ஆண்டவர் பெருமான். பிறப்பு இறப்பு என்னும் நரகில் அழுந்தின தமக்குப் பாதமலரைக் காட்டி ஆண்டவர் பெருமான். நரகில் விழ இருந்த தமக்கு உண்மைப் பொருளை அளித்துத் தம்மைப் பொய்ந் நெறியினின்றும் பெருமான் நீக்கின அதிசயக் காட்சியைக் கண்டனர் மணிவாசகர். நரகம் புகினும் இறைவன் அருளால் அங்கு இருக்கப்பெற்றால் அந்நிலையைத் தாம் இகழமாட்டேம் என்கின்றார் மணிவாசகர். இருபத்தொரு தலைமுறைச் சுற்றத்தாரை நரகில் ஆழாமல் காத்தருளும் அரசு ஆவர் பெருமான்.

## 77. சிவனும் நூலும் [86]

நூல்கள் நுழைந்து ஆய்ந்து அறிதற்கரியவன் பெருமான்.

## 78. சிவனும் பஞ்சபூதமும் [87]

பெருமான் மண்ணில் திண்மை (திட்பம்) வைத்தார். வானில் கலப்பு வைத்தார். நீரில் சுவை வைத்தார். தீயில் வெம்மை வைத்தார். காற்றில் ஊக்கம் (கிளர்ந்து எழும் ஆற்றல்) வைத்தார். நிலம், நீர், தீ, காற்று, வான், உயிர், ஞாயிறு, திங்கள் இவைகளின் வடிவங் கொண்ட தன்மை உடையவரும், அவை தமக்கு வேறாகி நிற்பவரும் பெருமான். மண்ணிடை சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என ஐந்து குணமும், நீரில் சுவை, ஒளி, ஊறு, ஓசை என இந் நான்கு குணமும், தீயில் ஒளி, ஊறு, ஓசை இந்த மூன்று குணமும், காற்றில் ஊறு, ஓசை இவை இரண்டு குணமும், விண்ணில் ஓசை என்னும் ஒருகுணமும் திகழும்படி வைத்துள்ளார் பெருமான். விண், நீர், நிலம், தீ, காற்று இவைகளாய், இவைகள் அல்லவாய், ஒளிந்து நிற்பர் பெருமான்.

## 79. சிவனும் பலியும் [88]

பெருமான் ஊனார் உடைதலையில் உண்பலிக்குத் திரிவர். தவ வேடத்திற் பிச்சைக்குப் போவார், ஆதலால் அவரை "ஆரூரெம் பிச்சைத்தேவா" என அழைக்கின்றார் மணிவாசகர். பிரானுடைய உணவு ஆலாலம் (விஷம்), அதை அமுதாகக் கொண்டார். அவருடைய உண்கலன் உடைதலை.

## 80. சிவனும் பாட்டும் [89]

பண்ணுடன் பாடும் பாடலுக்குப் பெருமான் பரிசு அளிப்பார். அவரைப் பாடும் விதம்தான் எப்படி? சொல் வீர்களாக.

## 81. சிவனும் பாண்டிநாட்டு அரசாட்சியும் [90]

பாண்டிப் பிரான் தம்மை (மணிவாசகரை) ஆண்டு கொண்டவர். பெருமானுடைய பழம்பதியும் நாடும் என்றும் தென்பாண்டி நாடே. அப் பாண்டிநாட் டைச் சிவலோகமாக ஆக்குவித்த சடையப்பர் அவர். தமிழைப் புரந்து அளிக்கும் தென் பாண்டி நாட்டார் அவர். தம்மைப் பரவும் அன்பர்களுடைய எலும்பை உருக்கும் பெரும்பாண்டியனார் அவர். பாண்டி நாட்டுக் கருணை வெள்ளம் அவர். தென்னன் (தென்னவன்) அவர். "தென்னா தென்னா" என்று அவரைக் கூவி அழைத்துத் தெள்ளேணம் கொட்டுவோமாக. அவர் பரிமேல் கொண்ட பாண்டியனார். அங்ஙனம் பரியின் மேல் அவருடைய வரவைக் கண்ட மாதர்கள் தம்மை மறந்து மரம்போல் நின்றனர்; அப் பெருமான் தமது அடியாருக்கு மூல பண்டாரம் (சேமநிதி) வழங்குகின்றார். அவர் வழங்கும் அச் சேமநிதி "முத்தி" என்னும் பரிசு; அதைப் பெற முந்துமின் என்கின்றார் மணிவாசகர்.

## 82. சிவனும் பாண்டியனும் [91]

மாயை என்னும் இருளைக் கெடுக்கும் அப் பரஞ் சோதியைப் பாண்டியனும் கண்டு சொல்ல வல்லவன் அல்லன். பாண்டியனது ஆருயிரை (பசுத்தன்மையை) உண்ட (நீக்கின) திறமையை உடையவர் பெருமான். அவர் கையில் ஈட்டியுடன் குதிரையின்மேல் வருவாராகில் அவரைக் காணும் பாண்டியன் மறு பிறப்பிலன் ஆவன். பாண்டியனுக்குக் குதிரை விற்றவர் அவர். பிட்டமுதுண்டு பாண்டியனுடைய வேலையில் ஈடுபட்டு அவனுடைய பிரம்பால் அடிபட்டுப் புண்பட்டவர் அவர். பாண்டியனுக்கு அமுதம் போன்றவர் அவர். நரியைக் குதிரையாக்கி மதுரைவாசிகளைப் பித்தர்கள் ஆக்கிய பெருமான் அவர். 'பாண்டியன்' என்னும் பதவி ஒன்று தானு, உலகம் முழுவதையும் தரவல்லவர் பெருமான்.

## 83. சிவனும் பாதாளத்தாரும் [92]

பாதாளத்தார் வித்து பெருமான். அவருடைய திருவடி இரண்டும் பாதாளம் ஏழினுக்கு அப்பால் சொல்ல முடியாத இடத்தன. பாதாளத்தார், மண்ணோர், விண்ணோர் ஆராலும் காண்டற்கு அரியவர் அவர். உலகினர் மாட்டும், பாதாளர் மாட்டும், விண்ணோர் மாட்டும், மற்ற யார் மாட்டும், சாராத வகையைத் தமக்கு அருளி ஆட்கொண்ட பெருமான் அவர்.

## 84. சிவனும் பிரமனும் [93]

அயனும் மாலும் போற்றி செய்யும் பித்தர் பெருமான் அவர். இருவரும் பெருமானுக்கு அறுகெடுத்து மங்களப்பணி செய்வார் ஆவர். பிரமன் காண முடியாத மலை அவர். அவனால் அறிய முடியாதவர். மதிமயங்கின பிரமனுடைய ஊனார் உடைதலையிற் பலிதேர் பவர் அவர். திருமால் பிரமன் ஆகிய இருவர்க்கும் மற்று யார்க்கும் முன்னவர் பெருமான். மேம்பட்ட மால்,

பிரமன், வானவர், தானவர் ஆகிய இவர்கள் பெருமானுடைய பொன்னார் திருவடியை அறியமாட்டார்கள்.

## 85. சிவனும் புலனும் [94]

பெருமான் அறிவு வடிவானவர் அவர் ஐம்பூதங்களொடு அறிவு ஆவர்.

## 86. சிவனும் மணமும் [95]

உடலிற் பொருந்தியவரும், வாசனையுள்ள மலரினின்றும் எழும் நறுமணம்போலப் பற்ற முடியாத தன்மையுடையவரும் ஆவர் பெருமான். பூவின் மணம்போலப் பரந்து எங்கும் ஒழிவற நிறைந்த பெருமையை உடையவர் அவர்.

## 87. சிவனும் மலையும் [96]

பெருமான் அருள்நிதி தரவரும் ஆனந்த மலை, பொன் மணிக் குன்று; பொன்மலை அன்ன அரசு. ஈறு இலாத கொழுஞ்சுடர்க் குன்று. மாசற்ற மணிக்குன்று, மால் அறியாத மலை, நான்முகன் காணாத மலை, கருணை மலை, தீது இல்லாத நன்மைக் குன்று, திருஅருட் குன்று, முத்தி அருளுமலை, மந்திரமாமலை, மகேந்திர மலை, பெருமை வாய்ந்த கயிலைமலை ஆகிய இம்மலைகளில் வீற்றிருப்பவர். (மேருவாம்) பொன்மலையை வளைத்தவர்.

## 88. சிவனும் மறையும் [97]

பெருமறை தேடிய அரும்பொருள் பெருமான், மறைபயில் அந்தணர் அவர். ஈறிலாத மறையோன் அவர். நான்மறைகளும் அவரை அறியாமல் "எம்பெருமான் ஈசா" என்று ஏத்தி நிற்கின்றன. பழமையான நான்மறைகள் அவரை அணுக முடியாமல் அவரைத் தேடுகின்றன. அவர் பேசுவது மறையே. மறையீறு அறியா மறையோன் அவர்.

## 89. சிவனும் மனமும் [98]

தமது சிந்தை பெருமானை நினைக்க எவ்வளவு தூரம் செல்லமுடியுமோ அவ்வளவு தூரம் செல்லவேண்டும் என வேண்டுகின்றார் மணிவாசகர்.

## 90. சிவனும் மாயமும் [99]

பெருமான் மாயம் வல்லவர்; ஆதலால் மாயன் எனப் பட்டார்.

## 91. சிவனும் முத்தியும் [100]

நெஞ்சிலுள்ள அஞ்ஞானம் நீங்க ஒளிவீசி முத்தியை அருளுவர் பெருமான். வாரா உலகைத் தந்து ஆட்கொள் பவர் அவர். வேண்டினால் அது வேண்டாம் என அவர் விலக்கமாட்டார். ஆதலால் அவர் திருவடியைப் போற்றுவோம். அவர் நமக்கு முத்தி என்னும் பரிசை அருளுவர்.

## 92. சிவனும் முருகவேளும் [101]

வேலனாகிய முருகவேளின் தந்தை சிவபெருமான்.

## 93. சிவனும் முனிவர்களும் [102]

### 1. போது

பன்னெடுங் காலம் உடலை வெறுத்துத் தவம் செய்து பெருமானைக் காணவேண்டி முனிவர்கள் பெரிதும் வாடுவர். மாதவர்களின் கைகள் குவிந்து பெருமான்மீது பூமழை பொழியும்.

### 2. சிறப்பு

1. உபமன்யு முனிவர் :

இவருடைய குழந்தைப் பருவத்தில் இவர் பாலுண்ண வேண்டிப் பெருமான் பாற்கடலை வரவழைத்துத் தந்தனர்.

2. பதஞ்சலி

பதஞ்சலிக்கு அருளிய பரமநாடக மூர்த்தி பெருமான்.

## 94. சிவனும் மெய்ம்மையும் [103]

பெருமான் பொய்யிலா மெய்யர்; அன்பருக்கு மெய்யர்; தம்மைப் போற்றிப் புகழும் பொய்யிலா மெய் யடியார் மீண்டு பிறப்பில் வாரா வண்ணம் காத்தருளுவர் அவர். மெய்தரு வேதியர் அவர். மெய்த்தேவர்களின் தேவர் அவர். மெய்ப் பொருள் அவர். மெய் ஆயினர் அவர். அவர் மெய்யர் மெய்யர்; விரி சுடராய் நின்ற மெய்யர்; மெய்ப்பொருட்கண் தோற்றமாய், மெய்யே நிலை பேருய், எப்பொருட்கும் தானேயாய், யாவைக்கும் வீடா கும் அப்பொருள்தான் நமது சிவன். மெய்யன்புள்ள அடியார்கள் பெருமானுடைய திருவடியைக் காண்பாரோ?

## 95. சிவனும் மேகமும் [104]

"அருச்சனை" (வழிபாடு) என்னும் வயலுள் "அன்பு" என்னும் விதையை விதைத்துத் தொண்டர்கள் உழவராய்ப் பயன்பெற உதவும் கருமேகம் போன்றவர் பெருமான்.

## 96. சிவனும் ராவணனும் [105]

["ராவணன்" என்னும் தலைப்பும் பார்க்க]

ராவணனுடைய பெருமையை அழிவு செய்த பெருமா னுடைய பெருமையைப் பாடி நாம் பூவல்லி கொய்வோ மாக. தனது தேரை நிறுத்திப் பெருமானுடைய மலையை எடுத்த இராவணனுடைய தலை பத்தும் தோள் இருபதும் நெரிந்தன என்று பாடி உந்திபறத்தல் என்னும் விளை யாட்டை ஆடுவோமாக.

## 97. சிவனும் வாத்தியமும் [106]

### 1. இயம் (வாத்தியம்)

பெருமான் எழுந்தருளப் பெற்றால், இன்னிசை தரும் வாத்தியங்கள் எங்கும் நிறைந்து ஒலிதருதல் கூடுவதாகும்.

### 2. தாளம்

பெருமானுடைய திருக்கரத்தில் தாளத்தைக் கண்டேன் (எனத் தலைவி தன் தாயிடம் கூறுகின்றாள்.)

### 3. பறை (முரசு)

மாயப்படை வாராவண்ணம் (பிரபஞ்ச வாசனை நம்மைத் தாக்கா வண்ணம்) ஞானவாள் ஏந்தும் பெருமானுடைய பிரணவ நாதமாகிய பறையை அறையுங்கள். பிறவியாகிய பகை கலங்கப் பேரின்பத்து ஓங்கும் விரிவு மிகுந்த நாதப் பறையே பெருமானுடைய முரசுப் பறையாகும்

### 4. வீணை

பெருமான் வீணையின் இனிய நாதத்தில் நட்பமாய்க் கலந்துள்ளார்.

## 98. சிவனும் வானும் [107]

சிதாகாயத்தில் எழுந்தருளும் தேவராவர் பெருமான்.

## 99. *சிவனும் விசயனும் [108]

(விசயன் பொருட்டுப்) பெருமான் பன்றியை நாடி அதன்பின் தாம் வேட உருவுடனும் தேவி வேடிச்சி உருவுடனும் காட்டகத்தே நடந்தவர்.

* "வரலாறு" என்னும் தலைப்பில் 40 - 8 இன் கீழ்க் காண்க

## 100. சிவனும் வெண்மையும் [109]

### 1. பெருமானுடைய ஆடை

பெருமான் வெள்ளைக் கலிங்கத்தர் (ஆடையர்).

### 2. திருநீறு

பெருமான் தமது பொன்னியலும் திருமேனியிற் பூசுவது தூய பால்கொள் வெள்ளைநீறு, அவர் திருநீற்றை உத்தூளித்து ஒளிமிளிரும் வெண்மையர். அவர் திருமேனி வெண்ணீற்று முழுக்கு *ஆடியது.

### 3. மதி

பெருமான் அணிந்துள்ள மதி வெண்ணிறத்தது. அவர் குடை மதிவெண்குடை.

### 4. விடை

பெருமான் ஏறும் வாகனம் இளம் பருவத்து வெள்ளை விடை (ஏறு).

### 5. வெண்டலை

பெருமான் வெண்டலையைச் சிரசிற் சூடி உள்ளார். அந்த வெண்டலையின் பொந்தில் உள்ள பாம்புக்கு அஞ்சிக் கங்கை நீரிற் குளித்துச் சந்திரன் ஒளித்துக் கொள்வான்.

## 101. †சிவனும் வேட்டுவ உருவமும் [110]

வேட்டுவ வேடமொடு தேவியை அணைந்துள்ளார் பெருமான். வேடுவனுக்குச் சமயத்துக்கு வேண்டிய வடிவம்

---

* ஆடுதல் = முழுக்கு ஆடுதல் (அபிஷேகம் ஆதல்) "அனல் ஆடினாய்" என்னும் இடத்து ஆடுதல் இப்பொருளில் வருதல் காண்க.

தக்கயாகப்பரணி 330 இன் விசேடக் குறிப்பு பக்கம் 309 பார்க்க. சம்பந்தர் ஒளிநெறி தலைப்பு 95 - (4) (9) பார்க்க.

† "வரலாறு", "திருவிளையாடல்" என்னும் தலைப்புக்களைப் பார்க்க.

எடுத்துக் காட்டிடையே மறைந்த தந்திரம் கொண்டவர் பெருமான். வேட்டுவ வடிவம் கொண்டு (மகேந்திர மலையில்) மிக்க குறைகளை உடைய தேவர்கள் தம்மைத் தேட இருந்த பெருமான் அவர். வேடவடிவம் கொண்டு வேட்டை நாய்கள் தம்மைச் சூழ்ந்து வரத் தமக்கு வேலை செய்யும் தேவர்களின் முன்பாக அம்புபட்டு இறந்த பன்றிக்கு இரங்கினவர் பெருமான்.

## 102. சிவனும் வேடமும் [111]

ஆடு பாம்பு, யானைத் தோல், புலித் தோல் இவைதமை அணிந்து திருநீறு பூசின வேடத்தினர் பெருமான். சுந்தர வேடம், தவக்கோல வேடம், வலைஞன் வேடம் ஆகிய வேடங்களைப் பூண்டவர் பெருமான்.

## 103. சிவனும் வேதமும் [112]

வேத மெய்ந் நூலைச் சொன்னவர் பெருமான். வேத மொழியர், வேத விழுப்பொருள், வேதம் ஆயினவர் பெருமான். வேதங்கள் "ஐயா" என முறையிட ஆழ்ந்து அகன்ற நுண்ணியராய் ஓங்குபவர் பெருமான். வேதம் நான்கும் ஓலமிட்டும் பெருமானைக் காணப் பெறாது வாடுகின்றன. நான்கு வேதங்களும் பெருமானுடைய புகழைப் பாடுகின்றன. தில்லையில் வேதங்கள் பெருமானைத் தொழுதேத்தும். விண்ணுளும் தேவர்களுக்கு மேலாய வேதியர் பெருமான். வேதங்களின் பொருளாய சிவபெருமானுடைய புகழைப் பாடி ஆடுக.

## 104. சிவனும் வேள்வியும் [113]

வேள்வி ஆயினர் பெருமான். வேள்வியை இயற்றி நல்ல முறையிலே நிற்பவர் வாழும்படி அருளுவர் பெருமான்.

# 2. மணிவாசகப் பகுதி

## 1. மணிவாசகரும் அடியாரும் சிவனும் (1)

### 1. மணிவாசகரும் சிவனும்

அடியேனை ஆண்டு கொண்டு பத்திக் கடலிற் பதித்த பரஞ்சோதி பெருமான். அடியேனுடைய உள்ளத்தில் ஒளிர்கின்ற ஒளி அவர். அடியேனுடைய இடர்களைக் களைந்த அமுது அவர். அடியேனுடைய அப்பன் அவர். சிறு தெய்வங்களை ஏத்தாத சித்தத்தைத் தந்து அவர் என்னை உய்வித்த திறத்தை நான் மறவேன். அவர்தாம் எனக்கு அடைக்கலமாவர். அவர் என்னை ஆண்டு தமது அடியாருடன் கூட்டிய அதிசயத்தைக் கண்டு மகிழ்கின்றேன். அடியாருள் என்னையும் ஆட் கொண்டு என் பிறவி தீது படாது அறுத்தவர் அவர். உள்ளம் நெகிழும் அடியார்களின் முன்பு, நிரம்ப வாய்விட்டு அலறித் திருவடியில் மலர் தூவி எனது மணியன்ன பெருமானுடைய திருவடியை என் சிரசின்மேல் பூண்டு அவருடன் நான் கலந்து இருப்பது எப்போது என்று கலங்குகின்றேன். 'என் நெஞ்சில் அமுதளித்து ஊறும் ஆனந்தன்' அவர்.

ஆனந்தத்தைத் தரும் பெருமான் பெருந்துறையான் என்று யாரொருவர் என்னிடம் கூறுகின்றார்களோ, அவர்களை நான் மகிழ்ச்சியுடன் வணங்கி ஆரவாரிப்பேனோ? அலறுவேனோ? ஆடுவேனோ? பாடுவேனோ? அவர்களைப் பார்ப்பேனோ? என்ன சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. பெருமான் யாராலும் காண்டற்கு அரியவன், ஆனால் எனக்கு எளிய பேரருளாளன்.

அடிமையாம் நாயேனைத் தினையளவுகூடப் பிரிதல் அவருடைய திருவுளக் குறிப்பு அன்று.

அடிமையாம் நாயேனை விற்று ஆள்வதற்குப் பெருமானுக்கு மிக்க உரிமை உண்டு. உத்தரகோசமங்கை

வள்ளல் என் புத்தியில் புகுந்துள்ளார். யான் உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நிற்கின்ற மெய்யர் அவர். சொல்லுதற்கரிய உள்ளொளியாம் உத்தமராம் பெருமான். அவர் என் உள்ளத்திற் புகுந்தவுடன் கரையில்லாத காமப் பெருங்கடலைக் கடந்தேன் நான். ஐம்பொறிகளாம் பறவைகள் என்னைவிட்டு ஓட்டம் பிடித்தன.

என்னை ஆண்ட பெருமான் என்னுள் எழுந்தருளப் பெற்றால் பெருமானுடைய அடியார் அடியார் அடியேன் என நான் உய்தல் கூடுவதாகும்.

ஊனாய், உயிராய், உணர்வாய், என் உள்ளத்திற் கலந்து தேனாய் அமுதமாய்த் தித்திக்கும் தீங்கரும்பாய் விளங்கி வானோர் அறியாத வழியை எனக்குத் தந்தவர் பெருமான்.

"எம்பரமனே" என்று பாடிப் பாடிப் பெருமானுடைய பாத மலரை அணைவது என்றைக்கோ? "எம் பெருமான் என் தாதைக்குத் தாதை, என் தாய்க்கும் பெருமான். என் கண்ணில் அமுதூறித் தித்தித்து நான் செய்யும் பிழைகளுக்கு இரங்கும் கருணையாளன் அவர். என் உள்ளத்திற் பொருந்திய ஜோதி அவர். என் பிறவியை வேரறுத்துப் பெரும் பித்துத் தந்த பெருமான் அவர். என் உடம்பினின்றும் பிரியாமல் என் வினையைத் தொலைப் பவர் அவர். அவர் என் புத்தியில் எழுந்தருளினால் எனக்கு ஆரா அமுது ஆவர். "நான்" என்பதை அறிய ஒட்டாமல், பகல் இரவு தெரிய ஒட்டாமல், மனவாசகம் கடந்து என்னை மத்த உன்மத்தனாக்கினார் அவர். இஃது என்ன அற்புதம்! யாதினும் கடைப்பட்ட என்னை ஆண்டு கொண்ட கருணாலயர் பெருமான். கடையேனைத் தொண்டனாகக் கொண்ட கோகழித் தலைவர் அவர். என் கண்ணகத்தே நின்று களிப்பை ஊட்டும் தேன் அவர்.

கல்லினின்றும் நார் உரிப்பது போல என்னை ஆண்டு கொண்ட பொன் போன்ற அவருடைய திருவடியைப் பாடி நாம் பூவல்லி கொய்வோமாக.

என்னுடைய கலக்கம், மலம் இவைகளை அறுத்து என் உடலிலும் உயிரிலும் புகுந்து அங்கு நின்றும் நீங்கா வண்ணம் நிறைந்துளார் பெருமான்.

என் துக்கங்களை ஒழித்து என்னை ஆண்ட பரஞ் சோதியை நான் தில்லையிற் கண்டேன். ஏ! அரசவண்டே!, நீ விடையேறும் பெருமானுடைய திருவடி மலரை அண்டி ஊதி ரீங்காரம் செய்வாயாக.

நன்கு நினைக்க மனத்தில் அமுது போல் ஊறும் சங்கரரின் திருவடியைத் தீயேன் மறப்பேனோ? பெருமானுடைய திருவடியைப் போற்றிச் சிறப்புடன் இனிது இருக்க முடியாத அறிவிலிகளைக் கண்டால் நாம் பெரிதும் அஞ்சுவதற்கிடமாகும்.

பெருமான் எல்லா உயிர்களிடத்தும் இயல்பாகவே விளங்குபவர். எனது சித்தத்தைச் சிவமாக்கி நான் செய்தசெயல்களைத் தவச்செயல்களாக்கும் பெருமானுடைய கருணையை நினைந்து தோணோக்கம் ஆடுவோமாக! எனது சித்தம் ஆகிய வலிய கயிற்றினால் தம்முடைய திருப் பாதத்தைக் கட்டுவித்த சதுரர் பெருமான். என் சிந்தையையே கோயிலாகக்கொண்டார் எம்பெருமான். பெருமான் தாமே வந்து என் உள்ளத்திற் புகுந்து என் உயிர் வாழ்க்கையை நான் வெறுக்கும்படி அருள்புரிந்துள்ளார். சிவம் வேண்டாதவரை ஒரு நாளும் நான் தீண்டேன். பெருமான் என்னைச் சிவமாக்கி ஆண்டுள்ளார்'

'சீ' என்று சொல்லாமல் என் பணிகளை ஏற்றுக் கொண்டருளும் தாயான ஈசன் எம்பெருமான்.

திருவடிச் சிலம்பின் ஒலிக்கே அடங்காத ஆசையுடனும் மன மகிழ்ச்சியுடனும் பெருமானுடைய திரு நடத்தை நாம் பேரானந்தத்துடன் பாடிப் பூவல்லி கொய்வோமாக. சீலமே அறியாத என் சிந்தையில் எழுந் தருளும் சிகாமணி பெருமான். அவருடைய திருவடியின்கண் என் சென்னி மன்னி மலரும்.

அன்பு நிறைந்த கருத்தில் ஊறித் தோன்றும் அமுதம் அவர். தம் பெருங்கருணையால் என்னுடைய ஆசையை நீக்கி (அல்லது தம்முடன் சேரவேண்டும் என்று எனக்கிருந்த ஆசையைப் பூர்த்தி செய்து) என்னைத் தம் அடியார்களுடைய திருவடியிற் கூட்டிய அற்புதத்தை இன்னது என்று அறியேன் நான். தம்மை அடைந்த நாயேனைப் பெருமான் ஆனந்த வெள்ளத்தில் அழுத்தி விட்டார். திருப்பெருந்துறை இறைவனுடைய திருவடியை என் மனத்துட் கொண்டேன். அவருடைய திருவடியினின்றும் பிரிந்து போகேன்; இனி அவரையும் என் உள்ளத்துள் நின்று வெளியிற் போக ஒட்டேன்.

தீயவினை நாளும் எனை அணுகாத வண்ணம் என்னை ஆட்கொண்டுள்ளார் பெருமான். அவர் பொய்யர்க்குப் பொய்யர், மெய்யர்க்கு மெய்யர்.

நாராயணன் அறியாத தமது மலர்த் தாளை அடியர்க்கு ஊராகத் தந்த அருமைப் பெருமான் அவர். பெருமானும், தையலும் என்னை ஆண்டிலரேல் நான் எங்கே? என் சிந்தை எங்கே? அவர் நித்த மணாளர், நிரம்ப அழகியர், படம் போல எனது உள்ளத்தே தமது திருவடி மலரை அளித்துள்ளார் ஏகம்பம்மேய பிரானார். பத்தி, பரிசு இவை இலாத எனது பசுபாசத்தை அறுத் தருளி என்னைப் பித்தனாக ஆக்குவித்தார். அடியார்க்கு உரிய பத்துக் குணங்களில் ஒன்றுகூட இல்லாத நான் எனது பற்று அறப் பற்றி நின்ற மெய்த் தேவர் அவர். என்னைப் பித்து ஏற்றி, என் பிறப்பை அறுத்துச், சொல்லு தற்கு அரிய மத்தத்தைத் தந்து, எனக்குப் பேரின்பம் தந்த பெருமான் அவர். பேயேனுடைய உள்ளத்துப் பிழைகளைப் பொறுத்தருளும் பெருமையர் பெருமான்.

திருமால், பிரமன், ஏனைய தேவர்கள், நூல்கள் இவை யெலாம் நுழைதற்குரிய நுண்ணியனும் பெருமான் அடியேன்பால் வந்து என்மீது அன்பு வைத்து, என் மனத்தை உருக்கியுள்ளார்.

எனது வல்வினை ஒழிய என்னை ஆண்டு தமது அடியருடன் பெருமான் என்னைக் கூட்டிய அதிசயத்தைக் கண்டோம்.

நாம், பெருமானுடைய அடியார்களுடன் சேர்ந்து விட்டோம். இனியும் மேலும் மேலும் பெருமானது ஆனந்தக் கடலுள் மூழ்கித் திளைத்து ஆடுவோமாக!

தம்மாட்டு விருப்பமே இல்லாத என்னையும் ஆண்டு கொண்ட ஆரா அமுது பெருமான்.

திருப்பெருந்துறைப் பெருமான் இப்பூமிக்கு வந்து அவரது ஆயுதப் பையுள் இருந்த வேலாயுதத்தை எடுத்து என் உள்ளத்தில் அழுந்தும்படி எய்துவிட்டார்.

## (i) சிவனை நோக்கிக் கூறுவன

“பெருமானே! அடியேன் அன்புடன் அழைத்தால் (அதெந்துவே) “ஏன்” என்று கூறுவாயாக. பொன்னம் பலத்து அரசே! எனக்கு நீ அருள் தந்து இரங்குவாயோ என்று நினைத்து அழுவதல்லாமல் வேறு நான் என்ன செய்யக்கூடும்! ‘அரசே!’ ‘அமுதே’ என்று உனது திரு அருளை எதிர்பார்த்து, இரைக்குக் காத்திருக்கும் கொக்கு போல இரவும் பகலும் கவலையோடு நான் வாடுகின்றேன். பூமியிற் புகுந்து என்னை ஆட்கொள்ள வல்லவன் நீ.

திக்கற்றவனாகிய அடியேனுடைய மனத்தையே கோயிலாகக்கொண்டு ஆண்டு அளவிலா ஆனந்தம் தந்து, என் பிறவியின் வேர் அறுத்து, என் குடிமுழுதும் ஆண்ட பெருமானே!”

“நீ என்னை ஆட்கொண்ட அப்பொழுதே என்னுடைய உயிர், உடல், உடைமை எல்லாமும் உன்னுடைய உடைமையாகக் கொண்டாய் அல்லவா? இவ்வுலகில் ஆனந்தத்தை எனக்குத் தந்த ஜோதி மூர்த்தியே! எனக்கு உறவினர் யார்? அயலார் யார்? (நீயன்றி வேறொருவர் எனக்குத் துணை இல்லை)

"என்னை ஆண்ட நீ உன் திருவருளை எனக்குப் பாலிக்காவிடில் நான் யாருடன் நொந்து கொள்வேன், என் மன வேதனையை யாரிடம் எடுத்துச் சொல்வேன்! உயிரும் உடலும் மயிர்க்கால்தோறும் நெகிழ்ந்து உருகும்படி என் உள்ளத்திற் புகுந்து பொய்யாகிய அறியாமையாம் இருளை அகற்றிய மெய் ஒளியே!"

அம்பலக் கூத்தன் நமக்கு இரங்கி அருள் புரிவான் என்று எண்ணி ஏமாந்திருந்த எனக்குப் புதிய அருமையான கட்டளையிட்டு ஆண்டனை; நான் இனி ஆள்வார் இல்லாத மாடு ஆவேனோ?

பெருமானே! நீ எனது உடலிலே இடம் கொண்டாய். ஆதலால் இனி உன்னை இரப்பதற்கு என்ன இருக்கின்றது? இரந்து இரந்து உருகும்படி என்னை உருக்கி என் மனத்துள் எழுகின்ற ஜோதியே! இன்பத்தை எனக்குத் தந்து என்னை உய்வித்து என் உயிரை உண்கின்ற பெருமானே! இன்று எனக்கு அருளி எனது உள்ளத்திலுள்ள இருளை (அஞ்ஞானத்தை) நீக்கி எழுகின்ற ஞாயிறு போன்ற உனது தன்மையை (வேறு நினைப்பில்லாமல்) நினைக்கின்றேன் நான்.

"பெருமானே! உன்னைத் தவிர வேறு தெய்வத்தை நான் நினைக்க மாட்டேன். உன் திரு அருளைத் தந்து உன் அடியார் குழு நடுவே என்னை உய்யக் கொண்டு அருள்வாயாக."

"உன் பழ அடியார் கூட்டத்தைக் காண அடியேன் ஆசைப்பட்டேன். உன்னை ஓலமிட்டு அலறி உலகெலாம் தேடியும் காணேன். உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்; இனி என்னை விட்டு நீ எங்கு எழுந்தருளக்கூடும்! உன்னைப் பிரிந்து இங்கு இருக்க என்னால் ஒருபொழுதும் முடியாது. உனக்குரிய அன்பர்களுள் நானும் உரியனாக உன்னைப் பருகி அனுபவிக்க நின்ற சதுரனே! அழுக்கனாகிய எனக்குப் புதுமையாம் வழியை அருள் புரிந்து என்குடி முழுதாண்டு இவ்வுலக வாழ்க்கையை நீக்கிப் பேரின்ப

வாழ்வு தந்து என்னை வாழ்வித்த மருந்தே! ஊடுவதும் (பிணங்குவதும்) உன்னுடன், மகிழ்வதும் உன்னைக் கண்டு. எனக்கு உறுதி அறிவிப்பது உனக்குரிய கடமையாகும்.

"எம் பெருமானே! நீ பள்ளியெழுந்தருளுக. எங்களுக்கு என்ன பணியைக் கொடுக்கப்போகின்றாய். உனது கட்டளையின்படி நடப்போம்."

பெருமானே! என் உடலிடம் கொண்டாய். நான் இதற்கு என்ன கைம்மாறு செய்வேன்!

"பெருமானே! உனக்கு அடியான் நான் என்று பிறர் எல்லாம் என்னை ஏசுகின்றார்கள் நான் உன்னை ஏசினாலும், ஏத்தினாலும் என் பிழைகளைப் பொறுத்து, என்னைக் கைவிடாதே .

பொன்னம்பலக் கூத்தனே! நீ என்னை 'வா' என்று அழைக்காவிடில், அடியார்கள் இவன் யார் என்று உன்னைக் கேட்கமாட்டார்களா!

கடலை நாய் நக்கியது போல உன் கருணைப் பெருங் கடலுள் என் உள்ளத்தை வைக்க முடியாத என்னைக் கைவிடாதே.

கொடிய குணமுடைய நான் உண்ணும் தெண்ணீர் அமுதப் பெருங்கடலே! முத்திக் கரை சேரும் அடியார்கள் மகிழ்ந்திருக்க அவர்களுக்குக் காட்சி கொடுத்த, 'நீ' உன் அடியானாகிய என்னிடத்தில் மாத்திரம் பிரை சேர் பாலில் மறைந்திருக்கும் நெய் போலப் பேசாமல் இருந்தால் உலகோர் ஏசமாட்டாரோ?

பெருமானே! உன் அடியார்கள் கூடிக் கூடிக் கூத்தாடுவார்கள், சிரிப்பார்கள், களிப்பார்கள். ஆனால் நான் மாத்திரம் வாடி வாடி உன்னை அடையும் வழி அற்று உலர்ந்துபோன மரம்போலப் பயன்படாது நிற்பேனோ?

பெருமானே! உன்னைக் கண்டறிவாரை நாங்கள் கேட்டறியோம். உன்னை எனக்குக் கிடைத்த கொம்புத் தேன் என்பேனோ! கடலிற் கிடைத்த அமுது என்பேனோ!

பெருமானே! உன் அடியார்கள் சிரிப்பார்கள், களிப்பார்கள், இன்புறுவார்கள். கூடிக்கூடி உனது புகழை நினைந்து, விரிவாகப் பேச்சுக்களைப் பேசுவார்கள், கேட்பார்கள், மெச்சுவார்கள். தனித்தனியே, வேறு வேறு இடங்களில் இருந்து உனது நாமத்தை (ஐந்தெழுத்தை)த் தியானிப்பார்கள்; 'பொன்னம்பலத்து ஆடும் தலைவா' என்பார்கள். அவர்கள் அப்படி இருக்க, அவர்கள் முன்னே நான் நரிப்பாய் (இகழத்தக்க நிலையில்) இருப்பேனே? இனியாவது, பெருமானே! எனக்கு அருள்புரிவாயாக! அடியேனுடைய பிறப்பைத் தீர்ப்பவனே, என் பிழையைப் பொறுப்பவனே, என் மகிழ்ச்சி ஒளியே! திரு அருளால் எனது சிந்தனையைத் திருத்தி ஆண்ட சிவலோகனே! எனக்குக் கிடைத்துள்ள இப் பேரானந்தம் என்னை விட்டு நீங்காவண்ணம் அருள் புரிய வேண்டுகின்றேன்.

சங்கரா! உன்னை எனக்குத் தந்தாய். அதற்குப் பதிலாக என்னை நீ கொண்டாய். ஆதலால் நம் இருவருள் யார் சாமர்த்தியசாலி? உன்னைப் பெற்றதனால் முடிவிலாத ஆனந்தத்தைப் பெற்றேன் நான்; என்னைக் கொண்டதனால் யாது பயனை நீ அடைந்தாய்?

அடியேனுடைய தனிமையை நீக்கிய தனித்துணையே! நீ உண்மையாக என்னை ஆண்டாய்; என்னுடைய எண்ணம், என் உடல், என் வாய், மூக்கு, செவி இவைகளை உன்கண் வைத்தபின் இம்மண்ணுலகில் வாழ எனக்கு விருப்பமில்லை. என்னை 'வா' என்று அழைத்து அருள் புரிவாயாக!

என் துக்கங்களைக் களைந்து ஆண்டுகொண்டு உனது தூய மலரடியைத் தந்து இவ்வுலக வாழ்வு கசக்க வைத்து உன் அடியார்களின் முன்பு வந்து எனக்குத் திருக்கழுக்குன்றத்தில் தரிசனம் தந்தனை.

உன் அடியாருடன் அல்லாமல், பிறரொடு நான் நட்புக் கொள்ளேன். உன்னை நெருங்கி உள்ள அடியார்களும் நீயும் விளையாடுகின்ற இடத்தருகே நான் சார்ந்துவர 'வா', என்று அருள் புரிவாயாக! "எனது பாச வேரை அறுத்துப்

பழம்பொருளை நான் பெறுமாறு அருளி, என் பூசனையை உகந்து, என் சிந்தையிற் புகுந்து, உனது பூங்கழலைக் காட்டிய பெருமானே!''

புலையனாகிய என்னையும் ஒரு பொருளாக மதித்து உனது திருவருளைத் தந்தாய். அங்ஙனம் தந்ததும் நான் களிப்புற்றுத் தலையினால் நடந்தேன். எனது புலால் யாக்கை கனிய பொன் நெடுங்கோயிலாக அந்த ஆக்கையுட் புகுந்து எனது எலும்பை உருக்கி, எளியையாய் என்னை ஆண்ட ஈசனே! மாசிலாமணியே! பெரிய அன்பர்களுக்கு உரியவனாக என்னை நீ ஆக்கினாய்.

உனது பூங்கழல் இணையை மலர்கொண்டு ஏத்தி, உனது திருமுகத்தில் எங்களுக்கு அருள் பாலிக்கும் அழகிய நகையைப் பார்த்து, உனது திருவடியைத் தொழுவோம். வேற்றுமை என்பதே அறியாத ஓர் ஒப்பற்ற நல்லறிவை அளித்த பெருமானே!

பொய்யனாகிய எனது உள்ளம் நெகிழப் புகுந்து அமுது ஊறும் புதுமலர்க் கழலிணையைப் பிரிந்தும் வஞ்சகனாகிய நான் ஐயோ! சாவாமல் இருக்கின்றேனே! என் சிந்தையைக் கோயிலாகக் கொண்ட சிவனே! என் மனத்தைக் கோயிலாகக்கொண்ட பெருமானே! என் யாக்கையைக் கோயிலாகக் கொண்ட பிரானே! மருள் கொண்ட மனத்துடன் உனைப் பிரிந்து வருந்துவேனை 'வா' என்று அழைத்து, ஞானியர்களாம் உனது அடியார் கூட்டத்தை நீ எனக்குக் காட்டாமல், நான் இறந்துபோய் விட்டால், உலகோர் சிரிக்கமாட்டார்களா? நீ என் மனத்தில் உள்ளாய், கண்ணுள் உள்ளாய், பேச்சில் உள்ளாய்.

என்னொடு மாறுபட்டு என்னை மயக்கிடும் வஞ்சனை உடைய ஐம்புலன்களின் வழியை அடைத்து, அமுதமாக ஊறி நின்று என் உள்ளத்தில் எழுகின்ற பரஞ்சோதியே! முழுப் புழுக் குரம்பையாம் இவ்வுடலிற் கிடந்து நான் முடிவுறாத வண்ணம் என்னைக் காத்து, ஆண்ட கடவுளே!

மெய்யடியார் தம்முள் என்னை விரும்பி உனது அருளால் ஆண்டனை.

பெருமானே! என்னைக் கைவிடாதே. கைவிட்டால் "நீ யாருடைய அடிமை?" என்று பெரியோர் என்னைக் கேட்டால், நான் "உத்தரகோச மங்கை அரசின் சீரடியான்" என்று கூறி உன்னை அவர்கள் சிரிக்கும்படி செய்து விடுவேன். மேலும் உன்னை நான் யானைத்தோலை உரித்த பித்தன், அதன் தோலைப் போர்த்த பித்தன், நஞ்சை உண்ட பித்தன், ஊர்ச் சுடுகாட்டு எரியில் ஆடும் பித்தன், என்னை ஆண்ட பித்தன் என்றெல்லாம் கூறி ஏசுவன்.

வெறுப்பனவே செய்யும் என் சிறுமையை நின் பெருமையினால் பொறுத்து அருள்பவனே!

## (ii) மணிவாசகரும் அடியாரும்

ஏதோ கொஞ்சம் கொடிய பொய்யான சொற்களை நான் சொல்லிவிட்டேன். அதனால் ஏனைய அடியார்கள் சிவமான அவரை அடையப் போனார்கள், நானும் பொய்யும் புறம்போந்து கிடக்கின்றோம்.

### 1. மணிவாசகர் அடியாரை ஆற்றுப்படுத்தல்

அடியார்களே! நீங்கள் எல்லீரும் விளையாட்டைத் தூர விடுமின்; பெருமானுடைய திருவடியைச் சிந்தித்து அவருடைய திருக்குறிப்பைக் கடைப்பிடியுங்கள்; அப்படிச் செய்வீர்களானால் அவர் நம்முடைய பாவ உடலை நீக்கி நம்மைச் சிவலோகத்தில் வைப்பார். ஆதலால், அத் திருநீற்று மேனிப் (புயங்க நடனப்) பெருமானுடைய திருவடிக்கே உங்கள் உள்ளத்தைச் செலுத்துங்கள்.

"அடியார்களே! பெருமானுக்கு ஆட்பட்டீர்கள். நீங்கள் யாவரும் ஒரு மனதாய்க் கூடுங்கள். பொய்யை விட்டு ஆண்டவனுடைய திருவடியிற் சேரவேண்டிய காலம் வந்துவிட்டது. போவோம் வாருங்கள். எங்கள் பெருமான் தம் அடியார்களுக்கு மூல பண்டாரம் (வீட்

டின்ப மென்னும் சேமநிதி) வழங்குகின்றார். பெறுதற்கு வந்து முந்துமின்கள்!

சிவலோகனுடைய திருநாமத்தைப் பாடித் திரிகின்ற பக்தர்களே! இங்கே வாருங்கள். உங்கள் பாசம் ஒழிய அவரைப் பணியுங்கள்.

அடியார்களே! கோபம், ஆசை, இவைகளை விடு மின்கள். இனித் தாமதிக்கவேண்டா. எல்லோரும் பெரிய வணிகர் கூட்டம் போலப் பெருமானுடைய திருவடிக் கீழ்ப்போய்ச் சேர்வதற்கு ஒன்றுபட்ட மனத்துடன் இருங்கள்! சிவபுரத்தில் திருக் கதவம் மூடுவதற்கு முன்பாக நாம் அங்குப் போய்ச் சேர்ந்து புயங்கப் பெருமா னுடைய பக்கலணுகி அவருடைய புகழ்களைப் போற்று வோமாக!

## (iii) அகப்பொருள்

1. இறைவனைத் தலைவனாகவும், தம்மைத் தலைவியாக வும் வைத்து அடிகள் கூறுகின்றார்:

"நான் சிவனது கொன்றை மாலையைச் சூடிக் கொள்வேன்; சூடி அவருடைய திரண்ட தோளைக் கூடுவேன்; கூடி அவரைப் புணர்ந்து அதனால் பெற்ற மகிழ்ச்சியால் அறிவு மயங்கி அவரொடு ஊடுவேன்; அவ் வூடல் நீங்கின பின் அவரது செவ்வாய்க்கு (வாயினின்று வரும் பேச்சுக்கு) உருகி நிற்பேன்; மறைந்த அவரை உள்ளம் உருகித் தேடுவேன்; தேடி அவரது திருவடியையே சிந்திப்பேன்; சிந்தித்து அவரைக் காணாது, வாடுவேன்; மீண்டும் தியானித்து அவரைப் பெற்று மனம் மலர்வேன் (மகிழ்ச்சியுறுவேன்)."

தீயேந்தி ஆடும் அப் பெருமானுடைய சேவடியை நாம் பாடுவோமாக.

2. அன்னே! பிரமனுக்கும் மாலுக்கும் நாதர் எம் பெருமான் அவருடைய வேடத்தைக் கண்டு கண்டு என் உள்ளம் வாடுகின்றது.

அவர் எழுந்தருளப் பெற்ருல் அவர் அணிந்துள்ள செங்கழுநீர் மலர் என் தலையிற் சேர்தலாகும்.

3. அழகு நிறைந்த கிளியே! எங்கள் பெருந்துறைப் பெருமானுடைய திரு நாமம் இன்னது என்று தெரிந்து சொல்வாயாக.

4. கீதம் இனிய குயிலே! அழிவிலாப் பெருமானுகிய அவரை வரக் கூவுவாயாக.

5. தோழி! என்னை ஒருவன் மயக்கி விளையாடுவதைக் கேட்டாயோ? அவன் தான் தென்னன் பெருந்துறையான். அவன் எனக்குக் காட்டாதன எல்லாம் காட்டினுன்; சிவம் என்பதையும் காட்டினுன்; தன் திருவடித் தாமரையைக் காட்டினுன்; தன் கருணையாம் சுவைத் தேனைக் காட்டினுன். உலகோர் இவன் பித்தன் என்று நகைக்கவும், நாம் மேலான வீட்டின்பத்தை அடையவும், நம்மை ஆளாக இயக்கிக் கொண்ட அற்புதத்தைப் பாடி நாம் அம்மானை ஆடுவோமாக! எனது சித்தத்தில் இருப்பவர் தென்னன் பெருந்துறையான்.

பரிமேல் வந்த பிரான் தந்த ஆனந்தத்தைப் பாடி நாம் அம்மானை ஆடுவோமாக.

மானம் அழிந்தோம், மதி மறந்தோம், மங்கைமார்களே! தேவர்கள் தொழுகின்ற பெருமானுடைய திருவடிகளை நாம் நினைத்து, அந்த ஆனந்தக் கூத்தனுடைய திருவருளைப் பெற்ருல் நாமும் அவ்வண்ணமே ஆனந்தமாகி நின்று தோணோக்கம் ஆடுவோமாக!

## 2. மணிவாசகரும் அடியார் அல்லாதாரும்

பெருமானுடைய தாமரை மலரை ஒத்த திருவடியை ஏத்தி, மலர் புனைந்து, மனம் நைந்து அவருக்கு அடியார் ஆகாதவரைக் கண்டால் நான் அஞ்சுவேன்; எம்பெருமானுடைய திருவுருவத்தை அன்றி வேறு ஒரு தேவரைத்

தேவர் என்று கூற வெறுப்புக் கொள்ளாதவரைக் கண்டாலும் நான் அஞ்சுவேன்.

என் பெருமானை ஏத்தி இனிதாக அவருடைய திருவருளைப் பருகும் அன்பில்லாதவரைக் கண்டாலும் நான் அஞ்சுவேன்.

அவருடைய திருவடிகளை ஏத்தி, இனிது இருக்க மாட்டாத அறிவு இல்லாதவரைக் கண்டாலும் நான் அஞ்சுவேன்.

எம்பெருமானுடைய திருவடியை நண்ணிப் பின்னும் வேறொரு தெய்வம் உண்டு என்று நினைத்து எம்பெருமானைப் போற்றாதவரைக் கண்டாலும் நான் அஞ்சுவேன். பெருமானுடைய திருவடியைப் பரவி வெண்ணீறு அணிகிலாதவரையும், அதை நெற்றியில் அணிதற்கு அஞ்சுவார்களையும் கண்டாலும் நான் அஞ்சுவேன். திருநீறு அணியும் வேதியனும் எங்கள் பெருமானின் திருவடியை நண்ணித் துளியுலாம் கண்ணினராய்த் தொழுது அழுது உள்ளம் நெகிழும் அன்பு இலாதவரைக் கண்டாலும் அஞ்சுவேன். பெருமானுடைய திருவடி நெஞ்சிற் பொருந்தாத பாபம் செய்தவர்களுடைய வடிவத்தை நான் பார்த்தறியேன்.

## 3. மணிவாசகர் தம் குறை கூறல்

பெருமானே! நான் உன்னை அலறித் தேடுகின்றேன் இல்லை. மாதர்களிடத்து என் நெஞ்சு பிளவு உண்கின்றது. அதைத் தடுக்க முடியவில்லை. ஐம்புலன்களின் சேட்டையால் உன்னைப் பிரிந்து அஞ்சுகின்றேன்! புலன்களாம் வலிய யானைக்கு அஞ்சி அழிகின்றேன். நான் வீணாகப் பிறந்த வினையேன். கருணையுடன் வந்து 'அஞ்சற்க', என்று கூறி, என் அச்சத்தைத் தீர்த்த பெருமானே! உனது அருட்பெருங்கடலில் திளைத்து நான் உருகுகின்றேன் இல்லை. அளவற்ற எண்ணங்களால் அமுக்குண்டு நான் பயன் அற்றவனாய்த் திரிகின்றேன்.

பெருமானே! நீ எனக்கு அளித்த அருளை மருளினால் மறந்த வஞ்சகன் நான். துணைவர் ஒருவரும் இன்றிப் பிறப்பு, இறப்பு என்னும் அருநரகில் அழுந்துகின்றேன். நற்கதி அடைய உனது திருவடியை நினைந்து மனம் குழை கின்றேன் இல்லை. வழி ஒன்றும் அறியாத சிறியன் நான். யானைகளின் போரிற் சிறு புதர்கள் நசுங்குவது போல நான் ஐம்புலன்களால் அலைப்புண்டேன். நான் புலன்களைப்போற்றி அதனால் உன் திருவடியைப் பூணுமாறு அறிகிலேன். பெருமானே! இடரைப் பெருக்கி வருந்தி நான் இங்கிருத்தல் அழகோ? இப்பிறப்பிற் (பூசைக்கு) மலர் கொய்கின்றேன் இல்லை; ஐந்தெழுத்தை ஓதுகின்றேன் இல்லை; மாதர்களின் கண்களால் மயக்குண்டு கிடக்கின் றேன்.

இம்மை, மறுமைப் பயன் இரண்டும் அறியாத தனியன் நான். இரண்டு துதிக்கைகளை உடைய யானை போல் உள்ளேன்; அதனால் என் உள்ளத்தில் உள்ள மூலப் பொருளாம் உன்னை நான் கண்டிலேன். இரும்பாற் செய்த பாவையை ஒத்துள்ளேன். வல்வினைக்கு ஈடாகி இவ்வுடலை ஒரு பொருளாக மதித்துக் களித்து நரகில் விழப் போகின்றேன்.

பலாப்பழத்தை விரும்பும் ஈயைப் போல மாதர்களின் கொங்கையை நான் விரும்புகின்றேன். உண்மையைவிட்டு உண்மை அல்லாதவற்றை விரும்பும் அறிவிலி நான். பெருமானே! உனது அருள் அமுதத்தை வாரி விழுங்கு கின்றேன்; ஆனால் நற்கதி இல்லாமையால் தடைபட்டு விக்கலுக்கு ஆளாகின்றேன். உன்மாட்டு நான் பித்து இலன். உன் நாமத்தைப் பிதற்றிலன்; ஆயினும், பெரு மானே! என் பிறப்பை அறுத்து அருள்புரிக.

உன் அன்பர்களுள் சேரும்படியான சிவமாம் பாக்கி யத்தை அடைந்தேன் இல்லை. உன்னை நினைக்கின்றேன் இல்லை. உன்னைக் காண அலைந்து நிற்கும் அன்பு இல் லாதவனாய் இருக்கின்றேன். எட்டுஇரண்டு அறியா தவன் நான். என்னுடைய ஏழைமைக் குணத்தால்

நான் உனது திருநாமமாம் ஐந்தெழுத்தை நினைக்கின்றேன் இல்லை. எல்லைக்கு அடங்காத உன் திருவடியைக் கண்டும் உன்னை விட்டுப் பிரிந்தேன். அதனால் கல்போன்ற மனத்தை உடைய நான் கஷ்டப்பட்டேன். எறும்புகளின் இடையே அகப்பட்ட நாகப்பூச்சி போல ஐம்புலன்களின் இடையே நான் அகப்பட்டு அரிப்புண்டு வேதனைப்படுகின்றேன். எலும்பு உருகிப் பாடுகின்றேன் இல்லை அப்படிப்பட்ட எனக்கு என்னால் அறியமுடியாத மேலாம் பதத்தைத் தந்தாய். நான் அதை அறியாமல் கெட்டுப் போய்விட்டேன். பெருமானே ! என்னை ஆண்ட உன்னை நினைத்து என் நெஞ்சம் உள்ளங்தாள் முதல் உச்சியளவும் உருக இல்லை ; உடம்பெல்லாம் கண்ணாய்க் கண்ணீர் வெள்ளம் போற் பாய இல்லை. என் நெஞ்சம் கல்; கண்ணிணை மரம். நாத்தழும்பு ஏற உன்னை ஏத்துகின்றேன் இல்லை. உன் திரு அருளைக் கூடும் உபாயம் அறியாமல் செத்து நரகில் விழுதற்குத்தான் என் மனம் இசைகின்றது. கண்டதைச் செய்து உன் கருணைத் தேனைப் பருகிக் களித்துச் செருக்கு அடைகின்றேன்.

என் ஐம்புலன்கள் மாதர்கள் என்னும் ஆற்றங் கரைமரமாய் வேருற்று இருக்கின்றன. உன் அடியார்கள் கூடிக்கூடிக் கூத்தாடுவர், சிரிப்பர், களிப்பர். நானோ வாடி வாடி வழியற்று வற்றல் மரம் போல் நிற்பேன். அநியாயமாய்க் கெட்டுப் போகின்றேன். கேடு இலாதவனே! அதனால் நீதான் பழி கொண்டாய். படவேண்டிய பாடெல்லாம் நான் பட்டுவிட்டால் பின்னர் நீ உதவுவதால் என்ன பயன்? சாதி, குலம், பிறப்பு என்கின்ற சுழியிற்பட்டு அறிவிலியாகிய நான் தடுமாறுகின்றேன். செத்துப் போவதற்குத்தான் விரைகின்றேன். சிந்தையாலோ, செய்கையாலோ, கேள்வியாலோ, வாக்காலோ உன்னை அடையமுடியாமல் ஐம்புலன்களின் சேட்டையால் அவஸ்தைப் படுகின்ற மூர்க்கன் நான்.

சிவனார் எவ்விடத்து உள்ளார், அவரை யாராவது கண்டதுண்டா? என்று நான் தேடி ஓடுகின்றேன் இல்லை

இருந்த இடத்தில் உள்ளம் உருகுகின்றேன் இல்லை. வீணாகக் காலம் கழிக்கின்றேன். சிறு நாயினும் கடைப் பட்டவன் நான்.

சீர் நிறைந்த உன் அடியார்கள் உனது திருவடியைச் சேர்தலைக் கண்டும், கண் கெட்ட ஊர்மாடு போல இங்கே திரிவேனோ? கொடியேன்; என் உயிர் போகக் கூடாதா? என்னிடத்தில் சீலமும் இல்லை; நோன்பும் இல்லை. மாதர் களின் சூழலிற்பட்டு உன் திறத்தை மறந்து அஞ்ஞானம் நிறைந்த சிந்தையுடன் இங்கு இளைத்துக் கிடக்கின்றேன்! இந்தப் பாவ உடலை நீக்கமாட்டேன்; என் செய்வேன். உன்னுடைய திருவடி மலரைக் காணாத பொய்யர்கள் பெறும் பேறு அத்தனையும் பெறுதற்கு உரியவன் நான். செம்மை நலம் அறியாத சிதடன் நான். நான் செய்த பிழை அறியேன். உன் சேவடியைக் கைதொழுது உய்யும் வகை அறியேன். பிறப்பு, இறப்பு என்கின்ற நினைவு இல்லாமல் மாதர்களின் பொய்யையும் கீழ்மையையும் நினைத்துக் கிடக்கின்றேன். ஒரு மாயப் பெண்ணின் வாய் துடிப்பதையும், ஆடை சற்று அசைவதையும், முகம் குறுவேர் உறுவதையும் கண்டு நானே எனக்குக் கேடு சூழ்ந்தேன். குளிர்ந்த மலர்களைக் கொண்டு ஒழுக்கம் குன்றாமல் உன்னைப் பூசிக்கின்றேன் இல்லை. ஒப்பற்ற துணைவன் நீயிருக்க நான் தருக்கித் தலையால் நடக் கின்றேன். பெருமானே! நான் உன்னை நினைக்காமல் அழிகின்றேன். என்னுடைய இழி குணத்தால் உன்னைக் காணுவது ஒழிந்தேன்; இனி நீயே வந்தாலும் உன்னைக் காண வெட்கப்படுவேன். துணிந்து உருகி உனது அருள் பெருகத் தோன்றும் தொண்டர்களிடையே புகுந்து கட்டை மூங்கிலைப் போன்ற சிந்தை உடைய நான் தேய்ந்து போகின்றேன்.

பெண்களின் மையலில் தாழ்ந்துவிடக் கடவேன் நான். பெருமானே! நான் உம்மைத் தேடுகின்றேன் இல்லை, தேடித் தெருவுதோறும் அலறுகின்றேன் இல்லை. இன்னது செய்வதென்று அறிகிலேன். தோலின் பாவைக்

கூத்தாட்டுப்போலச் சுழன்றுவிழுந்து கிடக்கின்றேன். இப்பூமியில் நடிக்கின்றேன். நடித்துப் பொய்ச் செயல் பல செய்கின்றேன். "நான்" என்கின்ற மாயம் என்னைக் கடிக்கின்றது. பழவினையின் பயனுய்த் திரிகின்றேன்.

நல்வினை வரவேண்டிக் கலைஞானிகள் தம்மை அணுகுகின்றேன் இல்லை. "நமச்சிவாய" என்று உன் அடி பணியாத பேயன் நான். உன் அடியார் போல நாடகமாடி நடிக்கின்ற நான் வீட்டின்பம் பெற அவசரப் படுகின்றேன். நாணம் கெட்டவன் நான். மாதர்களின் கண்ணால் தாக்குண்டு கிடக்கின்றேன். உன் திருவடியை அணைவதற்கு நான் தகுதியற்றவன். நாய்க்குத் தவிசு இட்டதுபோல என் உடலிற் புகுந்தாய்.

பெருமானே! நான் உனது அடியேன். நீ என்னை ஆண்டாய் என்று நான் கூறினால் நீ சிரித்து என்னை ஆண்டு அருள் புரியும் தன்மைதான் என்னிடத்தில் உள்ளது. நான் உன் திருக் கோயிலைப் பெருக்குவதில்லை, மெழுகுவதில்லை. உன்னைப் பிரிந்த விரிதலையன் நான். நீ எளிமையாக வந்து எனக்கு ஞானம் தர அன்புடன் நோக்கியும் நான் என் நெஞ்சைக் கீறு செய்யாத கடை நாயினேன் ஆயினேன். அதனால் கீழ்மை அடைந்தேன். நீ, என்னை இங்கே விட்டு ஒளித்துக் கொண்டாய். அதைக் கண்டும் நான் ஊனும் எனது உடலை அழிக்கின்றேன் இல்லை. நீதிச் செயல்களை நினைக்கின்றேன் இல்லை. நினைப்பவர்களோடு கூடுகின்றேன் இல்லை. உன்னைக் காண நெகிழ்கின்ற மனம் இல்லை. ஆதலால், நீ என்னை ஆண்டருள என்ன தகுதியை உடையேன் நான். என் நிலை என்னாற் சகிக்க முடியவில்லை. நெறி அல்லாத நெறிகளை நன்னெறி என்று நினைப்பவன் நான். மாதர்களுடைய கடைக் கண்ணால் இடர்ப்பட்டுத் துயர்மிக அடைந்து நடுங்குகின்றேன் நான். உன்னைப் போற்றுபவர்கள் அருகில் அணைகின்றேன் இல்லை. உனது பழைய அடியார்களுடன் கூடிச் செல்லாமல் பிற்பட்டு இங்கு நோய்க்கு விருந்தாய் இருக்கின்றேன். பல மலர்களைப்

பறித்து உன்னைப் போற்றுகின்றேன் இல்லை. உன் திருவடியை என் தலையிற் சூடுகின்றேன் இல்லை. உன் திருவடிக்கு மலர் சூட்டுவதும் இல்லை. நெய்கின்றவர்களின் நூலிழைப் பரப்பிலே அங்குமிங்கும் ஒளித்துச் சுழல்கின்ற அவர்களது குழல்போல என் உள்ளம் அலைகின்றது. ஐயோ! கெடுகின்றேன் நான். விளையாத பாழ் நிலத்தைப் பயிர் செய்ய முயல்கின்ற வீணன் நான். 'பிறவி' என்கின்ற ஐந்தலைப் பாம்பினோடு பொருகின்ற வினையன் நான். பேரன்பு மிக்க அடியார்கள் உன் திருவடியைச் சேரக் கண்டும் நான் இங்கு ஊர் நாயினும் கடையாய் நெஞ்சு உருகாமல் இருக்கின்றேன். பிழையைப் பெருக்கி அன்பைச் சுருக்கும் வெற்று அடியேன் நான். இப்பிறவிக் காட்டில் புழுத்தலை நாய்போல் மாதர்களுக்கு இணங்கித் திரிகின்றேன் நான். புழுப் பொதிந்த ஊன் சுவர்ப்பொய் உடலை மெய்யெனக் கருதி இடர்க் கடற் சுழியில் அலைபடுகின்றேன். மரப் பொந்தில் புகைவிட்டு எரியும் தீப்போல ஐம்புலன் என்னும் தீயினால் வெதும்புகின்றேன் நான். பொய்யை மெய்யென்று நம்பி மாதர்களின் போகத்தில் மையலுறுகின்றேன். பெருமானே! பொய்யிலாத மெய்யர் உனது திருவடியை அடைதலைக் கண்டும், கேட்டும் பொய்யனாகிய நான் உண்பதும் உடுப்பதுமாய் இங்கு இருப்பதானேன். என் பொய்கள் பொடியாக மாட்டேன் என்கின்றன. நான் என் செய்வேன்! உன்னைப் போற்றிப் புகழ்ந்து கீழ்ப்புரண்டு துதிக்கும் ஆற்றல் நிறைந்த அன்புடன் உன்னை அழைக்கின்றேன் இல்லை.

என்னை, 'நீ' வருக என்று அழைத்து, அன்புடன் நோக்கியும் கவலையில்லாமல் இருக்கின்றேன். வஞ்சன் நான்; இறந்தேன் இல்லை; மத்தில் அகப்பட்ட தயிர்போலப் புலன்களால் கலங்குகின்றேன். என்னைக் காண்போர் என்னை ஒரு மருள் நிறைந்த மனத்து உன்மத்தன் வருகின்றான் என நினைப்பார்கள். நான் ஒரு தோளாச் சுரை. மாதர்களின் வஞ்சத்திடையே, அவர்களுடைய வெகுளி வலையில் அகப்பட்டு மத்திடு தயிர்போலத்

தவிக்கின்றேன். சிவன் நகர் போகப் போகேன். இந்த ஊனில் ஆவியைக் காப்பாற்றும் பொருட்டு உண்டு உடுத்து இருக்கின்றேன்.

நாற்றம் உடைய இந்தப் புழு உடலைக் காத்து இங்கு இருக்கும்படி என்னைச் செய்துவிட்டாய், பெருமானே! முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு சேருவேன் நான். செங்கிடங்குபோல வாயை உடைய மாதர்களின்மீது ஆசை என்கின்ற வெந்நீரில் மூழ்கி (முதலை கடிப்பதுபோல) வேதனைப் படுகின்றேன். என் காலம் வீணாகிறது. நாற்றம் அடிக்கும் பிணம்போலக் காலம் செலுத்துகின்றேன். இடர் என்னும் கடலில் அகப்பட்டு, அங்கு மாதர்கள் என்னும் அலை என்மீது மோத, காமம் என்னும் சுறுமீன் என்னை வெருட்ட நான் அழுகின்றேன். நான் பாவி. புழுக்கள் நிறைந்த இழிந்த உடலினன். கல்வி ஞானம் இல்லாதவன், அழுக்கு மனத்தினன். மாதர்களின் வாய் இதழ்ப் பெரு வெள்ளத்து அழுந்திப் பித்தனாய்த் திரி கின்றேன்.

பிறப்பு இறப்பு உண்டு என்று நினைக்கின்றேன் இல்லை. 'வா' என்று எனக்குக் கட்டளை இட்டாய்; என்னால்தான் வர முடியவில்லை. நீ உன் திரு அருளாம் அமுதத்தை ஊட்ட அழைத்தாய். அதை மறுத்து நான் வழியற்ற வனாய் இருக்கின்றேன்.

பெருமானே! கசிந்து உருகும் நலம் இல்லாத சிறி யேன் நான். வினையிலே கிடக்கின்றேன், தேன் போன்ற (உனது அருளாம்) குளிர்ந்த நீரைப் பருகத் தந்து என்னை உய்யக் கொள்.

வெந்து விழப் போகின்ற இந்த உடலை மெய்யென்று வினையைப் பெருக்கி மாதர்களின் கொங்கைமீது விழு கின்றேன். எனது வினை இரண்டும் வெந்து பொடியாக இல்லையே! என் செய்வேன்! திருப்பெருந்துறைப் பெருமானை என் மனத்தில் வைத்தேன் இல்லை. 'என் சேம நிதி', 'மாணிக்கத்து ஒளி' என்று உன்னை என் மனத்தில் நினைந்து உருகாமல் மாதர்களை நினைத்து நைகின்றேன்.

### குறைகூறி வருந்துதல்

பெருமானே! என்னால் அறிதற்கு அரிய பதவியை எனக்குத் தந்தாய். நான் அதை அறியாமல் கெட்டேன். உன்னால் ஒன்றும் குறைவில்லை. உன்னை அன்றி எனக்கு வேறு துணை யார்? பலகாலம் உன்னைப் பணிந்து ஏத்தும் பழைய அடியார்களுடன் சேராமல், பெருமானே! நான் பிற்பட்டு நோய்க்கு விருந்தாய் இருந்தேன். என்னிடத்தில் சீலம் இல்லை. நோன்பு இல்லை. ஒழுக்கம் இல்லை. அறிவு இல்லை.

பெருமானே! எனக்கு மயக்கம் காட்டி, பிழைக்கும் வழிகாட்டி, முத்திநெறியேற உனது கோலத்தைக் காட்டி ஆண்ட உன்னைக் கொடியேனாகிய நான் என்று கூடுவது?

## 4. தம்மைப் பற்றியவை, தம்மை இகழ்தல், தம்மை வைதல்

நான் ஒரு காட்டு மரம். ஆசை வெள்ளம் கொண்ட கள்வன். அழுக்கு மனத்தன். அறியாச் சிறுவன். அன்பில்லாதவன். இரும்பு நெஞ்ச வஞ்சன். இரும்புப் பாவை போன்றவன்; உருகா உள்ளத்து உணர்வு இலி, உன்மத்தன், ஊர் நாயினும் கடையன். எவ்வித ஞானமும் இல்லாதவன். என் அன்பும் பொய், என் நெஞ்சம் பொய், என் செவி இரும்பினும் வலிது, எனக்கு ஒப்பானவன் நானே. நான் பெருமை யற்றவன். எத்தனையோ காலம் இறைவனை நினையாமல் பாழுக்கு இறைத்தவன். ஒட்டாத பாவி, கடியன், கண்கெட்ட ஊர்மாடு, கல் மனத்தன். கண்ணப்பருடைய அன்புக்கு ஈடான அன்பு என்னிடம் இல்லை. நான் கொடியன், கொடு வினையன், ஒழுக்கம் இல்லாத சழக்கன். அன்பு சுருங்கும் வெற்றடியன்; சிறு நாயினும் கடையனானவன்; சோரன்; திண்ணிய மூங்கில் போன்ற சிந்தையை உடையவன்; தோளாச் சுரை; நீசன், பாவி, பித்தன், புலையன், புழுத்தலை நாய், பேதை, பேயன், பொய்யன், கல்வி ஞானம் இல்லாதவன்,

மரக்கண்ணன், மருளன், மனவலியன், யாரினும் கவடயன் வஞ்சகப் பெரும் புலையன், வம்பன், என் சிந்தை வன்பராய் மரத்து முருடு ஒக்கும்.

## 5. தம்மைப்பற்றிய வினுக்கள் [5]

பெருமானே! அடியார்கள் 'இவன் யார்' என்று உன்னைக் கேட்கமாட்டார்களா? அன்பும், அருந்தவமும் கொண்ட பெரியோர், பிரமன், திருமால், நெருப்பிற் பட்ட மெழுகுபோல உன்னை நினைந்து உருகும் பக்தர்கள் எனப் பல வகையோர் உன்னை வேண்டி நிற்க, இங்கு ஏன் என்னை ஏற்றுக் கொண்டாய்? என்னை ஏன் இவ் வுலகில் மனம் நைய வைத்துள்ளாய்? கள்ளன் ஆகிய என்னை ஆண்டது எக்காரணம் கொண்டு? மலை அன்ன குற்றங்கள் நான் செய்தாலும், நீ அவை தம்மைக் குண மாகக் கொண்டால் என்ன கெட்டுப் போகும்? தயை செய்து இரக்கம் கொள்வாயாக! நீ தாய் என்று உன் தாளை அடைந்தேன். நீ என்மீது தயை வைக்க இல்லையே? நான் உனக்கு வேண்டாமா? என்னிடம் உனக்குக் கருணை இல்லையா? பெரியோன் ஒருவன் கண்டு கொள் என்று உன் திருவடித் தரிசனத்தை எனக்குக் காட்டி, 'உன்னை விட்டு நான் பிரியேன்' என்று பல முறை கூறி அன்று அருளிய வாக்குப் பொய்தானு? பெருமானே!

## 6. மணிவாசகரும் பொய்யும் [6]

இம்மண்ணில் நான் பொய்ச் செய்கைகள் பல நடித்துச் செய்தேன். அதனுல், அடியார் எல்லாரும் சிவ நகரை அடையச் சென்றூர்கள். நானும் பொய்யும் புறமே போந்தோம். புழுக்கூடாகிய இவ்வுடலில் இருந்த பொய்யை ஒழித்த சோதி நீ. பெருமானே! இந்தப் பொய் உடலை மெய்யென்று கருதி நின்று இடர்க்கடற் சுழியிற் படுகின் றேன். என்னிடத்தில் பொய் தவிர வேறென்றும் காண முடியாது, என் பொய்ம்மையை ஆட்கொண்டு, அருளிய நின் பெருமை போற்றி. பொய்களே புகன்று, மாதர்

களின் கண்களால் தாக்குண்டு கிடக்கின்றேன். எனது பொய்யைத் தீர்த்த மெய்யன் நீ. பொய்யர் பெறவேண்டிய பேறு அத்தனையும் பெறுதற்கு உரியவன் நான். பொய்யனாகிய என்னை ஒரு பொருளாகக் கொண்டு ஆண்டு ஏற்றுக்கொண்ட மெய்யன் நீ.

பெருமானே! பொய்யனாகிய நான் உண்டு உடுத்து இங்கு இருக்கின்றேன். பொய்யாய செல்வத்திற் புக்கழுந்தி நாள்தோறும் அதுவே மெய்யெனக் கருதிக் கிடந்தேன். எனது பொய்இருளைக் கடிந்த மெய்ஒளி நீ, பொய்யெல்லாம் மெய் என்று கருதி மாதர்களின் போகத்தில் மையல் கொண்டவன் நான். சிறு நாய்களின் பொய்யைப் பெரியோர்கள் பொறுத்தருள வேண்டும். பொய் பேசுபவன் ஒருவன் பிறப்பின்மை அடையத் தக்கவன் அன்று எனக் கருதி என்னை இப்பூமியில் நீ நிறுத்திவிட்டாய்.

அடியார்களே! இனி, பொய்யிற் கிடந்து புரளாமல் சிவனார் திருவடியைக் கூடுதலை நாம் விரும்புவோமாக.

## 7. மணிவாசகரும் மாதரும் [7]

['தம் குறை கூறல்' என்னும் தலைப்பு (3) ம் பார்க்க.]

மாதர்மீதுள்ள என் நெஞ்சுப் பிளப்பை என்னால் விட முடியவில்லை. மாதர்களின் கருங்கூந்தல், செவ்வாய், வெண்ணகை, கூர்த்தகண் ஆகிய இவைகள் செய்யும் கொள்ளையிற் பிழைக்க வேண்டும். கொவ்வைக் கனிபோன்ற பவளவாயை உடைய மாதர்களின் புயற்காற்றால் கலக்கம் அடைந்து, காமம் என்னும் சுறாமீனின் வாயில் அகப்பட்டு, 'இனிப் பிழைப்பது எப்படி?' என்று எண்ணி எண்ணி ஐந்தெழுத்தாம் தெப்பத்தைக் கைப்பிடித்துக் கிடக்கின்றேன் நான். மாதர்களின் கலவியில் விழுகின்ற என்னைத் தம் கழலிற் சேர்த்தருளினார் பெருமான். பெருமானுடைய திருஅருள் கிடைத்தால் மாதர்களின் வாழ்வில் நான் கடைப்படேன். பெண்களின் சார்பில் நின்று குடிகெடுகின்றேன் நான். அத்தகைய என் பந்தத்தை அறுத்து ஆண்டு கொண்டார் பெருமான். மணியன்ன நகை உடைய மாதர்

கனின் கொங்கைக் குன்றிடைச் சென்று, மனம் நைந்து விழுகின்ற அடியேனைக் கைவிடாதீர் பெருமானே! கொள்ளின் பிளவும் இடையில் நுழைய முடியாத வண்ணம் நெருங்கி இருக்கும் கொங்கைகளேயும், கோவைப் பழம் போன்ற செவ்வாயையும் உடைய மாதர்களின் மையலைவிட முடியாத என்னைக் கைவிடாதீர் பெருமானே! மாதர்களின் வசப்பட்டு நிலைதடுமாறி நான் துயரம் அடையாத வண்ணம் அருள்புரிந்து உன் திருவடியைக் காட்டினாய், பெருமானே! மாதர்களின் மையலிற்பட்டுப் பெருமானே! உன்னை நான் மறந்தேன். (உன் திருவருள் இருந்தால்) மாதர்களால் வரும் இடர்கள் நீங்கும். தீயின்மீது ஆசை கொண்டு அதன்மேல் விழுகின்ற விட்டிற் பூச்சி போல மாதர்களின்மீது விழுகின்ற என்னைக் கைவிடாதீர் பெருமானே! மாதர்களின் மையலில் தாழ்ந்துவிழக் கடவேனை அதனின்று மீட்டு, என் பாசத்தை நீக்கி, உய்யும்நெறியைக் காட்டி வைத்தாய், பெருமானே! இப்பிறவிக் காட்டிற் கிடந்து புழுத்தலை நாய்போல மாதர்களுக்கு இச்சையான வற்றைச் செய்து அவர்கள்பால் இணங்கித் திரிந்த என்னை ஆண்டு கொண்டாய் பெருமானே! மங்கையர்களுடன்கூடி அவர்களுடைய குணங்களால் தாக்குண்டு, அவர்களுடன் குலாவித் திரிந்த எனக்கு வீட்டின்பம் தந்தனை. அவர்களுடன் கூடி அவர்தம் வாய் இதழ்ப் பெரு வெள்ளத்தில் அழுந்திப் பித்தனாய்த் திரிந்த என்னைப் பெருமான் ஆண்டு கொண்டார். இஃது என்ன அற்புதம்! மாதர்கள் என்னும் மத்தினால் உடைபடும் (பானையிலுள்ள) தயிர் போலத் தளர்ந்தேன். மன்மதனுடைய பாணம் நெஞ்சைப் பிளந்திடத், திங்கள் உடலைச் சுட, அதை நினையாமல் நான் மாதர்களின் வஞ்சனையால் மத்திலகப்பட்ட தயிர் போலக் கலங்குகின்றேன். பாழ் நெஞ்சே! நீ மன்மதனுடைய பாணத்துக்கும், வெண்ணகைச் செவ்வாய்க் கரிய குவளைக் கண்ணுக்கும் பதைத்து உருகுகின்றனையே! நீ இனிப் பெருமானை நினைந்து அவரைச் "சேமநிதி" என்றும், "மாணிக்கத்து ஒளி" என்றும் மனத்துள் வைத்து உருகுவாயாக!

[குறிப்பு: இப்பகுதி அருணகிரிநாதரின் வரலாற்றை நினைவூட்டுகின்றது.]

## 8. மணிவாசகர் நெஞ்சொடு கிளத்தல் [8]

துணையற்ற பிண நெஞ்சே! நீ ஆடுகின்றிலே, கூத்து உடையான் திருவடியின்மீது உனக்கு அன்பு இல்லை. எலும்பு உருகப் பாடுகின்றிலே. பதைப்பதும் இல்லை, பணிவதும் இல்லை. பெருமான் திருவடியைத் தலையிற் சூடுகின்றாய் இல்லை. அவர் திருவடிக்கு மலர் சூட்டுகின்றதும் இல்லை. அவர் எங்குள்ளார் என்று தெருவுதோறும் அலறித் தேடுகின்றாய் இல்லை. இன்ன செய்வதென்று நான் அறியேன். பெருமான் நம்மை ஆண்டது தெரிந்திருந்தும், நெஞ்சே! நீ பெருமான் வீற்றிருக்க உனது உள்ளத்தில் அவருக்குத் தாராளமாக இடம் தருகின்றாய் இல்லை. உன் குற்றங்களை ஒழித்துப் பரகதி அடைய வேண்டி அவரது திருவடியைப் பணிகின்றாய் இல்லை. அவரது இணையடியைச் சிந்தித்து உனக்கு வேண்டியதை நெஞ்சே! இரந்து கொள். அவர், நீ வேண்டுவன எல்லாம் தருவார். கடையேனைத் தொண்டாகக் கொண்டு அருளின கோகழிக் கோமானுக்கு நெஞ்சமே! யாது கைம்மாறு செய்யக்கூடும்? திறமை வாய்ந்த 'மனமே!' வீணாகக் கெட்டுப் போகாதே! நாயேனைப் பெருமான் விற்றுக் கொள்ளல் முதலிய எதையும் செய்வதற்கு உரியவர். அவருடைய திரு அடியைப் பிரிந்திருந்து, பெற்றதை எல்லாம் நீ இழந்து விட்டாய்; உன் (புல்) அறிவையும் (வீண்) பெருமையையும் என்னால் அளவறுக்க முடியவில்லை. பெருமானைப் பிரிதல் இல்லாத நல்ல அருள்களை அவரிடம் பெற்றிருந்தும், பிண நெஞ்சே! வீணாக நீ மாறான வழியிற் செல்கின்றாய்! என்னைக் கீழ்ப் படுத்திக் கெடுமாறு செய்கின்றாய். 'நெஞ்சே!' அப் பெருந்துறைப் பெருமானை நீ வாயாரப் பேசு; அவரது தாமரை யன்ன திருவடியை உனது மருள்கெட வாழ்த்து.

வாழாத நெஞ்சமே! ஆழாமற் காப்பானை ஏத்தாமல் நீ வல்வினையிற் பட்டு ஆழ்கின்றாய்; உனக்கு நீயே கேடு

சூழ்கின்றாய். உனக்குப் பலமுறை சொல்கின்றேன், நீ துன்பக் கடல் வெள்ளத்தில் வீழ்கின்றாய். வெண்ணகைச் செவ்வாய்க் கரிய கண்களை உடைய, நீல மலர்க் கண்ணியர்க்கும், மன்மதனுடைய மலர்ப் பாணத்திற்கும் பதைத்து உருகும் பாழ் நெஞ்சே! ஆண்டான் இன்று சிதாகாசத்திற் போய் மறைந்துள்ளார்! நீயோ மாளாமல் இங்கு வாழ்கின்றாய்.

## 9. மணிவாசகர் பிரிவாற்றமை

பெருமானே! நீ என்னை ஆண்டு அளித்த அருளினை மருளினால் மறந்த வஞ்சன் நான். நான் இனி இங்கு வாழமாட்டேன். 'வா' என்று அருள்புரிக! என் எண்ணம், என் உடல், வாய், மூக்கு, செவி, கண் இவை எல்லாவற்றையும் உன்மாட்டு வைத்தபின் நான் இம்மண்ணுலகில் வாழமாட்டேன். 'வா' என்று அருள்புரிவாயாக! உன் கருணையை நினைந்து உள்ளம் கசிந்து உருகி வாழுமாறு அறியாத மருளன் நான். என்னைக் கூவி அழைத்துக் கொள். வேறு ஒருவரை நான் தொழுவனோ? துதிப்பனோ, எனக்கொரு துணையென நினைப்பனோ, பெருமானே! நீயே சொல். நான் இங்கு வாழமாட்டேன். 'வா' என்று என்னை அழைத்துக்கொள். இங்கு வாடுகின்றேன்.

அடியார் சிலர் உன்மீது ஆசைமிக்கு அருள் பெற்றனர். நான் வீணே நாற்றமுள்ள பிணம்போல முடிவு இல்லாத வெறுப்புடன் மூத்துப் போகின்றேன். என்னுடைய அல்லல் எல்லாம் அகலும்படி நீ என்னை ஆண்டாய் என்று இருந்தேன். நான் உனக்கு அடியேன் அல்லவா? நீ என்னை ஆட்கொள்ள இல்லையா? அடியார்கள் எல்லாம் வந்து உன் திருவடியைச் சேர்ந்துவிட்டார்கள், நானோ இப் பாவ உடலை நீக்காது இங்கு இருக்கின்றேன். சிவலோகனே! உன்னைக் கண்ணாரக் காணுமாறு காணேன். உன்னை நான் ஆதரித்து அழைத்தால், "ஏன் அழைக்கின்றாய்" என்று கேளாயோ? அருள் பெற்ற அன்பர்களும் நீயும் அங்கு எழுந்தருளினீர்கள், என்னை மாத்திரம் இங்கு

இருக்கச் செய்தீர்கள், இது முறையா? நீதியா? அடியா ரெல்லாம் உனது அருளாரமுதப் பெருங்கடலிற் புக்கு மறைந்தனர். நானோ, இந்த இருள் யாக்கையைப் பொறுத்து இங்கு இளைத்துப் போகின்றேன். உன் அன்பர்கள் எல்லாம் உள்ளம் நெகிழ உனது அருளை நிரம்பப் பெற்றார்கள். நானோ புறமே கிடந்து புலம்புகின் றேன். என் உடலைத் துணிபட அறுக்கின்றேன் இல்லை, தீயிற் புகுகின்றேன் இல்லை. உனது திருவருள் இன்ன வகை என்று அறிந்திலேன். இந்த உடல் எனக்கு வேண் டாம்; போக்கிடம் காணேன்; இறக்கிலேன்; விடையேறும் பெருமானே! போற்றி! போற்றி!. உன்னைப் பிரிந்து இனிது இருக்க நான் என்ன செய்ய வேண்டியது? 'இன்னதைச் செய்க!' என்று கட்டளை இடுவாயாக.

இருளை ஒழித்து, என்னிடம் 'வா' என்று, பெருமானே! நீ அங்கே அழைக்கும் திருஅருளைப் பெற விரும்பு கின்றேன். பெருமானே! ஓலமிட்டு அலறி உன்னை உலகெலாந் தேடியும் காணேன். உன்னைக் கூடும் வழியைத் தயவுசெய்து கூறுக! கல் மனத்தன் நான். உன் திரு அடியைக் கண்டும், உன்னை விட்டுப் பிரிந்து கஷ்டப்படு கின்றேன். இந்த வாழ்க்கையைக் கொடுத்தவன் நீ. இனி இங்கு இருக்க என்னால் முடியாது. நான் வாடுகின்றேன். இங்கிருந்து என்னை மீட்டுக்கொள். உன்னைக் கண்டவர்கள் கடல்அனைய ஆனந்தத்தைப் பெற்றார்கள். நானோ இடரைப் பெருக்கி இங்கு வருந்துகின்றேன். இஃது அழகா! உன் திருவடியைக் கண்ட என் கண்கள் அத் திருவடியையே எண்ணுவதுடன், இவ்வுலகினின்றும் இந்த உடம்பு நீங்கும் வகையையும், நான் உன் திருவடியிற் சேரும் வகையையும் நான் எண்ணும் பாக்கியத்தைப் பெறமாட்டேனோ? என் அடிமைத்தனம் மிக அழகாக இருக்கின்றது. அன்று உன் அடியார்களுடன் கலந்து களித்திருந்தேன். இப்போது இடர்ப்படுகின்றேன். உனது இன்ப ஒளி உருவைக் காண ஆசைப்படுகின்றேன். அருள் புரிவாயாக! என் பழைய கொடுவினை என்னை வருத்தினால், பெருமானே! நீதான்

என்னைக் காத்தல் வேண்டும். 'இது முறையோ?' என்று நான் அழைத்தால் நீ அருள் புரியாது இருக்கலாமா? உனது அழகிய திருவுருவைக் காட்டி என்னை ஆண்ட பெருமானே! கொடியேன் என்றோ உன்னைக் கூடுவது? பெருமானே! என்னை ஆண்டருளமாட்டாயா? கொடியேன் இங்ஙனம் கெட்டுப் போகலாமா?

'அஞ்சற்க!' என்று நீ சொல்லாவிட்டால் என்னை 'அஞ்சேல்' என்று சொல்வதற்கு வேறு யார் உளர்? தாமரையன்ன நின் திருவடியைச் சேரப்பெற்றுத் தகுதி அமைந்த கனிந்த மனத்து அடியார்கள் உன்னுடன் போய் மறைந்தார்கள். நான் பாவி. இப்புழு உடலைக் காத்து இங்கு இருக்கின்றேன். நீதான் எனக்கு அடைக்கலம். இங்குத் தூரத்தில் நின்று நான் அலறுவது அழகோ? தாய் போன்று அடியேனுக்கு இனிய அருள் புரிந்த என் தலைவனை நான் காணேன். தீயில் வீழ்கிலேன்; மலையினின்றும் உருள்கிலேன். கடலில் விழுகிலேன். பெருமானே! நான் உன்னை ஆதரித்து அழைத்தால், நீ அங்கிருந்து 'வா கயிலைக்கு வரும் வழி இதுதான்' என்று அருள்வாயாக!

'தாயே!' என்று உன் தாள் அடைந்தேன். என்பால் உனக்குத் தயவு இல்லையா? நான் உனக்கு வேண்டாமா? பரமானந்தத்தை முன்னரே எனக்கு நீ அருள் செய்தும் உன்னைப் பிரிந்து உலகில் மயக்க முற்றேனே என எண்ணிக் கண்ணீர் சொரியச் சொரிய என்று நான் நிற்பது? பழைய அடியார்களுடன் கூடாமல் நோய்க்கு விருந்தாய் இங்குப் பிற்பட்டு இருக்கின்றேன். பெருமானே! உன்னைவிட்டுப் பிரிந்து நான் செத்திலேன். என் மலம் கெடுத்த பெருமானே! இனிமேல் என்ன நடக்குமோ? அறிந்திலேன். உன் திருவடிகள் இரண்டையும் வைக்க இடம் காணுமல் கலங்கினேன். நான் கலங்கா வகையை நீ திருக்கழுக்குன்றத்திற் காட்டினுய்.

திருமாலும் காண்பதற்கு ஓலமிட்டு அலறும் அத் திருவடிக்கு, மரக்கண்ணை உடைய என்னையும் வந்திடக்

கட்டளை இட்டு அருளுக! பெருமானே! யாது செய்வது என்று இருந்த நான் இடர்ப்படுவது இனிதோ? நான் பொய்யன் என்று என்னை இவ்வுலகில் நிறுத்தி விட்டாய். உனக்கு வேண்டியவர்கள் எல்லாரும் உன் திருவடியைச் சேர்ந்து விட்டார்கள். அச்சத்தால் நான் ஆழ்ந்து இங்கு இருக்கின்றேன். நான் என் செய்வது? வாய் திறந்து பேசு. என்னைப் போல வினையிற் பட்டவர் வேறு யார் உளர்? நாயேனைப்பிரிந்திருப்பது பெருமானுக்குத் தினையளவு கூட எண்ணம் இருக்காது, நான்தான் அவர் திருவடி மலரைப் பிரிந்து இருக்கின்றேன். இதன் பொருட்டு நான் முட்டிக் கொள்கின்றேன் இல்லை. என் தலையைக் கீறிக் கொள்கின்றேன் இல்லை, என் எண்ணம் இரும்பு, மனம் கல், செவி இன்னதென்று சொல்ல அறியேன்.

## 10. மணிவாசகரின் கொள்கையும், சிவனார் கொள்கை இன்னதென்று அவர் கூறுவதும்

[தலைப்பு 3-19 (42) பார்க்க.]

அடியாருடைய உள்ளத்தில் அன்பு மேம்பட்டு வளரும்படி அங்குக் குடிகொள்வது பெருமானுடைய கொள்கை. தேவூர்த் தென்பக்கத்தில் உள்ள தீவின்கண் அரசனாயிருந்து ஆண்ட கொள்கை உடையவர் பெருமான். மதுரைமா நகரில் குதிரைச் சேவகனாக வந்த கொள்கையை உடையவர் பெருமான்.

[வரலாற்றைத் திருவிளையாடல் என்னும் தலைப்பின் கீழ்ப்பார்க்க.]

*வேலம்புத்தூர் என்னும் தலத்தில் (உக்கிரகுமாரனுக்கு) வேல் கொடுத்து அருளிக் கோலங் காட்டிய கொள்கையை உடையவர் பெருமான்.

---

* 'திருவிளையாடல்' என்னும் தலைப்புப் பார்க்க

திருவெண்காடு என்னும் தலத்தில் குருந்த மரத்தின் கீழ் விருந்தினராய் இருந்த கொள்கையை உடையவர் பெருமான். பெருமானுடைய தாள் தன்மீது படும்படி எதிர்த்து வந்த கூற்றத்தின் கொள்கைதான் என் கொள்கை. பெருமானே! நான் கலைஞானம் கற்றறியா விட்டாலும், கசிந்து உருகா விட்டாலும், வேறு தெய்வத்தை அறியேன், பெருமானே! உன் அருள்வாக்கின் தன்மையால் உன் திருவடியைச் சார்ந்து, இறுமாந்து இருக்கின்றேன். பெருமானே! நீ நல்லது செய்வாயோ, பிழை செய்வாயோ? அதனை ஆய்வதற்கு எனக்கு ஏது உரிமை! மாயம் ஆகிய இப்பிறவியை உன் வசத்தே ஒப்படைத்தல் அன்றி நானோ ஆயக்கடவேன்? எனக்கு என்ன அதிகாரம் இருக்கின்றது? நீ விரும்பி எதை எனக்கு அளிக்கின்றாயோ அதையே நானும் விரும்பு கிறேன். அப்படியல்லாமல் வேறு ஒன்றை நான் விரும்ப வேண்டி வந்தால், அதுவும் உனது விருப்பம் என்றே கொள்வேன். நான் செல்வத்தை வேண்டேன், புகழை வேண்டேன், பிறப்பு இறப்பை வேண்டேன், மண்ணும் வேண்டேன், விண்ணும் வேண்டேன்.

## 11. மணிவாசகர் நிலை

பொன்னம்பலத்து அரசே! உன் திருஅருள் என்று கிடைக்குமோ என்று இரை தேடும் கொக்கு போலக் கவலையுடன் வாடி நிற்கின்றேன். நான் உற்றாரை வேண் டேன், ஊர் வேண்டேன், பேர் வேண்டேன், கற்றாரை வேண்டேன். கற்பனவும் இனிப் போதும். இனி என்ன வேண்டும் என்பதை அறியேன்; எனக்கு என்ன குறை இருக்கின்றது என்பதையும் அறியேன். நான் இளைப்புற் றேன். இனி இங்கு இருக்கமுடியாது. இவ்வாழ்க்கையைத் தந்த நீயே அதை வாங்கிக் கொள். என்னை 'நான்' என்பதையே அறியேன். பகல் இரவாவதை அறியேன். ஓடும், கோவணமுமே உறவு என்று நினைத்து, உள்ளம் கசிந்து தேடும் பொருளும் சிவன் கழலே என நான்

தெளிந்துகொண்டதும் எல்லாம் தில்லை எம்பெருமான் திரு அருளால் தான்.

பெருமானே! என் கண்கள் களிகூர உன் கழல் இணைகளைக் கண்டேன். அந்நிகழ்ச்சியை இரவும் பக லும் நான் எண்ணுவதுடன், இவ்வுலகினின்றும் இவ் வுடலை விட்டு விடுமாறும், வந்து உன் கழற்கே புகு மாறும் நான் எண்ணமாட்டேனா? என் அடிமைத்தனம் மிக நன்றாக இருக்கின்றது. சிவம் வேண்டாதவர்களை நான் தீண்டேன்; பிறவி என்னும் இப்பெருங்கடலில் தனியேனாகிய நான் துன்பங்கள் என்கின்ற பெரிய அலை களால் பற்றுதற்கு ஒன்றும் இல்லாமல் மோதப்படுகின் றேன். கொவ்வைக் கனியை ஒத்த பவளவாய் மாதர்கள் என்னும் புயற்காற்றால் கலக்குண்டு, காமம் என்னும் பெரிய சுறாமீனின் வாய்ப்பட்டு, ஐயோ! இனி எப்படிப் பிழைப் பேன் என்று எண்ணி, எண்ணி ஐந்தெழுத்து என்னும் தெப்பத்தை கைப்பிடித்துக் கிடக்கின்ற இந்த மூர்க்கனைப் பெருமானே! ஆதி அந்தம் இல்லாத பேரின்பக் கரை காட்டி, ஆட் கொண்டாய்.

திருப்பெருந்துறைப் பெருமானுடைய திருவடியை மனத்திற் கொண்டேன். நானும் அவரைவிட்டு வெளிப் போகேன். அவரையும் என்னை விட்டு வெளிப்போகவிடேன். நான் தவம் செய்தேன். 'சிவாய நம' எனச் சொல்லப் பெற்றேன். ஊனொடு சம்பந்தப்பட்ட இந்த உயிர் வாழ்க்கையை வெறுக்கும்படி பெருமான் எனக்கு அருள்புரிந்தார். என் நெஞ்சில் தினந்தோறும் மன்னி வாழ்கின்றார். அவர் திருவடி அன்றி வேறு பற்று எனக்கு இல்லை. புளியம்பழம் போல் இருக்கின்றேன்.

எலும்பும், அழுக்கும் நெருங்கிய நடைக்கூடம் இவ் வுடல். இஃது என்னைத் துயர் உறச் செய்கின்றது; எனக்கு ஆனந்தத்தைத் தரும் சோதியே! எனக்கு யார் உறவு? யார் அயலார்? நான் வீணாகப் பிறந்து நாற்றமுள்ள பிணம் போல மூத்து வளர்கின்றேன்.

# 12. மணிவாசகரின் பக்தி நிலை

நான் ஐந்தெழுத்தாம் தெப்பத்தைப் பிடித்துக் கொண்டு இருக்கின்றேன். உள்ளம் நெகிழச் செய்யும் தேன் அனைய பெருமானே! நீ உன்னுடைய முக தரிசனத்தைத் தாராவிடில் நான் இறந்து ஒழிவேன். நான் என்னுடைய உடலைத் துணிபடும்படி அறுக்கிலேன், தீயில் வீழ்கிலேன்; உன் திருவருள் வகை அறியேன். உன்னைப் பிரிந்து இங்கு எப்படி இருப்பேன்? இன்னது செய்க என்று அருளுக. அயனும், அரியும், மங்கலமாக அறுகு எடுப்பார்கள். அவர்களே அன்றி இந்திரன் முதலிய தேவர் கூட்டங்களும் முணுமுணுக்கும்படி நமக்குப் பின்பு அல்லது முன்னதாக எடுக்க ஒட்டோம். பெருமானே! எல்லா உயிர்களிடத்தும் சாமர்த்திய மாகச் சார்ந்து இருப்பவனே! நீ எனக்கு அன்னை ஒப்பாய், அப்பன் ஒப்பாய். நான் முன்னுக்கு வர உன் திருவடியை நினைந்து நெஞ்சம் குழைகின்றேன் இல்லை. அன்பால் உருகுகின்றேன் இல்லை. மாலை புனைந்து ஏத்துகின்றேன் இல்லை. புகழ்ந்து உரைக்கின்றேன் இல்லை. ஆனந்தக் கூத்தாடுகின்றேன் இல்லை. உனது திருக்கோயிலைத் தூகேன், மெழுகேன், சாமாறு விரைகின்றேன், நெஞ்சமே! நீ இறைவனைத் தேடுகின்றிலை, தெருவு தோறும் அலறிலை, ஆடுகின்றிலை, பாடுகின்றிலை, உனக்கு அன்பிலை, நீ பதைக்கின்றிலை, பணிகின்றிலை; பெருமான் திருவடி மலரைச் சென்னியிற் சூடுகின்றிலை, அவர் திருவடிக்கு மலர் சூட்டுகின்றதும் இல்லை. யார் ஒருவர் ஆசையுடன் பெருமானை "அத்தன் பெருந்துறையான்" என்று கூறுகின்றாரோ, அவரை வணங்கி நான் ஆரவாரிப்பேனோ, அலறுவேனோ. ஆடுவேனோ, பாடுவேனோ, பார்ப்பேனோ, என் செய்வேனோ? (எனக்கே தெரியவில்லை.)

பெருமானே! உன்னை இடைவிடாது சிக்கெனப் பிடித்தேன். இனி என்னைவிட்டு எங்கு எழுந்தருளுவாய்! இமைப் பொழுதும் என் நெஞ்சினின்றும் நீங்காத பெருமானே! உனது திருவடி வாழ்க! அறியாமை நிறைந்த இவ்வுலகில் இறுதிக் காலத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்,

பெருமானே! இங்கும், அங்கும், நீ அல்லது வேறொன்றில்லை. நீ எங்கும் வேறுபாடு இன்றிக் கலந்துள்ளாய். உன்னை அல்லது துணை வேறொன்று அறியேன். ஊரார் எல்லாரும் 'இவன் மத்தன், பித்தன்,' என்று அவரவர்களுக்குத் தோன்றியவாறு என்னைப் பேசும்படி ஊர் ஊராகத் திரிந்து, செருக்கற்றுச், செயலற்று இருக்கும் நிலை எனக்கு எப்போது கூடும்? நான் உய்யுமாறு என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யனே! நினைத்தற்கரிய உனது திருவுருவை நினைத்தவுடன் பேரானந்தத்தைத் தருகின்ற பெருங்கருணைப் பெருமான் நீ. உன்னையல்லாது வேறு தெய்வத்தை நினைக்க மாட்டேன், உன் கருணைக் கடலில் என் உள்ளம் தோய்ந்துளது. அங்கிருந்து அவ்வுள்ளத்தை என்னால் மீட்கமுடியாது. பெருமானே! உன் நாமத்தைப் பிதற்றுவேன், கண்களில் நீர்மல்கி வாழ்த்துவேன், வாய் குழறுவேன், வணங்கி நினைந்து உருகுவேன், பலமுறை உன்னைத் தியானித்துப் பரவிப், 'பொன்னம்பலம்' என்று கூறி உருகி நிற்பேன்; அத்தகைய இவ்வுயிர்க்கு இரங்கி அருள்புரிவாயாக. ஊனாய், உயிராய், உணர்வாய் என் உள்ளத்திற் கலந்து, தேனாய், அமுதமாய்த் தித்திக்கும் கரும்புக் கட்டியாய் விளங்கித், தேவரும் அறியாத வழியை எனக்குத் தந்தருளினாய், பெருமானே! எவ்வித ஞானமும் இல்லாத எனக்கு இன்பம் ஊட்டினாய். என் எண்ணம், உடல், வாய், மூக்கு, செவி, கண் என்ற இவை எல்லாவற்றையும் பெருமானே! உன்னிடம் வைத்தபின் இவ்வுலகில் நான் வாழமாட்டேன். என்னை 'வருக' என்று அழைப்பாயாக! பெருமான் எனக்குத் தந்தையாகவும், தலைவனாகவும், மற்று யாவர்க்கும் தந்தையாகவும், தாயாகவும், தலைவனாகவும் விளங்கித் தனக்கு அவை இல்லாதவனாய் விளங்குகின்றான். யாரும் சிந்தையாலும் அறிதற்கரிய அத்தகைய செல்வன் முந்தி என் உள்ளத்தில் புகுந்தனன். பழுத்த பக்தி உடைய அடியார்களின் முன்பு, எனது ஆரமுதாம் அண்ணலை நிரம்ப வாய்விட்டு அலறி, மணம் நிறைந்த மலர்களைத் தூவித் துதித்து அவர் திருவடியை என் நெஞ்சிற்பூண்டு கொண்டு, அவரைச்

சேர்ந்து நிற்பது எப்போது? அவர் என் சிந்தனையில் அமுத ஊற்ருய் விளங்குகின்ருர். என் தேன் வெள்ளம் அவர். அப்பனே! என்னை 'அஞ்சல்' என்று கூறுபவர், யாருமில்லாது இளைத்து அலைகின்றேன்; மின் போன்ற வனே! என்னைக் கைவிடாதே! என்னை ஆட்கொண்டு எனக்குத் தலைவனுய் விளங்கும் பிரானே! நான் ஓர் இரும்பின் பாவை, பாடேன், ஆடேன், அலறிடேன், உலறிடேன், (பதறி வற்றமாட்டேன்) ஆவி சோர மாட்டேன். எனக்கு என்ன முடிவு வருமோ? அறியேன். ஐம்புலனும் சேற்றில் அழுந்தாத சிந்தையுடன் 'சிவன்,' 'எம்பெருமான்' என்று ஏத்தி ஊற்று மணல் போல் நெக்கு உள்ளுருகி ஓலமிட்டு என் அருமணியாம் பெரு மானைச் சேர்ந்து போற்றி நிற்பது எப்போது? பெரு மானே! உன்னையல்லால் வேறு ஒரு தேவர் உளரென்று என் சிந்தை சிந்திக்காது. உவமை கூற முடியாத தனது திருவடி மலரைத் தந்து நாய்க்குலத்தினும் கடையேனை எனக்கு நன்னெறி காட்டித் தாய்போல் தனது அருளைத் தந்த என் தலைவனைக் காணேன்! ஐயோ! நான் தீயில் வீழ்கிலேன். மலையில் நின்றும் உருள்கிலேன், கடலிலும் புகேன். பெருமானே! உன்னை என் கையால் தொழுது உன் திருவடியைத் தழுவி என் தலைமேல் வைத்து 'எம் பெருமான், பெருமான்' என்று என் வாயால் அரற்றி, அழல்சேர் மெழுகு போல் நான் ஆக, ஐயாற்று அரசே! ஆசைப்பட்டேன். என் குடி கெட்டாலும் இந்திரன், திருமால், பிரமன் இவர் தம் வாழ்வை நான் கொள்ளேன். என் சித்தம் சிவனுடன் ஆடவேண்டும். என் கண்களில் நீர்த்துளி ஆடவேண்டும். பெருமானே! என் சிந்தனையை உனக்கு ஆக்கி, என் கண்களை உன் திருவடி மலர்க்கு ஆக்கி, என் வந்தனையை அம்மலர்க்கே ஆக்கி, என் வாக்கை உன் புகழைப் பேசுவதற்கு ஆக்கி, என்னுடைய ஐம்புலன் களும் உன்னை நான் அனுபவிக்கும்படி நீ எழுந்தருளி வந்து, என் உள்ளத்திற் புகுந்த அருமையான செயலை உடைய அமுதப் பெருங்கடலே! மலையே! இருவினையும் கெட்ட தனியேனுக்கு உன்னைக் கொடுத்தருளினுய்.

சிவம் வேண்டாதவரை ஒரு நாளும் நான் தீண்ட மாட்டேன். சிவன் என் சிந்தையுள் நின்ற காரணத்தால் அவன் திருவருளால் அவன் தாளை நான் வணங்குகின்றேன். எனக்குப் பெருமான் கைத்தலத்து நெல்லிக்கனி போல் ஆயினர். அதனால் என் நிலை இத்தன்மைத்து என்று சொல்லத் தெரியவில்லை. அவர் என்னை என்ன செய்தனர் என்பதும் தெரியவில்லை. நான் செத்தேன்; அவர் திருவருளைப் பருகவும், விழுங்கவும் சொல்லமுடியாத வகையில் உள்ளேன். மயிர்க்கால் தோறும் அமுதம் ததும்பச் செய்தனர் பெருமான், அவர் இந்த நாய் உடலில் அற்புதமான அமுத தாரைகளை எலும்புத் தொளை தோறும் ஏற்றிவிட்டார். தகுதியற்ற அடியேனைக் கற்கண்டு போல் இனிய கனியை உண்ணும் யானை போல ஆக்கினர். 'திருவருள்' என்னும் தேனுடன் பேரின்ப அமுதத்தையும் கலந்து தந்தருளின கருணாகரர் அவர்; பிரமன், மால் அறியாத பெற்றியர் அவர். தமக்கு ஒப்பாரை இல்லாத தனிமையர் அவர், அவரைத் தழுவிக் கண்டம் தழு தழுக்கக், கண்ணீர் அருவி போலப் பாய, கைகளைக் கூப்பி, நறுமலர் மாலையால் அவரை நான் அலங்கரிப்பது எப் போது? நான் பிறர் ஒருவரைத் தொழமாட்டேன்; துதிக்க மாட்டேன்; எனக்கு ஒரு துணை என நினைக்கமாட்டேன். நாட்டில் உள்ளோர் நகைக்க நாம் மேலைவீடு அடையும்படி ஆட்கொண்ட பெருமானைப் பாடுவோம் நாம். நிச்சயமாக என் மனத்திற் பொருந்தி விளங்குகின்றார் பெருமான். நீராய் உருக்கி, என் ஆருயிராய் நின்ற பெருமானை நினைக்குந் தோறும், நினைக்குந் தோறும் அவருடைய பிரிவு ஆற்றாது வருந்துகின்றேன். உள்ளம் உருகி உருகி, நெகிழ நெகிழ நான் நின்றும், இருந்தும், கிடந்தும், நக்கும், அழுதும், தொழுதும், வாழ்த்தியும் பலவகைக் கூத்துக்களை ஆடியும், செக்கர்வான் போன்ற அவருடைய திருமேனியை நோக்கிச் சிலிர் சிலிர்த்து அவருடன் கலந்து நிற்பது எப்போது? குதிரைச் சேவகனாக வந்த பெருமானுடைய திருஉருவம் அன்றி வேறோர் உருவத்தை என் உள்ளம் அறியாது. பெருமான்

என்னைப் பித்தனாக்கினர். அப் பித்தம் பெருமானுடன் ஆடவேண்டும்; பிறவி பிறருடன் ஆடவேண்டும். அடைதற்கு உரியதும் அடைந்தால் மீண்டு வருவதற்கு வழி இல்லாததும் ஆகிய சிவ நகரில் புகுதற்குத் தடையாக உள்ள பற்றுக்கள் ஒழிதலும், பெருமானுடைய திருவடிக்கு அன்பு செய்து உருகுதலும், தினமும் அமுது, தேன், பால், கரும்புக் கட்டி ஆகிய இவற்றின் சுவையினும் மிக்க இனிய பேரின்பச் சுவை உண்டாதலும் இல்லாவிட்டால் அந்நிலைக்குத் தீவினையேன் என்ன செய்ய வல்லேன்!

இப்பெரிய பூமியில் மயக்கத்துடன் இருக்கின்றேனே என்று எண்ணிக் கண்ணீர் சொரிந்து, உரோமம் சிலிர்ப்ப அன்புடன் நான் என் பெருமானுடன் சேர்ந்து இருப்பது எப்போது? பெருமான் என்னுடைய மனத்தில் உள்ளான், என் கண்ணுள் உள்ளான், அதனுடன் எனது பேச்சிலும் உள்ளான். நான் பிறப்புக்குச் சற்றேனும் அஞ்சேன். இறப்புக்கு என் செய்வேன். (அல்லது) இறப்புக்குத் தான் என்ன? என்னால் அதைக் கடக்க முடியாதா! வானமும் வேண்டேன், மண் ஆளுதலையும் மதிக்க மாட்டேன், பெருமானுடைய திருவருள் என்று கிடைக்குமோ என்று எண்ணி எண்ணி வருந்துவேன்; "கங்கை விரிசடையாய், விடையாய், விண்ணோர் பெருமானே" என்னும் சொற்களைக் கேட்பதில் விருப்பம் கொண்ட நெஞ்சினை உடையவராய், மேட்டிலிருந்து பள்ளத்தில் விழுகின்ற நீர் போலப் பதைத்து உருகுகின்ற அன்பர்கள் இருக்கப், பெருமானே! என்னை ஆண்ட உன்னை நினைந்து உள்ளம் தாள் முதல் உச்சியளவும் என் நெஞ்சு உருக இல்லை, உடம்பெல்லாம் கண்ணாய்க் கண்ணீர் வெள்ளம் போலப் பாய இல்லை. அத்தகைய தீவினையேனுக்கு நெஞ்சம் கல்லாம், கண்ணிணை மரமாம்.

கட்டுக் கடங்காத நீர் போல என் சிந்தை உன் இடத்துப் பாய்கின்றது. சிவனே! திருவாரூர் உடையானே! அடியேன் உன் பூங்கழல்கள் அல்லாமல் வேறு எதையும்

புகழ மாட்டேன், இறைவனே! நரகத்தில் புகுந்தாலும் உன் திருவருளால் அங்கு இருக்கப்பெற்ருல் நான் அந் நிலையை இகழ மாட்டேன். உன்னுடைய அடியாரொடு அல்லால் பிறருடன் நட்புக் கொள்ளேன். உன் பெரும் சீரை எவ்வாறு புகழ்வது என அறியேன். உன்னுடைய திருவருளாம் கரும்புத் தேனை உண்டு, உடனே உடலை விடு தற்கு நெருப்பு இருந்தது. நானும் இவ்வுலகில் இருந்தேன். ஆயினும் உன்னை நான் அடைய வில்லை. அப்படி இருக்க; உன்னை அடைதற்கு எனக்கு விருப்பம் நிரம்ப உண்டு. இஃது என்ன மாய வித்தை, பெருமானே! நான் பாடுகின் றேன் இல்லை; பணிகின்றேன் இல்லை. என்னை விட்டுப் பிரிந்த உன்னை நினைத்துப் பசிய என் ஊன் உடம்பைத் தொலைக்கின்றேன் இல்லை. என்னைக் கைவிட்டு விடாதே! நான் உன் பெருமையை நினைத்து அதிசயித்துக், கதறித் துதித்து, "என்னை விட்டு ஒளித்த சிவன் எவ்விடத்து உள்ளார்? யாரேனும் அவரைக் கண்டனரோ?" என்று தேடுகின்றேன் இல்லை, நாடி ஓடுகின்றேன் இல்லை. உள்ளம் உருகுகின்றேன் இல்லை. இவ்வாறு வருந்தி நிற்கின்றேன். என்னைப் பித்து ஆக்கிய பெருமானே போற்றி. என்னுடைய புன் புலால் யாக்கை கனியும்படி அதைப் பொன்னெடுங் கோயிலாகப் பாவித்து அதனுள் புகுந்து என் எலும்பெல் லாம் உருக்கி எளியையாய் வந்து என்னை ஆண்ட ஈசனே! மாசிலாமணியே! உன்னுடைய பேர் ஆயிரத்தைப் பரவித் திரிந்து, 'எம்பெருமானே! என உன்னை ஏத்த, ஆரா அமுதே' நான் ஆசைப்பட்டேன்.

போகம் வேண்டி இந்திரன் ஆதியோர் பதவியை நான் வேண்டிலேன். உன் திருவடிகள் அன்றி வேறு துணை எனக்கு வேண்டியதில்லை. என் உடம்பு வேருக, நான் நடு நடுங்கி என் கைகள் சிரமீது குவிந்து பொருந்துவதாக! என் கண்களினின்றும் நீர் ஆருகப் பெருகுவதாக! பெருமானே! என்னை ஒரு வார்த்தையுள் வசமாக்கி ஆட் கொண்டாய், அதை நினைந்து நான் பதைக்கின்றேன் இல்லை, மனம் மிக உருகுகின்றேன் இல்லை, அன்பு கொண்டேன் இல்லை. அன்பு

கொள்ளாத இவ்வுடலை அழிக்கின்றேன் இல்லை. இன்னும் திரிகின்றேன்.

'முத்தனையானே!' 'மணியனையானே'; முறையோ? என்று கூறி நான் உன்னைத் தொடர்வேன். இனிப் பிரிந்திருக்க முடியாது. மெய் சிலிர்சிலிர்த்துப், பெருமானே! உனது திருவடிக்குக் கைகளைக் குவித்துத் தலைமேல் வைத்துக், கண்ணீர் ததும்ப, உள்ளம் வெதும்ப, பொய் தவிர்த்து உன்னைப் போற்றி, ஜெய ஜெய போற்றி, எனக் கூறிக் கூப்பின கையை நெகிழ விடேன். என்னைச் சற்றுக் கண்டு கொள். யானே பொய், என் நெஞ்சும் பொய், என் அன்பும் பொய்; அப்படி இருந்தும் வினையிற் பட்ட நான் அழுதால் உன்னைப் பெறக் கூடுமா? தேனே! அமுதே! கரும்பின் தெளிவே! பெரியோனே! அடியேன் உன்னிடம் வந்து சேரும் வழியை அருள் புரிவாயாக! பெருமானே! உன் திரு அருளாம் அமுதத்தை நான் வாரி அள்ளிக்கொண்டு விழுங்கினேன். எனக்கு நல்விதி இல்லாமையால் தடைபட்டு விக்கினேன். நான் பிழைக்கும்படி தண்ணீர் பருகத் தந்து என்னைப் பிழைக்க வைப்பாயாக! நான் வருந்தும் நிலையில் உள்ளேன்.

தேவர்களும் உன்னை அறிய முடியாது. வேத முடிவும் உன்னைத் தொடர முடியாது. வேறு எந்த நாட்டினரும் உன்னைத் தெரிந்து கொள்ளமுடியாது. அப்படி இருக்க, நீ என்னை ஆண்டு கொண்டது அதிசயம் தான். இந்த ஊன் உடலைத் தந்து நாடகமாடச் செய்தாய். இதுவும் ஓர் அதிசயம் தான். நான் உள்ளம்உருகி உன்னைப் பருகும்படி வைத்ததும் ஓர் அதிசயம் தான். நான் ஞான நிலைக் கூத்து ஆடும்படி நீ வைத்ததும் ஓர் அதிசயம் தான். இவையெல்லாம் உலகப்பற்று எனக்கு ஒழியும்படி நீ செய்த கூத்து ஆகும். வினையேனுடைய மனத்தில் தேன், பால், கரும்பு, அமுதம் எனத் தித்தித்து என் ஊனையும் எலும்பினையும் உருகச் செய்த ஒளிப்பிழம்பே! வினையேன் மனத்தில் ஊறுகின்ற தேனே!

**மாணிக்கவாசகர் தாம் தலைவியாக நின்று தோழியரை அழைத்துக் கூறுதல்:**

மாவடுவகிரன்ன கண்களை உடைய தோழியரே! எல்லோரும் வாருங்கள், வந்து என்னுடன் கூடிப் பாடுங்கள்! தொண்டர்கள் யாரும் வெளியே நிற்காமல் உள்ளே வரும்படி கூவுங்கள். குனியுங்கள், குனிந்து, பெருமானைத் தொழுது பணியுங்கள். தேவியும் தானுமாக வந்து எம் கூத்தன் எம்மை ஆள வேண்டி, அவர் ஆடுதற்குச் செம் பொற்சுண்ணம் இடிப்போமாக!

## 13. மணிவாசகரும் பித்தும் மத்தமும்

என் பிறவியை வேர் அறுத்துப் பெரும் பித்தைத் தந்த பெருமானே! போற்றி! உன் திருவடியைக் காணுதற்கு வேண்டிய பித்து என்னிடம் இல்லை. பித்தர் போல் மயங்கி, மத்தர் போல் களித்து, நாட்டில் என்னைப் பார்த்தவர்கள் மருட்சி அடையவும், என்னைப் பற்றிக் கேட்டவர்கள் வியப்பு அடையவும், மதம் கொண்ட யானை போலப், பெருமான்மீது உள்ள அன்பினைத் தாங்க இயலாதவனாய் இருக்கின்றேன். என் அவயவம் எல்லாம் சுவைதரும் கொம்புத்தேன் போலப் பெருமான் எனக்கு இன்ப நிலையைத் தந்துள்ளார். உலகோர் என்னைப் பித்தன் என்று கூறுவதற்குக் காரணம் உண்டு. பெருமான் எனக்குப் பித்து ஏற்றிப் பிறப்பு அறும்படியாக என் மனத்தை மத்த நிலையில் ஆக்குவித்தார். மத்தோன்மத்தனாக ஆக்கினார். தம் கோயில் வாயிலில் என்னைப் பிச்சனாக்கினார். மங்கையர் தம்மொடு பிணைந்து பித்தனாய்த் திரிந்த என்னைத் தேவியும் தாமுமாக வந்து அவர் ஆண்டு கொண்டது ஓர் அற்புதம்.

## 14. மணிவாசகர் விரும்புவன

அப்பா! உன்னைக் காண ஆசைப்பட்டேன். 'இங்கே வா. என்று நீ அங்கிருந்து கூவும் திரு அருளைப் பெறுதற்கு நான் ஆசைப்பட்டேன். பெருமானே! நீ என் முன் எழுந்

தருளினால், (1) அடியாருடன் சேர வேண்டும் என்னும் ஆசை ஒன்றே எனக்கு நிலைத்திருக்கும்; (2) பிறவிக்கு உரிய இடர்கள் என்னை விட்டு ஒழியும்; (3) நீ அணிந்துள்ள செங்கழுநீர் மலர் என் தலைமேல் வந்து அடையும்; (4) உனக்கு அன்பு செய்யும் அன்பர்களுள் யான் செய்யும் பணியே முந்தி நிற்பதாகும்.

பெருமானே! அழிவிலாத இன்பச் சுடரைக் காண நான் மிக ஆசைப்படுகின்றேன்; நீ அன்பு கூர்ந்து அருள்வாயாக! உன்முக ஒளியையும், புன்முறுவலையும் காணவும், உன் திருவடியைச் சேரவும், உன் பழைய அடியார் கூட்டத்தைக் காணவும், "எம்பெருமான், பெருமான்" என்று என் வாயால் அரற்றி அழல்சேர் மெழுகு போல ஆகவும், சிறிது உன் பவளத் திருவாயால் என் முகநோக்கி, நீ அஞ்சேல் என்று கூறவும், உன்னைப் பரவி, உன் பேராயிரமும் கூறி, எம்பெருமான் என உன்னை ஏத்தவும் ஆசைப்பட்டேன்' அன்பு பெருகி ஊற்று மணல்போல நெக்கு உருகி ஓலமிட்டுப் போற்றி 'எம் பரமா'! என்று பாடிப் பாடிப் பணிந்து, எனக்கு வேண்டும் அளவு வாய்விட்டு அலறி, மணம் உள்ள மலர்களைத் தூவி, உன் பெருமையைப் புகழ்ந்து பாடி, 'மணியே' என்று உன்னை ஏத்தி, இரவும், பகலும் உன் திருவடிகளைத் தியானித்து, உனது சிவந்த திருமேனியை நோக்கிச் சிலிர் சிலிர்த்து, கண்டம் தழுதழுக்கக் கண்ணீர் அருவிபாயக், கை கூப்பி நறுமலர்களால் உன்னை அலங்கரித்து, உன் அருகிற் சேர்ந்து உன்னொடு நான் கலந்து நிற்பது எப்போது? பெருமானே! விரைவில் வந்தருளி உனது தளிர்ப் பொற் பாதத்தைத் தந்தருளுக! உனது திருவடிச் சிலம்பு ஒலிப்பதைக் கேட்டு நான் ஆராத ஆசையனாய் அகமகிழ் வேன். வேண்டாதது ஒன்றையும் வேண்டாமல் உன் மாட்டு மேவுதல் என்னும் ஓர் ஆசையே அடியேனுக்கு உண்டாகுமோ!

பெருமானே! உனக்காக அறுகு எடுத்தல் என்னும் எம் தொண்டினை முணுமுணுக்கும் தேவர்களும், எமக்கு

முன்பு எடுக்க ஒட்டேம். பரமானந்தப் பழங்கடலாகிய உன்னைச் சேர்ந்து எனது ஆவி, உடல், யான், எனது ஆகிய இவையெலாம் அற்றுப்போகும் நிலை பாவி யாகிய எனக்குக் கிடைக்குமா? வாரா உலகுக்குச் செல்லும் வழியில் ஏறுவதான கோலத்தைக் காட்டி என்னை ஆண்ட பெருமானே! நான் என்று உன்னைக் கூடுவனோ?

## 15. மணிவாசகரின் வேண்டுகோளும், முறையீடுகளும்

[‘பக்திநிலை’ என்னும் தலைப்பு (12)ம் பார்க்க]

அச்சத்தால் நான் ஆழ்ந்திடுகின்றேன். ஆரூரெம் பிச்சைத் தேவா! நான் என் செய்வேன், சொல்லுக! “அஞ்சேல்” என்று அருள் புரிக. ஐம்புலச் சேட்டையால் உன்னைப் பிரிந்து, அஞ்சி, “மாதர்கள்” என்னும் பிளவிற் சிக்கிக் கொண்ட என்னைக் கைவிடாதே! பெருமானே! வலிமை உடைய யானை போன்ற ஐம் புலன்களுக்கு அஞ்சி அழிகின்ற என்னைக் கை விடாதே. என்னை ஓர் அறிஞன் என நினைந்து அன்று ஆண்டாய்; பின்பு, அன்றே எனது அறியாமையைக் கண்டிருப்பாய் என்பதை நான் அறிவனோ அறியேனோ; ஈசனே அருள் புரிக. உன் திருவடியை எண்ணிக் கசிந்து, பித்தன் இவன் என்று ஊரார் தத்தம் உள்ளத்தில் தோன்றியவற்றைக் கூறும்படி ஊர் ஊராகத் திரிந்து, எவரும் என்னைக் கண்டு தத்தம் மனம் போனவாறு குறை கூறினும் நான் அவற்றைப் பொருட்படுத்தாது செயலற்று இருக்கும் நிலை வரும்படி மனம் செத்துப்போதல் எனக்குக் கிடைக்குமா? உன்னுடைய முகதரிசனம் கிடைக்கா விட்டால் நான் இறந்து போவேன்.

அடியேனுடைய அறியாமையை அறிந்து நீயே என்னைக் கூவி அழைத்தருள்புரியும் நாள் என்றோ! கூறுக! அடியேன் அன்புடன் அழைத்தால், ‘ஏன் அழைக்கின்றாய்’ எனக் கேட்டு அருள்புரிக! அடியேன்

உன் அடியார் நடுவுள் இருக்கும்படி உன் திருவருளைத் தந்தருளுக ; நான் உன் அடைக்கலப் பொருள். உன்னைக் கண்ணாரக் காணும் வழியைக் காணேன் ; அடியேனைத் தாங்குவார் யாருமில்லை. அழகு நிறைந்த உன் அடியார்களுக்கு உள்ள அன்பை நான் பெறும்படி அருளுக ! அம்பலத்தில் ஆடுகின்ற உனது திருவடி மலரை நான் கூட வேண்டும். அருள்புரிக ! அருமையான ஒரு கட்டளையை இட்டு என்னை ஆண்டு கொண்டாய் ; ஆள்வார் இல்லாத மாடுபோல நான் ஆகக்கூடாது. நான் ஓர் அயலான் போலக் கவலைகொள்ளக் கூடாது. பெருமானே ! உன் திரு அருளைப் பெற்ற அன்பர்களுடன் நீ அங்கு (விண்ணில்) எழுந்தருளி, இங்கே (இம்மண்ணில்) என்னை இருக்கச் செய்தாய் ! இது முறையோ ! வம்பனாகிய என்னுடைய வினைக்கு ஒரு முடிவு இல்லையா ? உன் அருள் அமுதத்தைத் தாராவிடில் நான் வருந்துவேன். நான் என்ன கதி அடைவேன் ? பெருமானே ! நீ அருளா விட்டால் அடியேனை 'அஞ்சேல்' என்பார் யார் ? என்னை ஒரு பொருளாக மதித்து வந்து ஆண்ட பொன்னம்பலக் கூத்தனே ! அரசே ! அறியாத சிறியேன் நான். நான் ஏதேனும் பிழை செய்தால் 'அஞ்சல்' என்று கூறுக. என்னைக் கைவிட்டு விடாதே ! பொன்னம்பலக் கூத்தனே ! என்றைக்கு உனது திரு அருள் கிடைக்கும் என்று நான் இரைக்காகக் காத்து இருக்கின்ற கொக்குப் போல இரவும் பகலும் கவலை உற்று இருக்கின்றேன்.

பெருமானே ! "கயிலைக்கு வரும் வழி இதுதான்" வருக!" என்று அருள்புரிக ! அன்பு மனத்துடன் உன்னைச் சேர நான் அழுகின்றேன் இல்லை; இந்த உடலைத் துண்டாகும்படி அறுக்கின்றேன் இல்லை ; தீயில் விழுகின்றேன் இல்லை ; உனது திருவருள் எத்தன்மைத்து என அறியேன் ; பொறுத்திருக்க முடியவில்லை. இந்த உடலுக்கு ஒரு போக்கிடம் காணேன் ; இறக்கின்றேன் இல்லை. இனி உன்னை விட்டுப் பிரிந்திருக்க முடியாது. "இன்னது செய்க!" என்று அருள் புரிக !

ஐயனே! என் உடல் வேறு ஆகவேண்டும்; நடுக்கத்துடன் என் கை அஞ்சலி செய்து என் சிரமீது குவிய வேண்டும். என் கண்களில் நீர் ஆறு போலப் பெருக வேண்டும்; என் நிலையைப்பற்றி நான் ஆருடன் நோகேன்; ஆர்க்கு எடுத்து உரைப்பேன்; ஒரு பறவைக் குஞ்சு போல வீணாய்க் கிடக்கின்றேன். இந்த வஞ்சக உடம்பை விட்டு உன்னைச் சேரும் வழி அறியேன்; என் உள்ளத்தில் உன்பால் இடையறாத அன்பைத் தந்தருள் பெருமானே! இருதலைக் கொள்ளியின் உள்ளே அகப்பட்ட எறும்பு போல உன்னைப் பிரிந்து வருந்துகின்ற என்னைக் கை விடாதே! என்னை நீ "ஆண்டு கொள்," "விற்றுக் கொள்," "ஒற்றி வை," இப்படி ஏதேனும் செய். என்னை மாத்திரம் கைவிட்டு விடாதே! இந்த வாழ்க்கையில் வைத்த நீ அதில் இருந்தும் என்னை மீள வை! சிவலோகனே! என்னை அழைத்து என் பணியைக் கொள்ளாமல் என்னைத் தண்டித்தால் மாத்திரம் போதுமா! நான் உருகா உள்ளத்தினன்; உணர்விலி; அப்படிப்பட்ட நான் உலகறியும்படி உன்னைக் குறை இரந்தால் அது தக்கதன்று என்று உலகோர் சொல்ல மாட்டார்களா! உழைத்தால் உறுதியான பலன் கிடைக்குமல்லவா! உண்மைப் பொருளைக் காண எனக்கு அருள்புரிக! உன் அடியார் கூட்டத்தில் நானும் உய்யும்படி என்னை ஏன்றுகொள். தேவ! உன் கழலிணையைக் காட்டி இந்தக் காயம் என்னும் மாயம் கழியும்படி அருள்புரிக! நான் உன்னொடு ஊடி ஊடி, உருகி உருகி, ஆடி ஆடி ஆனந்த நிலையை அடைய அருள்புரிக!

"ஊர்ப்பசு கனைத்தால், கூட்டத்தில் உள்ள குருட்டுப் பசுவும் கனைக்கும்" அதுபோல உன் திருவடியில் அன்பில்லாத நானும் மெய்யடியான் போல உன் திருவடியைச் சேர ஆசை கொண்டு அழுகின்றேன். எறும்பிடையே அகப்பட்ட நாகப் பூச்சி போல ஐம்புலனிடையே நான் துன்பப் படுகின்றேன். என் பிறவியை வேரொடு களைந்து என்னை ஆண்டு கொள். எனக்கு நான்தான் இணையாவேன்;

அத்தகைய நான் உன்னைக் கூடும் வகையைக்கூறி அருளுக. என்னைக் கவனிப்பவர் யார்? நான் என் செய்கேன், எங்குப் போவேன், என்னைச் செத்திடப் பணியாய்; எந்தையே! உன் திருவடி எப்புறத்தில் உள்ளது?

நான் உன்னை ஏசினாலும், ஏத்தினாலும் நான் செய்த பிழைகளுக்கு வருந்துகின்ற என்னைக் கைவிடாதே; பெருமையும் நாணமும் இல்லாதவன் நான். ஒன்றுக்கும் போதாத நாயேனை அன்று உய்யக்கொண்ட உன் கருணை இன்று எங்குப் போயிற்று? என்னுடைய வினைகளை ஒழித்துப், பெருமானே! என் உள்ளம் எப்போதும் உருகும்படி அருளுக! உன் திருவடியை எனக்குக் கதியாக நீ தந்தும், இந்த ஊனைக் கழியாத விதியை உடைய அடியேனைக் கை விடாதே! முத்திக்கரை சேரும் அடியார்க்குக் காட்சி தந்து, உன் அடியேனாகிய என்னிடத்தில் மாத்திரம் பிரைசேர் பாலின் நெய்போலப் பேசாதிருந்தால் உலகம் ஏசாதா?

உன்னைக் காணுமாறு காணேன், உன்னை நான் அன்று காணப்பெற்றும் வீண் பேச்சுப் பேசும்படி என்னைக் கீழ் நிலையில் விட்டு விட்டாய். மாதர்களின் ஐம்புல இன்பம் என்னும் ஆற்றங்கரையில் வளர்கின்ற மரமாய் வேரூன்றி உள்ள என்னைக் கை விட்டு விடாதே! என் பழ வினை நோய் என்னை வருத்தினால் அப்போது என்னைக் காத்து அருளுக! குற்றாலத்துக் கூத்தனே! கன்றை உடைய பசுப்போல உன் திருவடியை நினைந்து கசிந்து உருகி நான் வேண்டுகின்றேன். பெருமானே! மலை போன்ற பெரிய குற்றங்களை நான் செய்த போதிலும் நீ அவைதமைக் குணமாகக் கொண்டால் உனக்கு என்ன கெட்டுப்போகும்! என்னுடைய துக்கங்களைக் களைந்து என்னை ஆண்டு கொண்ட திரு அருளின் பெருமையை யார் அறிகிறாரோ அவர் என் தலைவர் ஆவார். பற்றுதற்குக் கொம்பில்லாத கொடிபோல நான் வேதனைப்படுகின்றேன், என்னைக் கைவிடாதே! மாதர்களின் கொங்கைக் குன்றிடைச் சென்று வருந்தி விழுகின்ற என்னைக் கை விடாதே!

சிவனே! நீ சிறிது என் முகத்தை நோக்கி 'அஞ்சற்க' என்று சொல்ல ஆசைப்பட்டேன்.

பெருமை வாய்ந்த அடியார்கள் உன் திருவடிகளைச் சேரக் கண்டும், கண்கெட்ட ஊர் ஏறுபோல இங்குக் கொடியேன் உழல்வேனே! கொடியேனுடைய உயிர்தான் போகாதா? சீ ஒழுக, ஈ மொய்த்து, அழுக்குடன் திரிகின்ற இந்தச் சிறிய குடிலாம் உடல் சிதையும்படி கூவி என்னை அழைத்துக் கொள். தாயாய் முலையைத் தருபவனே! நீ தராவிட்டால் நான் சவலையாய்க் கழிந்து போவேன்; ஆதலால் நீ தயைபுரி; நீ தாயென்று உன் திருவடியை நான் அடைந்தேன். உனக்கு என்பால் தயவில்லையா? அன்று உடனே என்னை அடிமையாக ஆண்டனை; இப்போது நான் வேண்டாமா? ஏனைய அடியார்கள் எல்லாருக்கும் ஒரு குறை இல்லாமல் எல்லா அருளையும் நீ தந்தனை; நான் மாத்திரம் அயலான் போல நின்று தளர்கின்றேன். இந்த 'உடல்' என்னும் வலையை இனித் தினையளவு கூட நான் பொறுக்க மாட்டேன். அன்பர்கள் சூழ்ந்து இருக்கும் உனது திருவோலக்கக் காட்சியை நான் சேவிக்க விரும்புகின்றேன்; இரங்கி அருளுக. நான் திகைத்து நிற்கும் பொழுது, பெருமானே! நீ என்னைத் தேற்ற வேண்டாமா?

வேண்டாதவற்றை வேண்டாம் என விலக்கி உன் மாட்டுப் பேரன்பு பொருந்துதல் ஒன்றையே வேண்டுகின்றேன். என் உயிர் நாதனே! உன்மாட்டு நண்பு உண்டாகும்படி எனக்கு அருளுக! நாயேன் உன்னை நினைக்க மாட்டேன். "நமச்சிவாய" என்று கூறிப் பணியாத பேயன் நான்; எனினும்; எனக்கு முத்தி நெறி காட்டி அருளுக!; நானே பாவி, ஆயினும் எனக்கு 'அருளுக' என நான் உன்னை வேண்டலாமோ? நான் உனக்கு அன்பனுயினேன். ஆதலால் நீ என்னை ஆண்டு கொண்டாய். உனக்கு என்னைத் தவிர வேறு அடியார்கள் இல்லையா? நான் பேயன், அங்ஙனமிருந்தும் என்னை நீ ஆண்டது உனது பெருமையைக் காட்டுகின்றது. உன்

திருவடிக்கு அன்பான பிறப்பை அடியேனுக்கு அருளுக! உன் திருவடி மலரை முன்பு கொடுத்து அருளியது போலக் கொடுத்து உன் திருவடிக்கு நான் தொண்டு செய்யும்படி என்னை அழைத்து, என்னை ஏன்றுகொண்டு, உன்னை அடைதற்கு இடையூறாக உள்ள ஆசைகளை ஒழித்து அருளுக!

பெருமானே! உன்னை வணங்குகின்றேன், உன் திருவடியை நான் தொழுதற்கு உனது சிறந்த அடியார் கூட்டத்தில் என்னைச் சேர்த்துக் கொள். உன் திருவடிக்கண் என் அன்பு நிரந்தரமாக நிலைத்து இருக்க வேண்டுகின்றேன்; உன்னை நெருங்கி உள்ள அடியார்களும் நீயும் நின்று நிலாவி விளையாடும் இடத்தைச் சார்ந்து வர 'வா' என்று, 'பெருமானே!' எனக்கு அருள மாட்டாயா? நான் படுவது எல்லாம் பட்டு விட்டேன். அப்போது உதவாமல் பின்னர் உதவினால் என்ன பயன்? நீ நீதி நிலையில் நில்லாமற் போனால் அது நன்றாகுமா? உன்னைப் பணிபவர்களுடைய பிணி தீர்த்தருளிப் பழைய அடியார்களுக்கு உன் திருவடியைத் தருகின்றாய்; அங்ஙனம் எனக்கு அருள் புரிதல் அரிது என்றால். கெட்டி மூங்கில் போன்ற என் வினையைப் பொடியாக்கிப் பின்னர் உன் திருவடியை விரைவில் தந்தருள்வாயாக! பலகாலும் உன்னை நினைத்துப் போற்றிசெய்து 'பொன்னம்பலம்' என்று ஓதி உருகிநிற்கும் இந்த உயிர்க்கு இரங்கி அருளுக! உன் பழைய அடியார்களுடன் கூடாமல், பெருமானே, நான் நோய்க்கு விருந்தாய்ப் பிற்பட்டு நின்று விட்டேன்.

உன்னைப் போற்றி நான் பாட வேண்டும், பாடி நைந்து நின்று உருகி நெக்கு நெக்கு ஆடவேண்டும்; இந்தப் பிறப்பு அற வேண்டும். பத்திமையை நான் பெறவேண்டும், நெசவு நெய்பவனுடைய 'பாவிடை ஆடு குழல்' போல என் உள்ளம் ஒளிந்து ஒளிந்து தத்தளிக்கின்றது. ஐயோ! கெட்டுப் போகின்றேன். பிழைத்தவை பொறுக்கை பெரியோர் கடமையாகும். இது தவறு, இது தவறன்று என அறியா நாயேன் குழைந்து சமர்ப்பிக்கின்ற சொல்

மாலையை ஏற்று அருள்வாயாக! புலன்கள் என்னை ஆட்டி வைக்க நானும் அவைகளுக்கு ஏற்ப ஆடிப் பொய்ந்நெறியில் விழுகின்றேன். அத்தகைய என்னைக் கை விடாதே! புறத்தே தள்ளாதே!; பெருமானே! உன் சீர்களை என் நாவினுற் பாட விரும்புகின்றேன், எழுந்தருளுக! பெருந் துறைப் புண்ணியனுக இம் மண்ணிடை வந்து தோன்றி என் பேத புத்தியைத் தொலைத்தனை; வெள்ளம் வற்றச் சிறு மீன்கள் துவளுவது போலப், பெருமானே! உன்னைப் பிரிந்த நான் துவளுகின்றேன். என்னைக் கை விடாதே; என் பிழைகளைப் பெருக்குகின்றேன். அன்பைச் சுருக்கு கின்றேன்; அத்தகைய வெற்றடியேனைக் கை விடாதே! என் பொய்யெல்லாம் அழியவேண்டும், உன் தாளில் நான் புகப்பெற்று இந்த யாக்கையை விடுதற்கு மெலிகின்றேன்; என்னைக் கைவிடாதே! பிரமனும் மாலும் இந்திரனும் உனது அருள் கிடையாதா என்று காத்து நிற்கப், பெருமானே! நீ என்னைப் பாராட்டி உன் திருவடியைக் காட்டி, நான் காட்டிய குறிப்பில் நிற்க என்று பணித்து; என்னை உனது அடியார்களுடன் சேர்ப்பாயாக! தேவர்கள் தொழும் திருவடியை உடைய ஈச! அன்று எனக்கு அன்பு பெருகும்படி உனது கருணையைக் காட்டி, உனது திருவடியையும் காட்டி, நான் கசிந்து உருகும்படி என் துன்பங்களை நீக்கி என்னை ஆண்டருளின அந்தப் பேரருளை யார் உணர்ந்தாரோ அவரே எனக்குத் தலைவர் ஆவார். மருண்ட மனத்துடன், பெருமானே! உன்னைப் பிரிந்து வருந்துகின்ற என்னை 'வா' என்று அழைத்து, ஞானியராம் உனது அடியாருடைய கூட்டத்தினைக் காட்டா விட்டால், கூட்டத்தைக் காணுது நான் செத்துப் போனல், உலகோர் சிரிக்க மாட்டார்களா? மருளுகின்ற ஒரு பித்தன் வருகின் ருன் என்று என்னைக் கண்டவர்கள் சொல்லி அஞ்சா வண்ணம் நான் உன் அன்பைப் பெறவேண்டும், பெருமானே உன்னுடைய சீரை மறப்பித்து இவ்வுடலிற் புக என்னை அனுப்பித் திரியும்படி செய்து விட்டாய். அடியேனுடைய அறியாமையை அறிந்து நீ அருளுடன் என்னை அழைக்கும் நாள் எப்போது? திருமாலும் ஓலமிட்டு

அலறி விரும்பும் உனது திருவடி மலரை அடையும்படி மரக்கண்ணை உடைய அடியேனையும் வந்து சேரும்படி பணித்து அருளுக. பெருமானே! உன்னுடைய திருவடியைச் சேரும்படி என்னைக் கூப்பிடுவாயோ, அல்லது நரகத்தில் தள்ளுவாயோ உனது குறிப்பை அறியேன். ஐம்புலன்கள் என்னுடன் மாறுபட்டு என்னை வஞ்சித்த காரணத்தால் நான் உன் திருவடிமீது அன்பிலாது வேறுபட்டேன். என்னைக் கைவிடாதே.

பெருமானைக் குறுகாது நெடுங்காலம் இங்கிருந்து இவ்வுடலைக் காக்கின்றேன். என் உயிர் பிரியக்கூடாதா? மொய்த்த நரம்புகள் கயிறாக மூளை, எலும்பு தோல் இவை போர்த்துள்ள இந்தச் சட்டையுள் இனி இருக்க முடியாது. என்னைக் கூவி அழைத்துக் கொள்.

பெருமானே! அறியாமையால் நான் உன் திருவருளை மறுத்தேன்; என்னை வெறுத்துக் கை விட்டு விடாதே! சிவனே! ஊன் நெருங்கிய இந்தக் காயம் வேண்டாம். பெரியோர் சிறு நாய்களின் பொய்யைப் பொறுக்க வேண்டும். வெள்ளத்துள் நா வற்றியது போல எனக்குள்ள துன்பத்தினின்றும் என்னை நீக்கிக்கொள்ள முடியவில்லை. பெருமானே! "வருக." என் நாவினால் உன் சீர்களை நான் பாட வருக. "யான் எனது" என்று அவரவரைக் கூத்தாட்டுகின்ற உன்னை நான் என் சொல்லி வாழ்த்துவேன். பெருமானே!

## 16. மணிவாசகரும் சிவனும் பாண்டியனும்

மாயையாம் இருள் கெடுதற்கும். எப்பொருளும் விளங்குதற்கும், மூல விளக்காயுள்ள சோதிமயமான சிவபிரானைப் பாண்டியனும் இத்தன்மையன் என்று சொல்ல வல்லவன் அல்லன்!

## 17. மணிவாசகரும் தேவியும்

"எம்மை ஆளுடையாள்" எம்பிராட்டி, நம்மை ஆளுடையாள்" என்றெல்லாம் தேவியைப் போற்றுகின்றார் மணிவாசகர். "தேவியும் பிரானும் வந்து நம்மை ஆளும் பொருட்டு செம்பொற் சுண்ணம் நாம் இடிப்போமாக" என்கின்றார். குணம், குறி இலாத பெருமான் என்னை ஆண்டு கொண்டு அருளிய போது தேவியுடன் வந்தார். பெருமானும், தேவியும் என்னை வந்து ஆளா விட்டால் நானும் என் உள்ளமும் பெருமானுக்கு எவ்வளவு தூரத்தில் இருப்போமோ! என வியக்கின்றார். மழையே! தேவி நம்மாட்டுப் பொழியும் திருஅருள் போல நீ பொழிவாயாக! என்கின்றார்.

## 18. மணிவாசகர் சிவபிரானையும், தேவியையும் பலபட உரிமை பாராட்டுவது

"எங்கள் அப்பன், எங்கள் அரன், எங்கள் ஈசன், எங்கள் உத்தமன், எங்கள் சிவலோகன், எங்கள் செல்வம், எங்கள் நாயகன், எங்கள் பாண்டிப்பிரான், எங்கள் மன்னன், எங்கள் வாழ்வு, எம் கூத்தன், எம் கோமான், எம் அண்ணல், எம் அமுது, எம் உடையான், எம் பரமன்' எம் பேரருளாளன், எம் பொருள், எம் மருந்து, என் ஆரமுது, என் உயிர்த்தலைவன், என் சிவகதி, என் வழி முதல், என் தாதை, என் பொல்லாமணி, என் மது வெள்ளம், என்னுள் எழு பரஞ்சோதி, என்னை ஆள்வான், என்னைக் கழுமணி, எம்மை ஆளுடைப் பிச்சன், என்னை வளர்ப்பவன், என்னை விடற்கு அரியான், எனக்கு எய்ப் பில் வைப்பு, எனது அரசு" எனப் பெருமானையும்.

"எங்கள் பிராட்டி, எம் தரம் ஆளுமையாள், எம்மை ஆளுடையாள்' எனத் தேவியையும் மணிவாசகர் போற்றி யுள்ளார்.

## 19. மணிவாசகர் கண்ட அதிசய நிகழ்ச்சிகள்

[பதிகங்கள் 26, 51]

### I. மணிவாசகர் கண்ட அதிசய நிகழ்ச்சிகளாவன

1. பெருமான் தன்னைப் பொய்ந் நெறியினின்று நீக்கி மெய்ந் நெறியை அருளியது.

2. நரகிடை வீழ்தற்கு இருந்த தன்னை ஆண்டு தமது அடியாருடன் கூட்டியது.

3. நீதியாவன எவையும் நினைக்காத, நினைப்பவரிடமும் கூடாத, தன்னைப் பெருமான் ஆண்டு அடியாருடன் கூட்டியது.

4. பரம்பொருளைப் பாராமல், வினைக்கு ஏற்றபடி வினைப்பயனை அனுபவிக்கும் பித்தருடைய சொல்லை நம்பாதிருக்கும்படி பெருமான் திருவருள் பாவித்துத் தம் அடியாருடன் கூட்டியது.

5. பிரானைப் பரவுகின்றவர்களை அணுகாமல், மலர் பறித்துப் பிரானை ஏத்தாமல், மாதர்கள் பால் சென்று குடிகெடுகின்ற தன்னைப் பெருமான் ஆண்டு அடியாருடன் கூட்டியது.

6. இடர்க்கடற் சுழியிற் பட்டிருந்த தன்னை ஆண்டு அடியாருடன் கூட்டியது.

7. மண்ணிற் பிறந்து இறந்து, மண்ணாதற்கு ஒருப்பட்ட தன்னை ஆண்டு அடியாருடன் கூட்டியது.

8. தனது வல்வினை போயறத் தாய்போல் தன்னை ஆண்டு அடியாருடன் கூட்டியது.

### II. தான் பெற்ற கீழ்க்குறித்த பேறுகளை வேறு யார் பெற வல்லார் என்றது

பேறுகள்

1. தான் செய்த குற்றங்களை அறுத்துத் தனக்கு முடிவான இன்பத்தை அளித்தது.

2. ஓங்காரத்தின் உட்பொருளை அருளியது.

3. பெருமான் தமது கூத்தைத் தான் அறியும் வண்ணம் அருளியது.

4. சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கித் தன்னை ஆண்டது.

5. தூய நெறியிற் சேரும்வண்ணம் அருளியது.

6. தன்னை ஒரு பொருளாக்கி நாயைச் சிவிகையில் ஏற்றி வைத்தது போலத் தனக்கு அருளியது.

7. தமது திருவடியைச் சேரும் வண்ணம் அருளியது.

## 20. மணிவாசகர் கண்ட அற்புத நிகழ்ச்சிகள்

[பதிகம் 41]

1. தன்னைக் கண்டித்துக் கண்டித்துப் (பேரின்பச்) சர்க்கரையை ஊட்டியது.

2. பிரமன், மால் இவர்களுக்கு எட்டாத திருவடியைத் தனக்குக் காட்டித் தன்னை ஆண்டது.

3. தனக்கு அறிவு தந்து, அரிய துணைவனாய் நின்று ஆண்டது.

4. தேவியொடும் கூடி வந்து தன்னை ஆண்டது.

5. தன் ஆசைகளைத் தீர்த்துப் பெருங்கருணையுடன் ஆண்டது.

6. பொய்யெலாம் விடும்படி தனக்குத் திருவருள் தந்து, தமது பொன்னடி இணை காட்டி, மெய்யனாய் வெளிப்போந்து தன் அகம் புகுந்து ஆண்டது.

## 21. மணிவாசகர் பெற்ற தரிசனப் பேறுகள்

1. தமது கண் களிகூரப் பெருமானுடைய கழலிணைகளைக் கண்டது.

2. காட்டாதன எலாம் காட்டப் பெற்றது.

3. பெருமான் தமது திருமேனியைக் காட்டித் தன்னைப் பணி கொண்டது.

## 22. மணிவாசகர் பெற்றபேறு, பெறும் பேறு, நன்றி பாராட்டல், கருணையை வியத்தல்

["மணிவாசகரும் சிவனும்" என்னும் தலைப்பு 1-ம் பார்க்க]

முழுப்பதிகங்கள் 26, 31, 38, 41, 42. 51

"எந்தாய்!" நான் அவா வெள்ளக் கள்வன். நீ என்னை ஆட்கொண்ட வகைதான் என்னே! உன் வண்ணம் காட்டி, வடிவு காட்டி வழியற்ற என்னைத் திண்ணமாகப் பிறவாமற் காத்தாட் கொண்டாய். உன் கருணையை நான் எவ்வாறு நினைய வல்லேன். என் பெருங்கருணையாளனே! நீ என்னை உனது அடியனாக்கினாய். எட்டினோடிரண்டு அறியாத என் பந்தத்தைத் தொலைத்து ஆண்டுகொண்டு, யாவரும் காணப் பட்டிமண்டபத்தில் என்னை நீ ஏற்றினாய். பிறவிக் கடலில் துன்ப அலைகளால் மோதப்பட்டு, மாதர்கள் என்னும் புயற் காற்றால் கலக்குண்டு, "காமம்" என்னும் சுறாமீன் வாய்ப்பட்டு, இனிப் பிழைப்பது எப்படி என்று எண்ணி, ஐந்தெழுத்தென்னும் தெப்பத்தைப் பிடித்துக்கிடக்கின்ற என்னைப், பெருமானே, முத்திக்கரை காட்டி ஆட்கொண்டாய். நாட்டார்கள் காண இங்கு நாய்க்குத் தவிசு இட்டது போல எனக்குக் காட்டாதன எல்லாம் காட்டிக், கேளாதன எல்லாம் கேட்பித்து, நான் மீண்டும் பிறவாமல் என்னைக் காத்து ஆட்கொண்டாய், இஃது என்ன மாய வித்தை! அநேக முனிவர்கள் உன்னைக் காண்பதற்கு மிகவும் வாடி நிற்கப்,

பெருமானே! நீ இந்தப் பாவியேனாகிய என் பணியை விரும்பி ஏன்று கொண்டாய். இந்த வஞ்சகப் பெரும் புலையனாகிய என்னை உன் கோயில் வாயிலில் பித்தனாக்கினாய். வான நாடரும் அறிய ஒண்ணாத நீ என்னை இனிதாக ஆண்டு கொண்டது ஓர் அற்புதமே! பெருமானே! என் வல்வினை என்னும் காட்டை உன் திருவருள் என்னும் தீ பற்றி எரித்து விடும்.

## (1) அம்மானை

நம்மைச் சுற்றிய சுற்றத் தொடர்புகளை அறுக்கும் பெருமானுடைய புகழைப் பாடி, நம் பாசங்களின் பற்று அற வேண்டி நாம் பற்றிய பேரின்பத்தைக் குறித்து நாம் பாடி, அம்மானை ஆடுவோமாக.* பெருந்துறைப் பெருமான் காட்டாதன எல்லாங் காட்டிச், சிவம் காட்டித், தன் தாமரைத் தாள் காட்டித், தன் கருணைத்தேன் காட்டி, உலகோர் பரிகசிக்க நாம் வீட்டின்பம் அடைய நம்மை ஆட்கொண்ட திருவருளைப் பாடி, அம்மானை ஆடுவோமாக—என்று மணிவாசகர் தலைவி நிலையில்நின்று தம் தோழியரை அம்மானை ஆட அழைக்கின்றார்.

## (2) பொற்சுண்ணம்

தேவியும் பிரானும் வந்து நம்மை ஆளும் பொருட்டுச் செம் பொற்சுண்ணம் நாம் இடிப்போமாக என மாணிக்க வாசகர் தாம் தலைவியாய் நின்று தோழியரை அழைக்கின்றார்.

## (3) கோத்தும்பி

பிறப்போடு இறப்பு என்னும் சித்த விகாரக் கலக்கத்தை நீக்கித் தெளிவு தந்த வித்தகத் தேவனும் பெருமானிடம் சென்று, 'கோத்தும்பீ! நீ ஊதுவாயாக', வானோர் பெருமான் என்னை ஆட்கொள்ளாவிட்டால் நான் எந்த மூலை? என் உள்ளம் எதற்குப் பயன்? எனக்கு ஞானம் ஏது? இந்த உலகில் யார் என்னை (ஞானியென)

அறிவார்? அப்படி என்னை ஆண்ட திருவடிக் கமலங்களை, அரசவண்டே! நீ அடைந்து ஊதுவாயாக!—எனத் தும்பியை வேண்டுகின்றார் மணிவாசகர்.

## (4) தெள்ளேணம்

1. "அடியேனை ஆண்டு, பத்திக் கடலுள் பதித்த பரஞ்சோதியைத் தித்திக்கும்படி பாடியும்,

2. பெருமானுடைய அருட் கழல்கள் நமது சித்தத்தில் புகுந்த அற்புதத்தைப் பாடியும்,

3. பயனற்ற தேவர்களுடைய பயனற்ற நெறியில் நான் அழுந்தாமல், பிறப்பென்னும் மாயத்தினின்றும் காத்து என்னை ஆண்டு நல்ல புதிய அறிவை எனக்குக் கொடுத்த உடனே, "நான்" என்னும் தற்போதம் அற்றுப் போய், சிவமாம் தன்மை அடைந்ததைப் பாடியும்,

4. பெருமான் என்னை ஆண்டவுடன், துவித தன்மை ஒழிந்து, வினைச்சுற்றம் ஒழிந்து, பாசங்கள் ஒழிந்து, வாக்கு ஒழிந்து, செயல் ஒழிந்து நிற்கும் அற்புத நிலையைப் பாடியும்,

5. கருவெந்து வீழக் கடைக்கணித்து எனது உள்ளத்திற் பெருமான் புகுந்ததனால் நான் அடைந்த பேரின்பச் செல்வத்தைப் பாடியும்,

6. காற்றூடி போன்ற பிறப்பு - இறப்பு, அறம் - பாவம், என்னும் இவைகளைக் குறித்த அச்சத்தைத் தவிர்த்து, என்னை ஆண்டு கொண்ட பெருமானுடைய திருவடிகளை நான் மறவாவண்ணம் பெருமான் எனக்கு அருள்புரிந்த அந்தச் சிறப்பைப் பாடல்களாகப் பாடியும்,

7. சிவம் வந்து, நம்மை உருக்கும், பணிகொள்ளும், என்பதைக் கேட்டு உலகமெல்லாம் வியப்புடன் நகை புரியும் தன்மையைப் பாடியும்,

8. பாரோர், பாதாளத்தார், விண்ணோர் ஆகிய யார்பாலும் சாராத வகை அருளி என்னை ஆட்கொண்டு அருளிய பெருமானுடைய நேர்மையைப் பாடியும்,

9. பெருமான் தேவியுடன் இப்பூமிக்கு வந்து என்னை ஆண்ட திறத்தை மொழிந்து, உள்ளத்தில் ஒளி பெருகக், கண்களில் நீர் பெருகப் பாடியும்,

10. திருமால், பிரமன், நூல்கள் இவை நுழைந்து காணமுடியாத நுண்ணியனாய் வந்து அடியேன் பால் புகுந்து, அன்பு தந்து பெருமான் என்னை உருக்கிய தன்மையைக் கண்ணீர் மல்கப் பாடியும்,

நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக!" என்று மணிவாசகர் தலைவி நிலையில் நின்று தோழியர்க்குக் கூறுகின்றார்.

## (5) தோணோக்கம்

1. சொல்லுக்கு அடங்காத உள்ளொளியாகிய உத்தமனும் பெருமான் வந்து எனது உள்ளத்திற் புகுந்தவுடன் கரைக்கு அடங்காத காமப் பெருங்கடலை நான் கடந்தேன். அங்ஙனம் கடந்தவுடன் ஐம்பொறிகளாகிய பறவைகள் எங்கேயோ பறந்து ஓடின, இங்ஙனம் நான் நற்கதி நன்கு அடைந்ததைப் பாடியும்,

2. ஊழிக்காலத்தும் அழிதல் இல்லாத மாசிலா மணீசர் என் பிறவியின் தாழ்ப்பாளைப் பிடுங்கி எறிந்ததைப் பாடியும்,

3. கல் போன்ற என் நெஞ்சம் கசிந்து உருகும்படி என்னுள் புகுந்து அருளி, நல்வழியில் என்னைச் சேர்த்து, அதை உலகோர் அறியும்படி வைத்த புகழைப் பேசும் தன்மையான வகையைப் பாடியும்,

4. என் சித்தத்தைச் சிவமாக்கி நான் செய்யும் செயல்களைத் தவச்செயல்களாக்கிய பெருமானுடைய கருணையைப் பாடியும்,

நாம் தோணேக்கம் என்னும் ஆடலை ஆடுவோமாக!''—என மாணிக்கவாசகர் தலைவியாக நின்று தமது தோழியரை அழைக்கின்றார்.

## (6) பொன்னூசல்

"முனிவர் கூட்டங்களும், பல நூறு கோடித் தேவர்களும் காத்துநிற்கத், தமது கருணை வெள்ளத்தில் ஊறி நிற்கும் பெருமானுடைய உத்தரகோசமங்கைத் தலத்தில் உள்ள அவருடைய திருக்கோயிலைப் பாடி நாம் **பொன்னூசல்** ஆடுவோமாக!'' என மணிவாசகர் தலைவி நிலையில் நின்று தம் தோழியரை அழைத்துக் கூறுகின்றார்.

## (7) அன்னை

***அன்னே!** பெருமான் கருணைக் கடலினர். உள் நின்று உருக்குவர். உள் நின்று உருக்கி நிலைபெற்ற ஆனந்தக் கண்ணீரைத் தருவர்.'' என்று மாணிக்கவாசகர் தலைவி நிலையில் நின்று தோழியை நோக்கிக் கூறுகின்றார்.

## (8) குயில்

**குயிலே!** 1. அந்தணனுகி இங்கே வந்து தனது அழகிய சேவடியைக் காட்டி "எனது அடியான் என்னும் உறவினை உடையவன் இவன்' என்று கூறி என்னையும் ஆட்கொண்ட தேவர்பிரான் வரும்படி கூவுவாய்.

2. இப்பூமியில் தன் பாதங்களைக் காட்டி, எனது பாசத்தை அறுத்து ஆண்டு அமுது அளித்து ஊறும் ஆனந்தனும், பொன்மேனிப் பிரானுமாகிய அமுதினை நீ வரும்படி கூவுக!

பெருமானே! அன்பினுல் அடியேன் ஆவியோடு ஆக்கை ஆனந்தமாய்க் கசிந்து உருகும்படி நான் பெறத் தகாத இன்னருளைப் பாலித்தாய்; இதற்கு என்ன

* 'அன்னே' என்னும் சொல் தோழியையும் குறிக்கும் (தொல்காப்பியம்)

கைம்மாறு செய்வேன்! முடிவில்லாத பேரானந்தத்தைப் பெற்றேன். நீ என் ஆவி, ஆக்கை கனியும்படி உட புகுந்து நின்று உருக்கிப், பொய்யிருளைக் கடிந்த மெய்ச் சுடர் ஆவாய்; நீ என் உடலிடங் கொண்டாய்; நான் இதற்கு என்ன கைம்மாறு செய்ய வல்லேன்! நீ உன்னை எனக்குத் தந்து என்னை நீ கொண்டாய், ஆதலின் சங்கரா! நம் இருவருள் யார் சதுரர்? நான் உன்னிட மிருந்து முடிவிலாத ஆனந்தத்தைப் பெற்றேன், என் னிடமிருந்து நீ யாது பயனைப் பெற்றாய்!

உலகத்துப் பெரியோர், இந்திரன், பிரமன், தேவர்கள் இவர்கள் எல்லாம் காத்து நிற்க என்னை நீ விரும்பி இனிது ஆண்டாய், பெருமானே! மாதர்களின் வலையில் அகப்பட்டுப் புரள்கின்ற என்னை அங்ஙனம் புரளாமல் காத்து அருளி, என் கண்ணில் அமுதென ஊறித் தித்தித்து, என் பிழைக்கு இரங்கும் கருணைக் கண்ணனே! உன் மாட்டு விருப்பம் இல்லாத என்னை ஆண்டு பயனற்ற என் தொண்டை ஏற்றுக் கொண்ட கருணாலயனே! பேத புத்தியை ஒழித்துக் கற்பை அளித்த பெருந்துறைப் பெருவெள்ளமே! சீர் நிறைந்த திருவருளால் என் சிந்தனையைத் திருத்தி ஆண்ட சிவலோகனே! உன் கழல் இணைகளை என் கண்கள் களிகூரக் கண்டேன். அந்தத் திருவடிகளை நான் இரவும், பகலும் எண்ணுவதுடன் இந்த உடலைவிட்டு நீங்கும் வழி யாது, உன் திருவடியில் புகும் வழி யாது, என்று எண்ண மாட்டேனோ? எனது அடிமை மிக அழகாய் இருக்கின்றது.

கடல் அலைபோல் வருகின்ற கலக்கத்தையும், குற்றங் களையும் அறுத்து, என் உடலிலும் உயிரிலும் புகுந்து, அங்கிருந்து நீங்கா வண்ணம் நிறைந்துள்ளார் பெருமான். என் உடலினின்றும் பிரியாத பெருமான் அவர். வானோர் களும் அறியாத பேரின்ப வளத்தை (செல்வத்தை)த்திருப் பெருந்துறைப் பெருமான் எனக்கு ஈந்தனர். அவர் உறுதியாகவே என் நெஞ்சில் வீற்றிருந்து, அத்து விதமாய் என்னோடு கலந்து, யான் ஆகி நின்றார். மாய

மாய் வந்த காட்டுக் குதிரையின்மேல் பெருமான் எழுந்தருளி வந்து, எதிர் நின்றவரைத் தம் வசப்படுத்திய வுடன் இப்பிறப்புக்குக் காரணமான பகைகள் எல்லாம் கழிந்து ஒழிந்தன. தமது கருணையைக் காட்டிக், கொடிய வினைகளை அறுத்துப், பழைமையாக வரும் ஆணவ மலப் பற்றைத் தொலைத்து நம்மை ஆண்ட பெருமான் பாண்டிய அரசு என்னும் பெரும்பதவி ஒன்றைமாத்திரமா தருவார்? உலக முழுவதையும் ஆளும் (முத்தி என்னும்) பெருங்கொடையையே தருவார்; ஆதலின் அக்கொடையைப் பெறுதற்கு முந்துமின்கள்!

அளவிலாத ஆனந்தத்தை அருளி இந்தத் திக்கற்றவனுடைய மனத்தையே கோயிலாகக் கொண்டு ஆண்ட பெருமானே! என் குடி முழுது ஆண்டு இவ்வுலக வாழ்வு நீங்க என்னை வாழ்வித்த மருந்தே! துன்பம், பிறப்பு, இறப்பு, மயக்கம், இவைகளின் தொடக்கை அறுத்த நற்சோதியே! பால் நினைந்து ஊட்டும் தாயினும் அதிக அன்புடன் நீ பாவியேனுடைய ஊனை உருக்கி, உள்ளொளியைப் பெருக்கி, அழிவிலாத ஆனந்தமாய தேனைச் சொரிந்து, என்னுடன் ஆங்காங்குப் போந்த செல்வமே!

என் பாசவேரை அறுத்துப் பரம் பொருளாம் உன்னைப் பற்றுமாறு அடியேனுக்கு அருளின பெருமானே!

என் பிறவி வேரறுத்து, என் குடி முழுதாண்ட பிஞ்ஞகா! யான் செய்யும் பூசனையை உகந்து என் சிந்தையுள் புகுந்து உனது அழகிய திருவடியைக் காட்டிய பெருமானே!

பொய்ம்மையைப் பெருக்கிப் பொழுதினைப் பயன் படாத வகையிற் சுருக்கித் திரியும் புழுத்தலைப் புலையனுகிய எனக்குச் செம்மை நிறைந்த சிவபதத்தை அளித்த செல்வமே!

இடைவிடாது நான் மூத்து மண்ணுகும்படி முழுப் புழுவுக்கு இடமாம் இவ்வுடலிற் கிடந்து சீழ்மை அடையா

வண்ணம் காத்து என்னை ஆண்ட கடவுளே! மெய்ப் பதத்தை அறியும் திறம் அற்ற எனக்குச் சிறப்புப் பொருளைத் தந்த என் அன்பே! நான் உன்னைச் சிக்கெனப் பிடித்தேன். இனி என்னைவிட்டு நீ எங்கு எழுந்து அருளுவது?

தில்லை ஆண்டவனைக் கொண்டு இப் பிறப்பில் நிகழக் கூடிய வினைப்பயன்கள் எல்லாவற்றையும் இவ்வுலகிலேயே நான் ஒழித்துவிட்டேன். தில்லை ஆண்டவர் என் எலும்பு களை உள்ளுருக்கி, இருவினையின் வலிமையை அழித்து, என் துன்பங்களை நீக்கிப், பற்றுக்களை ஒழித்துப், பழைய மலங்கள் அனைத்தையும் அழித்து, அன்புடன் என் உள்ளத்திற் புகுந்தார்.

திருஓடும், கோவணமுமே உறவு எனக் கொண்டு, உள்ளம் கசிந்து, நான் தேடும் பொருள் சிவன் கழலே எனத் தெளிந்தது தில்லை ஆண்டவன் திருவருளே!

பெருமான் தன் திருவடியை என் தலைமேல் நட் டமையால் பொல்லாத ஐம்புலன்களின் வல்லரட்டை அடக்கும் திறம் எனக்கு வாய்த்தது; தில்லை ஆண்டவன் திருவருளால் பசுபாச உணர்ச்சி ஒன்றுமில்லாமல் அழிந்தது; நான் அவருடைய கருணைத் தேனைப் பருகினேன்; சிவபதத்தை அறிந்தேன். அவருக்கு என் புன்தலையால் அடிமைத் தொழில் பூண்டேன். அவரை நம்பின என் சிந்தை அவரைச் சேரும்படியான விருப்பத் தைத் தந்தது அவருடைய திருவருளே! விளைவில்லாத பாழான நிலத்தை உழுது பயன்பெறுமல் இருக்கின்ற எனக்கு முன் செய்த தவப்பயனாற் பொற்கிழி கிடைத் தாற் போலக் கிடைத்த பிரானுக்கு என்னுடைய புன் தலையால் நரன் பணி செய்யும் பேறு பெற்றது தில்லை ஆண்டவன் திருவருளால் தான். பெருமானுடைய தாளைச் சேர முயற்சி செய்த அடியேன் இனி இறவேன், பிறவேன். பெருந்துறைப் பேரருளாளன் என் பிணி கெட அருளினான். எனக்கு இன்பம் அளித்து, என்னை உருக்கி, என் உயிரை

உண்கின்றார் எம்மான்! நம்மை ஆட்கொண்ட தகுதி உடைய பெருமானை அடைவதற்குத் தளராது ஊக்கத்துடன் இருப்பவர் தம் வயம் உடையவர் ஆவர்.

நெஞ்சமே! நீ நம்மை ஆண்டவனுடைய இணையடியையே சிந்தித்து இருப்பாயாக! அவர் உனக்கு எல்லாம் தருவர். பெருமான் என் சிந்தையையே உகந்து ஊராகக் கொண்டார். பெருமான் என்னைப் பித்து ஏற்றும், என் பிறப்பறுக்கும், என் மனத்தைச் சொல்லுதற்கரிய மத்தமாக்கும்.

எனது பிறப்பறுக்கும் பேராளன் எனது முன்னை வினை இரண்டையும் வேர் அறுத்து என்முன் நின்றார். யாவர்க்கும் மேலான அளவிலாத சீரை உடைய அவர், யாவர்க்கும் கீழான அடியேனை, யாவரும் பெற்றறியா இன்பத்துள் வைத்தார். அப்படி வைத்த அவர்க்குக் கைம்மாறு செய்யும் வகையை அறிந்திலேன். என் சிந்தையுட் பொருந்திய ஒருத்தன் (பெருமான்) பெருக்குகின்ற ஒளியானது எனக்கு (இம் மண்ணுக்கு,இனி) வாரா வழியை அருளி எப்போதும் நல்ல அமுதாய் அமைந்துள்ளது

நெஞ்சமே! கடையேனைத் தொண்டாகக் கொண்டு அருளும் கோகழிப் பெருமானுக்கு யான் செய்யக் கூடிய கைம்மாறு ஏதேனும் உண்டோ? நீ உரைப்பாயாக!

பெருமானாகிய நல்ல மருந்தை என் மனத்துள் வைத்து, 'பெருந்துறையே!' என்று சொல்லி, அந்த மாசிலா மணியின் மணிவார்த்தைகளைப் பேசி, என் பிறப்பை அறுத்தேன்.

பெருமான் என் முன் எழுந்தருளப் பெற்றால் பல் வகையாய ஆசைப் பரப்புக்கள் நீங்கி மேலான பொருள் தோன்றுதல் கூடும்.

பெருமானே! என்னால் அறிதற்கு முடியாத பதவியைத் தந்தாய்; நான் அதை அறியாமல் கெட்டேன்; உன்னால் ஒன்றும் குறைவு இல்லை.

பெருமானே! எனக்கு உன்பால் விருப்பத்தைக் காட்டி, மீண்டும் பிறவா வழியைக் காட்டி, முத்தி வீட்டுக்குச் செல்லக் கூடிய வழியேறும் வகையைக் காட்டி ஆண்டாய். உன்னை இந்தக் கொடியேனாகிய நான் கூடுவது எப்போது?

## 23. மணிவாசகர் தமது சென்னி பெருமான் சேவடிக்கண் மன்னி மலரும் என்றது

[பதிகம் 42]

அழகன், அன்பர்கள் அன்றிப் பிறர் அறிய ஒண்ணாத சோதியான், எமது பணியைக் கொள்பவன், எம்மை ஆட்கொண்டவன், "பிறவி" என்னும் கடலை நீந்தத் தனது பேரருளைத் தந்தவன், உறவு செய்து என்னை உய்யக் கொண்டவன், முத்தி தந்து இந்த மூவுலகுக்கும் அப் புறத்தில் எம்மை வைத்தவன்,—இத்தகைய பெருமானுடைய தூய மாமலர்ச் சேவடி, அன்பர்க்கு அருளும் சேவடி, மெய்யடியார்க்கு இன்பம் தழைத்திடும் செம் பொன் மாமலர்ச் சேவடி, "காயத்துள் அமுது ஊற ஊற நீ கண்டுகொள்" என்று எனக்குக் காட்டிய மலர்ச் சேவடி, என் சித்தத்துள் நிறைந்துள்ள சேவடி, தொண்டர்க்குத் தவறுதல் இல்லாமல் மலர்ந்து ஒளிரும் சேவடி, உண்மைப் பெருக்கமாம் திறமை காட்டிய மலர்ச் சேவடி—நமது சென்னியிற் பொருந்தி பொலிவு தரும்—என்கின்றார் மணிவாசகர்.

## 24. மணிவாசகர் தமக்குத் தலைவர் யார் என்று கூறுவது

[பதிகம் 43]

(1) முன்பு கேவலம் பன்றியாகிப் பெருமான் பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்த திருவுள்ளக் கருத்தை அறியும் திறமை வாய்ந்த பெரியோர்களும்,

---

(1) இது பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்த திருவிளையாடல்.

(2) எல்லாவற்றுக்கும் ஆதிஆகிய பெரும்பொருளைப் பெருமான் வெளிப்படுத்திய அருட் செய்கையை அறிந்த பெரியோர்களும்,

(3) இடவை என்னும் தலத்து மட நல்லாளுக்குச் சீலமிக்க கருணையைக் காட்டிய பெருமானுடைய அன்புத் திறத்தை அறிந்த பெரியோர்களும்,

(4) கடல் வாணனுக்குத் தீயில் தோன்றிய அழகிய மங்கையர்களைச் சேர்ந்தருளிய பெருமானுடைய திரு உருவத்தை அறியவல்ல பெரியோர்களும்,

(5) இலங்கையில் பந்தணை விரலியாம் வண்டோ தரிக்குப் பெருமான் அருளிய பரிசை அறிந்த பெரியோர் களும்,

(6) என் துன்பங்களைத் தொலைத்து என்னை ஆண் டருளிய திருஅருட் டன்மையை அறிந்த பெரியோர்களும்,

(7) மங்கையர் நிறைந்து வாழும் மதுரைக்கு வணிகர் கூட்டத்துடன் வந்து வளையல்களைக் கவர்ந்த ஆடலின் காரணத்தை அறிந்த பெரியோர்களும்,

(8) குதிரையின்மேல் ஏறிவந்து பெருமான் அன்று தம்முடைய அன்பர்களை ஆண்டுகொண்ட திருவருளின் தன்மையை அறிந்த பெரியோர்களும்,

(9) ஒரு பெண்ணின்மீது காதல்கொண்டு அழகிய வலைவீசிப் பெரிய மீனைப் பெருமான் பிடித்த திறத்தை அறிந்த பெரியோர்களும்,

---

(5) வரலாறு என்னும் தலைப்பு (IV—211) பார்க்க.

(7) இது வளையல் விற்ற திருவிளையாடல்.

(8) நரி பரியாக்கிய திருவிளையாடல்.

(9) இது வலைவீசிய திருவிளையாடல்.

திருவிளையாடல் என்னும் தலைப்பு (IV—112 தலைப்புப் பார்க்க)

(10) பெருமான் இப் பூமிக்கு வந்து எனது பேத புத்தியைக் கெடுத்து அருளிய பெருமையை அறிந்த பெரியோர்களும்,

ஆகிய இப் பெரியோர்களே யாம் வணங்கும் தலைவர் ஆவார்கள்.

## 25. மணிவாசகரின் தீரம் (உறுதி)

(1) பெருமானே! என்னை ஆட்கொண்ட அப் போதே என் ஆவி, உடல், உடைமை ஆகிய எல்லா வற்றையும் நீ கொண்டனையல்லவோ! அப்படியிருக்க, இன்று எனக்கு இடையூறு எப்படி வரும்?

(2) உன்னைக் குறுகின எனக்கு இனி யாதொரு குறையுமில்லை.

(3) சிவனே! நான் வேறு ஒருவரைத் தொழ மாட்டேன், துதிக்கமாட்டேன், துணை என நினைக்க மாட்டேன்.

(4) பிறப்பு, இறப்பு இவை இரண்டையும் அஞ்சேன்.

(5) நின் பாதம் எனக்கே உரியது. நான் அதன்கண் அடைக்கலம் புகுவேன்.

(6) யாம் யாருக்கும் அடிமை ஆக மாட்டோம், எதற்கும் பயப்பட மாட்டோம்.

(7) விண்ணரசையும் நான் வேண்டேன். மண் ஆள்வதையும் நான் மதிக்கமாட்டேன்.

(8) நான் புகழ் வேண்டேன், செல்வம் வேண்டேன், மண் வேண்டேன், விண் வேண்டேன், பிறப்பு, இறப்பு வேண்டேன், சிவம் வேண்டார் தம்மை ஒருநாளும் தீண்டேன், திருப்பெருந்துறை இறைவன் தாளைச் சேர்ந்துள்ளேன்.

## 26. மணிவாசகர் போர்த் தலைவராக நின்று சேனைகளுக்குக் கட்டளையிடுதல்

[பதிகம் 46—திருப்படையெழுச்சி]

மணிவாசகர் சேனைத்தலைவராக நின்று,

(1) மாயப்படை வாராது இருக்கவும்,

(2) வானஊர் கொள்ளவும்,

(3) அண்டர் நாடு ஆளவும்,

(4) அல்லற் படை வாராதிருக்கவும்,

பின்வருமாறு சேனைகளுக்குக் கட்டளை இடுகின்றார்.

(1) கவசம்: சேனைகளே! நீங்கள் திருநீற்றுக் கவசத்தை உடல் முழுதும் மூடும்படி அணிமின்கள்.

(2) குடை: மதிபோலும் வெண்குடையை எடுத்துப் பிடியுங்கள்.

(3) பறை: பெருமானுடைய நாதப் பறையை அறைமின்கள்.

பின்வருமாறு அணி வகுக்கின்றார்.

(1) சூழ்அணி: பக்தர்களே! நீங்கள் சூழ அமைந்து செல்லுங்கள்.

(2) தூசி: (முன் அணி); தொண்டர்களே! நீங்கள் முன் அணியாகச் செல்லுங்கள்.

(3) பேரணி: (நடு அணி); நல்ல திறமை வாய்ந்த யோகிகளே! நீங்கள் நடு அணியாக அமைந்து செல்லுங்கள்.

(4) கடைக்கூழை: (பின் அணி); மிகத் திறமை வாய்ந்த சித்தர்களே! நீங்கள் பின் அணியாக அமைந்து செல்லுங்கள்.

## 27. மணிவாசகர் அசதி ஆடல்

பெருமானே! உன்னை நான் சிக்கெனப் பிடித்திருக்கின்றேன்; நீ என்னை விட்டு இனி எங்கு எழுந்து போகக் கூடும்? முத்திக் கரையைச் சேர்ந்த உன் அடியார்கள் மகிழ்ச்சி பெறக் காட்சி கொடுத்தாய். ஆனால் அடியேனிடத்தில் மாத்திரம் நீ 'பிரைசேர் பாலின் நெய்' போலப் பேசாதிருந்தால் உன்னை உலகோர் ஏசாரோ? நான் கெடுகின்றேன், அதனால் நீயே பழி கொண்டாய். நரகத்து அழுந்தாமல் என்னைக் காத்தாட் கொள்ளும் குருமணியே! நீ நடு நிலைமையை அறியாமல் இருப்பது நன்றோ? நீ உன்னை எனக்குத் தந்து அதற்குப் பதிலாக என்னை நீ கொண்டாய்; நம் இருவருள் யார் சதுரர் பார்; உன்னைப் பெற்றதனால் நான் அளவிலா ஆனந்தத்தைப் பெற்றேன், என்னை நீ பெற்றதனால் யாது பயனடைந்தனை? ஆதலால் நான் உன்னை "நாயேன் தனை ஆண்ட பேதாய்" என்றே அழைப்பேன். நான் பட வேண்டிய தெல்லாம் பட்டாய் விட்டது. இனி என் செய்து என்ன பயன்? மனம் நெகிழாத நான் 'ஒரு தோளாச் சுரை' தொளைக்கப்படாத பயனற்ற சுரைக்காய். இதை நம்பி நீ வாழ்ந்தாயே!; அதனால் உன்னை நான் "கரி உரிப் பிச்சன்," "தோலுடைப் பிச்சன்," "நஞ்சுண்ட பிச்சன்," "ஊர்ச் சுடுகாட்டு எரிப் பிச்சன்," "என்னையும் ஆளுடைப் பிச்சன்" என்றெல்லாம் ஏசுவன்.

## 28. மணிவாசகர் சிவபிரானை ஏசுதல், வைதல்

['மணிவாசகர் சிவனொடு அசதி ஆடல்' என்னும் தலைப்பு 27-ம் பார்க்க.]

கரி உரிப்பிச்சன், ஊர்ச் சுடுகாட்டெரிப் பிச்சன், குணமிலி, தேய்மதியன், தோல் உடைப்பிச்சன், நஞ்சூண்பிச்சன், மதி மயங்கி, பெரும் பித்தன், மாணிடன் - என்றெல்லாம் பெருமானை ஏசுகின்றார் மணிவாசகர்.

## 29. மணிவாசகர் [பெருமான் தம்மை ஆட்கொண்டு அருளிய விதத்தை எண்ணி எண்ணி] மனம் நெகிழ்தல்

[பதிகம் 38. திருவேசறவு]

1. பெருமானே! என்று நீ நரிகளெல்லாவற்றையும் பெருங் குதிரையாக்கினையோ அன்றே உன் பேரருளைக் கண்டேன்.

2. அடியேனுடைய பிறப்பை அறுத்து ஆட்கொள்பவனே! நீ வா என்று சொல்லி நான் உன் திருவடிகளைக் கண்ணாரக் கண்ட போதே நான் உய்ந்த என் பேற்றை என்னென்று சொல்வேன்.

3. அடியேனுக்குப் பெருமானே! நீ உன் பாத மலரைக் காட்டிய திருவருளை என்னென்று எடுத்து உரைப்பேன்!

4. பெருமானே! அடியேன் சிறு தெய்வங்களை வழிபடாது உன் பெருமையை மனத்தில் வைத்து நினைந்த பொழுதே நான் உய்ந்தேன். இஃதோர் அற்புதம்!

5. அடியேனுக்கு எப்பொழுது நாய்க்குப் பொன் தவிசு இடுவது போல அன்பு புரிந்தனையோ அப்பொழுதே உன் பொன்னருள் எனக்குக் கிட்டியது.

6. அம்பலத்து அமுதே! அடியேனை 'அஞ்சேல்' என்று எப்போது என்னை ஆட்கொண்டாயோ அப்போதே அந்த அற்புத வகையால் நான் உய்ந்தேன்.

7. பெருமானே! நீ என்மீது வைத்த அன்பால் என் உள்ளம் நெகிழ அதனுள் புகுந்து ஆட்கொண்டது என்பால் நீ திருநோக்கம் செய்ததனால் அல்லவா?

8. பெருமானே! உனது கருணையினால் என்னை (உலகச் சிக்கலில் நின்று மீட்டு) எப்போது ஆண்டாயோ அப்போதே உன் திருவருளை வியந்தேன்.

9. திருஇடைமருதூரில் வீற்றிருக்கும் பெருமானே! உனது மேலான திருஅருட்பெருங்கடலில் நான் படியுமாறு எனக்கருள் புரிவாயாக.

10. சிவபெருமான் தானே வந்து எனது உள்ளத்திற் புகுந்து உடம்பின் உயிர் வாழ்தலை வெறுக்கும்படி எனக்கு அருள் புரிந்துள்ளார்.

## 30. மணிவாசகர் வரலாறு

### (1) சிவன் தம்மிடமிருந்து நீக்கிப் பூமியில் தன்னை வாழச் செய்தது.

பெருமான் முன்பு என்னைத் தம்முடன் நில்லாத வகைக்கு விலக்கி, இந்தச் சிறு குடிலாகிய உடலிற் புகுத்திப், பின்னர் என்னைத் தன் திருஅருட் கண்ணாற் பார்த்து, நொடிப் பொழுதில் உபதேசித்து, நான் முன் செய்த பொய்யறும்படி என் குற்றத்தை அறுத்து, வீட்டிற்கு உரியவனாக்கி, என்னை ஆட்கொண்டருளித் தன் அடியார்களுடன் சேர்த்த அதிசயத்தைக் கண்டேன். பெருமான் தமது கருணைக் கண் காட்ட இம் மண்ணுலகைச் சேர்ந்தேன். என்னை இம் மண்ணகத்தே வந்து வாழச் செய்தார். அவருடைய பெருமையை மறப்பித்து என்னை இந்த ஊன் உடலிற் புகுத்தி என்னை இங்கு அலையும்படி பண்ணுவித்தார்; எனினும் அடியேனுடைய அறியாமையை அறிந்து அவரே அருள் செய்து 'வா' என்று என்னைக் கூவி அழைக்கும் நாள் எப்போது வருமோ?

### (2) ஆட்கொள்ளும் முன் மணிவாசகர் நிலை

[" மணிவாசகரும் மாதரும்;" " தன் குறை கூறல் " என்னும் தலைப்புக்கள் 7,3 ஐப் பார்க்க.]

நான் இங்கு ஐம்பொறிகளின் வசத்திற்பட்டு மயங்கி, இறப்பதற்கே காரணமாய் அந்தரத்தில் திரிந்து போய் அருநரகில் வீழ்தற்கு இருந்தேன். சாதி, குலம், பிறப்பு என்கின்ற சுழிகளிற் பட்டுத் தடுமாறுகின்ற அறிவிலியாய்

இருந்தேன். வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுப் பெருமானைச் சிறிதும் நினையாத தளர்ச்சி அடைந்து கிடந்தேன்.

## (3) சிவபிரான் (தமக்காகவும் பிறருக்காகவும்) ஆட்கொண்டு அருள இப்பூமிக்கு வந்தது.

முடிவிலாத பெருமையை உடைய தமது தீ மேனியை மறைத்துச் சுந்தர வேடத்து ஒரு முதல்வன் என ஓர் உருக்கொண்டு, இந்திர சால வித்தை போலப் பெருமான் இவ்வுலகுக்கு வந்தருளினர். வந்து குருமூர்த்தியாகி அருளிய பெருமையையும் கொண்டார். இப்பூமிக்கு வந்து (மாதர்களின்) வளையல்களைக் கவர்ந்தார்.

இஃது அவருடைய திருவுருவம். 'இவரே நமது பெருமான்' என்று நாங்கள் அறியும்படி எங்களை ஆண்டு கொண்டு இங்கு எழுந்தருளினர் பெருமான். உத்தரகோச மங்கையில் விளங்குகின்ற சோதித் தனி உருவம் வந்தருளி எங்கள் பிறப்பறுத்திட்டு எங்களை ஆட்கொண்டது. கயிலை மலையின் உச்சியில் நின்று இப்பூமிக்கு வந்து அமுது உண்டு கடல்வாணனாயினர். சிவபெருமான் இப் பூமிக்கு அன்புடன் வந்து என்னை ஆட்கொண்டு அருளிக், கரு வெந்து வீழும்படி கடைக்கணித்து என் உள்ளத்திற் புகுந்தார். பெருமான் இப் பூதலத்தே வந்து என்னையும் 'வா, வா' என்று வலிந்து ஆண்டுகொண்டார். இப் பூமிக்குப் பெருமான் வந்து நன்னெறி காட்டித் "திரு இடவை' என்னும் ஊரிலிருந்த மட நல்லாளுக்குச் சீலம் மிக்க கருணை பாலித்தனர். கருணையுடன் இப் பூமிக்கு வந்து என்னை ஆட்கொண்டார். பெருமான் தன் தேவியுடன் இப் பூமிக்கு வந்தார். அவர் சேவடி இப்பூமியைத் தீண்டிற்று. நானும் அவர் சிவன்தான் என அறிந்தேன். பெருந்துறைப் புண்ணியன் இப் பூமிக்கு வந்து ஆதிப் பொருளை வெளிப் படுத்தினர். குதிரையின் மேலேறி இப் பூமியில் வந்த திருவடிகளை வந்திக்க நம் மெய்யகத்தே இன்பம் மிகும்.

## (4) திருப்பெருந்துறையில் இறைவனைத் தரிசித்ததும், இறைவனுடைய திருஉருத் தோற்றத்தைத் தரிசித்ததனால் தன் நிலையும்

பெருமான் எனப்படும் பரமானந்தப் பழங்கடல் சூல் கொண்ட கரிய மேகமாகத் தோன்றித், திருப்பெருந்துறை என்னும் மலைமேல் ஏறித், தனது அருள் என்னும் மின்னொளியை ஒவ்வொரு திசையிலும் வீசி, ஐம்புலன் எனப்படும் பாம்புகள் கெட்டு ஓடும்படி செய்து துன்பம் என்னும் வெப்பத்தைத் தலைமறையச் செய்து, ஞான ஒளி மிக்க 'அழகுடன் தோன்றிப், பூக்கள்' (செங்காந்தள் மலர்கள்) சிறந்து விளங்க, நமது அளவிலாத பிறவி போல இந்திர கோபப் பூச்சிகள் நிறைந்து தோன்ற, முரசின் ஒலி போலப் பெருமானுடைய கருணை முழக்கங் காட்ட, கூம்புதலையுடைய பூப்போல மேலே கூப்பிய கைகள் காந்தள் மலர் போல் விளங்கப், (பெருமானது) குறைவு படாத இனிய அருள் சிறிய துளிகளாக வெளிப்பட, செவ்விய அறிவாகிய வெள்ளம் திக்குகள் தோறும் மிக்குப் பரவி, மலையை அடைந்து, துன்பமாகிய குளம் பயன் இன்றி நிறைந்திருக்க, அறுவகைப் புறச்சமயங் களாம் கானல்நீரைத் தாகம் அதிகமாகி நீரைத்தேடிவரும் பெரிய கண்களை உடைய மான்கூட்டங்கள் தமது பெரிய வாயாற் குடித்தும் தாகம் நீங்காது. தளர்ச்சியுடன் வருத்த முற்றன. அப்போது வானின்கண் உள்ள பெரிய ஆற்றி னின்றும் பாய்ந்து எழும் இன்பப் பெருஞ் சுழி பந்தம் என்கின்ற கரையில் மோதி அடித்து, இடித்துப் பல காலமாக ஓங்கி இருந்த இருவினை என்னும் மாமரத்தின் வேரைப் பறித்து, மேலும் எழுந்து அருள்நீரை ஓடச் செய்து மலையிலுள்ள சந்தன மரங்கள் கொண்டு பெரிய அணையைக் கட்டி, மணமுள்ள பூக்கள் நிறைந்த குளங்களை வளைத்து, அகில்மரத்தின் புகை உள்ள கரையில் உள்ள வண்டு மொய்க்கும் குளங்களில் மேன்மேல் நிரப்ப "அருச்சனை (வழிபாடு)" என்னும் வயலில் அன்பு என்னும் வித்தை விதையென விதைத்து விளைவு செய்யத்

தொண்டர்கள் என்னும் உழவர்கள் உண்ணும்படி தந்த (தேவர்களுக்குப் பெறுதற்கு அரிய) மேகம் போன்ற பெருமான் வாழ்க! 3—(66-95)

குறிப்பு: இதனில் இறைவனை மேகத்திற்கு ஒப்பிட்டார் மணிவாசகர். இறைவனிடம் அன்பு அவர் அருளால் முதலில் சிறுதுளி துளியாகத் தோன்றிப் பின்னர் வரவரப் பெருகி, அழியாத பேரின்பத்தை நாம் பெறும்படி அத்திரு அருள் கூட்டுவிக்கும் என்பது இவ் வுருவகத்தின் கருத்து. இதனையே "காயத்துள் அமுது ஊற ஊற நீகண்டு கொள்" எனப் பிறிதொரு இடத்தில் (42—5) சுருக்கமாகக் கூறியுள்ளார், இப் பகுதியின் விரிவான விளக்கத்தை மறைமலை அடிகளாரின் திருவாசக விரிவுரையிற் காணலாம்.

அவ்வுரையினின்றும் எடுக்கப்பட்ட பின் வரும் பகுதிகள் ஒருவாறு விளக்கத்தைத் தரும்.

1. அடிகட்குப் புலப்பட்டுத் தோன்றிய அருளே அம்முகிலிற் றோன்றிய நுண்ணிய மழைத்துளிகளாகச் சொல்லப்பட்டது.

2. தன்னை அடைந்த மெய்யன்பர்க்குத் தன் அருட்பெருக்கினையும் தந்து, தனது உண்மை நிலையினையும் இறைவன் புலப்படுத்தும் முறை 'ஆயிடைவானப் பேரியாற்று' என்பது துவங்கிக் "குளத்தின் மீக்கொள்" என்பதுகாறுங் கூறியருளினர்.

3. பேரின்பப் பெருக்கும் உயிர்களுள்ளத்திற் பெருகுங்கால் ஆண்டு நின்ற இருவினைகளை அடியோடு பெயர்த் தெறியுமாதலின் "இருவினை மாமரம் வேர் பறித்தெழுந்து" என்றருளினர்,

4. மலையின்கண் வளர்ந்த சந்தனமரம் திட்பமும், தூய்மையும், நறுமணமும் உடையதாதல் போல, மெய்யடியார் உள்ளமும் திட்பம், தூய்மை, நறுமணம் என்னும் இவ்வியல்புகள் உடைத்தாம். ஆகவே, இறைவனருளிய

பேரின்ப வெள்ளம் மெய்யடியார் உள்ளத்தளவிற்றடைப் பட்டு நிற்குமென்று அறியற்பாற்று.

5. தொண்டராகிய உழவர் அங்ஙனம் போந்த இன்ப வெள்ளத்தினைத் தமது வழிபாடாகிய வயலுள் நிரப்பித், தமது பேரன்பாகிய வித்தினை அதன்கண் விதைத்து, அதன் பயனான சிவபோகத்தினை நுகருமாறு இறைவன் செய்த அருட்டிறத்தை விரித்தெடுத்தருளிச் செய்தாரென்க.

## (5) திருஉருவத் தரிசனம்

அடியோம் கண்ணார வந்து வந்து நின்ற பெருமானுடைய கருணைக் கழலைப் பாடினோம். உத்தரகோச மங்கையுள் இருந்து வந்து தமது வித்தக வேடத்தைக் காட்டினர் பெருமான். தமது வண்ணத்தைக் காட்டி, வடிவைக் காட்டிப், பெருமான் என்னை ஆட்கொண்டனர், அவரை நானும் கண்ணாற் கண்டேன்; யார்க்கும் மறைந் திருக்கும் உருவுள்ள பெருமானை யான் இன்று கண்ணாரக் கண்டு களித்தனன். செந்தழல் போன்ற தமது திரு. மேனியைக் காட்டி என்னை ஆண்டார்; என்னைப் பணி கொண்டார். "பெருமானே! 'நான் காண வெளிப்பட மாட்டாயோ?" என்று நான் விண்ணப்பிக்க, அற்புத மாக, எந்தை தீயினின்றும் வெளிப்பட்டார். நான் கண்டும் கண்டிலேன் அவரை. இஃது என்ன கண் மாயம்.

## (6) திருவடித் தரிசனமும் சிலம்பொலி கேட்டலும்

["மணிவாசகரும் சிவனும்" என்னும் தலைப்பு 1 ம் பார்க்க.]

அடியேனுக்கு என்று தம் பாத மலரைப் பெருமான் காட்டினரோ, அன்றே (நான் திருவுற்றேன்); அடியே னுடைய இந்தப் பிறப்பை அறுத்திட்டு என்னை ஆண்டருளப் "பெருமானே "நீ வா" என்று நான் அழைக்க அவர் வர, நான் அவர் கழலைக் கண்ட அன்றே உய்ந்தேன். அரிக்கும், அயனுக்கும் எட்டாத தமது மலரடியைக் காட்டி, அப்பன் என்னை ஆண்டு கொண்டு அருளிய

அற்புதத்தை நான் அறியேன். இரும்பு போன்ற என் மனத்தைத் தம் பால் இழுத்து இழுத்து, என் எலும்பை உருக்கிக் கரும்பன்ன இனிய சுவையை எனக்குப் பெருமானின் திருவடிகள் தந்தன. பாசவேர் அறுக்கும் பெருமான் தம்மைப் பற்றுமாறு அடியேனுக்கு அருளி, என் பூசனையை உகந்து, என் சிந்தையுட் புகுந்து, தமது பூங்கழலைக் காட்டினர். பெருமான் எனக்குக் காட்டாதன எல்லாங் காட்டிச், சிவங்காட்டித் தமதுதாமரைத் தாளைக் காட்டித், தம் கருணைத் தேனைக் காட்டினர். திருப்பெருந் துறையில் தமது திருவடியைக் காட்டி அண்ணாமலையார் நாயேனை ஆட் கொண்டனர். பெருமானுடைய பொன்னடிகளைக் கண்டதனால் நான் இன்று முத்தி இன்பம் பெற்றேன். திருப்பெருந்துறைப் பெருமான் அன்று எனக்குக் காதல் பெருகத் தம் கருணையைக் காட்டித், தம் கழலைக் காட்டி, நான் கசிந்து உருக என் துக்கத்தைக் கெடுத்து என்னை ஆண்டருளின திருவருட்சிறப்பை உணர்ந்தவர் எமக்குத் தலைவராவார். திருவாதவூரில் வந்து அடியேனுக்கு இனிதாக அருளித் தமது பாதச் சிலம்பொலியைக் காட்டிய பண்பை உடையவர் பெருமான்.

கருணையால் பெரியார் ஒருவர் "நீ கண்டு கொள்" என்று பெருமானுடைய கழல்களை எனக்குக் காட்டி, "உன்னை விட்டுப் பிரியேன் நான்" என்று அவர் அருளிய அருள் பொய்யோ! நாயிற் கடைப்பட்ட நம்மைத் தமது மலர்ப் பாதத்தைக் காட்டிப் பெருமான் நம்மை இம்மையிலே ஆட்கொண்டார். அவர் திருவடியிணைகளைக் கண்கள் களிகூரக் கண்டேன் நான். முன்பு என்னை ஆண்டு கொண்ட முனிவராம் பெருமான் எனது எலும்பு உருகத் தமது திருவருளை அளித்துத், தமது இணைமலர் அடியைக் காட்டினர்.

### (7) ஆட்கோண்டதும், ஆட்கோண்ட வகையும்

அடியேனைப் பெருமான் வந்து நான் உய்யும்படி ஆண்டார். அவர் திருவருளை விரும்பி அழுகின்ற அடியார்

கூட்டத்தின் நடுவில் என்னை வைத்து ஆண்டார். அறிவில்லாத என்னைத் தாமே புகுந்து ஆண்டு கொண்டு எனக்கு அறிவு அருளி, மேலான நெறிகளை எனக்கு விளங்கும்படி விளக்கினர் பெருமான். நமக்கு அம்பலக் கூத்தன் இரங்குவான் என்று எண்ணி எண்ணி ஏமாந்து இருந்த எனக்கு அரியதொரு கட்டளையிட்டு, நான் ஆள்வார் இல்லாத மாடு ஆகாதபடி ஆண்டு அருளினர். இரும்பன்ன நெஞ்சை உடைய வஞ்சகனை என்னை அவர் திருவருள் என் ஊனெல்லாம் உருக என் பிறப்பை அறுத்திட்டு ஆண்டுகொண்டது. "எமது உறவினன் இவன்" என்று கூறி என்னை ஆண்டருளினர் எப்பெருமான். தோள்கொண்ட நீற்றனுய் என் சிந்தனையை வந்து இழுக்கும் சீரார் பெருந்துறையான் செஞ்சேவே என்னை ஆண்டு கொண்டார். அழகிய சுடர் ஒளியாய்த் தோன்றிக் கல்லினின்று நார் உரித்தாற் போல எளிவந்து என்னை ஆண்டு கொண்டார். என்னைத் தமது அடியன் ஆக்கினுர். ஒரு வார்த்தையில் என்னை வசப்படுத்திப் பற்றினுர். தமது இனிய திருவருளால் இந்தப் பிறவியில் ஆண்டுகொண்டு என்னை இனிப் பிறவாமலும் காத்த பார்ப்பான் அவர். அதனுல் என் ஐம்புலன்களும் அவரையே அனுபவிக்கும்படி ஆயின. என் பந்தங்களை யெல்லாம் அறுத்து ஆண்டு கொண்டனர். தமது 'கழற் சேவடி' என்னும் பொருளைத் தந்து இங்கு என்னை ஆண்டு கொண்ட பொல்லாமணி அவர். என் சிறுமை கண்டும் அவரை நான் என் பிரான் என்ன, நான் அவர்க்கு அடியேன் என்னும்படி என்னை ஆண்டு கொண்டார். இப்பூமியில் உள்ள பெரியோர்கள், இந்திரன், பிரமன், தேவர்கள் காத்து நிற்க நாயேனைப் பெருமான் அன்புடன் ஆண்டனர். அங்ஙனம் என்னை அவர் ஆண்டதை எல்லாரும் அறிவர். பெருமான் என்னைத் தேடி வந்து ஆண்டார். என் வஞ்சக எண்ணத்தை ஒழித்து ஆண்டார். நாட்டார் நகை செய்ய, நான் மேலை வீடு அடையும்படி என் அல்லலை அறுத்து ஆண்டார். நான் அவருக்கு ஓர் அன்பன் ஆயினேன். ஆதலால் என்னை ஆண்டுகொண்டார்.

தமது திருவடி மலரை என் உள்ளத்தில் ஒரு படமாக அமையும்படி அளித்து அருளினர். இந்தப் புன் புலால் யாக்கை மயிர்க்கால் தோறும் கனியும்படி இதை ஒரு பொன்னெடுங் கோயிலாகக் கொண்டு புகுந்து என் என்பெல்லாம் உருக எளியனாய் என்னை ஆண்டுகொண்டார். பொய்யனாகிய என்னைப் பொருளென ஆண்ட மெய்யவன் அவர். பொய்யான செல்வத்தில் அழுந்தி, நாள்தோறும் அது மெய்யெனக் கருதிக் கிடந்த என்னை அவர் ஆட்கொண்டருளினர். முன்பு என்னை அவர் முன்னின்று ஆண்டனர்; நானும் அங்ஙனம் முன்னிற்க முயலுற்றும் பிற்பட்டு ஒழிந்தேன். பெருமான் என்னைப் பணிகொண்ட பின்பு அவர் எனக்கு "கையிலங்கு பொற் கிண்ணம்" ஆயினர். ஆதலால் நான் அவரை அரியர் என்று கருதுகின்றேன் இல்லை.

வழியற்ற என்னை வன்னெஞ்சக் கள்வன், மனவலியன் என்னாமல் என் கல்நெஞ்சை உருக்கிக் கருணையினாற் பிறவாமல் காத்தாட்கொண்டார். வினையிலே கிடந்த என்னைத் தாம் இன்னார் என்று அறிவித்து,'வா, வா' என்று என்னை இப்பூதலத்தே வலிந்தாண்டு கொண்டார்.

*எத்தன் (வஞ்சகன்) ஆகி வந்து, என் வீட்டிற் புகுந்து, என்னை ஆட்கொண்டு, என் பணியும் கொண்ட பிரானுடைய மலரன்ன திருவடிக்கண் என் சென்னி மன்னித் திகழும்,

## (8) அந்தணனாய் ஆட்கொண்டது

கருணையாளராகிய பெருமான் அறைகூவி வீட்டின்பத்தைத் தரும் திருவடியை உடையவர். அவர் என்னை அந்தணனாகி வந்து ஆண்டுகொண்டு அருளினர். அங்ஙனம் ஆண்டது ஓர் இந்திர ஞால வித்தைபோல் இருந்தது. பெருமான் அந்தணராகி இங்கே வந்தார். தமது அழகிய சேவடியைக் காட்டினர். திருமாலும்

* அகப்பொருள்.

பன்றியாய்ச் சென்று உணர முடியாத திருவடியை, அந்தணர் உருக்கொண்டு வந்து, நாம் அறியக் காட்டி ஆண்டு கொண்டார். பெருமான் திருப்பெருந்துறையில் எளிதாக வந்து, இரக்கம் கொண்டு, எண்ணுதற்கரிய இனிய தமது திருவருளால் என் உள்ளத்தின் உள்ளே ஒளி திகழக் கருணையுடன் வந்த அந்தணர் அவர். மறையோர் கோலத்துடன் வந்து என்னை ஆண்டு கொண்டார். மெய்ம்மைதரும் வேதியராக வந்து எனது வினை கெடும்படி உதவிய கடவுள் அவர்.

### (9) குருமணியாக வந்து, உபதேசித்தது

*கருணையினால் பெரியார் ஒருவர் "நீ கண்டு கொள்" என்று கூறிப் பெருமானுடைய திருவடியை எனக்குக் காட்டி, "நான் உன்னை விட்டுப் பிரியேன்" என்று கூறிய அந்த அருள்மொழி பொய்யோ! என்னை ஆண்ட குருமணி, காத்தாட்கொள்ளும் குருமணி, கூடலில் (மதுரையில்) விளங்கும் குருமணி. †கோகழிக் குருமணி; கொடிய நரகத்தில் நான் அழுந்தாமல் என்னைக் காத்தாட் கொள்ளும் குருமணி அவர்.

சுந்தர வேடத்துடன்இந்திர ஞாலம் போல வந்து எவ்வெவர் தன்மையும் தம்வயிற் படுத்துத், தாமேயாகிய தயாபரர் அவர். திருமால் அன்று போற்றியும் காண

---

* பெரியார் குருநாதராக எழுந்தருளிய பெரியார்; அப் பெரியார் இறைவரே போலும். இவ்வாறு அருணகிரியார்க் கும் பெரியார் ஒருவர் தவநிலை அருளினது,

"அமுதமொழி கொடு தவநிலை யருளிய பெரிய
குணதரர் உரை செய்த மொழி" —திருப்புகழ்-1006.

எனவருவதிலும் காண்க.

["அருணகிரிநாதர் வரலாறும் நூலாராய்ச்சியும்." பக்கம் (5) கீழ்க்குறிப்புப் பார்க்க.]

† 'கோகழி' என்பது திருப்பெருந்துறையில் உள்ள திருக் கோயில் ஒளிநெறி-தலைப்பு IV-103-ல்பார்க்க.

முடியாத மலரடி இணைகளைப் போற்றுதற்கு எளிதாக இவ்வுலகிற் குருபரனாய் வந்த அந்தப் பெருமையை உடையவர் அவர்.

## (10) கண்ணோக்க தீட்சை (சட்சு தீட்சை)

ஈறு இல்லாத பெருமான் மானுட உருவங் கொண்டு எளிதாக வந்து தமது திருக்கண் பார்வையை எனக்கு அருளினர். இந்த உடலில் என்னைப் புகும்படி செய்து, தமது திருவருட் கண்ணாற் பார்த்து, நொடிப் பொழுதில் எனக்கு நுண்பொருளை உபதேசித்தார். என்னை ஆள்வதற்கு அங்ஙனம் தமது திருக்கண்ணால் நோக்கினர்; தமது பேரருளால் 'வருக' என்று அருள் புரிந்த கண்ணோக்கு ஆகும் அது. மருண்ட எனது மனத்தை அதன் மயக்கு நீங்கும்படியாக நோக்கி எனது இம்மை மறுமை இரண்டையும் கெடுத்த பொருள் அவர்; மருந்து அவர்.

## (11) மணிவாசகரும் திருநீறும்

எனக்குத் தமது சுண்ண வெண்ணீற்றை அருளி அணிவித்தார் பெருமான். திருநீறு நிறையப் பூசப்பட்டேன். திருநீறிட்ட அன்பர்களுடன் யாவரும் காணப், பட்டி மண்டபத்தில் என்னையும் ஏற்றிவைத்தார். அவர் எழுந்தருளப் பெற்றால் அவருடைய திருநீற்றினை நாம் நித்தமும் பூசும் பாக்கியம் உண்டாகும். அழகிய திருநீற்றை அணிந்து நாம் நசற்குப் பொற் சுண்ணம் இடிப்போமாக! வெண்ணீறு அணிகிலாதவரைக் கண்டால் ஐயோ! நான் மிக அஞ்சுவேன்.

## (12) திருவடி தீட்சையும் அதனால் பெற்ற பயனும்

திருவிடை மருதூரில் பெருமான் தமது திருவடியை என் தலைமேல் வைத்தருளினர்; அங்ஙனம் திருவடியை வைத்தருளினவுடன் எனக்குத் துணையாய் இருந்த சுற்றங்கள் எல்லாவற்றையும் விட்டு நீங்கினேன். என்னையும்

தமது அடியார்களுள் ஒருவன் ஆக்கித் தமது திருவடிகளை எனது சென்னியில் (என் பணிகளை விரும்பி) வைத்தருளினர் பெருமான். அவர் தம் திருவடிகளை என் தலைமேல் நட்ட காரணத்தால் நான் ஐம்புலன்களாம் பொல்லாருடைய திறலை (சாமர்த்தியத்தைக்) கடந்தேன். நாராயணன் அறியாத தமது மலர்த்தாளை நமக்கு ஊராகத் தந்தருளினுர் மலைக்கு மருகனும் பெருமான்; பலநாள் பரவி நான் பணி செய்யப் பெருமான் தமது பாதமலரை என் தேகத்திற் பொருந்த வைத்தார். தேவர் தொழும் தமது திருவடியை என் தலைமேல் பெருமான் வைத்தவுடன் எனது பேராசை ஒழிந்தது, பசுபாசங்கள் ஒழிந்தன; நானும் *தெய்வத் தன்மை அடைந்தேன்.

## (13) அருள் பாலித்தது, அருளிய வகை

["பெற்றபேறு" என்னும் தலைப்பு 22-ம் பார்க்க]
[ஆட்கொண்டது என்னும் தலைப்பு 30-7-ம் பார்க்க]

பெருமான் எனது அச்சத்தைத் தவிர்த்தார்; என்னைக் கண்டித்துக் கண்டித்து இன்பச் சர்க்கரையை ஊட்டினர்; முடிவிலாத ஆனந்தத்தைத் தந்தார்; தமது திருஅருளாகிய பெரிய நெருப்பில் அடிமைகளாகிய எங்கள் எல்லாருடைய உடம்பாகிய குடிசையை ஒடுங்கச் செய்தார் பெருமான். தமது திருப்பணிக்கு என்னைப் புகுவித்தார். அருள் பெரிதும் சுரக்கும் அமுதம் அவர். கருணைப் பெரியர் அவர். அவர் என்னை அழிவிலாத ஆனந்த வெள்ளத்தில் அழுத்தினர். என்னை விட்டு நீங்காத தமது கருணையைக் காட்டி எனது கடிய வினையை அகற்றினர். என்னை 'அஞ்சற்க' எனக் கூறின அருட்பெருங்கடல் அவர்.

---

* தேவானது - தெய்வத் தன்மை பெற்றதைக் குறிக்கும். சீவபோதம் கழன்று சிவபோதம் பெற்றனர் என்க. ஆதலால் மணிவாசகர் தேவராயினர், இங்ஙனம் தெய்வத்தன்மை பெற்றவர்கள் கண்ணப்பரும் வள்ளியம்மையும், திருவாசக ஒளிநெறி II மணிவாசகப் பகுதி தலைப்பு 30 (12)ல் இதன் விரிவைப் பார்க்க.

என்னை ஆண்ட அப்பொழுதே எனது ஆவி, உடல், உடைமை எல்லாவற்றையும் பெருமான் கொண்டனர். இனி எனக்கு ஏது இடையூறு? அப்படி ஆண்ட பிரானுடைய குணத்தைப் பாராட்டி நமது பழவினையைப் பொய்யாக்குவோம். பெருமான் தமதடன் நெருங்கி இருக்கும் அடியார்களோடு புலியூரிற் (தில்லையில்) புக்கு இனிது அருளினர். இந்த அழியக் கூடிய உடல் ஒழியும் படி அருளிய பெருமான் எனக்கு எளியராய் இருக்கின்றார். உருவம் ஏற்படாத காலத்திலேயே (நான் கருவிற் கிடந்த காலத்திலேயே) என்னுள் புகுந்து என் உள்ளத்தில் பொருந்தி, என் தாயின் உடலிற் புகுந்து, என்னைக் கருணையினால் ஆண்டு கொண்டார். நான் பொய்ச் சமயங்களும் பொருந்தாத சாத்திர நூல்களும் ஆகிய பயன்படாக் கடலில் விழுந்து, கிடந்து, தடுமாறினேன்; அக்கவலையைக் கெடுத்துத் தமது கழலிணைகளைத் தந்தருளினர் பெருமான். ஊழிக் காலத்தும் அழியாத நன்மணியாம் பெருமான் என் பிறவித் தாழ்ப்பாளைப் பறித்து எறிந்து விட்டார். மேலும் அவர் திருவருளால் என் ஊன், உயிர், உணர்வு, உள்ளம் எல்லாம் கெட்டு "நான்" என்பதும் கெட்டுப் போயிற்று. என்னை இந்த உடலில் இட்டு நாடகம் ஆடச் செய்து தன் அருளைப் பருகும்படி வைத்தார்.

பெருமான் என் துன்பங்களை யெல்லாம் ஒழித்தார். தந்தை, தாய், சுற்றம் ஏனைய பந்தங்கள் எல்லாவற்றையும் அறுத்து ஒழித்து என்னை ஆண்டு கொண்டார் பெருமான். என் உடலிடம் கொண்டார் அவர். எனது அஞ்ஞானத்தை ஒழித்தார். என் பிறவியை நாசம் செய்தார். இனி என்றும் பிறந்து இறந்து ஆழ்கின்ற துன்பம் இல்லாமல் என்னை ஆண்டுகொண்டார். ஒரே வார்த்தை பேசி என்னைத் தம்பாற் படுத்திப் பற்றினர். என்னை ஆட்கொண்டு என்னை 'வா' என்று அருளிய கருணைப் பெருமான் அவர். மரணம், பிறப்பு என்ற இவை இரண்டின் மயக்கை அறுத்த கருணைக் கடல் அவர். எட்டிரண்டும் அறியாத எனது பாசத்தை அறுத்து என்னை ஆண்டு, திருநீறு இட்டு, அன்பர்கள்

யாவரும் காணப் பட்டி மண்டபத்தில் என்னை ஏற்றினர் அவர். அவருடைய கருணையின் பெருமையை நான் கண்டேன். கல்லினின்று நார் உரித்த மாதிரி என்னைத் தம் கருணையினால் ஆண்ட பிரான் அவர்.

கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனைப் பெருமான் வல்லாளனாய் வந்து பல்லோருங் காண என் பசு பாசத்தை அறுத்தார். கல்லை மென்கனியாக்கும் வித்தையில் என்னைத் தம் கழற்கு அன்பனாக்கினார். கசிந்து உள்ளுருகும் நலம் இலாத கல் நெஞ்சைத் தமது கருணையினால் உருகும்படி செய்து என்னை நாடறிய நற்பாற் படுத்தினர். என் குலத்தையும் குற்றத்தையும் களைந்தார். சித்தத்தைச் சிவமாக்கினர். செய்தனவைத் தவமாக்கினார். நான் செய் பணிகளை 'சீ' எனாது ஏற்றுக் கொண்டருளினர். நல்ல மனத்துடன் திருப்பணிகள் செய்யும் எனக்கு இம்மைப் பயன்களை ஒழித்த தில்லை ஆண்டவர் பெருமான். தகுதி இல்லாத என்னை ஆளாக்கிக் கொண்டது அவர்க்குத் தகுதியோ? கீழானவரை மேலாக உயர்வித்து, மேலான தேவர்களைக் கீழ்ப்படுத்துகின்றார் பெருமான். தாய் போல இன்னருளைப் புரிந்து எனக்குத் தெளிவைத் தந்தருளினர்.

துன்பம், இறப்பு, பிறப்பு, மயக்கு இவைகளின் தொடக்கெலாம் அறுத்துத் தூய நெறியில் என்னை நாயைச் சிவிகையில் ஏற்றி வைத்தது போல ஏற்றி வைத்தார். நனவிலும் எனக்கு அருளினர் தாயிற் பெரிய தயாவுடைய பெருமான். இந்த மாயப் பிறவியைப் பெருமான் வசத்திலேயே வைத்திட்டிருப்பதல்லாமல் அதை ஆய எனக்கு அதிகாரம் கிடையாது. நல்ல நெறியை எனக்கு அருளித் தம் சீரடியார்களின் பொன்னடியிற் சேர்ப்பிக்கக் குறிக்கொண்டு என்னை ஆண்டார். பத்தி நெறியை அறிவித்துப், பழவினைகளைச் சிதறும்படி செய்து என்னைச் சிவமாக்கி ஆண்டார். பத்தி பரிசு இல்லாத என்னை யாரும் பித்தன் என்று சொல்லும்படி ஆக்குவித்து நான் தம்மினின்றும் பிரியாதபடி என் சித்தத்தைத் தமது திருப்பாதத்தில் திண்கயிற்றாற் கட்டுவித்த வித்தகர் அவர்.

என் பந்தங்களேயும் குற்றங்களேயும் அறுத்த பெருமான் அவர். அவர் என் பந்தம் தொலேயப் பரிமேற் கொண்டு அந்தமிலா ஆனந்தத்தை அருளினர். எனது மலத்தை அறுத்துத் தமது வான் கருணேயைத் தந்தார் பெருமான். பாசம் என்னும் தாழ்ப்பாளே உருவி உய்யும் நெறியைக் காட்டுவித்து ஓங்காரத்து உட்பொருளே எனக்கு அருளினர் பெருமான். பெருமான் என் பிறவியை அறுத்த பின்னர் நான் யாரையும் ஒரு பொருளாகக் கண்டதில்லே. என் பிறப்பை அடியோடு மாற்றிப் பிணி, மூப்பு, உறவு இவை எல்லாவற்றையும் ஒழித்தருளினர் பெருமான். பேய்த் தேரைப் பூத்தாரும் பொய்கைப் புனல் எனக் கருதும் எனது பேதைக் குணத்தைத் தீர்த்தனர் பெருமான்.

பிரமனும் திருமாலும் அடைதற்கு அரிது என்று ஏமாந்து நிற்க, அடியேன் பெருமைப்படும்படி நாய்மேல் தவிசு இட்டமாதிரி என்னே நன்ருகப் பொருட்படுத்தினர் தீமேனிப் பெருமான். என்னேப் பிச்சு ஏற்றி மீண்டும் இவ்வுலகுக்கு வாரா வழியை அருளி என் உள்ளத்திற் புகுந்த ஆரா அமுது அவர். பேதை குணம், பிறர், உருவம், 'யான், எனது' என்னும் சொற்கள் இவை யாவையும் மாய்த்தருளிய அமுது அவர். மண்ணிற் பிறந்து இளேத்து மாண்டு விழுதற்கு இருந்த என்னே எண்ணுதற் கரிய அன்பை அருளி ஆண்டு, தமது திருநீற்றை அணி வித்துத் தூய நெறியில் நான் தேரும் வகையை எனக்கு அருளிய பேற்றை வேறு யாரால் பெறமுடியும்! எனது மறுமை, இம்மை இரண்டையும் கெடுத்த ஒண் பொருள் அவர். மறந்தும் தம் கழலே நான் மறவா வண்ணம் அருளிய திறமையை உடையவர் அவர். என் வல்விணேயின் வாயிற் பொடி அட்டி எனது மாயப் பிறப்பை அறுத்தார்.

திருமால், பிரமன், இந்திரன் இவர்கள் எந்தப் பிறப் பிலும் தேடிக் காண முடியாது அலேய, என்னேத் தமது இனிய அருளால் இந்தப் பிறவியிலேயே ஆட்கொண்டார். இனிப் பிறவாமலும் காத்தார். நம்மை முழுதும் துன்பப் படுத்தும் பழவிணேயைப் பொய்யாகும்படி செய்தருளினர்.

முனிவர் கூட்டமும், பல நூறு கோடி தேவர்களும் காத்து நிற்கத், திருநீற்றை எனக்கு அளித்தார். மெய் முழுதும் பக்தியால் நடுக்கங் கொள்ள அழுகின்ற அடியார் நடுவில் என்னைக் கழுவி ஆட்கொண்டார். வல்வினையிற் பட்ட என்னை மூடிய மாய இருளை விலக்குவித்த பெருமான் அவர். இந்தப் பூமியில் வந்து தமது திருவடியைக் காட்டி நாயினும் கடையாய்க் கிடந்த என்னைத் தாயிற் சிறந்த தயாவுடன் ஆண்ட தத்துவன் அவர். எனது மனோ வேகத்தைக் கெடுத் தாண்ட அருளாளர் பெருமான். என் துன்பங்கள் ஒன்று கூட என்னிடம் நிலைக்காமல் ஓட்டிய திருக்கழலை உடைய பெருமான் என்னை விரும்பிப் பணி கொண்டார்.

## (14) குடி முழுதாண்டது

புதுமை என்று சொல்லும்படி என் முன் தோன்றி என் பிறவியை வேர் அறுத்து, என் குடி முழுதாண்டு இவ்வுலக வாழ்வு அறப் பேரின்ப வாழ்வை எனக்குத் தந்த மருந்து எம்பெருமான்.

## (15) தேவியும் பிரானுமாக ஆட்கொண்டு அருளியது

குணமும் குறியும் இல்லாத பெருமான் தேவியுடன் வந்து என்னை ஆண்டு அருளினர். இஃது என்ன அற்புதம்! நனவில் தேவியுடன் புகுந்து அருளி என்னைப் பிடித்து ஆட்கொண்டார் அவர். அவர் குவளைக் கண்ணியாம் தேவியை ஒரு கூறு உடையவர். தேவியை விட்டு அகலாமல் அரிய துணைவராய் வந்து என்னை ஆண்டு கொண்டார். இருவரும் இப் பூமிக்கு வந்து என்னைப் பணி கொண்டார்கள். அங்ஙனம் தேவியும் தாமுமாக என்னை அவர் ஆண்டில்லாவிட்டால் நானும் என் சிந்தையும் என் நாயகனுக்கு எவ்வளவு தூரத்தில் இருக்கவேண்டியிருக்கும்.

## (16) நரிபரியாக்கிப் பாண்டியன்முன் பிரான் வந்தது

['திருவிளையாடல்' என்னும் தலைப்பு IV-112 ம் பார்க்க]

திருப்பெருந்துறைப் பெருமான் நரிகளைக் குதிரைகள் ஆக்கிப் பாண்டியனது தலைநகராகிய மதுரை நகரில்

உள்ளார் யாவரும் பித்தர்களாகும்படி ஒரு திருவிளையாடலை இப் பூமியில் நிகழ்வித்தார். பெருமான் நரிகளை ஒரு நன்மையைக் கருதிக் குதிரைகளாக்கினர். என்னை ஆண்டு கொண்டருள அழகர் அங்ஙனம் ஆக்கினர். அங்ஙனம் ஆக்கிப் பாண்டியனுக்கு அக் குதிரைகளை விற்றனர். அதற்காக அவன் தந்த திரண்ட பொன்னைப் பெருமான் பெறுதற்கு உடன்படவில்லை. என்னை ஆண்ட பெருமான் திருவருள் வழியையே நான் நாடியிருக்க என் கண் எதிரே குதிரைகளைச் செலுத்தி வந்தனர் சோதிப் பெருமான். எப்பொழுது நரிகளைப் பெருங் குதிரைகளாக ஆக்கினரோ அப்பொழுதே அவருடைய பேரருள் எனக்கு விளக்கம் ஆயிற்று.

## (17) சிவபிரான் குதிரைமேல் வந்தது

['திருவிளையாடல்' என்னும் தலைப்பு IV-112 பார்க்க]

ஆடல் அமர்ந்த குதிரையின்மேல் ஏறிப் பெருமான் அன்று வந்து, தம் தோழர்களாம் அடியார்களை எவ்விடத்தும் ஆண்டு கொண்ட (ரகசியத்) தன்மையை யார் அறிந்தார்களோ, அவர்களே எமக்கு (மணிவாசகருக்கு)த் தலைவராவர். குதிரைகளைக் கூட்டத்துடன் மேற்கே கொண்டுவந்து அன்று அருளினர் பெருமான். சூரியனை மறைக்கும்படியான பெருஞ் சோதியை உடைய பெருமான் கையில் ஈட்டியைப் பிடித்துக் கொண்டு குதிரையின்மேல் வந்து நமது நடுவே கூடினுல் அவரைக் கண்டவர்களுடைய பிறப்பு நாசமாகும். மதுரை மன்னன் பாண்டியனுக்கு மறு பிறப்பு நிகழ ஒட்டாதபடி சோதிப் பெருமான் செய்வர். அவரை அடைந்தவர்கள் தமது திறத்தை மறந்து ஞானப் பித்துக் கொள்வார்கள். இதை உறுதியாகப் பறை சாற்றினது போல நான் கூறினேன்.

பெருமான் ஏறிவந்த குதிரை நல்ல பொன்னும் மணியும் சேர்ந்தமைந்த கட்டழகுடன் விளங்கின உருவம் கொண்டது. உலகெலாம் இன்ப வெள்ளங் கொள்ளக்,

குதிரையின்மேல் ஏறிவந்த பெருமான் தமது தொண்டர்களின் உள்ளத்தைக் கவர்ந்தனர். அவருடைய திருவடியை, அன்பர்களே! நீங்கள் வழிபடுவீர்களாக!

அகப்பொருள்

1. அறச் சாலைக்கு ஏற்ற அங்கியை அணிந்து, குதிரைமேல் வந்த பெருமான் என் உள்ளத்தைக் கவர்ந்தனர்.

2. பெருமான் குதிரையின்மேல் வர, அவர் அழகில் ஈடுபட்டுத் தமது புத்தியைப் பறிகொடுத்த மங்கையர் மரத்தின் இயல்பைப் பெற்று, (மரம் போன்று), தம்மை மறந்து தம்மை அறியாராயினர்.

பெருமான் மதுரைக்குக் குதிரை சேவகனாக எழுந்தருளினர். மாயம் நிறைந்த அழகிய குதிரைமேல் வந்து தாம் கொண்டுவந்த குதிரைகளைப் பாண்டியனுடைய ஆள்கள் ஏற்றுக் கொண்டவுடன் அவர்கள் யாவர்க்கும் பிறப்பு என்னும் பகை அற்றுப் போயிற்று.

குதிரையின் மீதேறி மதுரை நகருள் பெருமான் புகுந்தருளித் தலைவராய் எங்களுடைய பணியை ஏற்றுக் கொண்டு அருளினர். அங்ஙனம் குதிரைமேல் வந்தவருடைய திருவடியை வந்திக்க நமது உடலில் இன்பம் பெருகும்.

(18) சிவபிரான் பிட்டுக்கு மண் சுமந்தது

பெருமான் மதுரையில் பிட்டுக்காக மண் சுமந்தார். அடியாள் ஒருத்தி பொருட்டு அங்ஙனம் மண் சுமந்தார். அவளிடம் கூலி கொண்டார். பாண்டியனால் மொத்துண்டார். தமது திருமேனியில் புண் சுமந்தார். பிட்டமுது உண்டு, பாண்டியனது பிரம்பால் அடிபட்டு வேலை காரணமாகப் புண் பெற்ற பெரும் பித்தர் பெருமான்.

## (19) இறைவன் சோதியைக் காட்டி, ஏனைய அடியார்களினின்றும் தன்னைப் பிரித்து, அவ்வடியார்களுடன் சோதியில் மறைந்ததும். தனது ஆற்றாமையும்

['பிரிவாற்றாமை' என்னும் தலைப்பு 9ம் பார்க்க]

பெருமானே! அடியார் எல்லாரும் உனது திருவடியைச் சேர்ந்தார்கள்; பாவத்துக்கு இடமான இவ்வுடலை என்னால் நீக்க முடியவில்லை. நான் உனக்கு அடியான் அல்லவா? நீ என்னை ஆட்கொள்ள இல்லையா எங்கள் சிவலோகனே! பொல்லாதாகிய நான் உன்னைக் கண்ணாரக் காணுமாறு திருவருள் புரிவாயாக! உனது திருவருளைப் பெற்ற அன்பர்களும் நீயும் அங்கு (விண்ணுலகுக்கு) எழுந்தருளினீர்கள். என்னை மாத்திரம் இங்கு (இம் மண்ணுலகில்) நிறுத்திவிட்டீர்கள். என் வினைக்கு ஒரு முடிவு இல்லையா? உன் அன்பர்கள் யாவரும் உனது அருள் முழுமையும் முடிவின்றிப் பெற்றார்கள். நானோ இங்கு வெளியே கிடந்து புலம்புகின்றேன். உன் திருவடியைக் கண்டும் நான் அதைப் பிரிந்து நிற்கின்றேன். கல் மனத்தனாகிய நான் இதனால் பட்ட கஷ்டம் பெரிது. என்னை ஆட்கொண்ட கூத்தனே! நான் எப்போது உன்னைக் காணப் பெறுவேன்! கடல் அனைய பேரின்பத்தைப் பெற்றவர்கள் எல்லாரும் உன்னை நன்கு கவர்ந்து அநுபவிக்க நான் கவலையுடன் இங்கு இருத்தல் அழகோ?

'பெருமானே! நீ அருள்வாயாக!' என்று உன்னிடம் அன்று விண்ணப்பிக்கத் தவறின நான் இம் மண்ணுலகில் வீணாகக் கிடக்கின்றேன். உனது சோதியனைய திருவருளால் எனது அஞ்ஞானம் என்னும் இருளை நீக்கி அருள் புரிவாயாக! ஏனைய அடியார்கள் உன் திருக்குறிப்பின்படி உனது திருவடியைக் கூடினார்கள்; நானோ ஊன் நிறைந்த இவ்வுடலாம் புழுக்கூட்டைக் காத்து இவ்வுலகில் இருக்கின்றேன்; ஏதோ ஒரு சிறிது கொடுமைச் சொற்களை நான் சொன்னேன்; அதனால் ஏனைய அடியார்கள் உன்

னுடைய திருநகரை அடைய. நானும் பொய்யும் இங்கே வெளியே கிடக்கின்றோம், இந்த உடலிலுள்ள உயிரைக் காக்கும் பொருட்டு நான் உண்டு உடுத்து, இங்கு இருக்கின்றேன். குற்றமில்லாத உனது திருவடிப் பழமைத் தொண்டினை அடைந்து, அதை நழுவவிட்டு, உன்னை இகழ்ந்து விழித்துக் கொண்டிருந்த என்னைப் பெருமானே! கை விடாதீர். பக்தி பழுத்த மனத்தை உடைய அடியார்கள் வான் போயினர். பாவியாகிய நான், கல்வி ஞானம், இல்லாத நான், அழுக்கு மனத்து நான், புழுக்கள் நிறைந்த உடலை உடைய நான், உன் பால் அடைக்கலம் புகுந்தேன். உனது மெய்யன்பு பெற உரியவன் அல்லாதவன் ஆயினேன், ஆதலால் நானும் பொய்யும் புறம் போந்தோம். உன்னைச் சார்ந்த அடியார் கள் வேறொன்றும் அறியாதவராய் உன்னைச் சிறப்புடன் வழிபட்டு உன் திருவடியைச் சேர்ந்தார்கள், நிறைந் திருந்த நீர் அற்றுப் போக அதிலிருந்த சிறுமீன் துவட்சி உறுவது போல உன்னைப் பிரிந்த நான் இங்கு துவட்சி யுறுகின்றேன். உன்னைச் சேரும் பொருத்தம் இல்லாதவன் நான். பொய்ம்மை உள்ளவன் நான். 'வருக' என்று என்னை நீ நோக்கியும் உன்னிடம் வருதற்கு உரிய கவலை இல்லாதவனாய் வஞ்சக எண்ணத்துடன் உள்ள நான் இறந்தேன் இல்லை. இந்த உலகில் உள்ள துன்பப் புயல் வெள்ளத்தை உனது திருவடி என்னும் தெப்பத்தில் ஏறிக் கடந்து உன்னை அன்பர்கள் அடைந்தார்கள். நானோ இடர்க்கடற் சுழியில் அகப்பட்டு, மாதர்கள் என்னும் அலையால் அலைப்புண்டு, காமம் என்னும் சுறா மீனின் வாயிற்பட்டு, அழுகின்றேன். மருள் கொண்ட மனத் துடன் உன்னைப் பிரிந்து வருந்துகின்ற என்னை 'வா' என்று அழைத்து, ஞானியராம் உனது அடியார் கூட் டத்தை நீ எனக்குக் காட்டாவிட்டால், அதைக் காணாமல் நான் இறந்து விட்டால், உலகோர் சிரிக்க மாட்டார்களா? உன் கருணை என்பால் இருந்தும் நான் உன்னைப் பிரிந்து இங்கு இருக்கின்றேன். "வா" என்று எனக்குக் கட்டளையிட்டாய். ஆனால் என்னால் வரமுடியவில்லை.

உண்பதற்குத்தான் என்னால்முடியும். மெய்யான அன்பர்கள் உன் திருவடியைச் சேர்ந்தார்கள், எளியனைப் நீ என் பொருட்டு மானிடனாக வந்து என்பால் அருட்பார்வை புரிந்தும், என் நெஞ்சை அறுக்க மனம் இல்லாது நான் கடையனாய் இங்கு இருக்கின்றவன் ஆயினேன். நான் பொய்யன் "பொய்யனுக்குப் பிறப்பின்மை கூடாது" என்று என்னை இங்கே நீ நிறுத்திவிட்டாய்.

நெஞ்சே! ஊனெலாம் உருகப் புகுந்து ஆண்டவர் இன்று வானின் கண் உள்ளார். அது தெரிந்தும் நீ மாளாமல் இங்கு வாழ்கின்றாய்.

பெருந்துறைப் பெருமான் அன்று சோதியுள் ஒளித்த கள்வராவார் அவர் என்னை நோக்கி நீ தில்லையம்பலத்துக்கு வந்து சேர்க! என்று கூறி என்னை இப்பூமியில் நிறுத்தி வைத்தார். அவருடைய அருளைப் பெற்ற அடியாருள் சிலர் அவருடன் கலந்து சென்றனர். அங்ஙனம் கலக்க முடியாத வர்கள் எரியிற் பாய்ந்தனர். சிலர் பெருமானுடன் செல்ல ஆசை கொண்டவராகி, மயக்கமடைந்து, இப்பூமியிற் புரண்டு விழுந்து அலறி, வேகமாய் ஓடி "நாத நாத" என்று அரற்றிக், கடலிற் பாய்ந்து புகுந்து பெருமானின் திருவடியை அடைந்தனர். வருத்தத்துடன் இருந்த எனது கண்ணீரை மாற்றி என் மலத்தைக் கெடுத்த பெருமானை விட்டு நீங்கினேன். வினைக்கு ஈடுபட்ட நான், இனி எனக்கு என்ன வருமோ? அதை அறிந்திலேன். இனி அவரை விட்டுப் பிரிந்திருக்க என்னால் முடியாது.

## (20) மணிவாசகர் தமது யாக்கையை வெறுத்தல்

இந்த ஊனைக் கழியாத எனக்குப், பெருமானே! உனது திருவடிதான் கதி. இந்த உடலாகிய வலையை இனித் தினையளவும் பொறேன், இந்த ஊனை அழிக்க முடிய வில்லை. ஆனால் இங்கு என்னால் வாழ முடியாது. 'வருக' என்று அருள் புரிக! பெருமானே!

## (21) மணிவாசகரும் உலகமக்களும்

உலகோர் முன்பு சிவபிரான் என் உடலை நாடி வந்து என்னுள் புகுந்தார். "பெருமானுடைய அடியான்" என்று உலகோரால் ஏசப்பட்டேன். அவர்கள் எம் போலியரைப் பார்த்து இகழ்ந்து பேச நாங்களும் அவர்களை எள்ளி நகையாடினோம். நாம் மேலை வீடு அடையும்படி பெருமான் நம்மை ஆட் கொண்டுள்ளார்.

## (22) தம்மைத் 'தில்லைக்கு வா' எனப் பிரான் அழைத்தது

நலங்களை நிரம்பத் தரக்கூடிய தில்லையில் "அழகு நிறைந்த அம்பலத்துக்கு வந்து சேர்க!" என்று கூறி, என்னை இம்மண்ணுலகத்தில் நிறுத்திவிட்டார் பெருமான்.

## (23) மணிவாசகரும் திருக்கழுக்குன்றமும்

[திருக்கழுக்குன்றத்தில் தரிசனம்—பதிகம் - 30.]

பெருமானே! போற்றுதற்கு அரிய பெருந்துறை என்னும் தோணியைப் பற்றி அதை நான் செலுத்தின வுடன் காண்பதற்கு அரிய அழகிய நின் கோலத்தைத் திருக்கழுக்குன்றத்தில் எனக்கு நீ வந்து காட்டினாய், என் இருவினையும் ஒத்த பின்பு வற்றிப்போகாத பிறவி வித்து மேல் விளையாதபடி கணக்கற்ற அழகிய நின் கோலத்தைத் திருக்கழுக்குன்றத்தில் நீ எனக்குக் காட்டினாய். சிறுநாயினும் கடையாய இந்தக் கொடியேனை யும், சிவலோகனே! நீ ஆட்கொள்ளத் திருக்கழுக் குன்றத்தில் வந்து வெளிப்பட்டாய். விளங்குகின்ற உன் சேவடிகள் இரண்டையும் வைப்பதற்கு இடம் இல்லையே என்று கலங்கினேன். அங்ஙனம் நான் கலங்காமல் நீ திருக்கழுக்குன்றத்தில் வந்து வெளிப்போந்தாய். இறத்தல் இல்லாமையும், பொல்லாமை இல்லாததும் ஆன ஒப்பற்ற உன் திருவடிகளே எனக்குச் சரணம் ஆகும், என்று நான் ஓத நீ திருக்கழுக்குன்றத்தில் வந்து உன்

திருக்கோலத்தைக் காட்டி அருளினாய். உன்னை உலகறிய நச்சி நச்சி நான் ஓத நீ சமயத்தில் வந்து திருக்கழுக் குன்றத்தில் வெளிப்பட்டு அருளினாய். என் வருத் தத்தை நீக்கி என்னை ஆண்டுகொண்டு உனது மலரடியைத் தந்து என்னை (உன்னுடன் அழைத்துச் செல்லாது) அடியார்கள் முன்பு துயரத்திற்கு ஆளாக்கி இப்பொழுது திருக்கழுக்குன்றத்தில் உனது திருவருட் கோலத்தைக் காட்டி அருளினாய். 'வருந்திக் கலக்கமுற்று இருந்த என் கண்ணீரை மாற்றி என் மலங்களை அழித்த திருப்பெருந் துறையை விட்டு நீங்கினேன். "இனி யாது விளையுமோ?" என்று இருந்து நான் கலங்காவண்ணம் நீ திருக்கழுக் குன்றத்தில் உனது திருக்கோலத்தைக் காட்டி அருளினை.

## (24) மணிவாசகரும் தில்லையும்

[தில்லைத் தரிசனம்.—பதிகம் 31]

அளவிலாத ஆனந்தத்தைத் தந்து என்னை ஆண்ட பிரானைத் தேவர்கள் தொழுகின்ற தில்லையில் தரிசித்தேன்.

என்னைப் பெரிதும் ஆட்கொண்டு என் பிறப்பை அறுத்த இணையிலியை எல்லா உலகும் தொழுகின்ற தில்லையம்பலத்தில் தரிசித்தேன்.

என் சிந்தையைத் தெளிவித்துச் சிவமாக்கி என்னை ஆண்ட அந்தமிலா ஆனந்தக் கூத்தனை நான் அழகிய தில்லையில் தரிசித்தேன்.

தித்திக்கும் சிவனை நாயடியேன் மிக்க ஆசையுடன் தில்லையில் தரிசித்தேன்.

தில்லைத் திருச்சிற்றம்பலத்தைச் சேர்ந்து மறையவ ரும், வானவரும் பெருமானை வணங்குவதை நான் கண்டு களித்தேன்.

அடியேனுடைய உள்ளத்தில் ஞான ஒளி வளர அழி வில்லாத அன்பை அருளி, என் வினைகளையும், மலங்களையும்

அறுத்துத், தமது பெருங் கருணையைத் தந்த பெருமானை நான்கு வேதங்கள் ஓதப்படும் தில்லையம்பலத்தில் தரிசித்தேன்,

பேதமில்லாத பெருமானை வேதங்கள் தொழுது ஏத்தும் தில்லையில் தரிசித்தேன்.

பேதை குணம், பிறர் உருவம் "யான், எனது" என்னும் உரை ஆகிய இவைகளைப் போக்கி எனக்கு அமுதம் ஆனவனை நான் தில்லையில் தரிசித்தேன்.

பல்லோருங் காண எனது பசுபாசத்தை அறுத்தவனை எல்லோரும் போற்றுகின்ற தில்லையம்பலத்தில் தரிசித்தேன்.

தமது திருப்பாதத்தை எனது சித்தம் என்னும் வலிய கயிற்றினால் கட்டுவித்த திறங்கொண்ட பெருமானுடைய திருவிளையாடலை விளக்கம் பெற்ற தில்லையில் தரிசித்தேன்.

(25) மணிவாசகர் மறைவு. [தில்லையம்பலத்தில் பெருமானுடைய திருவடியைச் சேர விரும்பியது. பெருமான் தன்னை 'வா' என அழைத்தது.]

பெருமானே !* அம்பலத்தில் ஆடுகின்ற நின் திருவடி மலரை நாயினேன் சேர விரும்புகின்றேன்; என்னை இந்தப் புழுக்கூடு ஆகிய உடலினின்றும் நீக்கியருள்க !!

பெருமானே! உன் திரு அருளைப் பெற்றேன். அதனால் நான் உய்ந்தேன். அடியேனை 'வா' என்றாய். 'அஞ்சேல்' என்றாய். இத்தகைய திருவருளை வேறு யார் பெறக்கூடும்.

* திருச் சதகத்தில் இறுதிப் பாட்டில் இப்பகுதி வருகின்றது. தாம் வேண்டியவாறே தில்லையம்பலத்தில் இவர் மறைந்தார். 'வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்' என்னும் அப்பர் அருள்மொழி இங்கு நினைக்கற்பாலது. திருவாசக ஒளிநெறியில் பகுதி 2 இல் தலைப்பு 30 (25). இறுதிக் கீழ்க் குறிப்பையும் பார்க்க.

தன்னுடைய திருவடியைச் சேரும் வண்ணம் ஆதிப் பிரான் எனக்கு அருள்புரிந்துவிட்டார். அத்தகைய அருளை வேறு யார் பெறக்கூடும்?

என் பந்தங்களை அறுத்து, என் குற்றங்களை அறுத்து இம் மண்ணுலக வாழ்விற்கு ஒரு முடிவை அருளிய திருஅருட் பேறு வேறு யார் பெறக் கூடும்? பெரிய அற்புதம் அன்றோ இது?

## 31. மணிவாசகரின் விசேடச் சொற்களிற் சில

அச்சன், அச்சோ, அதெந்துவே, ஆவ, ஆவா, இறவு, எத்துக்கு, எற்றினுக்கு, சிறவு, நரிப்பாய்.

## 32. மணிவாசகரின் அருமைக் கருத்துக்கள்

(1) [உபதேசம் போன்றவை]

பெருமானே! நான் கண்கள் களிகூர உன் திருவடிகளைக் கண்டேன்; இரவும், பகலும் நான் அவைகளை எண்ணுவதுடன், மண்மேல் இந்த உடலைவிட்டு நீங்கும் வழி எப்படி என்பதையும், உன் திருவடியை வந்து புகுவது எப்படி என்பதையும் நினைக்கமாட்டேனோ? என்னுடைய அடிமைக் குணம் மிக அழகாயிருக்கிறது.

(2) பெருமான் பாண்டிய நாட்டு அரசாட்சி மாத்திரம்தானா தருவார்? உலக முழுதும் ஆளும் கொடையையே தருவார். ஆதலால், சென்று முந்துமின்.

(3) தம்மை அடைந்தவர்க்கு அரிய, பெரிய சீருடைய தமது அருளைத் தருவார். ஆதலால் அப் பெருங் கொடைப் பெருமானுடைய திருவடியைச் சிந்தியுங்கள்.

(4) பெருமானே! இந்த மாயப் பிறவியை உன் வசமே வைப்பது அல்லாமல் நானோ ஆயக் கடவேன்! இங்கு அதிகாரம் என்னுடையதா!

## 33. மணிவாசகரின் உபதேசங்கள்

I [சிறப்பாக அடியார்க்கும் பொதுவாக உலக்குக்கும்.]
உபதேசப் பதிகம்—45 யாத்திரைப் பத்து.

அடியார்களே ! நீங்கள் எல்லோரும் உங்கள் விளையாட்டை விடுமின்கள். உங்கள் புலன் வழியாகப் போகாதீர்கள் ; பெருமானுடைய திருவடிகளைப் புத்தியில் வைத்து அவரைப் புகழ்மின்கள், தொழுமின்கள், (அவர் திருவடிக்குப்) பூப்புனைமின்கள், பொய்யிற்கிடந்து புரளாமல் அவர் திருவடிமாட்டே செல்ல விரும்புங்கள். வேண்டாதனவற்றையெல்லாம் விட்டுத் தள்ளுங்கள். கோபம், ஆசை இவைகளை விடுமின்கள். நீங்கள் வேண்டியவற்றையெல்லாம் விலக்குதல் இல்லாமல் அவர் தருவார். அவர் அருள்தரும் பரிசு முத்திப் பரிசாகும்.

எல்லா அல்லலையும் இனி இடையூறு வாரா வண்ணம் இகழ்மின்கள். நெருங்கும் மாயை இருள்கெட அவர் திருவடியை விரும்புமின்கள். அவருடைய திருவடிக்கீழ்ப் பெருங் கூட்டத்துடன் போய்ச் சேருதற்கு ஒருப்படுமின் (தயாராயிருங்கள்.) பாண்டிப் பெருமான் தன் அடியார்களுக்கு மூல பண்டாரம் (மூல நிதியாம் முத்தி) வழங்குகின்றார். அதைப் பெற வந்து முந்துமின்கள்.

குற்றம் நிறைந்த சிறு தெய்வங்களை ஏத்தாதீர்கள். பெருமானுடைய திருவடியை அடைந்து, அவருடைய திருக்குறிப்பைக் கவனித்துக் கடைப்பிடித்து இருங்கள். பெருமானுடைய பழைய அடியார்களுடன் சேர்ந்து அவருடைய திருவுள்ளக் குறிப்பின்படி பொய்நீக்கிப் போவதற்கு அமைமின்கள். பெருமானைச் சேரக் கருதி உங்கள் சிந்தனையைத் திருத்தமாக அமைத்து அவரை நினையுங்கள். நாம் ஆர், எம்முடையது யாது, பாசங்கள் என்ன மாயம், இவையெல்லாம் தொலையப் பெருமானுடைய திருவடியைக் கூடுதற்குத் தகுதியாகுங்கள். பெருமானுடைய சீர்களைக் கற்று அவருடைய திருவடியை விரும்பினவர்களுடன் கலந்து கூடுமின்கள். பெருமான் கதிர்வாளை உருவி ஆனந்தமாகிய குதிரையைச் செலுத்தித் தம்முன் வருபவர்க

ளுடைய பிறப்பை வாள் வீசிச் சேதிப்பர். ஆதலால் இப்பிறவி வேண்டுபவர்கள் அவர் எதிரில் போகவேண்டாம். பக்தர்களே! இங்கு வாருங்கள், பெருமானுடைய திரு வடியை நிரம்ப நினையுங்கள்; உங்கள் பாசம் தீரப் பணி யுங்கள், நீங்கள் தாமதித்தால் பெருமான் பெறுதற்கு அரியர்.

பெருமான் வீற்றிருக்கும் திருப்பெருந்துறையை வாழ்த்துமின்கள். அங்ஙனம் வாழ்த்தினுல் உங்கள் பிறவிக் காடு அழிந்து போகும். நாம் சிவபுரத்துக்குச் சென்று சிவபிரானுடைய தாளை வணங்கி அங்குள்ள அடியார்களின் முன் சென்று நெஞ்சம் உருகி நிற்போமாக. அங்குள்ள மணிக் கதவம் திறந்தபோதே சிவபுரத்துப் பெருமானுடைய திருத்தாளைச் சென்று அடைவோமாக. பின்னர், போவதற் கில்லையே எனக் கவலைப்படவேண்டாம். நாம் போய் அவர் திருவடியைச் சேரவேண்டிய காலம் வந்துவிட்டது. இந்தப் பாவ உடலை நீக்கிச் சிவலோகத்தே நம்மை வைப்பார் பெருமான்.

## II. நெஞ்சுக்கு உபதேசம்

[நெஞ்சுக்கு உபதேசமும் முறையீடும்.]

(1) நெஞ்சமே! நீ ஆண்டானுடைய இணையடியையே சிந்தித்து அவரிடமே உனக்கு வேண்டியதை இரந்து கொள்; அவர் நீ வேண்டியதை உனக்குத் தருவார்.

(2) நீ ஆடுகின்றிலை, கூத்துடையான் கழற்கு அன்பிலை, எலும்புருகிப் பாடுகின்றிலை, பதைப்பதும் செய்கிலை, பணிகிலை. பெருமானுடைய பாதமலரை உன் சென்னியிற் சூடுகின்றிலை, அவர் திருவடிக்கு மலர் மாலை யைச் சூட்டுகின்றது மிலை; துணையிலி பிணநெஞ்சே! பெருமானை நீ தேடுகின்றிலை, தேடித் தெருவுதோறும் அலறிலை, இன்னது செய்வது என்று அறியேன் நான்.

(3) ஆற்றல் கெடாத ஏ! மனமே! நீ நாசமாய்ப் போவாய், என்னை உடையான் நாயேனை விற்பதற்கும், ஆள்

வதற்கும் உரியவன், அவனுடைய திருவடியினின்று பிரிவதற்கு முன்பு நீ அனுபவித்தது எல்லாம் கெட்டு ஒழிந்த விதத்தையும், உன் அற்ப அறிவையும், உன் போலிப் பெருமையையும் என்னால் அளவிட முடியவில்லை.

(4) களவு எண்ணங்களை ஒழித்துப் பெருமான் நம்மை ஆண்டதைக் கசிவுடன் உணர்ந்திருந்தும், நெஞ்சே! நீ உள்ளவற்றையெல்லாம் வெறுத்து, உன் தகுதியை எண்ணிப் பெருமான் தங்குதற்குப் பெரிய இடமாக அமைந்தாய் இல்லை; பரகதியை அடைய அவர் திருவடியை வணங்கினாயும் இல்லை.

(5) நெஞ்சே! நீ பெருந்துறையை என்றும் பிரியாத பெருமானைப் பேசுவாயாக.

(6) பாழ் நெஞ்சே! எனது ஊன் எல்லாம் உருகும்படி புகுந்து ஆண்ட பெருமான் இன்று போய் வானில் உள்ளான். நீயோ மாளாமல் இங்கு வாழ்கின்றாய்.

(7) பெருமானுடைய நீங்கா அருளைப் பெற்றிருந்தும் ஏ! பிண நெஞ்சே! நீ மாறாக வேலை செய்கின்றாய், அதனால் என்னை மிகப் பொய்யனாக்கிக் கீழ்ப்படுத்தினாய்; நான் கெடுமாறு என்னைக் கெடுத்தாய்.

(8) ஏ! அறிவில்லா மூடமனமே! எனக்கு விரோதமாக நீ நின்று, என்னைக் கெடும்படி செய்கின்றாய்; உன்னை நம்பமாட்டேன்; சிவபிரானது தோள் மேல் திருநீற்று அடையாளத்தைப் பார்த்தும் நீ உள்ளம் நெகிழ்ந்திலை; இந்த உடலைக் கீறுகின்றலை; கெட்டு ஒழிவதே உன் தன்மை; இதை ஏன் என்று கேட்கவும் என்னால் முடியவில்லை.

(9) ஏ! பேரின்ப வாழ்வு வாழாத நெஞ்சமே! நீ மயக்க உலகில் வாழ்கின்றாய்; வல்வினையிற் பட்டு ஆழ்கின்றாய்; அங்ஙனம் ஆழாமல் காக்கும் இறைவனை ஏத்தாமல் உனக்கே நீ கேடு சூழ்கின்றாய். உனக்குப் பல முறை சொல்கின்றேன். நீ துன்பக்கடல் வெள்ளத்தில் வீழ்கின்றாய்.

## III. "வம்மின்" என அழைத்து உபதேசம்

(1) உலகில் கெட்டொழியும் வழியில் உள்ளவர்களே! நீங்கள் நல்ல கதியை அடைய விரும்பினால் ஓடி வாருங்கள்! திருப்பெருந்துறைப் பெருமானுடைய புகழைக் கற்று, கற்றபடியே அவன் திருவடியை விரும்பி நிற்கும் அடியார்களோடு கலந்து கூடுமின்கள்.

(2) பக்தர்களே! இங்கு வாருங்கள், உங்கள் பாசம் தீரப் பணிமின்கள் அங்ஙனம் பணிந்தால் பெருமானுடைய திருவடிக்கண் நமது சென்னி பொருந்தித் திகழ்வதாகும்.

(3) மாதர்களே! வாருங்கள் வந்து என்னுடன் பாடுங்கள். தொண்டர்களை உள்ளே வரும்படி கூவி அழைமின்கள்; குனிந்து தொழுமின்கள், நம் கூத்தன் வந்து நம்மை ஆளும் பொருட்டுப் பொற்சுண்ணத்தை நாம் இடிப்போமாக.

### உபதேசம் [கட்டளையும் எச்சரிக்கையும்]

(1) வானவூர் கொள்ள மாயப்படை வாராதிருக்க நாதப்பறை அறைமின்கள், மதிவெண்குடை கவிமின்கள், திருநீற்றுக் கவசத்துக்குள் புகுமின்கள், இங்ஙனம் போர்க்கு எழுமின்கள்.

(2) அண்டர் நாடு ஆள, அல்லற்படை வாராதிருக்கத், தொண்டர்கள் முன் அணி ஆகவும், பக்தர்கள் பக்க அணியாகவும், யோகிகள் நடு அணியாகவும், சித்தர்கள் பின் அணியாகவும் செல்வீர்களாக. இங்ஙனம் அணிவகுப்புக் கூறி உபதேசித்துக் கட்டளை இடுகின்றார் மணிவாசகர்.

(3) அன்பர்களே! புரண்டு தொழுது புகழ்ந்து பெருமானுக்கு ஆளாகவேண்டும், அப்படி ஆகாவிட்டால் மதி கலங்கி மயங்குவீர்கள். உங்களுக்குத் தெருட்சி (தெளிவு) வேண்டின் நான் இப்போது சொன்னபடி செய்வீர்களாக.

# 3. திருவாசகப் பதிகப் பகுதி

## 1. திருவாசகப் பதிகங்களிற் சிலவற்றின் கட்டுரை

### 7. திருவெம்பாவை

இப்பதிகம் சிவனிடத்தில் ஈடுபட்ட தலைவியும் தோழியர்களும் உறங்குகின்ற ஒரு தோழியை எழுப்புவதைக் கூறுகின்றது. சிவபிரானுக்கும் அவருடைய அடியார்க்குமே ஈடுபடுவோம் என்பதையும், பெருமானுடைய புகழைப் பாடித் தாமரைப் பொய்கையில் மார்கழி மாதத்தில் நீராடுதலையும் கூறி, இறைவன் திருவடியைக் கூட வேண்டுமென விருப்பத்தை வெளிப்படுத்துகின்றது.

### 8. திரு அம்மானை

1. திருப்பெருந்துறைப் பெருமான் பரிமேல் வந்து தமக்கு ஆனந்தம் தந்ததையும்,

2. தனது கருணை வெள்ளத்தில் தம்மை அழுத்தி அந்தணனாய்ப் போந்து ஆண்டு அருளியதையும்,

3. பெருமான் மண் சுமந்து பாண்டியனால் மொத்துண்டதையும்,

4. தக்கன் யாகத்தில் சந்திரன், இந்திரன் ஆகியோர் தண்டிக்கப் பட்டதையும்,

5. தாம் [தலைவி நிலையில் மணிவாசகர்] அவரோடு கூடுவதையும் ஊடுவதையும் கூறித் தமது பற்றறப் பற்றிய பேரானந்த இன்பத்தைப் பாடி ஆடுவோமாக என இவ்வம்மானைப் பாட்டுக்கள் கூறும்.

## 9. திருப் பொற்சுண்ணம்

### 1. பொற்சுண்ணம் இடிப்பதற்கு வேண்டிய பொருள்கள் :

உரல், உலக்கை, மெய்யெனும் மஞ்சள்.

### 2. பொற்சுண்ணம் இடிக்கச் செய்ய வேண்டிய அலங்காரங்கள்

மெழுகவேண்டும், கற்பகம் நாட்டவேண்டும், எங்கும் எழிற் சுடர் வைக்கவேண்டும், உலக்கைக்குக் காசு (மணி வகைகள்) அணிய வேண்டும், உரலைப் பட்டாடையாற் சுற்றவேண்டும், தூப தீபங்கள் வைக்கவேண்டும், பொன் சிந்தி நிதி பரப்ப வேண்டும், கொடி எடுக்க வேண்டும், பூமாலை, முத்துமாலைகளைத் தொங்க விடவேண்டும், முளைக் குடம் வைக்க வேண்டும், திருநீறு அணிந்து சித்தம் களிக்க ஆடவேண்டும்.

### 3. பொற்சுண்ணம் இடிப்பதற்கு யார் யாரை அழைக்கின்றார்

கங்கை, கௌரி, சத்தி, சித்தி, சோமி, நாமகள், பார்ப்பதி, பார்மகள், மற்றும் பணி வகையில் ஈடுபட்ட மங்கையர் ஆகியோர் சுண்ணம் இடிப்பதற்கு அழைக்கப் படுகிறார்கள் ;

[இவர்தம்முள் சத்தியும், சோமியும், பார்மகளும், நாமகளும் பல்லாண்டு இசையுடன் பாடவேண்டியது ;

சித்தி, கௌரி, பார்ப்பதி, கங்கை இவர்கள் நால்வரும் கவரி வீசவேண்டியது.]

### 4. பொற்சுண்ணம் எங்ஙனம் இடிக்கவேண்டும்?

கைவளையும், தோள்வளையும், சிலம்பும் ஒலி செய்ய, கூந்தலில் உள்ள மாலை ஆட, அம் மாலையிலுள்ள வண்டினங்கள் ஆட, சித்தம் சிவனிடத்து ஆட ஆட, சிவனது கருணை

விளங்க விளங்க, தோளும் நெற்றியும் ஒருசேர விளங்க, உலகோர் நம்மைப் பழிப்ப, நாம் அவரைப் பழிப்ப, அடியார் கூட்டம் நம்மொடு கலந்து (சிவ சிவ என்னும்) ஒலி எழுப்ப, நமது காதற் பித்து சிவனிடத்துப் பொருந்தப் பொருந்த, அதனால் நமது பிறவி நம்மை விட்டு அகன்று பிறரொடு சேரச் சேர, நம் கொங்கைகள் பத்திப்பெருக் கால் பூரிக்க, வாயிதழ் துடிப்பச், "சிவபெருமானே! வணக்கம் வணக்கம்" என்று சொல்லிப் பொற் சுண்ணம் இடிப்போமாக.

## 5. பொற்சுண்ணம் இடிக்கும்போது யாரை வாழ்த்தி, என்ன சொல்லி இடிக்கவேண்டும்?

பெருமானுடைய வீரச்செயல்களான-பிரமன் தலையை அறுத்தது, சூரியன் பற்களைப் பறித்தது, முப்புரத்தை எரித்தது, யானையைக் கொன்று அதன் உரியைப் போர்த்தது, காலனைக் காலால் உதைத்தது, ஊழை நஞ்சுண்டது, ஆகிய இவைகளைப் பாடி, அவர் அணிந்துள்ள கங்கணத்தைப் பாடி, அவர் கையில் அணிந்துள்ள பாம்பை யும், அவர் அரையிற் கச்சாகக் கட்டியுள்ள பாம்பையும் பாடி, அவர் வீற்றிருக்கும் கச்சித் திருஏகம்பத்தை யும், பெரியோர்கள் வாழும் தில்லையையும் பாடி, அவருடைய சிவலோகத்தையும், சிவபுரத்தையும் பாடி, அவர் அணிந் துள்ள மத்தம், மதியம் இவைகளைப் பாடி, அவரது வாகன மாம் விடையைப் பாடி, அவருடைய திருத்தாள்களைப் பாடி, அவர் கையில் ஏந்தியுள்ள மழுப்படை, சூலப்படை இவை களைப் பாடி, அவர் அடியார்களை ஆட்கொள்ளும் வண்ணங் களைப் பாடி, ஏழை அடியார்கள் ஆகிய நம்மை ஆண்டு கொண்ட நயத்தையும், நம்மைப் பணி கொண்ட வண்ணத் தையும் பாடி, அவரை நாத்தழும் பேற வாழ்த்தி, "அவர் மீது அன்புள்ள அடியார்கள் உலகில் என்றும் விளங்குக" என்று வாழத்திப், பொய்யர் பொய்யனும், மெய்யர் மெய்யனும், மலைக்கு மருகனும், ஐயாற்றுப் பெருமானும், திருச்சிற்றம்பலத்துச் செல்வனுமாக விளங்கி நிற்கும்

அவரும் தேவியும் வந்து நம்மை ஆளும் பொருட்டுப் பொற்சுண்ணம் இடிப்போமாக.

## 6. பொற்சுண்ணம் யார் முழுக்காட்டுக்காக இடிப்பது?

ஆதி - அந்தம், சோதி - இருள், துன்பம் - இன்பம், பந்தம் - வீடு, பாதி - முற்று, மெய்ம்மை - பொய்ம்மை, வேதம் - வேள்வி ஆக விளங்குபவரும், உமையாள் கொழுநனும், தில்லை வாணனும், மங்கை பங்கனும், வார்சடையனும், முக்கண் அப்பனும், அம்பலத்தாடினானும், பொன்மலை போன்றவனுமாய்த் திகழும் பெருமானுக்கே பொற்சுண்ணம் இடிப்போமாக.

## 7. பொற்சுண்ணம் இடித்தலின் பயன்

பிறவி (சுண்ணம் இடிக்கும் நம்மைச் சேராது) பிறரொடு சேரும்.

## 10. கோத்தும்பி

என்னை ஆண்டுகொண்டு, நாய்மேல் தவிசிட்டது போல என்னை ஒரு பொருளாக்கிய பெருமான், தில்லை அம்பலத்தே ஆனந்தத் தேன் சொரியும் கூத்துடைய பெருமான், எனது சித்த விகார கலக்கத்தைத் தெளிவித்து, மரணம் பிறப்பென்னும் இவை இரண்டின் மயக்கறுத்த கருணைக் கடல் ஆகிய எனது தலைவர் என்னைக் கூடுதற்கு வேண்டி, அரசவண்டே! நீ சென்று, என் உள்ளத்து உள்ள துயரம் எல்லாம் ஒன்று விடாமல் நீ அவரிடம் ஊதித் தெரிவிப்பாயாக.

## 11. திருத் தெள்ளேணம்

மணிவாசகர் தாம் தலைவியாக நின்று தமது தோழியரை அழைத்துத் தமக்கு ஆண்டவன் அருளிய திரு அருட் செயல்களையும், ஆண்டவனுடைய பெருமையையும் பற்றிப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோமாக என்று கூறுவது திருத்தெள்ளேணப் பதிகம்.

சிவனுருடைய சிலம்பாடல்களையும், அவர் ஆண்ட திறத்தையும், அவருடைய கருணைக் கழல்களையும், அவருடைய சீரையும், அவர் வீற்றிருக்கும் திருவாரூரையும் பாடி, பின்னும் அவர் அடியேனுக்கு அருளிய அருட் கழல்கள் என் சித்தத்தில் புகுந்தமையும், அதனால் "நான்" என்பது கெட்டு, என்ஊன், உயிர், உணர்வு, உள்ளம், செயல் எல்லாம் கெட்டு, "நாம்" ஒழிந்து சிவமாம் தன்மையை அடைந்ததைத் தித்திக்கும் வகையிற் பாடி, அவர் திருவடியை என் தலைமீது வைத்தலுமே, நான் தேவான தன்மையை அடைந்ததைப் பாடி, மறந்தும் தன் திருவடியை நான் மறவா வண்ணம் அவர் அருளிய கருணையின் திறத்தைப் பாடி, பெருமான் நம்மை உருக்கும் பணிகளைக் கொண்டது கேட்டு உலகம் எல்லாம் சிரிக்கும் திறத்தைப் பாடி, நனவிலே என்னைப் பிடித்து ஆண்டு கொண்டு அருளியதை நயந்து பாடி, ஒரு நாமம், ஓர் உருவம், ஒன்றுமில்லாத அவருக்கு ஆயிரம் திருநாமங்களைப் பாடிச், 'செந்துவர்வாய் வெண்ணகையீர்! நும் கண்களில் நீர்மல்க' 'தென்னு தென்னு' என்று நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக

## 12. திருச்சாழல்

சிவபிரானுடைய செயல்களை வினு விடைகளால் விளக்குவது திருச்சாழல்.

**விடைகளால் விளக்கப்பட்ட சில முக்கிய விஷயங்கள்.**

(1) சிவபெருமான் நஞ்சுண்டமையால் மேலான தேவர்கள் எல்லாம் பிழைத்தனர்.

(2) பெருமான் மலைமகளைத் திருமணம் செய்யாவிடில் எல்லாப் பொருள்களும் கலக்க முற்று அழிந்திருக்கும்.

(3) பெருமான் பெண்பால் உகந்து இல்லா விட்டால் யாவரும் யோகநிலை அடைந்திருப்பார்.

(4) தில்லையில் பெருமான் நடம்புரியாவிடில் உலக மெல்லாம் காளிக்கு ஊணுகி அழிந்து போய் இருக்கும்.

(5) பெருமான் எலும்பு மாலையை ஏன் அணிந்தார் என்றால், மாலும் பிரமனும் தம் காலம் முடிந்து இறந்து பட்டனர் என்பதைக் குறிப்பதற்கு.

(6) பிரான் அறம் உரைத்ததும், புரம் எரித்ததும் அவருடைய அறக் கருணையையும் மறக்கருணையையும் காட்டும்.

## 13. திருப்பூவல்லி

மணிவாசகர் தம்மைத் தலைவி நிலையில் வைத்துக் கொண்டு தோழியருடன் பூக்கொய்யும்போது என்ன பாடி, எதைப் பற்றிப் பாடிப் பூக்கொய்ய வேண்டும் என்று கூறுவது திருப்பூவல்லிப் பதிகம்.

இப்பதிகத்தால் :—

வானவர் கோவாகிய சிவபிரானைப் பூசித்துப் போற்றப் பூவல்லி கொய்ய வேண்டும் என்பதையும், அவர் தக்கன், எச்சன் முதலியோரைத் தண்டித்துத் தமது மறக் கருணையைக் காட்டியதையும், அவர் நஞ்சுண்டதையும், புரம் எரித்ததையும், தம்மை ஆண்டு தம்பணியை ஏற்றுக் கொண்டதையும், பாண்டியனிடம் அடிபட்டதையும், தில்லை அம்பலத்தே ஆடுகின்றதையும், கொன்றைமாலை, பலநாகங் கள் இவை தமை அவர் அணிந்துள்ளதையும், தாம் அவரிடம் திருவடி தீட்சை பெற்றதையும், பாடிப் பூவல்லி கொய்வோம் என்றும் விளக்குகின்றார்.

பூவல்லிப் பதிகத்தில் பெருமான் தேவர்கோன் என்பதும், அவர் ஒரு காலத்தில் பிள்ளை வடிவு கொண்டனர் என்பதும் கூறப்பட்டுள.

பூவல்லியில் சொல்லப்பட்ட தலங்கள் :—

1. இடைமருது, 2. உத்தரகோசமங்கை, 3. சிவ புரம், 4. திருப்பெருந்துறை, 5. தில்லை, 6. மதுரை.

## 14. திருவுந்தியார்

மகளிர் தமது உந்தி பறக்கும் விளையாட்டில் என்ன என்ன திருவிளையாடலைப் பாடி விளையாட வேண்டும் என்பதைக் கூறுவது திருவுந்தியார்.

அவைதாம் :—

(1) திரிபுரத்தை எரித்தது.

(2) தக்கன் யாகத்தில் இவர் இவர் தண்டிக்கப் பட்டனர் என்பது.

(3) பிரமன் சிரத்தைப் பெருமான் அறுத்தது.

(4) உபமன்யு முனிவருக்குப் பெருமான் பாற்கடல் வரவழைத்துத் தந்தது.

(5) இராவணன் கயிலை மலையை எடுத்தபோது அவன் தலைபத்தும் நசுக்குண்டது.

(6) ஆகாயத்தில் சூரியனிடம் செல்லும் வேணுவி யோர் என்னும் முனிவர்களை இறைவன் காப்பது.

(7) தக்கன் வேள்வியைப் பெருமான் அழித்த திருவிளையாடலைப் பாடி ஆடுவதால் நம் வினை—அழிபடும் என்னும் விளக்கத்தையும் காண்கின்றோம்.

## 15. திருத்தோணோக்கம்

பல்வரிக் கூத்தில் ஒன்றாகிய "தோள் வீச்சு" தோணோக்கம் எனப்படும். இஃது ஒருவகை மகளிர் விளை யாட்டு. இப்பதிகத்திலும் தோழியருடன் தாம் என்ன சொல்லி ஆடவேண்டும் என்பதை மணிவாசகர் தலைவித் தானத்தில் தாம் நின்று விளக்குகின்றார்.

அவைதாம் :—

(1) அரனார் அழலுருவாய் நின்றது.

(2) தமது பிறவித் தாழை இறைவன் பறித்தது.

(3) தமது இந்திரியங்கள் ஒடுங்கி அழிந்தது.

(4) காமன் முதலியோர் தண்டிக்கப்பட்டுத் தூய்மை யானது.

(5) சக்கரம் மாலுக்கு ஈந்தது.

(6) கண்ணப்பருடைய எச்சிலை இறைவன் உண்டது.

(7) பிற தேவர்கள் அழிவுள்ளவர்கள் என்பது முதலியன.

அம்பலத்தே கூத்தாடும் இறைவனுடைய திருவடியைக் கூட வேண்டும் என்னும் நோக்கத்துடன் தோணோக்கம் ஆட வேண்டும் என்கின்றார்.

## 16. திருப்பொன்னூசல்

உத்தர கோச மங்கையில் வீற்றிருக்கும் சிவபிரானைப் பாடிப், பொன்னூசல் ஆடுவோம் என்று மணிவாசகராம் தலைவி தோழியரை நோக்கிக் கூறுவது பொன்னூசல்.

(1) பொன்னூசலின் கால் பவளம், கயிறு முத்தம், பலகை பொற்பலகை.

(2) எதைப்பற்றிப் பாடி ஊசல் ஆட வேண்டும் என்பது விளக்கப்பட்டுள்ளது, அதுதான்—

தம்மை ஆட் கொண்ட எழிலைப் பாடி, ஆட்கொண்ட இறைவனுடைய குணத்தைப் பாடி, பெருமான் வீற்றிருக்கும் இடைமருதைப் பாடி, அவர் அணிந்துள்ள குண்டலங்களைப் பாடி, அவர் புகழைப் பாடி, அவரது மாளிகையைப் பாடி, வாயார அகங்குழைந்து பொன்னூசல் ஆடவேண்டும் என்பது.

## 17. அன்னைப் பத்து

"அன்னை" என்னும் சொல் தாயைக் குறிக்கும். தொல்காப்பியத்தில் தோழி தலைவியை அன்னை என்பதும், தலைவி தோழியை அன்னை என்பதும் உண்டு என்று கூறப்பட்டுள்ளது.

இவ் அன்னைப்பத்து மணிவாசகர் மதுரையை விட்டுப் புறப்பட்டபின் பாடப்பட்டது.

இவ் அன்னைப்பத்தின் பொருள் விளக்கத்தை "அகப் பொருள்" என்னும் தலைப்பு IV-2-ன் கீழ்க் காண்க.

## 18. குயிற் பத்து

இதுவும் மணிவாசகர் மதுரையை விட்டுப் புறப்பட்ட பின் பாடப்பட்டது.

இக் குயிற்பத்தின் பொருள் விளக்கத்தை "அகப் பொருள்" என்னும் தலைப்பு IV-2-ன் கீழ்ப் பார்க்க.

## 19. திருத்தசாங்கம்

இப்பதிகத்தின் விளக்கத்தை பகுதி IV "அகப் பொருள்," "வினுவிடை" என்னும் தலைப்புக்களின் கீழ்ப் பார்க்க.

## 35. அச்சப் பத்து

இப்பதிகத்தில் மணிவாசகர் எதற்கு அஞ்சுவதில்லை, எதற்கு அஞ்சுவேன் என்பதை விளக்குகின்றார். [பக்கம் 208]

மகளிருடைய சொல்லுக்கும் மயக்கம் தரும் முறுவலுக்கும், அவர்தம் கடைக்கண்ணுக்கும், பொய்யர் தம் மெய்யுக்கும், மன்னருடன் உறவுக்கும், உருண்டு வரும் மலைக்கும், எரியும் எரிக்கும், அம்புக்கும், வேலுக்கும், மழைக்கும், இடிக்கும், புலி—யானை—பாம்புக்கும், பழிக்கும், ஆசைகளுக்கும், வினைக்கும், பிணிக்கும், கூற்றுவன் சீற்றத்திற்கும், பிறப்பிறப்புக்கும் ஆக இவைகளுக்கு அஞ்சேன் என்கின்றார்.

ஐம்புலனுக்கும், இறைவனிடம் அன்பில்லாதவர்க்கும், வெண்ணீறு அணியாதவர்க்கும், திருநீறு இட அஞ்சுவார்க்கும், பெருமான் புகழைச் சொல்லாதவர்க்கும், சிவனுடைய திருவடிகளை ஏத்தி மகிழ்ந்து உள்ளம் நெகிழாதவர்க்கும், வேறு தேவர்களைக் கண்டு தேவர்

என்று சொல்ல அருவருப்பு அடையாதவர்க்கும் தாம் அஞ்சுவதாக மணிவாசகர் கூறுகின்றார்.

## 46. திருப்படை எழுச்சி

சிவபிரானுடைய படை: தொண்டர்கள், பக்தர்கள், யோகிகள், சித்தர்கள்.

## 49. திருப்படை யாட்சி

திருப்படையாட்சியில் இறைவன் தன்முன் எழுந்தருளப் பெற்றால் என்ன என்ன கூடுதலாகும் என்பது விளக்கப்படுகின்றது. அவைதாம்:—

கண்கள் இரண்டும் அவன் கழல்களைக் கண்டு களிப்புறும். மாதர்களின் வாழ்வில் தாம் சம்பந்தப்படுவது முடிவு பெறும், அவர்களால் வரும் இடர் ஒழியும். பிறப்பறும். பிறப்பினால் வரும் இடர் ஒழியும்; பெருமான் திருவடியை வணங்குதல் கூடுவதாகும்; பண் நிறைந்த பாடல் ஆடல்களைப் பாடுதல் கூடும்; பரமனுடைய அடியார்களைப் பாடுதல் கூடும்; சிவபோதம் கிட்டும்; ஐம்புலன், ஐம்பொறிகளின் சேட்டை அறும்; இறைவன் திருவருள் கூடுவதாகும்; மனக்கலக்கம் நீங்கும்; அடியார் உறவு கிட்டும்; இறைவனை அடைதல் கூடும்; பாசத்தினால் ஏற்படும் குணங்கள் அழிபடும்.

இறைவனுடைய தியானம் கூடி அமுதன்ன இன்ப உணர்ச்சி உண்டாகும். யோகியர் கேட்கும் மணி, சங்கு, வீணை இவைகளின் நாதம் கேட்கலாம். அன்பர்கள் செய்யும் பணிகளில் நாம் முதலில் நிற்க முடியும், மயக்க உணர்ச்சிகள் நீங்கும். எண்ணற்ற சித்திகள் கை கூடும். மனம் ஒடுங்கிப் பரம்பொருள் தோன்றும். இறைவனுக்குரிய எண்குணங்களும் நம்மை அடைதல் கூடும். சாதி வேற்றுமை நீங்கும். மாயை ஒடுங்கும். ஆசைகள் ஒடுங்கி அடியார் அடியோம் என்னும் ஒரே ஆசை அளவில் அடங்கி நிற்கும். இறைவனுடைய ஆகத்தை அடைந்து இன்புறுதல் கூடும். அவருடைய பெருங் கருணைக் கடலில் திளைத்து விளையாடுதல் கூடும்.

### 51. அச்சோப் பதிகம்

இதன் கட்டுரை "மணிவாசகர்" என்னும் பகுதியிற் (II-19) காணலாகும்.

## 2. பதிக விசேடங்களும் கருத்துக்களும்

### 1. சிவபுராணம்

இது கலிவெண்பா. "கீத இசைகூட்டி வேத மொழி சூட்டுகீரர் இயல்" என்றூர் திருமுருகாற்றுப் படையை அருணகிரியார். அதுபோல இச் சிவபுராணம் வேத மொழி போன்றது. 'நமச்சிவாய' எனத் தொடங்குவதும் இவ்வுண்மைக்கு ஓர் அறிகுறியாகும். திருவாசகம் 51 பதிகங்களுக்கும் இதுவே "தேசுறு மாணிக்கமாம்." ஆன்மாக்களின் பிறப்பு வகை, இறைவன் பெருமை முதலியவற்றை விளக்கும் இப்பதிகம்.

### 2. கீர்த்தித் திருஅகவல்

இப்பதிகம் இறைவன் பல தலங்களில் அருளிய ஆடல் களையும் அவரது தசாங்கத்தையும் குறிக்கும்.

### 3. திருஅண்டப் பகுதி

இப்பதிகத்தில் இறைவன் அடைதற்கரியவன்; ஆயி னும் தன்னை அற்புதமாக ஆண்டருளிப் பரா அமுதாக் கினன் என ஆசிரியர் விளக்குகின்றூர்.

### 4. போற்றித் திருஅகவல்

மானுடப் பிறவியில் எத்துணை இடர்கள் உள்ளன என்பதை விளக்கியும், மால் அயற்கு அரிய பெருமான் தன்னை ஆண்டருளிய எளிமையை விளக்கியும், வாயார நிரம்பப் போற்றுகின்றூர் ஆசிரியர் இப்பதிகத்தில்.

### 5. திருச்சதகம்

இஃது அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது. இறைவன் தன்னை ஆண்டருளிய அன்பையும் இறைவனது

கருணையையும் பல வகையாக விளக்கி, இறுதிப் பாடலில் "அம்பலத்தாடு நின்கழற் போது நாயினேன் கூட வேண்டும் நான்" எனத் தம் விருப்பத்தை மணிவாசகர் வெளியிடுகின்றார். குழைத்தபத்து (33) பதிகத்தில் "வேண்ட முழுதும் தருவோய் நீ" என அவரே குறித்த வாறு, அவர் விரும்பிய வண்ணம் கூத்தப்பிரானது திருவடி நீழலிற் கலந்தனர்.

இச் சதகத்தில் (61-70) போற்றிப் பதிகமாகும். (81-90) எண்ணுள்ள பதிகத்தில் அவரது வரலாற்றுக் குறிப்புக்கள் உள.

## 6. நீத்தல் விண்ணப்பம்

இஃது அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது.

'விடுதி கண்டாய்' என வரும் முறையீட்டுப் பதிகம் இது.

## 7. திருவெம்பாவை

தலைவி சில பெண்களுடன் இறைவனுடைய புகழைப் பாடிச் சென்று சிவபிராற்கு அடிமை பூண்டவளும் தன் தோழியுமாகிய ஒரு பெண்ணைத் துயில் எழுப்பி, இறைவன் இறைவி இவர்களுடைய பெருமையை விளக்கி, நீராடுதற்கு அழைக்கும் காட்சியை விளக்குவது இப்பதிகம். இப் பதிகத்தின் விவரங்களையும், வேறு சில பதிகங்களின் விவரங்களையும் "திருவாசகப் பதிகக் கட்டுரை" என்னும் முற்பகுதியில் காணலாகும்.

இப் பதிகத்தில் தலைவியின் நிலையில் உள்ளவர் மாணிக்கவாசகர்.

## 8. திருஅம்மானை

இங்கும் மாணிக்கவாசகர் தலைவியின் நிலையில் தம்மை வைத்துள்ளார். *தோழியுடன் தம் எண்ணங்களைக்

---

* பாடல் 6-ல் 'கேட்டாயோ தோழி' என வருவது காண்க.

கூறியும், இறைவன் திருவிளையாடல்களைக் குறித்தும், தமது பாசம் அற அவரைப்பற்றிய பேரானந்தத்தைச் சொல்லியும், அம்மானை பாடி ஆடுவோமாக எனக் கூறுவது இப்பதிகம்.

## 9. திருப்பொற்சுண்ணம்

இங்கும் தலைவித் தானத்தில் மாணிக்கவாசகர் தம்மை வைத்துக்கொண்டு பல பெண்களை அழைத்து, என்னென்ன பணிகள் யார் யார் எப்படி எப்படிச் செய்ய வேண்டும் என்பதைக் கூறி, எவ்வாறு இறைவன் புகழைப் பாடி இறைவனுக்கு வேண்டிய பொற்சுண்ணத்தை இடிக்க வேண்டும் என்பதை விளக்குவது இப் பதிகம்.

## 10. திருக்கோத்தும்பி

தும்பியை அழைத்து இறைவனுடைய சேவடி மலருக்கே நீ சென்று ஊது எனக் குறிப்பிடுவது இப் பதிகம்.

## 11. திருத்தெள்ளேணம்

மாணிக்கவாசகர் தலைவியின் தானத்தில் தம்மை வைத்துள்ளார். இப்பதிகத்தில் தலைவி *தோழியருடன் கூடித், தன்னை இறைவன் ஆண்டருளிய கருணையைக் கூறி, அவர் புகழைப் பாடி, 'தென்னா தென்னா என்று தெள்ளேணம் கொட்டுவோமாக எனக் கூறுவது இப்பதிகம்.

'தெள்ளேணம்' என்பது அக்காலத்தில் வழங்கிய மகளிர் விளையாட்டு.

"ஆறு" என்னும் சொல் 'ஆ' எனக் குறுகி வந்துள்ள பாடல்களைக் கொண்டது இப்பதிகம். (உ - ம்.) "சிவமானவா பாடித் தெள்ளேணம்."

## 12. திருச்சாழல்

(மகளிர் விளையாட்டு) வரிக்கூத்து வகைகளில் ஒன்று. ["நல்லார் தம் தோள் வீச்சு நற்சாழல்........வரிக் கூத்தின்

---

* பாடல் 9-ல் 'செந்துவர்வாய் வெண்ணகையீர்' என வருவது காண்க.

குலம்''—சிலப்பதிகாரம் - பக்கம் 89 - உ. வே. சா. பதிப்பு (1927)]

இது வினாவிடைப் பதிகம். சிவபெருமான் சம்பந்த மான (அவர் கோவணமாகக் கொள்வது எது? அவர் ஏன் ஒரு பெண்ணை வேட்டனர்? யானை, குதிரை, தேர் இருக்க ஏன் இடபத்தை வாகனமாகக் கொண்டார்? என்பன போன்ற) கேள்விகளையும் அவைகளுக்குரிய விடைகளையும், எளிதில் புலப்படாத அவர்தம் செயல்களின் விளக்கத்தை யும் கொண்டுள்ளது இப்பதிகம்.

ஒவ்வொரு பாடலும் முதல் இரண்டடிகளில் ஒரு பெண்ணைக் கேட்கும் வினாவும், பின் இரண்டடிகளில் அதற்கு விடையுமாக அமைந்து சிவபெருமானது முதன்மையைக் காட்டும்.

## 13. திருப்பூவல்லி

இறைவன் புகழையும், பெருமையையும், வீரத்தையும், தம்பால் காட்டிய கருணையையும் பாடி, ஆசிரியர் அல்லிப்பூ (கொடிப்பூ) கொய்வோமாக என அடியாரிடம் கூறுவது இப் பதிகம்.

## 14. திருவுந்தியார்

திரிபுரம் எரித்தது, தக்கன் வேள்வியைச் செற்றது, பிரமன் சிரத்தை அறுத்தது, இராவணனை மலையின் கீழ் அவனுடைய தோள்கள் இற அழுத்தினது முதலிய வீரச் செயல்களையும், பால் வேண்டி அழுத பாலகனுக்குப் பாற் கடலை ஈந்த கருணையையும், பாராட்டிப் பாடி 'உந்தீ பறப் போமாக' எனத் தலைவி தோழியர்க்குக் கூறுவது இப்பதிகம்.

'உந்தி :—(மகளிர் விளையாட்டு)—வரிக்கூத்து வகை களில் ஒன்று. [''நல்லார்தம் தோள் வீச்சு; நற்சாழல்; ''உந்தி....வரிக்கூத்தின் குலம்'']—சிலப்பதிகாரம்—பக்கம் 89. உ. வே சா. பதிப்பு (1927).

## 15. திருத்தோணேக்கம்

(மகளிர் விளையாட்டு)

வரிக்கூத்து வகைகளில் ஒன்று—

"நல்லார்தம் தோள்வீச்சு......வரிக்கூத்தின் குலம்"

—சிலப்பதிகாரம் பக்கம் 89

* தலைவி தோழியருடன் இறைவன் புகழையும், பராக்கிரமத்தையும், திருவருளையும் பாடித் தோணோக்கம் ஆடுவோமாக எனக் கூறுவது இப்பதிகம். திருத்தெள்ளேணத்திற்போல 'ஆறு' என்பது 'ஆ' எனக்குறுகி வந்துள்ள பாடல்களைக் கொண்டுள்ளது இப்பதிகம் (உ-ம்) "அருட்பெற்று நின்றவா."

## 16. திருப்பொன்னூசல்

தலைவி தோழியரை விளித்து இறைவன் வீற்றிருக்கும் தலத்தையும், மாளிகையையும், புகழையும், குணத்தையும், குண்டலங்களையும் வாயாரப் பாடிப் பரவி நாம் பொன் ஊ(ஞ்)சல் ஆடுவோமாக எனக் கூறுவது இப்பதிகம்.

இப்பதிகத்தில் ஒவ்வொரு பாடலிலும் 'உத்தரகோச மங்கை' வருவதால் இப்பதிகம் 'உத்தரகோச மங்கைத் திருப்பதிகம்' என்க.

## 17. அன்னைப்பத்து

இறைவரை நினைந்து உருகி அவர் ஆடலையும், எழிலையும், கோலத்தையும் தலைவி தன்னிடம் எடுத்துக் கூறியதை அவள் தாய் நமக்கு விளக்கும் வகையில் அமைந்துள்ளது இப்பதிகம்.

## 18. குயில்பத்து

இறைவர் பெருமையைக் கூறி ("அவர் தன்னிடம் வரும்படி உன் சிரிய வாயால்) கூவுக" என்று குயிலை

---

* பாடல் 2-ல் "துன்றார் குழலினீர்" எனவருவது காண்க.—[தலைவித் தானத்தில் மாணிக்கவாசகர் உள்ளார்.]

'வா இங்கே நீ குயிற் பிள்ளாய்' எனத் தலைவி விளித்துக் கூறுவது இப்பதிகம். குயிலுக்கு இவ்வேலை இடுவதால் அக்குயிலை 'கீதம் இனிய குயிலே, உன்னை உகப்பன் குயிலே, காருடைப்பொன் திகழ்மேனிக் குயிலே, கொந்தணவும் பொழிற்சோலைக் கூங்குயிலே, சுந்தரத் தின்பக் குயிலே, நீல உருவிற் குயிலே, இன்பம் தருவன் குயிலே' என்றெல்லாம் அக்குயிலைப் புகழ்ந்து உரைக்கின்றாள் தலைவி.*

இப்பதிகத்தில் திருப்பெருந்துறை (2), (7) பாடல்களிலும், உத்தரகோச மங்கை மூன்றாவது பாடலிலும், கோகழி ஆறாவது பாடலிலும் கூறப்பட்டுள.

இராவணன் மனைவி அழகமர் வண்டோதரிக்கு இறைவன் பேரருள் இன்பம் அளித்தது 2 ஆம் பாடலிற் கூறப்பட்டுள்ளது.

## 19. திருத்தசாங்கம்

இதுவும் 12 ஆம் பதிகம் 'திருச்சாழல்' போல வினாவிடைப்பதிகம். தலைவி கிளியை விளித்து இறைவனுடைய (1) திருநாமம் (2) நாடு (3) பதி (4) ஆறு (5) மலை (6) ஊர்தி (7) படை (8) முரசு (9) தார் (மாலை) (10) கொடி இவை யா என்று வினவுவதும் அவைதமக்கு விடையும் கொண்டுள்ளது இப்பதிகம்.

இப்பதிகத்தில் கிளியின் பிற பெயர்கள்—தத்தை, சுகம், கிள்ளை வருவன காண்க.

இறைவனுடைய தசாங்கத்தைக் கீர்த்தித் திரு அகவல் (2 ஆம் பதிகத்திலும்) கூறியுள்ளார். (தலைப்பு IV-2 அகப்பொருள் பார்க்க.)

## 20. திருப்பள்ளியெழுச்சி

இப்பதிகத்தில் ஒவ்வொரு பாடலிலும் 'திருப்பெருந்துறை' வருவதால், இப்பதிகம் அத்தலத்திற் பாடப்

---

* தலைவித் தானத்தில் மணிவாசகர் தம்மை வைத்துள்ளார்.

பட்டிருக்க வேண்டும். தம்மை இத்தலத்தில் இறைவன் அந்தணனுய் வந்துள்ள தனது திருக்கோலத்தைக் காட்டித், தான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலையும் காட்டின வரலாறு 8 ஆம் பாடலிற் கூறப்பட்டுள்ளது. சிவன் உய்யக் கொள்கின்ற இடம் இப்பூமியே என்று திருமாலும் பிரமனும் உணர்ந்து, இப்பூமியில் வந்து பிறக்கும் பிறப்பை விரும்புகின்றனர் என்னும் அரிய விஷயம் பத்தாம் பாடலிற் காணப்படுகின்றது.

ஏன் இறைவனைப் பள்ளி எழுப்ப வேண்டும் என்னும் வினுவுக்கு விடையை "எது எமைப்பணி கொளுமாறு அது கேட்போம் எம்பெருமான் பள்ளியெழுந்தருளாயே" என்னும் அடிகளில் மணிவாசகர் குறித்துள்ளார்.* இஃது "ஏர்மருவு திருப்பள்ளியெழுச்சி பணிவிடை கேட்டார்வமுடனுண்ட அரற்கன்பு செயுமியல்பே" எனத் 'திருவாசக உண்மை' என்னும் பாடல் 10 இல் காணலாகும்.*

வீணை வேறு, யாழ் வேறு என்பதை 'இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்,' என வருவதினின்றும் அறிகின்றோம். பின்னும் திருப்பள்ளியெழுப்பும் அதிகாலையில் இன்னிசை வாசிப்பவர், வேதமாகிய தோத்திரம் சொல்பவர், மலர் மாலை ஏந்தி வருபவர், தொழுது அழுது, துவண்டு, சென்னியில் அஞ்சலி கூப்பித்தொழுபவர்—ஆகிய பல்வேறு வகைப் பக்தர் குழாம் திருக்கோயிலில் மணிவாசகர் காலத்தில் கூடினர் என்பதை இப்பதிகத்தின் நாலாம் பாடலால் அறிகின்றோம்.

## 21. கோயில் மூத்த திருப்பதிகம்

இப்பதிகத்திற் பொன்னம்பலம் பாடல்தோறும் வருவதால் இப்பதிகம் தில்லையில் பாடப்பட்டது என்பதும், உடனிருந்த அடியாருடன் இறைவனைச் சேராது தாம் பிற்பட்டு ஒழிந்து நின்றதைக் குறித்து வருந்தி, "என்னைப்

* இதை எனக்கு எடுத்துக்காட்டினவர் திருவாளர் மு. அருணுசலம், M. A., அவர்கள்.

'போந்திடு' என்னுவிடில் யான் அழுவதன்றி மற்றென் செய்கேன்? என்னை வாவென்று அழைத்து உன் அடியார் கூட்டத்தைக் காட்டாவிடில் உன் அடியார் சிரியாரோ'' என்று எல்லாம் வருந்தியும் கூத்தப் பெருமானுடைய திருவடியிற் கூட வேண்டும் என்னும் தமது கருத்தை இப் பதிகத்தில் தெரிவிக்கின்றார்.

''கோயில் மூத்த திருப்பதிகம் சிதம்பரத்தில் அருள் அடையும் குறிப்பதாகும்'' என்பது 'திருவாசக உண்மை'-பாடல் (11)

இப்பதிகம் 'முறையீட்டுப் பதிகம்'; அந்தாதித்தொடையில் அமைந்தது. அடியார்களின் அணுக்கத் தன்மையை இப்பதிகம் காட்டும், கோயில் மூத்த திருப்பதிகம் என்பதில் 'கோயில்' தில்லையையும் 'மூத்த' என்பது ஆசிரியர் தமது இறுதிக் காலத்தில் பாடி இருக்க வேண்டும் என்பதையும் குறிக்கும்.

## 22. கோயிற்றிருப்பதிகம்

இப்பதிகத்தில் ஒவ்வொரு பாடலிலும், திருப் பெருந்துறை வருவதால் இஃது அத்தலத்தில் பாடப்பட்டிருக்கவேண்டும். 'கோயில் திருப்பதிகம்' என்பதில் 'கோயில்' திருப்பெருந்துறையையே குறிக்கும். இரண்டாம் பாடலில் ''தென்பெருந்துறையாய்.......சிவபுரத்தரசே'' எனவருவது திருப்பெருந்துறையின் பழம்பெயர் 'சிவபுரம்' எனத் திருப்பெருந்துறைப் புராணத்திற் குறித்திருப்பதற்கு ஒரு சான்று ஆகும்.

இப்பதிகம் அந்தாதித்தொடையது. இது விளிநிறைந்த திருப்பதிகம். இறைவன் தமது உடலிடங்கொண்டதை நினைந்து ஆசிரியர் இறும்பூதெய்துகின்றார். இப்பதிகத்தின் 'தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னை' எனத் தொடங்கி அசதி ஆடும் பாடல் திருவாசகத்திற்கே ஒரு சிகாரத்தினம் (மணிமுடி) போன்றது.

## 23. செத்திலாப்பத்து

இப்பதிகத்திலும் திருப்பெருந்துறை பாடல்தோறும் வருகின்றது. இதுவும் அத்தலத்தில் பாடப்பட்டிருக்க வேண்டும். ஆசிரியரது பிரிவாற்றாமையைக் குறிக்கும் பதிகம் இஃது என்பது 'உனைப் பிரிந்தினிதிருக்க என் செய்கேன்', 'மரக்கணேனையும் வந்திடப் பணியாய்' என இப்பதிகத்தில் வருவதினின்றும் அறியக்கிடக்கின்றது.

## 24. அடைக்கலப்பத்து

இப்பதிகத்தில் தம்முடன் இருந்த அடியார்கள் வான் எய்தினர்; தான் "எப்போது வந்து எந்நாள் வணங்குவன்" என வருந்தி 'உடையாய் அடியேன் உன் அடைக்கலமே' எனக் கவன்று முறையிடுகின்றார் ஆசிரியர்.

## 25. ஆசைப்பத்து

மணிவாசகர் எது எதில் தாம் ஆசைப்படுவதாகக் கூறும் பதிகம். யாக்கையின் இலக்கணத்தை நிரம்பக் கூறும் பதிகம் இது. (பாடல்கள் 2—5, 9) தலைப்பு 14. பக்கம் 130 பார்க்க.

அவர் ஆசைப்படுவதாகக் கூறுவன :—

(1) தன்னை "இங்கே வா என்று அங்கே கூவும் அருள்" (1, 2)

(2) தன் "முகநோக்கி ஆவா" என்னல். (3)

(3) "திருமலர்ப்பாதம் அடைந்து" நிற்றல். (4)

(4) தாம் "என்னாரமுதேயோ அளியேன்' என்னல். (5)

(5) 'முகவொளி நோக்கி முறுவல் நகைகாண' (6)

(6) 'பேராயிரமும் பரவித் திரிந்தெம் பெருமான் என ஏத்த' (7)

(7) 'எம்பெருமான் பெருமான் என்று வாயால் அரற்ற' (8)

(8) 'பழ அடியார் கூட்டம் காண' (9)

(9) இறைவனுடைய 'பவளத் திருவாயால் அஞ்சேல் என்ன' (10)

## 26. அதிசயப்பத்து

[இதுவும் யாக்கையைப் பற்றி நிரம்பக் கூறும் பதிகம் 7-10]

ஆசிரியர் என்ன அதிசயத்தைக் கண்டார் என விளக்குவது இப்பதிகம். நரகிடை வீழ்வதற்கு ஒருப்படுவதற்கு நின்ற தன்னை, இறந்து மண்ணுவதற்கு இருந்த தன்னைத், 'துகளறுத்து எழுதரு சுடர்ச் சோதி ஆக்கி ஆண்டு, அடியரிற்கூட்டிய அதிசயத்தைக் கண்டேன் எனக் கூறுவது இப்பதிகம்.

## 27. புணர்ச்சிப்பத்து

தான் பக்திநிலையில் சிறந்து 'பரமா' என்று பாடிப் பாடி, 'இறைவனுடைய திருவடி மலரில் கூடுவது என்று' என்று கவன்று பாடுவது புணர்ச்சிப் பத்து.

## 28. வாழாப்பத்து

இப்பதிகத்திலும் திருப்பெருந்துறை பாடல்தோறும் வருகின்றது. ஆதலால் இப்பதிகமும் திருப்பெருந்துறையில் பாடப்பட்டிருக்க வேண்டும்; இப்பதிகத்திலும் 'சிவபுரத்தரசே, திருப்பெருந்துறையுறை சிவனே' எனப் பாடல் தோறும் வருவதால் சிவபுரம் என்பது திருப்பெருந்துறையின் பழைய பெயரையே குறிக்கின்றது போலும். [பதிகம் 22ன் குறிப்பைப் பார்க்க.]

"இவ்வுடலில் நின்று வாழேன், 'உன் பாதமேயல்லால் பற்று நான் மற்றிலேன்; வருக என்று அருள்புரி'' எனக் கூறி வேண்டுவது வாழாப்பத்து.

## 29. அருட்பத்து

திருப்பெருந்துறை பாடல்தோறும் வருவதால் இதுவும் திருப்பெருந்துறையிற் பாடப்பட்டிருக்க வேண்டும்.

"அடியேன் ஆதரித்தழைத்தால் அதெந்துவே என்றருளாயே", "பொருந்தவா கயிலை புகுநெறி இது காண்போதராய் என்றருளாயே" என இறைவனை வேண்டுவது இப்பதிகம்

"திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந்துறையில் செழுமலர்க் குருந்த மேவிய சீர் அருத்தனே" என்னும் அடியில், மூர்த்தி, தலம், தீர்த்தம், தலமரம் இவை நான்கும் வருவது காணலாகும்.

"நான்மறைசேர் திருப்பெருந்துறை" என்றும், "செல்வத் திருப்பெருந்துறை" என்றும் ஆசிரியர் இத்தலத்தின் பெருமையை விளக்கியுள்ளார்.

இத்தலத்தில் இறைவன் குருந்த மரத்தின் (செழுமலர்க் குருந்தம்) கீழ் வீற்றிருக்கின்றார் என்பது பாடல் தோறும் கூறப்பட்டுள்ளது.

## 30. திருக்கழுக்குன்றப் பதிகம்

இது மணிவாசகர் வரலாற்றுப் பதிகம்.

திருப்பெருந்துறையில் காட்சி தந்த கோலத்தைத் திருக்கழுக்குன்றத்தில் மறுமுறை ஆசிரியருக்குக் காட்டினர் என்பது இப்பதிகத்தாற் பெறப்படுகின்றது. இறைவன் காட்டின கோலத்தைக் 'கணக்கிலாத் திருக்கோலம்' என்றும், 'காணொணாத் திருக்கோலம்' என்றும் விவரித்துள்ளார் ஆசிரியர்.

'இலங்குகின்ற நின் சேவடிகள் இரண்டும் வைப்பிடமின்றியே கலங்கினேன், கலங்காமலே வந்து காட்டினாய் கழுக்குன்றிலே' என வருவதினின்றும் குருமூர்த்தியின் திருவடி போலச் செய்து தாம் பூசை செய்து தலங்கள் தோறும் எடுத்துக் கொண்டு சென்றிருந்த திருவுருவத்தை இறைவன் ஆணைப்படி திருக்கழுக்குன்றத்தில் மணிவாசகர் நிலைபெறுவித்தனர் என ஊகிக்கலாம் என்ப.

## 31. கண்டபத்து

இப்பதிகத்தில் தில்லை, அம்பலம் பாடல்தோறும் வருவதால் இது தில்லையில் பாடப்பட்டது என்பது தெளிவு. அளவிலா வானவரும், *மறையவரும், வேதங்களும் (நான்மறைகளும்) அனைத்துலகும் தொழுது ஏத்தும் தில்லை—என்று தில்லையின் சிறப்பு கூறப்பட்டுள்ளது. தமது பசுபாசத்தை அறுத்தருளித் தம்மை இறைவன் ஆண்டது உலகறிந்தது என்பது 'பல்லோரும் காண என் தன் பசு பாசம் அறுத்தானை' என ஆசிரியரே கூறியுள்ளதால் அறியக்கிடக்கின்றது.

தில்லைக்*கூத்தப்பிரானைக் கண்டு தாம் அடைந்த ஆனந்தத்தை 'அந்தமிலா ஆனந்தம்' என்று அவரே கூறியுள்ளார்.

## 32. பிரார்த்தனைப் பத்து

இது வேண்டுகோட் பதிகம். தம் குறைகளைக் கூறித் தாம் 'ஒரு வற்றல் மரம' என்றும், தமது சிந்தை "திணியார் மூங்கிற் சிந்தை'' என்றும் கூறி, இறைவனை உணர்ந்து 'யான் எனது' என்பது அற்ற ஆனந்த நிலையை அடையும்படி அருளவேண்டும். பெருமானே! எனப் பிரார்த்திக்கின்றார் இப்பதிகத்தில்.

இறைவனுடைய இலக்கணத்தைப் 'பேரா, ஒழியா, பிரிவில்லா, மறவா, நினையா, அளவிலா, மாளா இன்பக் கடலே' என ஏழு அடைமொழிகளால் விளக்கியுள்ள பகுதி [பாடல் 6] நினைந்து நினைந்து ஆனந்திக்கத் தக்கது.

## 33. குழைத்த பத்து

இது முறையீட்டுப் பதிகம். முதல் நான்கு பாடல்களில் 'உமை பாகன், உமை கணவன்' எனத் தேவியையும் உடன் கூறியுள்ளது கவனிக்கற்பாலது. 'வேண்டத்தக்கது அறிவோய் நீ' என்னும் ஆறும் பாடலும், 'நாயிற் கடையாம் நாயேனை' என்னும் எட்டாம் பாடலும், 'நன்றே செய்வாய்

---

* மறையவர்—தில்லை மூவாயிரவர்.

பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே' என வரும் ஏழாம் பாடலின் ஈற்றடியும் மனப்பாடத்துக்கும் உரையாடலில் எடுத்து ஆள்வதற்கும் உரியன.

## 34. உயிருண்ணிப்பத்து

பேரின்பம் தழைத்து ஓங்கினால் (உயிர் உண்ணப்படும்) உயிர் தோன்றாத் தன்மை அடையும் என்பது இப்பதிகத்தின் கருத்து. இப்பதிகத்திலும் திருப்பெருந்துறை பாடல்தோறும் கூறப்பட்டுள்ளது. ஆதலால் இப்பதிகமும் அத்தலத்தில் பாடப்பட்டிருக்கவேண்டும்.

இன்பே அருளித் தன்னை உருக்கி, தன் உயிரை இறைவன் உண்டான் என்பது "இன்பே அருளி எனை உருக்கி உயிர் உண்கின்ற எம்மானே" என எண்ணப் பதிகம் 44-3ல் வருவதிற் காணலாகும். "உயிர் கலந்தான்," 'நிச்சம் என நெஞ்சில் மன்னி யானாகி நின்றானே' 'எனது உயிரும் புகுந்து ஒழியா வண்ணம் நிறைந்தான்' என இப்பதிகத்தில் (34ல்) வருவனவும் இறைவன் உயிர் உண்ட கருத்தை வெளியிடுகின்றன.

'வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம் என்னும்' 7 ஆவது பாடலினின்றும் மணிவாசகத்து உயரிய துறவு நிலை நன்கு பெறப்படும்.

## 35. அச்சப் பத்து [பக்கம் 194]

சிவ சமயத் தவம் சாராதவரை (சிவ சம்பந்தப்படாதவரை)க் கண்டால் ஆசிரியர் தாம் அஞ்சுவதாகக் கூறுவது இப்பதிகம். அவர் யார் யார் எனில் (1) மற்றோர் தெய்வம் உண்டென்று நினைந்து கற்றை வார்சடை அண்ணலைக் கற்றிலாதவர்; (2) சிவனது திருவுரு அன்றி வேறு தேவரைத் தேவர் என்ன அருவராதவர்; (3) சிவனிடத்து அன்பில்லாதவர்; (4) அவருடைய திருவடியை நண்ணி உள்ளம் உருகாதவர்; (5) வெண்ணீறு (நெற்றியில்) அணியாதவர்; (6) மலர்மாலை புனைந்து அவருக்கு அணிசெய்து ஆளாகாதவர்; (7) அவருடைய திருவடியை ஏத்தி அகம்

நெகாதவர்; திருவடியை ஏத்தி இனிது வாழாதவர்; (8) கண்ணீர் சோர வாழ்த்தி ஏத்தமாட்டா ஆண்மைக் குணம் இல்லாதவர்.

## 36. திருப்பாண்டிப் பதிகம்

சிவபெருமான் பரிமேல் வந்த அருள் திறத்தை விளக்குவது இப்பதிகம்.

உலகுக்கு உபதேசம் நிறைந்துள்ள பதிகம் இது.

பாண்டியனுக்குச் சிவபோதத்தைப் பெருமான் அருளியதைக் கூறும் இப்பதிகம். (பாடல் 10)

அகப்பொருட் டுறையில் அமைந்தது பாடல் 9.

## 37. பிடித்த பத்து

இது விளி நிறைந்த பதிகம். 'சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவது இனியே' எனப் பாடல் தோறும் வரும் பதிகம். 'அம்மையே அப்பா' (3), 'பால்நினைந்து ஊட்டும்' (9) எனத் தொடங்கும் பாடல்கள் இரண்டும் மனப்பாடத் துக்கு உரியன.

## 38. திருவேசறவு

தாம் பெற்ற பேற்றை நினைந்து மணிவாசகர் நன்றி தெரிவிக்கும் பதிகம் இது. தம்மை வா என்று இறைவர் அழைத்ததும், அவரது பாத தரிசனத்தைத் தாம் பெற்றதுமான வரலாறுகளை மணிவாசகர் 2, 3 பாடல்களில் தெரிவிக்கின்றார். இறைவன் நரி பரியாக்கிய திருவிளை யாடலை நினைந்து தம்மை ஆண்டருளிய அருள் திறத்தைக் கூறுகின்றது இப்பதிகம்.

## 39. திருப்புலம்பல்

மூன்றும் பாடலினின்றும் மணிவாசகருடைய துறவு நிலையும், பக்திச் சிறப்பும் நன்கு புலப்படும். திருக்குற்றாலம் பஞ்சசபைகளில் ஒன்று என்பதற்கு ஆதாரம் 'குற்றாலத்

தமர்ந்துறையும் கூத்தா' என இப்பாடலிலும், 'குற்றாலத் தெங் கூத்தா போற்றி'—(4-156) எனப் 'போற்றித் திரு அகவலிலும்' வருவன.

## 40. குலாப் பத்து

இப் பதிகத்தில் பாடல்தோறும் 'தில்லை' வருவதால் இது தில்லையில் அருளிச் செய்யப்பட்டது என்பது தெளிவு. இப் பதிகத்தின் ஈற்றுப் பாடலினின்றும் மணிவாசகர் இறைவனுக்குச் செம்மை மனத்துடன் திருப்பணிகள் செய்துவந்தார் என்பது புலப்படுகின்றது. முற்பிறப்பிற் செய்த தவத்தின் பேறே இப்பிறப்பில் தமக்கு நிதியாகக் கிடைத்தது தில்லை ஆண்டான் திருவருளால் என்றே மகிழ்கின்றார் ஆசிரியர்.

## 41. அற்புதப் பத்து

பெண்ணாசை முதலியவற்றை நீக்கிப், பாசங்களை ஒழித்து, பாத தரிசனம் தந்து, தம்மை இறைவன் ஆண்டு அடியருடன் கூட்டியதை நினைந்து அற்புத மனத்தராய் நன்றி பாராட்டும் பதிகம் இது.

## 42. சென்னிப் பத்து

மணிவாசகர் மங்கையர்களையும், பக்தர்களையும் வா என அழைத்து (பாடல்கள் 3, 10) "உங்கள் பாசம் தீர இறைவனைப் பணிமின்கள்" எனக் கூறியும், தம்மை இறைவன் வா என்று அழைத்துத் தம் வினையை ஒழித் தருளி (பாடல் 9) தம்மை உய்யக் கொண்டதைக் கூறியும், தமது சென்னி தலைவனும் இறைவனுடைய திருவடியின் கண் பொலிந்து மலரும் எனத் தெரிவிக்கும் பதிகம் இது. இப்பதிகத்து 3, 4 பாடல்களில் அகப்பொருள் தொனிக்கும். 'உயிரும் கொண்டு' என 3-ஆம் பாடலில் வருவது 'உயிருண்ணிப் பத்து' 34-ஆம் பதிகத்தை நினைப்பிக்கும். இப் பதிகத்தில் திருப்பெருந்துறை, தில்லை இரண்டு தலங் களும் கூறப்பட்டுள்ளன.

## 43. திருவார்த்தை

பெருமான் மண்ணிடை வந்து தமக்கும், இடவை நல்லாளுக்கும், இலங்கை வண்டோதரிக்கும், மதுரையில் வணிக மங்கையர்க்கும், கடல்வாணற்குத் தீயில் தோன்றிய மங்கையர்க்கும், வலைஞர் மகளாய்த் தோன்றிய தேவிக்கும், தாய் இழந்த பன்றிக் குட்டிக்கும் அருளிய திருவிளையாடல் களை நினைந்து, இறைவனுடைய அருள் திறத்தை உணர் பவர் 'எமக்குப் பிரானாவார்' எனக் கூறுவது 'திரு வார்த்தை' என்னும் இப்பதிகம். திருப்பெருந்துறை நிரம்பக் கூறப்பட்டுள்ளது இப்பதிகத்தில்.

## 44. எண்ணப் பதிகம்

மணிவாசகர் தம்முடைய குறைகளை எடுத்துக் கூறிப் பிரிவாற்றாமையைப் புலப்படுத்துகின்ற பதிகம் இது.

## 45. யாத்திரைப் பத்து

"இவ்வுலகை விட்டுச் சிவபுரத்துக்கு யாத்திரையாகப் புறப்படுவோம். சிவபுரத்தில் திருக்கதவம் சாத்தப்படுமுன் பெருங்கூட்டமாய் நாம் போய்ச் சேரவேண்டும். ஆதலின் உடன் வருவதற்கு யாவரும் ஒருப்படுமின், தாமதித்தால் இறைவன் பெறுதற்கு அரியன்" என்றெல்லாம் அடியார் களை அழைத்துக் கூறுவது இப்பதிகம். ஆதலின் இஃது ஓர் ஆற்றுப்படைப் பதிகமாம்; உபதேசப் பதிகமும் ஆம்.

இஃது அந்தாதித் தொடைப்பதிகம். புயங்கன் எனப் பாடல்தோறும் வரும் பதிகம். இப் பதிகம் அச்சோப் பதிகத்திற்கு முன் பாடினது போலும் ("சிவபுரம் போவோம்" என வருவதால்).

## 46. திருப்படையெழுச்சி

மாயப்படை, அல்லற்படை நம்மிடம் வாராதிருக்க நாதப்பறையுடனும், வெண்குடையுடனும் நீற்றுக் கவசத் துடனும் நாம் புறப்பட்டு வானவூர் கொள்வோம். வாருங்கள். "தொண்டர்களே! நம் படையின் முன்

அணியில் நீங்கள் செல்லுங்கள்; பக்தர்களே! நீங்கள் பக்க அணியாகச் சூழுங்கள்; யோகிகளே! நீங்கள் நடு அணியில் வாருங்கள்; சித்தர்களே! நீங்கள் பின் அணியில் வாருங்கள்; இவ்வாறு நாம் சென்று அண்டர் நாடு ஆள்வோமாக" என அணிவகுத்துப் படையெழுச்சி கூறுவதாகும் இப்பதிகம்.

## 47. திருவெண்பா

'திருப்பெருந்துறை' நிரம்ப வரும் பதிகம் இது. தம்மைப் பற்றிய வரலாற்றுப் பதிகமுமாம்.

## 48. பண்டாய நான்மறை

இஃது அந்தாதித் தொடைப் பதிகம். *திருப்பெருந்துறை—(கோகழி)—பாடல்தோறும் வரும் பதிகம். திருப்பெருந்துறைப் பெருமானின் சிறப்பைக் கூறும் பதிகம் இது.

## 49. திருப்படையாட்சி

இறைவன் எழுந்தருளப் பெறின் நல்லன எவை எவை வரும்; தீயன எவை எவை விலகும் எனக் கூறுவது இப்பதிகம். இறைவன் "எழுந்தருளப் பெறில் எல்லா வளங்கள் முற்றும் ஆகும் எமக்கு, அல்லாதது ஆகாது என்று இயம்பல் படை ஆட்சியாகும்." திருவாசக உண்மை 24

ஆகாதே ஆகாதே என வரும் பதிகம் இது.

## 50. ஆனந்த மாலை

பிரிவாற்றாமையைக் கூறிப் பழைய அடியார்களுடன் கூட விரும்பும் பதிகம்.

---

* பெருந்துறை, கோகழி—இரண்டும் ஒன்றாய்த் தலத்தையும் கோயிலையும் குறிக்கும் என்று திரு. மு. அருணாசலம் M. A., அவர்கள் குறிப்பிட்டது இதனால் சரி என்பது தெளிவு, சித்தாந்தம். நவம்பர் 1965. IV—103 - 22 தலைப்பும் பார்க்க.

தில்லை, மதுரை, அவிநாசி என்னும் தலங்கள் கூறப்பட்டுள.

## 51. அச்சோப் பதிகம்

ஈசர் தம் கழல் சேரும் "போக சுகம் எனக்கு அளித்தார்; ஆர் பெறுவார் என்னும் அருமை புகறல் அச்சோ"—[திருவாசக உண்மை (24),] இந்த அச்சோப் பதிகத்தின் முதற் பாடலில் "சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்" என வருவதே "மணிவாசகர் அறிவாற் சிவனே என்பது திண்ணம்" என இலக்கணக் கொத்து ஆசிரியர் ஈசான தேசிகர் கூறினதற்கு ஆதாரமாகும்.

'தன் கழலே சேரும் வண்ணம் (ஐயன்) எனக்கு அருளியவாறு' 51 - 3, 8), 'அடியேனை வருக என்று அஞ்சேல் என்று அருளியவாறு' 51 - 5, 'அந்தமெனக் கருளியவாறு' 51 - (6) என்றெல்லாம் வருவதால் இவ் அச்சோப்பதிகம் கடைசியாக மணிவாசகர் பாடினது எனக் கொள்ளக் கிடக்கின்றது.

# 4. பிற பொருட் பகுதி

## 1. அக்கினி [1]

['தேவர்கள்' என்னும் தலைப்பு 119 பார்க்க]

அங்கி, அனல், எரி என்று அக்கினி தேவனைக் குறித்துள்ளார் மணிவாசகர்.

## 2. அகப்பொருள் [2]

சுவாமிகள் அருளிய பதிகங்களுட் சில பதிகங்களும், பாடல்களுட் சில பாடல்களும் அகப்பொருளில் அமைந்துள்ளன. முக்கியமாக 17, 18, எண்ணுள்ள பதிகங்கள் அகப்பொருட் பதிகங்களாகும்.

தலைமகள் தன் தாயிடம் தலைமகனைப் பற்றிய விளக்கம் கூறிய வகையில் "17*அன்னைப்பத்து" என்னும் பதிகம் அமைந்து உள்ளது. இப்பதிகத்தில் தலைவர் நிரம்ப அழகியர் என்றும், அவர் கண்ணில் அஞ்சனம் பூசி உள்ளார் என்றும், அவர் நீண்ட கரத்தினர் என்றும், அவர் கையில் தாளம் இருந்தது என்றும், அவர் கருணைக் கடலினர் என்றும், அவர் தையலோர் பங்கினர் என்றும், அவர் நெறிதரு சடையினர் என்றும், அவர் செம்மேனியர் என்றும், அவர் வெண்ணீற்று நெற்றியர் என்றும், வேத மொழியர் என்றும், அவர் அணிவன—கொன்றை, மதியம், கூவிளம், மத்தம், திருநீறு, சந்தனம், ஆடரவு, தாளி அறுகு என்றும், அவர் ஆடை - தோல், வெள்ளைக் கலிங்கம், பள்ளிக் குப்பாயம் என்றும், அவர் இருப்பிடம் உத்தர கோசமங்கை, திருப்பெருந்துறை, தனது (மணிவாசகரின்) நெஞ்சு என்றும் இப்பதிகத்தில் விளக்கப்பட்டுள்ளன.

பின்னும், அவர் நாடு 'பாண்டி நன்னாடு' என்றும், அவர் வாத்தியம் 'நாதப்பறை' என்றும், அவர் 'நான்

---

* 'அன்னை' என்னும் சொல் தோழியையும் குறிக்கும் எனத் தொல்காப்பியத்தால் அறியப்படுகின்றது.

முகன் மாலுக்கும் நாதர்' என்றும், அவரை மாலும் அயனும் கண்டதில்லை என்றும், அவர் நினைத்தற்கு அரியர் என்றும், அவர் ஆனந்தர் என்றும், அவர் தன்னை ஆண்டு உள்நின்று உருக்கி ஆனந்தக் கண்ணீர் தருவர் என்றும், ஐயம் புகுவர் என்றும், அலைந்து பரந்துள்ள சிந்தையை ஆண்டு அன்பு தருவர் என்றும், பாய்பரி மேல் வந்து உள்ளத்தைக் கவர்வர் என்றும், அவர் தாபத வேடத்தர் என்றும்—கூறுகின்றாள் தலைவி. (மணிவாசகர்)

பின்னும் தலைவர் ஐயம் வேண்டிப் புகுந்து போன பின்பு தன் உள்ளம் நைகின்றது என்றும், அவர் வேடத்தைக் கண்டவுடன் தன் உள்ளம் வாடுகின்றது என்றும், அவர் சென்னியில் இருந்த மத்தம் (ஊமத்தமலர்) தனக்கு உன்மத்தத்தைத் தந்ததென்றும், சொல்லி நைகின்றாள் தலைவி. (மணிவாசகர்.)

18 ஆம் பதிகமாகிய "குயில் பத்தில்" "தலைவன் வரும்படி குயிலே நீ கூவுக!" எனக் கூறியும், "உனக்குத் தோழியும் ஆவேன்" என்று கூறியும், குயிலை வேண்டுகின்றாள் தலைவி (மணிவாசகர்.)

"குயிலே! நீ சீர்ப்புயங்கன் வரக் கூவாய், அமுதினை வரக் கூவாய், தேவர்பிரான் வரக் கூவாய், நாயகன் வரக் கூவாய், என் உள்ளத்தில் புகுந்து, என் உணர்வே ஆய ஒருத்தன் வரக் கூவாய். ஏ! பொழிலில் வாழும் குயிலே! நீ அங்ஙனம் செய்தால் நான் உன்னை நேசிப்பேன். உன் துணைத்தோழியும் ஆவேன்." எனக் கூறுகின்றாள் தலைவி (மணிவாசகர்)

தலைவர் செய்கை

மங்கைமார் கையில் உள்ள வளையல்களைக் கவர்வார் பெருமான். தில்லையில் நடம் செய்யும் பெருமான் எத்தனுகிவந்து, என் வீட்டிற் புகுந்து, என்னை ஆட்கொண்டார்; என் பணி கொண்டார். அவர் எழுந்

தருளப் பெற்றால் அவர் என் ஆகத்தில் அணைந்து இன்புறுமாறு செய்வர். அவர் அணிந்துள்ள செங்கழுநீர் மலர் எனக்குக் கிடைக்கும். என் கண்கள் அவர் திரு மேனியைக் கண்டு ஆனந்தம் அடையும்.

தலைவி தோழியை விளித்துக் கூறுதல்

பரஞ்சோதியை நாங்கள் பாட, நீ படுக்கையில் தூங்கு கின்றாய். இது நல்லதா? தலைவர் என்பொருட்டுச் செய்த விசித்திர செய்கையை நீ கேள்விப்பட்டாயா? அவர் காட்டாதன எல்லாங் காட்டினர். சிவம் காட்டினர். தன் தாமரைத் தாளைக் காட்டினர். தன் கருணைத் தேன் காட்டினர். நாட்டினர் சிரிக்க, நாம் மேலை வீடு எய்த அருள் புரிந்து நம்மை ஆண்டார்.

தலைவி தலைவனோடு ஊடலும் கூடலும்

நான் பெருமானுடைய கொன்றை மாலையைப் பெற்றுச் சூடிக் கொள்வேன். சூடின பின் அவருடைய திரண்ட தோளைக் கூடுவேன். அங்ஙனம் கூடி ஆனந்த மயக்கத்தில் நிற்பேன். பின்னர் அவரொடு ஊடுவேன். ஊடின பின்பு புலவி நீங்கி அவரது சிவந்த வாய் இதழைப் பெற உருகி நிற்பேன். (அவர் என்னை விட்டுப் பிரிந்தால்) நான் உள்ளம் உருகி அவரைத் தேடுவேன். (அவர் கிடைக்காவிடின்) அவர் திருவடியையே சிந்திப்பேன் வாடுவேன்; (அவர் கிடைத்துவிட்டால்) மகிழ்வேன்.

தலைவியின் முறையீடு (தோழியரிடம்)

தோழியர்களே! என்னைப் பாருங்கள், என் பணி கொண்ட பெருமான், என் பணியுடன் என் கை வளையையும் என் உயிரையும் கொண்டார்.

பெருமானைக் கண்ட மங்கையர்நிலை

பெருமான் குதிரையின் மேல் வர அவரைக் கண்ட மங்கையர், தமது புத்தி அவர் வசப்பட்டு, மரம் போல நின்று தம்மைத் தாமே அறியாது மறந்தார்கள்.

தலைவன் தன்னைக் கூடும்படி அரசவண்டைத் தலைவி தூது அனுப்புகின்றாள்

அரச வண்டே! தலைமகன் என்னைக் கூடும்படி நீ அவரிடம் சென்று ரீங்காரம் செய்வாயாக!

தலைவி கிளியைப் பார்த்துத் தலைவனுடைய தசாங்கத்தைக் கூறுக!" எனக் கேட்கக் கிளி விடை கூறுதல்

1. பிரானுடைய (1) திருநாமம்: "தேவர் பிரான்."
2. நாடு: தென்பாண்டி நாடு.
3. பதி (ஊர்): உத்தரகோசமங்கை.
4. ஆறு: சிந்தை மலங்கழுவ வந்திழியும் ஆனந்தம்.
5. மலை: இன்பமரு முத்தி அருளுமலை.
6. ஊர்தி: வான்புரவி (ஆன் புரவி)
7. படை: மும்மலங்கள் பாயும் கழுக்கடை.
8. முரசு (பறை). பேரின்பத் தோங்கும் பருமிக்க நாதப் பறை.
9. மாலை: தாளி அறுகு.
10. கொடி: கோதிலா ஏறு.

## 3. அங்கங்கள், மனம் முதலியவற்றின் தொழில் [3]

(1) உடல்

பெருமானுடைய சேவடிகளைத் தழுவ வேண்டும்.

(2) கண்

இரவும் பகலும் இறைவன் திருவுருவத்தைத் தவிர வேறு ஒன்றையும் காணக்கூடாது. அவரை நினைந்து கண்களில் அருவிநீர் பாயவேண்டும்.

(3) கண்டம்

பக்தியால் அவரை நோக்கித் தழு தழுத்த கண்டம் (கழுத்து) ஆகவேண்டும்.

(4) கரம்

கை அவருக்கல்லாமல் வேறு எப்பணியும் செய்யக் கூடாது, தொழுத கை கூப்பிக் கடிமலர் இறைவனுக்குப் புனைதல் வேண்டும்.

(5) கொங்கை

பிரானுடைய அன்பர் அல்லாதவருடைய தோளைச் சேர்தல் கூடாது.

(6) சிந்தனை

எப்போதும் சிவனைச் சிந்திக்க வேண்டும்.

(7) தலை

தலை பிரானை வணங்குதல் வேண்டும், அவருடைய திருவடிக்கண் நமது சென்னி பொருந்துதல் வேண்டும்.

(8) வாய்

'எம்பெருமான், பெருமான்' என்று வாய் அரற்றுதல் வேண்டும். அவரைப் பற்றியே பேச வேண்டும்.

(9) எண்ணம், உடல், வாய், மூக்கு, செவி, கண்

இவை எல்லாவற்றையும் பெருமானுக்கே ஒப்படைத்தல் வேண்டும்.

## 4. அடியார் [4]

[பகுதி II இல் "மணிவாசகரும் அடியாரும்" என்னும் தலைப்பு 1-ம் பார்க்க.]

### 1. அடியாரைக் குறிக்கும் சொற்கள் [4(1)]

அடியர், அடியவர்கள், அடியார் குழாம், அடியவர் தொகை, அடியார், அடியார் கூட்டம், அடியோம்,

அடைந்தவர், அழுகையர், அன்பர், ஆளானூர், ஏடர்கள், ஏற்ருர், ஓயாதே உள்குவார், கரங்குவிவார், காதலவர், சிரங்குவிவார், துவள்கையர், தெருளார் கூட்டம், தொண்டர், தொழுகையர், தொழும்பர், நேசர், பணிவார், பத்தர், பிணை மலர்க் கையினர், புகுந்தவர், மெய்யடியார், வந்திப்பார், வழி அடியார், விழுத்தொண்டர்.

## 2. அடியாருடைய தன்மை (செய்கை) [4(2A)]

அடியார் இறைவனுடைய திருக்குறிப்பைக் கூடுவார்; திருநீறு இடுவார்; ஈசனைப்பற்றியே பேசுவார்; பெருமானுடைய திருக்கழலே ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தை உடையார்; அழல் உறு மெழுகு போல இறைவனுடைய சீரையே கற்பார்; 'இருக்கு'தோத்திரம் இயம்புவர். வீணையில் இன்னிசை வாசிப்பர். பொய் கெட்டு மெய் ஆவார். காண்பன எல்லாம் பேரின்பம் எனப் பேணுவார். சாயா அன்பு கொள்வார். சென்னியில் அஞ்சலி கூப்புவார். தீர்ந்த அன்பாய அன்பு கொள்வார். தொழுத கையினராய்த், தூய்மலர்க்கண் நீர் மல்க, வணங்குவார். துன்பம் என்னும் வெள்ளத்தைப் பெருமானுடைய திருவடித் தெப்பம் கொண்டு கடப்பர். மெய் முழுதும் கம்பித்து அழுவார். மொட்டு அருமலர் பறித்து இறைஞ்சிப் பத்தியால் நினைந்து பரவுவார். யாழ் வாசிப்பர்.

## 3. அடியார் இலக்கணம் [4(28)]

(1) மனத்தைக் குறிப்பன

கசிந்து உள் உருகுவார். சித்தத்தைச் சிவன்பால் இருத்துவர். தழலதுகண்ட மெழுகது போல உள்ளம் உகுருவர். பொய் தவிர்வர்.

(2) வாக்கைக் குறிப்பன

பெருமானைப் 'போற்றி!' செய, செய போற்றி! என்பர். பெருமானைப் பற்றியே கூட்டங்கூடிப் பேசுவர்.

'நாத! நாத!!' என்று அழுது அரற்றுவர். பெருமானைப் புகழ்ந்துரைப்பார், மெச்சுவார். தமது வாயைப் பெருமானுடைய திருவடியை வாழ்த்துவதற்கே வைப்பர்.

(3) காயத்தைக் குறிப்பன

அழுது உடல் கம்பிக்கும் ஆனந்தத்துடன் ஆடுவர். உரோமம் சிலிர்க்கும், கண்ணீர் ததும்பும். கை தலை மீது ஏறும். பூமியிற் புரண்டு விழுந்து அலறுவர். 'போற்றி' என்று கூப்பிய கையை நெகிழ விடார்.

(4) மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் வழிபடுதல்

அகங் குழைவர். புகழ்ந்து உரைப்பர்; பூமாலை புனைந்து ஏத்துவர். சிந்தை, செய்கை, கேள்வி, வாக்கு, ஐம்புலன்கள் இவை யாவையும் இறைவனை அடைவதற்கே உபயோகிப்பர்.

## 4. அடியார் நிலை [4(3)]

நாணம் ஒழிந்து நாட்டினருடைய பழிப்பு உரையைப் பூணாகக் கொள்வர்; கற்றாமனம் போலக் கதறிப் பதறுவர். மற்றொரு தெய்வத்தைக் கனவிலும் நினையார். குருமூர்த்தியின் திருவடியிணையைப் பிரிவு அறியா நிழலது போல எப்போதும் போற்றுவர். *பத்து உடையர்.

## 5. அடியார் பெற்ற பேறு [4-4A]

இறைவன் திருவடியை அடைந்தவர்கள் இந்த உலக நெறியைக் கடந்தவர் ஆவார்கள்.

## 6. அடியார் பெறும் பேறு [4(4B)]

பாவத்துக்கு இடமான இவ்வுடலை நீக்கிச் சிவலோகத்தில் நம்மை வைப்பார் பெருமான். 'யாம் எமது' இவை மீதுள்ள பற்று அழியும்படி அருள்வார்.

* அடியாரின் புற இலக்கணம் பத்து, "ஒளிநெறி" அநுபந்தம் 3 பார்க்க.

## 5. அடியார் அல்லாதார் [5]

அடியர் அல்லாதார் - ஒட்டாத பாவித் தொழும்பர், குறி, நெறி, குணம் இல்லாதவர், பக்தர்களைப் பழிப்பவர், பிறவிக்கே ஈடு பட்டவர்.

## 6. அடுக்குச் சொற்கள் [6]

அடித்து அடித்து, அணு அணு, அந்தோ அந்தோ, ஆடி ஆடி, இரந்து இரந்து, உருகி உருகி, என்னே என்னே, சரண் சரண், தென்னு தென்னு, புறம் புறம், முறையோ முறையோ, வந்து வந்து, விம்மி விம்மி—இவை போன்ற 93 அடுக்குச் சொற்கள் ஒளி நெறியில் எடுத்துக் காட்டப் பட்டுள்ளன.

## 7. அண்டம் [7]

அண்டரண்டம், கீழ் அண்டம், அண்டப் பகுதி-எனும் பிரயோகங்கள் வந்துள்ளன.

## 8. அணு [8]

பெருமான் அணுவிலும் நுண்ணியன். அணுவுக்கும் அணுவான தன்மையைக் கடந்தவன். சூரியனில் அணு வாய்ப் பொருந்தி உள்ளவன்.

## 9. அமுது [10]

இறைவன் - ஆரா அமுது, இன்னமுது, கடல்வாய் அமுது, கண்ணார் அமுதக் கடல், கோதிலா அமுது, பரா அமுது, மால் அமுதப் பெருங்கடல் - என்றெல்லாம் பாராட்டப்பட்டுள்ளார்.

## 10. அரக்கர்—அசுரர் [11]

### 1. போது

அசுரர், இராக்கதர், தானவர் என அரக்கர் கூறப் பட்டுள்ளார்.

### 2. சிறப்பு

அந்தகாசுரன், *கொக்கு (குரண்டாசுரன்), சலந்தரன், திரிபுராதிகள், ராவணன் கூறப்பட்டுள்ளார்.

## 11. அரசர் [12]

### 1. பொது

அரசு, அரையன், கோ, மன்னர், மன்னவர் என அரசர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

### 2 சிறப்பு

இமவான், ஐவர்கோக்கள் (ஐம்புலன்கள்), சேரலன், சோழன், தென்னவன் (பாண்டியன்), தென்னன் (பாண்டியன்), பாண்டியன், மதுரையர் மன்னன், மலையரையன் (இமவான்), மீனவன் (பாண்டியன்) கூறப்பட்டுள்ளார்கள்.

## 12. அருவி [13]

"கண்ணீர் அருவி" கூறப்பட்டுள்ளது.

## 13. அருள் [14]

"சீரார் அருள்," "தாரா அருள்" கூறப்பட்டுள.

## 14. அறம் [16]

'அறம் முதலாக நான்கு,' 'அறம் பாவம் என்னும் அருங்கயிறு, "புறம்பயம்" என்னும் தலத்தில் பெருமான் அறம்பல அருளியது - கூறப்பட்டுள.

---

* கொக்கு உருவம் கொண்ட குரண்டாசுரனைக் கொன்று அதன் இறகைச் சிவபிரான் அணிந்தனர் என்பது வரலாறு.—சிவபராக்கிரமம் - பக்கம் 121 பார்க்க.

## 15. அறிவு [17]

அறிவு (கடவுள்), கல்லாத புல்லறிவு, நல்லறிவு, அறிவொண் கதிர்வாள், அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவு, கூறப்பட்டுள.

## 16. 1. அன்பு—நேசம், பாசம் [18]

அருச்சனை வயலுள் அன்பு வித்து, அன்பென்னும் ஆறு கரையது புரள, ஆற்றல் மிக்க அன்பு, இடையறு அன்பு, ஈசனுர்க்கு அன்பு, உலப்பிலா அன்பு, உளேயா அன்பு, எண்ணமிலா அன்பு, கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு, கலந்த அன்பு, சாயா அன்பு, சுருக்கும் அன்பு, தீர்ந்த அன்பு, நெகும் அன்பு, நேசம், பாசம், பின்ரு நேசம், மிக்க அன்பு, மெய்கலந்த அன்பர் அன்பு, மெய் அன்பு,—என்றெல்லாம் அன்பு விவரிக்கப்பட்டுளது.

### 2. அன்பின்மை

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு இன்மை, 'நான் தனக்கு அன்பு இன்மை'—என அன்பின்மை குறிக்கப் பட்டுள்ளது.

## 17. ஆகமம் [19]

மாவேட்டாகிய ஆகமம் (பெரிய விருப்பத்தினைத் தருவதாகிய ஆகமம்) என ஆகமம் சொல்லப்பட்டுள்ளது.

## 18. ஆடல்—நடனம் [20]

ஆடல் அமர்ந்த பரிமா (குதிரை), சிலம்பாடல், 'பண் களிகூர்தரு பாடலோடாடல்' என வந்துள்ளன.

## 19. ஆடைவகை [21]

கச்சு, கச்சை (அரைப்பட்டிகை), கவந்தி (கோவணம், கந்தல் துணி), கோவணம் (துன்னம்பெய் கோவணம்), குப்பாயம்—சட்டை (பள்ளிக் குப்பாயம்) கூறப்பட்டுள.

## 20. ஆயுத எழுத்து [22]

அஃதான்று, அஃதிலான் என இரண்டிடத்தில் ஆயுத எழுத்து வந்துள்ளது.

## 21. ஆவ, ஆவா என்னும் சொற்பிரயோகம் [24]

"ஆவ, ஆவா" என்னும் சொற்கள் "அஞ்சற்க' என்னும் பொருளிலும், "ஐயோ" என்னும் பொருளிலும் வந்துள்ளன.

## 22. ஆறு [25]

கங்கை ஆறு கூறப்பட்டுள்ளது.

## 23. ஆன்மா [26]

ஆன்மா—இது 'புலன்' என்னும் சொல்லாற் குறிக்கப் பட்டுள்ளது.

## 24. ஆனந்தம் [27]

அந்தமிலா ஆனந்தம், அழிவிலா ஆனந்தம், அளவிலா ஆனந்தம், ஆனந்தத்தேன், ஆனந்த மா, ஆனந்த மா கடல், ஆனந்த வெள்ளம், உலப்பிலா ஆனந்தம், கடலே அனைய ஆனந்தம், தீர்ப்பரிய ஆனந்தம், பரமானந்தம், பேரானந்தம்-என ஆனந்தம் விவரிக்கப்பட்டுள்ளது.

## 25. இசை—பண்—கீதம் [28]

(1) இசை

இன்னிசை வீணையும், யாழும் குறிக்கப்பட்டுள.

(2) கீதம்

பெருமான் முன் புலவர்கள் கீதங்கள் பாடுதல் குறிக்கப்பட்டுள்ளது.

(3) தாரம்

வண்டுகள் தாரம் பயின்று மந்தம் முரலும் :

[தாரம்—உச்ச இசை, எடுத்தல் ஓசை, மந்தம்—படுத்தல் ஓசை]

(4) பண்

பண் சுமந்த பாடல், பண்களி கூர்தரு பாடல், பண் அமர் மென்மொழி—எனப் பண் என்னும் சொல் உபயோகப்பட்டுள்ளது.

(5) மந்தம்

வண்டுகள் மந்தம் முரலும்.

(6) விளரி

வண்டுகள் விளரி பாடும்.

[விளரி—நெய்தல் நிலத்திற்குரிய 'இரங்கல்' பண்.]

## 26. இந்திரன் [29]

அமரர்கோன், தேவர்கோன், புரந்தரன், வானவர் கோன் என இந்திரன் குறிக்கப்பட்டுள்ளான். இந்திரர் எண்ணிலாதவர். தக்கன் செய்த வேள்வியில் இந்திரன் தோள் நெரிக்கப்பட்டான். குயில் உருவம் எடுத்து மரத்தில் ஏறினன். அவன் நாட்டில் கற்பக மரம் உண்டு. இந்திரன் வேள்வி இயற்றினன். இந்திர பதவி ஓர் இன்பம் தரும் பதவி.

## 27. இருவர் [31]

இருவருக்கும் (அயனுக்கும், அரிக்கும்,) கால முடிவு உண்டு. இருவரும் ஒருமுறை கோபமும், ஆங்காரமும் கொண்டனர்.

## 28. இருள்—அஞ்ஞானம் [32]

பெருமான் சோதியும் இருளும் ஆயினர். அவருடைய சுடரார் அருளால் இருள் நீங்கும். அவர் திணிந்ததோர் இருளில் தெளிந்த தூவெளி; பொய்யிருள் கடிந்த மெய்ச் சுடர். மாயை இருளை ஒழிப்பர். நெஞ்சத்து இருள் (அஞ்ஞான இருள்) ஒழியும்படி தமது அருள் என்னும் வாளை வீசுவர் பெருமான்.

அருணன், இந்திரன் திசையில் (கிழக்கில்) அணுகி ஞல் புற இருள் ஓடிப்போம்.

கருவின் நாலாவது மாதத்தில் உண்டாகும் பேரிருளில் குழந்தை பிழைத்தல் வேண்டும்.

## 29. இலக்கணம் [33]

தனிப்பகுதி "இலக்கணப் பகுதி 5" பார்க்க.

## 30. இலக்குமி [34]

கமலத்தில் வீற்றிருப்பவள் - சோமி, பொன் என்பன இலக்குமியைக் குறிக்கும்.

## 31. இன்பம் [36]

"ஆற்ரு இன்பம், இகபரம் ஆயதோர் இன்பம், இன்ப வெள்ளம், ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பம், எங்கும் இலாததோர் இன்பம், பேரின்பம், பேரின்ப வெள்ளம், யாவரும் பெற்றறியா இன்பம், வீணை முரன்றெழும் ஓசையில் இன்பம்" என இன்பம் விவரிக்கப்பட்டுளது.

## 32. இனச் சொல் [37]

ஆவி யாக்கை, உடல் உயிர், உண்டு உடுத்து, உலக்கை உரல், எள்ளும் எண்ணெயும், ஓடும் கவந்தியும்,

கண்டு கேட்டு, சாதிகுலம், செல்வம் நல்குரவு, சொல்லும் பொருளும், தந்தை தாய், பாடல் ஆடல், பிறப்பு இறப்பு, யான் எனது - என்பன போன்ற இருபத்து ஐந்து இனச் சொற்கள் ஒளிநெறியிற் காட்டப்பட்டுள.

## 33. உடல் ஊன் [38]

"உடல், ஆக்கை, உடம்பு, ஊன், ஊனுருடல், கள்ளமலக் குரம்பை, காயம், துயராக்கை, படிற்றுக்கை, பிண்டம், புழுக்குரம்பை, புழுக்கூடு, மலக்குரம்பை, மெய் வெந்து விழும் உடல்," என 'உடல்' விளக்கம் தரப்பட்டுள்ளது.

## 34. உணர்வு [40]

பெருமான் உணர்வுக்கும் தெரிவரும் பொருள்; உரை உணர்வு கடந்த ஒருவர், உரை உணர்வு கடந்து பின்பு உணரப்படும் உணர்வு அவர். நூல் உணர்வால் உணரப்படாத நுண்ணியர் அவர்.

## 35. உயிர்—உயிர்ப்பு [41]

ஆருயிர், ஆவி, சிற்றுயிர் என உயிர் கூறப்பட்டுள்ளது. உயிர்கள் அளவிறந்தன.

## 36. உலகங்கள் [42]

அகலிடம், அவனி, சகம், ஞாலம், தரணி, நிலம், படி, பார், புவனி, புவி, பூதலம், பூமி, பொழில், உலகு, ஏழுலகு, நில்லா உலகு, பித்த உலகு, மூவேழுலகு, வார்கடல் உலகு - என உலகம் கூறப் பட்டுள்ளது. இஃது அன்றி, அந்தரம், வாரா உலகம், வான்பாவிய உலகு, வானோர் உலகு, விசும்பு, விண்ணகம், சிவலோகம், பாதாளம் எனப் பிற லோகங்களும் கூறப் பட்டுள.

## 37. உலகின் தன்மை [43]

அத்தேவர் தேவர், அவர் தேவர் என இங்ஙனம் பொய்த் தேவுகளைப் பேசி இப் பூதலத்தோர் புலம்புவர்.

சேமித்து வைத்த நிதி, பெண்டிர், மக்கள், குலம், கல்வி என்றெல்லாம் பேசுகின்ற பித்த உலகு இது.

அருந்தவர்களுக்கு அறம் முதலிய நான்கினையும் பெருமான் அக்காலத்தில் சொல்லி அருளாவிடில், நல்ல திருத்தமான முறையில் அவர்களுக்கும் (அவர் மூலமாக அவர்களின் பின் வந்தவர்களுக்கும்) உலகின் இயல்பு விளங்கியிராது.

## 38. உலோகம் [44]

இரும்பு, பொன் கூறப்பட்டுள. மணிவாசகர் தம் மனத்தையும், தம்—பாவனையையும் இரும்பு என்று கூறியுள்ளார். தம்மை ஓர் இரும்பின் பாவை என்கிறார் தம் செவி இரும்பினும் வலிது என்கின்றார். 'பொன்'— தனித் தலைப்பு பார்க்க.

## 39. உவமைச் சொற்கள் [45]

அ, அன்ன, அனையன், ஆங்கு, ஆர், இயல், இல், இன், என்ன, ஏர், கொள், கொள்நேர், சேர், தரு, நேர், நேரனைய, புரை, போல், போல, வந்த—என்பன போன்ற உவமைச் சொற்கள் ஆளப்பட்டுள.

## 40. உவமை உருபு தொக்கது [46]

'கிஞ்சுகவாய், கோற்றேன் மொழி,' என்னும் சொற்றொடர்களில் "போன்ற" என்னும் உவம உருபு தொக்கி நிற்கின்றது. விரிப்பின், கிஞ்சுகம் போன்ற வாய், கோற்றேன் போன்ற மொழி என வரும்.

## 41. உவமைப்பொருளும் உவமையும் [47]

ஆனந்தம் கடலுக்கும், இந்திரியம் பறவைக்கும், ஊ(ஞ்)சல் அன்னத்துக்கும், ஐம்புலன்கள் அடற்கரிக்கும், சிவபிரானுடைய தன்மை 'பிரை சேர் பாலின் நெய்க்கும்', அவர் உருவம் பொன்மலைக்கும், அவர் நிறம் நெருப்புக்கும்; துயரம் நஞ்சிற்கும்; பார்வதியின் இடை கொம்புக்கும் - துடிக்கும், பார்வதியின் கண் காவி - மாவடு - மான் இவைகளுக்கும், தோள் வேய்க்கும், மொழி கிளிக்கும் - பண்ணுக்கும்; மாதருடைய அடி பஞ்சுக்கும், இடை மின்னல் - துடி இவைகளுக்கும்; கண் சேல்மீன் - பானல் - (நீலோற்பலம்) இவைகளுக்கும், பல் முத்துக்கும்; வேகம் சிறைபெறு நீருக்கும் உவமிக்கப்பட்டுள.

## 42. உறவு—உறவினர் [48]

அச்சன், அத்தன் (தந்தை), அப்பா, அம்மா, அன்னை, ஆய் (தாய்), உற்றார், உறவு, எந்தை, கணவர், கேள்வன், கொழுநன், சுற்றம், அருவினைச் சுற்றம், சுற்றிய சுற்றத் தொடர்வு, மூவேழ் சுற்றம், தகப்பன், தந்தை, தாதை, தமர், தமையன், தாய், அம்மை, தோழி, மக்கள், மகன், மருகன், மாதா, இவர்கள் கூறப்பட்டுளர்.

## 43. எண்கள் [49]

ஒன்று முதல் பத்துவரை, தசம், ஈரைந்து, இருபது, மூவேழ், முப்பத்து மூன்று, அறுபத்து நான்கு, ஆயிரம், நூறு நூறாயிரம், ஆறுகோடி, நூற்றொரு கோடி, நூறுகோடி, பல கோடி, பன்னூறு கோடி, பாதி, என்றெல்லாம் எண்கள் கூறப்பட்டுள.

## 44. எதிர் மொழிகள் [50]

அகம் புறம், அங்கு இங்கு, அந்தம் ஆதி, அரிது எளிது, அருள் மருள், அறம் பாவம், ஆதி அந்தம், இன்பம் துன்பம், ஏகன் அநேகன், கனவு நனவு, கீழ் மேல், குறைவு நிறைவு, சிறுமை பெருமை, தந்தது கொண்டது, தீமை நன்மை, நக்கும் அழுதும், நரகு சொர்க்கம், பகல் இரவு, பந்தம் வீடு, பிழைப்பு வாய்ப்பு, போக்கு வரவு, முன்ன பின்ன, மெய்ம்மை பொய்ம்மை, வைத்தாய் வாங்காய், இவை போல்வன 144 எதிர்மொழிகள் ஒளிநெறியிற் காணலாகும்.

## 45. 'என்கோ' என்னும் சொல் ஆட்சி [51]

'அமுதென்கோ! 'தேன் எனக்கு என்கோ' என இரண்டு இடங்களில் 'என்கோ' என்னும் சொல் ஆளப் பட்டுள்ளது.

## 46. ஐம்புலன் [52]

ஐம்புலன்கள் அடற்கரிக்கு ஒப்பிடப்பட்டுள. ஆனை களின் சண்டையில் குறுந்தூறு (சிறுபுதர்) அலைப்பு உண்ணுவது போலப் புலன்களால் அலைப்புண்கின்றேன். இந்திரியப் பறவை பறந்து ஓடும்படி இறைவனைப் பாடு வோம். உடல், வாய், மூக்கு, செவி, கண் இவைகளை இறைவனிடத்தில் வைக்க வேண்டும். ஐம்புலன்கள் 'ஆட்டுத்தேவர்' எனப்பட்டுள. எறும்புகளிடையே நாகப்பூச்சி அகப்பட்டது போல ஐம்புலன்களால் நான் அரிப்பு உண்கின்றேன். சேற்றுக்கும், கோக்களுக்கும் (தலைவர்களுக்கும்), கண்டகர்களுக்கும் (துஷ்டர்களுக் கும்), ஐவாய் அரவுக்கும், நெருப்புக்கும் - ஐம்புலன் ஒப்பிடப்பட்டுள்ளது. நெய்க்குடத்தை மெள்ள மொய்க்கும் எறும்புகள் போல ஐம்புலன்களால் வேதனையுறுகின்றேன். என் தலைமேல் இறைவர் தமது திருவடியை நட்டமையால் பொல்லார் ஐவர்களின் வல்லரட்டை நான் கடந்தேன்.

# 47. ஒருசொல்—ஒரு சொற்றொடர் இரு பொருளில் [53]

## 1. அங்கம் குருகினம் [7-13]

1. அம்+கம்+குருகு=அழகிய நீர் வாழும் பறவை;
2. அங்கம்+குருகு=கையில் வளை.

## 2. அண்ணா அமுதே [5-10]

1. அண்ணா: அப்பா
2. அண்ணா - எட்ட முடியாத

## 3. அரவுவார்கழல் [5-17]

1. அரவு - பாம்பு ; ஒலி.
2. பாம்பு, கழல் அணி ; 2. ஒலிக்கின்ற கழல் அணி.

## 4. கருத்திருத்தி [31-3]

1. கரு+திருத்தி—கருவிலேயே திருந்தச் செய்து.

2. கருத்து + இருத்தி = எண்ணத்தை (இறைவனிடத்தில்) பதியச் செய்து.

## 5. கல்லா மனம் [8-5]

1. கல்லா+மனம்=கல்லாத மனம்.
2. கல்+ஆம்+மனம்=கல் போன்ற மனம்.

## 6. கோலமா [8-9]

1. கோலம்+மா=அழகிய எருது.
2. கோலம்+ஆ+=அழகிய பசு.

## 7. செல்வீ [19-4]

1. செல்+வீ=பறக்கின்ற (வீ) பறவை.
2. செல்வியே.

### 8. நாதனம்பணி கொண்டவன் [42-3]

1. நாதன் + நம் + பணி + கொண்டவன் = நம்முடைய பணியைக் கொண்ட தலைவன்.

2. நாதன் + அம்பு + அணி + கொண்டவன் = தலைவன் அம்பு - நீரை (கங்கையை) அணி கொண்டவன்.

3. நாதன் + நம் + பணி + கொண்டவன் = நாதன் நம்முடைய பணி (வளையல் ஆதிய ஆபரணங்களைக்) கொண்டவன்.

### 9. புயங்கா [6-37]

1. புயங்கம் = பாம்பு, பாம்பை அணிந்தவனே.

2. புயங்கம் என்னும் நடனத்தை ஆடுபவனே.

### 10. மாயவனப்பரி [36-7]

1. மாயம் + வனம் + பரி = மாயமாகிய அழகிய குதிரை. வனம்-காடு, வனப்பரி-காட்டுக் குதிரை எனலுமாம்.

2. மாயவன் + [அ + பரி] = குதிரைத்தலைவனாக மாய வேடம் பூண்டவன் (சிவன்).

இவை போல்வன சிலவற்றை ஒளிநெறியிற் காணலாம்.

## 48. ஒருபொருள்—இரட்டைச்சொல் [54]

கறை உரல் (கறை = உரல்), குதிரைப் பரி, நோக்கிக் கண்டு, மீமிசை, விடக்கு ஊன், இவை போல்வன 14 இரட்டைச் சொற்கள் ஒளிநெறியிற் காட்டப்பட்டுள.

## 49. ஒலி—ஒலிக் குறிப்பு [55]

இயம்பின சங்கம், எழில் இயம்ப, சிலம்பொலி, மணியோசை, வாழ்த்து ஒலி, வீணை முரன்று எழும் ஓசை.

### 2. ஒலிக்குறிப்பு

ஆவ (இரக்கக் குறிப்பு), ஆவா=வியப்புக் குறிப்பு; ஓ என்று, தண் என்ன, தென்னா தென்னா, முகேர் என்ன ;—இவை போல்வன சிலவற்றை ஒளிநெறியிற் காணலாகும்.

## 50. ஒளி [56]

உள்ளொளி, உளத்தொளி, படரொளி, பிறங்கொளி, பொங்கொளி, பொன்னொளி, மின்னொளி, விளங்கொளி கூறப்பட்டுள.

## 51. ஒற்றுமை அடிகள் [57]

ஒரு பா அடியோ, அடியின் பாகமோ, அப்படியே பிறிதோர் இடத்தில் வரும் இடங்கள் சில உள: உதாரணமாக, "காட்டாதன எல்லாங் காட்டி" என்னும் சொற்றொடர் 5—28, 8—6 என இரண்டு இடத்திலும் வருவது காணலாம். இவை போல்வன ஒன்பது தொடர்கள் ஒளிநெறியிற் காட்டப்பட்டுள. அப்படியே, 'பஞ்சாய அடி' 'மடவார்'—எனத் துவக்கும் 38-6;—51-5 பாடல்களின் ஒற்றுமையைப் பார்க்க.

## 52. ஒன்று, ஒன்றும் என்னும் சொற்களின் ஆட்சி [58]

### 1. 'ஒன்று' என்னும் சொல் ஆட்சி

தேவாரத்திற்போல ஈண்டும் உளது. உதாரணமாக, "செய்வதொன்றறியேனே ; பற்றொன்றின்றி, பிறிதொன்று இல்லை.

### 2. 'ஒன்றும்' என்னும் சொல்லாட்சி

'செய்வ தொன்றும் அறியேனே,' 'பசுபாசம் ஒன்றும் இலோம்,' 'பரிசு ஒன்றும் அறியாத நாயேன்.'

## 53. ஓம்—ஓங்காரம் [59]

'ஓம் நமச்சிவாய, ஓங்காரமாய் நின்ற மெய்யா, ஓங்காரத்து உட்பொருள்,—என வருவன காணலாகும்.

## 54. 'ஓர்' என்னும் சொல்லாட்சி [60]

அளிந்ததோர் கனியே, எனக்கோர் துணை, பிணிக்கோர் மருந்து, போவதோர் வகை, மானோர் பங்கா, வேறோர் பரிசு—இவைபோல்வன சில ஒளிநெறியிற் காட்டப்பட்டுள.

## 55. கங்கை [61]

கங்கை மந்தாகினி எனப்பட்டுள்ளது. சிவபெருமான் சடையிற் கங்கை பாய்ந்து அடங்கி இல்லா விட்டால் பூலோகம், பாதாளம், இவை பெருங் கேடுற்றுப் போயிருக்கும்.

## 56. கடல் [62]

அமுதக் கடல், அருட்பெருங் கடல், அவலக் கடல், அளவிலா இன்பமா கடல், ஆனந்தமா கடல், இடர்க் கடல், இருங்கடல், உந்து திரைக் கடல், உவாக் கடல், கருணைக் கடல், கரைமாண்ட காமப் பெருங்கடல், கல்வி என்னும் பல் கடல், காரார் கடல், குணக் கடல், குரை கடல், சவலைக் கடல், தடங் கடல், நடுக் கடல், நெடுங் கடல், பத்திக் கடல், பழங் கடல், பாற் கடல், பிறவிக் கடல், மறி கடல், மா கடல், வார் கடல், விரி கடல், வினைக் கடல்—ஆகிய சொற்றொடர்களில் கடல் என்னும் சொல் ஆட்சி தரப்பெற்றுள்ளது.

ஆர்கலி, ஆழி, ஓதம், சாகரம், திரை, பௌவம், முந்நீர், வாரி, வேலை—என்னும் கடலைக் குறிக்கும் சொற்கள் ஆளப்பட்டுள.

## 57. கணங்கள் [63]

தேவ கணம், யக்ஷ கணம் (இயக்கிமார்) கூறப்பட்டுள.

## 58. கதி [64]

சிவ கதி, நற்றுங் கதி, பர கதி, கூறப்பட்டுள; கடவுளையே 'கதி' என்று விளித்துக் "கதியே போற்றி" என வந்துள்ளது.

## 59. கயிறு [65]

'அறம் பாவம் என்னும் அருங்கயிறு,' 'சித்தம் எனும் திண் கயிறு' 'நரம்பு கயிறு,' 'மூத்தம் கயிறு', இவைகளில் 'கயிறு' என்னும் சொல் ஆட்சி தரப்பெற்றுள்ளது.

## 60. கருப்பு கட்டி [67]

கரும்பு மட்டு, கரும்பின் தேறல், கரும்பின் தெளிவு, கூறப்பட்டுள.

## 61. கல்வி [68]

'கல்வி என்னும் பல்கடல்', 'துன்னிய கல்வி,' 'பொல்லாக் கல்வி,' எனக் 'கல்வி' விவரிக்கப்பட்டுள்ளது.

## 62. கலக்கம் [69]

பிறவிப் பகையால் வரும் கலக்கம், மாதர்களின் கண்களால் வரும் கலக்கம், சித்த விகாரக் கலக்கம், கடலின் திரையதுபோல வரும் கலக்கம்,—எனக் கலக்கத்தைப் பற்றி வருகின்றன.

## 63. கலை [70]

கலை ஞானம், கலை ஞானிகள், கலை நவின்ற பொருள்கள், சோமன் (சந்திரனுடைய ஒற்றைக்) கலை, பொருளுடைக் கலை,—எனக் 'கலை' என்னும் சொல் ஆட்சி தரப்பெற்றுள்ளது.

## 64. கலைமகள் [71]

[‘தேவதைகள்’ என்னும் தலைப்பு 104 பார்க்க.]

## 65. கனா [73]

கனவிலும் தேவர்க்கு அரியவர் பெருமான், வேறொரு தெய்வத்தைக் கனவிலும் நினையேன் என்கின்றார் மணிவாசகர்.

## 66. காடு [74]

‘ஊர்ச் சுடுகாடு’, ‘செந்தாமரைக் காடு,’ ‘பிறவிக் காடு’, ‘வல்வினைக் காடு’ எனக் ‘காடு’ என்னும் சொல் ஆட்சி தரப்பெற்றுள்ளது. பெருமானுக்குப் பதி (இருப்பிடம்) ‘காடு’ என்று சொல்லப்பட்டுள்ளது.

## 67. காமம் [76]

கரை மாண்ட காமம் (எல்லைக்கு அடங்காத காமம்), காமவான் சுறவு (காமம் என்னும் பெரிய சுறாமீன்), ‘வேட்கை வெந்நீர்’ எனக் காமம் விவரிக்கப்பட்டுள்ளது.

## 68. காமன் [77]

[“சிவபிரான் அட்ட வீரம்” என்னும் தலைப்பு I-2 (2) பார்க்க.]

காமன், வேள், வேனில் வேள்,—எனக் காமன் குறிக்கப்பட்டுள்ளான். அவன் கணை ‘மலர்க் கணை’ என்று கூறப்பட்டுள்ளது.

## 69. காலம்—ஊழி—காலத்தைக் குறிப்பன [78]

அந்நாள், அன்று, இப்பொழுது, இமைப் பொழுது, உருத் தெரியாக் காலம், உலவாக் காலம், ஊழி, எத்தனையோ காலம், எப்போது, கற்பமும் இறுதியும், காலாந்தரம், கூவிக்கொள்ளும் நாள், நித்தலும், நெடுங்

காலம், பன்னாள், பொழுதினைச் சுருக்கி, போவோம் காலம் வந்தது, முன்னாள், வேனில்—இச் சொற்களும் சொற்றொடர்களும் காலத்தைக் குறிப்பன.

ஊழிக் காலத்தின் முடிவு "ஈற்றொடு புணரிய மாப் பேரூழி" எனக் கூறப்பட்டுளது.

## 70. காலன் [79]

['சிவபிரான் அட்டவீரம்'—என்னும் தலைப்பு I-2 (3) பார்க்க.]

காலன், கூற்றம், கூற்றன், கூற்று—எனக் 'காலன்' குறிக்கப்பட்டுள்ளான்.

### 1. கூற்றன் குணம்

காலன் 'வெய்ய கூற்று' எனச் சொல்லப் பட்டுள்ளான்.

### 2. கூற்றத்தின் கோள்கை

கூற்றுவன் இறைவனை எதிர்த்துச் சென்று அவருடைய தாமரையன்ன தாளால் உதையுண்டு திருத்தம் அடைந்தான். அதுபோலத் தவறு செய்த தாமும் பெருமானால் திருத்தப்படுகின்றேன் என்கின்றார் மணிவாசகர்.

## 71. காளி [80]

'வேற்காளி' எனக் கூறப்பட்டுள்ளாள். அம்பலத்தில் காளியுடன் நடனம் புரிந்தார் இறைவர். அங்ஙனம் பெருமான் நடம் பயின்றில்லாவிட்டால் உலகம் எல்லாவற்றையும் காளி அழித்திருப்பாள். தில்லை அம்பலத்தில் காளிக்கு அருள் புரிந்தார் இறைவர்.

## 72. குடி [81]

அடியார் உள்ளத்தில் இறைவன் குடிகொள்வார். தமது குடி முழுதும் ஆண்டார் பெருமான் என இறைவன் திருவருளை வியக்கின்றார் மணிவாசகர்.

மாதர்கள்பால் வசப்பட்டுத் தாம் குடி கெட்டதாகவும், இறைவன் அருள்பெற்ற பின்பு தாம் யார்க்கும் குடி அல்லோம் என்றும், இந்திரன் திருமால் பிரமன் இவர்களுடைய (போக) வாழ்வைக் குடிகெடினும் தாம் கொள்ளமாட்டேம் என்றும் கூறுகின்றார் மணிவாசகர்.

## 73. குணம் [82]

சாதி விடாத குணங்கள், பந்த விகார குணங்கள், பொய்கைப் புனல் என்று பேய்த்தேரை விரும்பும் பேதை குணம் - எனக் குணத்தை விவரித்துள்ளார். அறுதி குணங்கள், எண்ணில் பல் குணம்—எனக் குணம் விளக்கம் தரப்பெற்றுள்ளது.

### 2. இறைவனும் குணமும்

பெருமான் அம்பலத்தில் ஆடுகின்ற குணம் கொண்டவர், அவர் குணங்களும் குறிகளும் இல்லாத குணக் கடல். இந்திரன்—திருமால்—பிரமன், ஏனைய தேவர்கள் இவர்களுக்கெல்லாம் தலைவனாக நின்று, குணம்-குறி இவை கூடுதல் இல்லாதவன் இறைவன். அவருடைய திருவருள் கிடைக்கப் பெற்றால் எல்லை இலாத எண்குணங்களைப் பெற முடியும்.

இறைவனைக் 'குணக் கடல்' என்றும், 'குணமே போற்றி' என்றும் துதித்துள்ளார் மணிவாசகர்.

## 74. கொடி [83]

ஏற்றுக் கொடி (இடபக் கொடி), கருளக் கொடி (கருடக் கொடி), நீற்றுக் கொடி கூறப்பட்டுள. விசேட காலத்தில் கொடி ஏற்றப்படும்.

## 75. கோயில் [84]

பெருமானுடைய கோயில் (1) சுடுகாடு, (2) கச்சிச் செம்பொற் கோயில், (3) (மணிவாசகரது) மனம்.

தமது புலால் உடலைப் பெருமான் பொன் நெடுங் கோயிலாகக் கொண்டார் என்றும், 'பெருமானே! உன் கோயிலைப் பெருக்கும் பாக்கியம் இல்லாதவன் நான்' என்றும் மணிவாசகர் கூறுகின்றார்.

(மணிவாசகர் காலத்தில்) கோயிலிற் பணி செய்யும் பெண்கள் இருந்தார்கள். அவர்களைக் 'கோயிற் பிணாப் பிள்ளைகள்' என்கின்றார் மணிவாசகர்.

## 76. சங்கு [85]

கங்கையில் வெண்மணிச் சங்குகள் கிடைக்கும்.

ஏழில் (நாதசுரம்) வாசிக்கச் சங்குகள் உடன் ஒலிக்கும்.

## 77. சந்திரன் [86]

['சிவபிரான் சிரசிற் சூடுவன' என்னும் தலைப்பு I-3(6) பார்க்க]

இந்து, பிறை, சந்திரன், மதி, சோமன், நிலா இவை சந்திரனின் பெயர்களாக வருகின்றன. கங்கையில் தோணி போலச் சிவபிரான் சிரசில் சந்திரன் விளங்குகின்றான்.

இளமதி, செழுமதி, தேய்மதி, பனிமாமதி, மதிப் பிள்ளை, மதியம், மதிவெண்குடை, வெண்மதி—என மதிக்கு (சந்திரனுக்கு) விளக்கம் தரப்பட்டுள்ளது.

சந்திரனிடத்துள்ள களங்கம் 'முயற்கறை' எனக் கூறப்பட்டுள்ளது. இரு சுடர்களுள் ஒன்று சந்திரன், மற்றொன்று சூரியன். தக்க யாகத்தில் சந்திரன் (வீரபத் திரரால்) தேய்க்கப்பட்டான்.

## 78. சமயம்—சமயவாதிகள் [87]

ஆறு சமயங்களும் பேய்த்தேரை ஒக்கும். மாயா வாதம் ஒரு சண்ட மாருதம்; உலோகாயதம் மயக்கத்தைத் தரும் விஷமுள்ள ஒரு வலிய பாம்பு, பயனற்ற சமயங்களும்

ஒப்புக்கொள்ள முடியாத சாத்திரங்களும் 'சவலைக் கடல்' என்கின்றார் மணிவாசகர். சமய வாதிகள் எல்லாம் அவரவர் மதங்களே உண்மை மதம் எனக் கூச்சலிட்டுக் கலாம் விளைப்பர். புத்த சமயம் முதலான புல்லறிவில் ஏற்பட்ட பல சமயங்கள் தாம் தாம் சரியானவை என்று கூவி நிற்கும்.

விரதம்தான் விசேடம் என்பது உண்மை என்று வேதியர் சாத்திரங்களைக் காட்டினர். (மணிவாசகர் காலத்தில்)

அறுவகைச் சமயத்துக்கு உரிய கடவுளரின் தொகை ஒரு புழுக் கூட்டம் போலத் தோன்றும்படி தான் (சிவ பெருமான்) உயர் நிலையில் நின்று முத்தி அளிக்கும் உரிமை உடையவரான பெருமையை உடையவர்.

## 79. சாத்திரம் [88]

மாறுபாடான கொள்கைகளைக் கொண்ட சாத்திர நூல்களாகிய கடலில் விழுந்து மெலிவுற்றுத் தடுமாறினேன் நான்—என்கின்றார் மணிவாசகர்.

## 80. சாதி—குலம் [89]

பொது :—சாதி, குலம், பிறப்பு என்னும் சுழியிற் பட்டுத் தடுமாறுகின்ற அறிவிலி நான். இறைவன் என்னை ஆள எழுந்தருளப் பெற்றால் சாதி காரணமான (சாதியை விடக்கூடாது என்ற) குணங்கள் என்னை வருத்தா (என்னிடம் நிகழா). நான் நாயின் குலத்தினும் கடைப் பட்டவன். சிவன் கோயிலில் வேலை செய்யும் பெண்கள் குற்றமற்ற குலத்தவராய் இருந்தனர்.

சிறப்பு :—வலைஞரும், வேடரும் கூறப்பட்டுள்ளார்கள். கடலில் வேலை செய்யும் வலைஞர் கெளிறு (ஒருவகை மீன்) பிடிப்பர். *பெருமான் ஒருமுறை கடல் வலைஞனாகச் சென்றார்.

* இது வலைவீசின திருவிளையாடல்.

வேடர் காட்டில் வாழ்வர்.

பெருமான் *(பன்றிக் குட்டிகளின் பொருட்டு) நாய்கள் சூழ வேடரூபம் கொண்டார். பின்னர் ஒரு முறை (அருச்சுனன் பொருட்டு) காட்டகத்தே வேடனாய்ச் சென்றனர்.

## 81. சித்தர் [90]

[தலைப்பு 1-19 (98) பார்க்க]

தில்லையிற் சித்தர் சூழச் சிவபிரான் நடம் செய்வர்.

நம்மை அல்லற் படை (துன்பப் படை) வந்து தாக்கா திருக்கச் சித்தர்களைப் படையின் பின்அணியில் வரும்படி மணிவாசகர் அணி வகுக்கின்றார்.

## 82. சித்தாந்தம் [91]

காய்ந்து போகும் தன்மை இல்லாத பிறவி என்னும் விதை மேல் விளையாதபடி "இருவினை ஒப்பு" எனக்கு வந்த பிறகு, பெருமான் தமது அளவுக்கு அடங்காத அழகிய திருக் கோலத்தைத் திருக் கழுக்குன்றத்திற் காட்டினார்.

## 83. சித்திகள் [92]

பெருமான் எழுந்தருளப் பெற்றால் கணக்கற்ற சித்திகளை நாம் அடையக் கூடும்.

## 84. சிவபதம் [94]

சிவபதம் செம்மை வாய்ந்தது; புகழ் வாய்ந்தது; கருத்தில் அமுதம் போல் தித்திப்பது.

## 85. சுழி [95]

இடர்க் கடற் சுழி, இன்பப் பெருஞ் சுழி, சண்ட மாருதச் சுழி, "சாதல், பிறப்பு" என்னும் சுழி ஆகிய இவை கூறப்பட்டுள.

---

* பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்த திருவிளையாடல்.

## 86. சூரியன் (ஞாயிறு) [96]

[தலைப்பு 1-2-5; 1-63; பக்கம் 4, 80-ம் பார்க்க]

அருக்கன், அருணன், இரவி, ஒளி, கதிர், கதிரோன், சூரியன், பகலோன், ஞாயிறு, *பகன், பரிதி எனச் சூரியனைக் குறிக்கும் பெயர்கள் வந்துள.

சூரியன் வானிற் செல்வான்; ஒளியும், வெம்மையும் உடையவன், இருளைப் போக்குபவன்.

"எங்கெழிலென் ஞாயிறு" (சூரியன் எந்தத் திசையில் முளைத்தால் என்ன?) என்பது ஒரு பழமொழி.

இரு சுடர்களுள் ஒன்று சூரியன்; மற்றொன்று சந்திரன்.

## 87. செல்வம் [97]

செல்வம் என்பது அல்லலைத் தருவது; நிலையற்றது; ஆதலால் 'வேண்டேன் செல்வம்' என்கின்றார் மணிவாசகர். வீட்டு இன்பத்தை "மறிவறியாச் செல்வம்" என்றார். பெருமானைச் "செல்வமே! சிவபெருமானே!" எனவும், "சிற்றம் பலத்து எங்கள் செல்வம்" என்றும் கூறி மகிழ்கின்றார்.

திருப்பெருந்துறையைச் "செல்வத் திருப்பெருந்துறை' என்று கூறுகின்றார். இடபக் கொடியைத் "திரு அருட் செல்வத்தை உடைய வெற்றிக் கொடி" எனக் கூறியுள்ளார்.

## 88. சொல்லழகு—பொருளழகு [98]

**1.** சொல்லழகு: இருந்தேன் நோய்க்கு விருந்தாயே, உலக்கை வலக்கை பற்றி, மாதிருக்கும் பாதியனே, துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்.

---

* பன்னிரு சூரியர்களுள் 'பகன்' ஒருவன்; தக்க யாகத்தில் இவனுடைய கண் பறிக்கப்பட்டது.

2. பொருளழகு: அந்தரர் கோன், அயன் தன் பெருமான், ஆழியான் நாதன்; மாலும் மால் கொள்ளும்.

—எனச் சொல்லழகு, பொருளழகு உள்ளவை. 16 ஒளிநெறியிற் காட்டப்பட்டுள.

## 89. சொல் விளக்கம் [99]

1. ஏலோர் எம்பாவாய்: "ஏலோ" என்பது மகளிரை அழைக்கும் விளிச் சொல். "ஓர்" அசை. இதன் விரிவை ஒளிநெறி அநுபந்தம் 3 இல் காண்க.

2. கொக்கிறகு: (1) கொக்கின் உருவத்தைக் கொண்ட குரண்டாசுரனுடைய இறகு. (2) கொக்கிறகு என்பது கொக்கு மந்தாரை என்னும் மலரையும் குறிக்கும்.

3. தூசி, பேரணி, கடைக் கூழை: இவை முறையே படையின் முன்னணி, நடு அணி, பின்னணி. இவை போல்வன சிலவற்றின் சொல் விளக்கத்தை ஒளிநெறியிற் காணலாகும்.

## 90 சோதி—சுடர்—கதிர்—ஒளி [100]

[தலைப்பு 50-ம், 1. சிவபிரான்—சோதி என்னும் தலைப்பு 1-17; 19-67-ம், பக்கம் 18, 31-ம் பார்க்க]

அருக்கனிற் சோதி, இலங்கு சுடர், சூழ் சுடர், தேசு, இவை ஒளியைக் குறிப்பன.

## 90A. சோலை [100A]

["பொழில்" என்னும் தலைப்பு 157 பார்க்க]

## 91. ஞானம் [101]

அஞ்ஞானம், எஞ்ஞானம், கலைஞானம், மெய்ஞ் ஞானம் என ஞானம் என்னும் சொல் ஆட்சி தரப்பெற் றுள்ளது.

## 92. தமிழ் [102]

[தலைப்பு I-65 பார்க்க]

பாண்டி நாடு தண் தமிழை அளிக்கும் நாடு.

## 93. தலங்கள் [103]

(1) அண்ணாமலை

அண்ணாமலையான் திருவடித் தாமரையை வணங்கி அவரை 'அண்ணா'எனப் போற்றிப் பாடி அம்மானை ஆடுவோமாக.

(2) அம்பலம்

'தில்லை' பார்க்க.

(3) அரிகேசரி

கலைவல்லார் நிறைந்த 'அரிகேசரி' என்னும் தலத்திற் பெருமானார் வீற்றிருக்கின்றார்.

(4) அவிநாசி

அவிநாசி அப்பா.

(5) திருஆரூர்

உயர்ந்த மதில்கள் சூழ்ந்து விளங்குவது திருவாரூர்; (தியாகராஜ மூர்த்தியே) அரசே! பிச்சைத் தேவரே! வண்டுகள் நாடும் சோலைகளை உடைய திருவாரூரில் சிவஞானத்தை உபதேசித்து நன்மை புரிந்தவரே!

(6) ஆனைக்கா

அழகிய திருவானைக் காவில் வீற்றிருப்பவன்.

(7) இடவை

அழகு விளங்கும் நல்ல ஒளி பொருந்திய மணிகளால் அலங்கரிக்கப்பட்ட மாட மாளிகைகள் நீண்டு விளங்கும் இடவை என்னும் தலத்தில் ஒரு பெண்மணிக்கு மிகச்

சிறப்பான தமது கருணையைப் பெருமான் அளித்துப் பேரன்பு புரிந்தார்; இவ்வரலாற்றை 'வரலாறு' என்னும் தலைப்பிற் பார்க்க.

(8) இடைமருது

திருவிடை மருதூரில் விளங்கும் அம்மானும் அந்த ஆனந்தத் தேன் தனது ஒளி பொருந்திய திருவடியை என் சென்னிமேல் வைத்தது.

(9) ஈங்கோய்மலை

ஈங்கோய் மலையில் தனது அழகு மிக்க திருமேனியைக் காட்டி அருளிய எந்தை.

(10) உத்தர கோச மங்கை

தேன் பெருகும் அழகிய பொழில்கள் வளரும் தலம். வண்டுகள் தேர்ந்து (ஏழு இசைகளில் ஒன்றாகிய) விளரி என்னும் பண்ணைப் பாடுகின்ற ஒலி நிலை பெற்றுள்ள அழகிய பொழில்களை உடைய தலம். நினைத்தற்கரிய சிறப்பை உடைய தலம். பக்தர்கள் எல்லாம் இத்தலம் பூமியிலுள்ள சிவபுரமாம் என்று கொண்டாடிப் பாராட்டும் தலம். மிக்க அழகுடன் விளங்கும் பூங்கொடி போன்ற தேவி வீற்றிருக்கும் கோயிலை உடைய புனிதம் பெருகும் இனிமை உடைய தலம். தென்னை நிறைந்து வளரும் சோலைகளை உடைய தலம். நீண்ட மணி மாடங்கள் நிலாவுந் தலம். மேகங்கள் தோயும் ஒளி பொருந்திய மாட மாளிகைகள் உள்ள தலம்.

பெருமான் உத்தர கோச மங்கை ஆரா அமுது, கொன்றைச் சடையர், பிறைச் சென்னிக்கூத்தர்; ஞாலம் விளங்க அத்தலத்தில் அரசாய் வீற்றிருக்கும் வள்ளல்: மாமறையோன்; நினைத்தற்கரிய பெருமை உடையவர்; பண்போன்ற மொழியை உடைய தேவியுடன் அத்தலத்தை விட்டு நீங்காது நிலைபெற்று இருப்பவர்; அவர் தமது வித்தக வேடத்தை அத்தலத்திற் காட்டி அருளினர்.

(11) திருவையாறு

சீர் நிறைந்த தலம். பெருமான் இத்தலத்தில் சைவ ஆசாரியாராக வந்த தலம். [இதன் விவரத்தை "வரலாறு" என்னும் தலைப்பிற் காணலாம்.]

(12) ஓரியூர்

ஓரியூரில் இறைவர் மகிழ்ந்து ஒரு பாலகனாக விளங்கினார். இது 'திருவிளையாடல்' என்னும் தலைப்பில் விருத்த குமார பாலரான ஆடலைக் குறிக்கும்.

(13) கச்சி ஏகம்பம்

ஏகம்பத்தில் பெருமான் பாகம் பெண்ணோடாயினார். அத்தலத்தில் அவர் கோயில் செம் பொற்கோயில். கச்சித் திரு ஏகம்பத்தைத் தேசம் எல்லாம் புகழ்ந்து கொண்டாடும்.

(14) கடம்பூர்

கடம்பூரிற் சிவனார் விடங்கராய் (சுயம்பு மூர்த்தியாய்) இடம் பெற்றிருக்கின்றார்.

(15) கயிலை

ஒலி நிறைந்த பெருமை வாய்ந்தது; பெருமான் அம் மலைக்குத் தலைவர். அம்மலையில் வீற்றிருக்கும் கடல் போன்றவர்; பரம்பரர்.

(16) கல்லாடம்

இத்தலத்திற் பெருமான் தேவியுடன் நேசித்து அருள் பாலித்து வீற்றிருப்பார்.

(17) கவைத்தலை

இத்தலத்தில் இறைவர் கண்போல அருமையுடன் வீற்றிருக்கின்றார்.

(18) கழுமலம்

(சீகாழி) இத்தலத்தில் இறைவர் தமது திருக்கோலக் காட்சியைத் தந்து அருளினார்.

(19) குவைப்பதி

குவைப்பதியில் இறைவர் அரசர் என வீற்றிருக்கின்றூர்.

(20) குற்றூலம்

குற்றூலத்தில் இறைவர் சிவலிங்க வடிவமாய் அமர்ந்தும், கூத்தராய் நடனம் ஆடியும் விளங்குகின்றூர். [பஞ்ச சபைகளில் குற்றூலத்திற் சித்திர சபை உளதாதலின் 'கூத்தர்' என்றூர்.]

(21) கூடல்

'மதுரை' பார்க்க.

(22) கோகழி

இங்குத்தான் மணிவாசகரை ஆண்ட குருமணியாகிய பிரானூர் வீற்றிருக்கின்றூர். திருப்பெருந்துறையும் கோகழியும் தலத்தையும் அங்குள்ள ஆலயத்தையும் குறிக்கும். இதன் விளக்கம் 'பதிக விசேடம்' என்னும் தலைப்பிற் காண்க.

குயிலே! நீ கோகழிநாதன் வரக் கூவாய் என வேண்டுகின்றூள் தலைவி. [மணிவாசகர் தம்மைத் தலைவி நிலையில் வைத்துப் பாடினது "குயிற்பத்து."]

(23) சந்திரதீபம்

இத்தலத்தில் இறைவன் சாத்திரம் ஓதும் மூர்த்தியாக எழுந்துள்ளார்.

(24) சாந்தம்புத்தூர்

இத்தலத்தில் விற்போர் புரியும் வேடன் ஒருவனுக்கு கண்ணுடியில் தோன்றி அவனுக்கு வேண்டியவற்றை இறைவர் கொடுத்து அருளினூர்.

(25) சிராப்பள்ளி

(திரிசிராப்பள்ளி) சிவபிரான் வீற்றிருக்கும் தலம் இது.

(26) சிவபுரம்

இது சிவபிரான் வீற்றிருக்கும் நகரம். சீர் நிறைந்தது. லட்சுமீகரம் நிறைந்து அழகுடன் விளங்கும் பொன் நகரம். இது தேவர்கள் அணுக முடியாத வானவூர். இச் சிவபுரத்து அழகிய திருமாமணிசேர் திருக்கதவம் அடை படுவதற்கு முன்பாக நாம் போய் அங்கடைய வேண்டும்; அக் கதவம் திறந்தபோதே திருமாலறியாத் திருப்புயங்க நடனம் புரியும் பெருமானுடைய திருவடியின்கண் நாம் சென்று சேர்வோமாக. "சிவபுராணப் பாட்டின்" பயன் தெரிந்து ஓதுபவர் சிவபுரத்தின் பெருமானுடைய திருவடிக் கீழ்ப் பலரும் வணங்கிப் புகழுமாறு இருப்பவர் ஆவார்.

(27) திருக்கழுக்குன்றம்

திருக்கழுக்குன்றத்தில் தவறாது வீற்றிருக்கும் செல்வா! அளவுக்கு அடங்காத அழகிய நின் திருக்கோலத்தை நீ திருக்கழுக்குன்றத்தே எழுந்தருளி வந்து எனக்குக் காட்சி தந்து அருளினாய்.

(28) திருத்துருத்தி

இங்கு இறைவர் விருப்புடன் அமர்ந்துள்ளார்.

(29) திருப்பனையூர்

இங்கு இறைவர் விருப்பத்துடன் வீற்றிருக்கின்றார்.

(30) திருப்பெருந்துறை

வரம்பு வரை குளிர்ந்த நீர் நிரம்பிய வயல்கள் சூழ்ந்த தலம்; அழிவிலாத தலம். குற்றமற்ற தலம். சீர்பெற்ற தலம். செடிகள் நிறைந்த பெரிய செம்மையுள்ள ஒழுங்கான பொழில்கள் சூழ்ந்துள்ள தலம். செம்மை வாய்ந்த நா வன்மை உடைய புலவர்கள் போற்றுகின்ற புகழுடைய தலம். செவ்விய சிறந்த பேரொலி நிறைந்த நான்கு மறைகளும் சேர்ந்துள்ள தலம். செந்தாமரை மலரும் வயல்களையுடைய தலம். செம்மை உடைய அழகு

வாய்ந்த தலம். செல்வம் நிறைந்த தலம். வளம் மிக்க தலம். சேல் மீனும், நீலோற்பலமும், தாமரையும் மலர்ந்துள்ளதும், சேறு நிறைந்து குளிர்ந்துள்ளதுமான வயல்கள் சூழ்ந்த தலம். திருந்திய பொய்கைகளும் நீண்ட பொழில்களும் அமைந்துள்ள அழகிய தலம். சுதை தீட்டப்பட்ட மதில்கள் சூழ்ந்துள்ள தலம். பரிசுத்தமான நீரை உடைய தலம். தென்னஞ் சோலைகள் திரண்டுள்ள தலம் தென் திசையிலுள்ள தலம். தேரோடும் வீதிகளை உடைய தலம் பெருமை பொருந்திய பாண்டி நாட்டைச் சேர்ந்த தலம். தேன்பாயும் மலர்களைக்கொண்ட கொன்றை மரங்களை உடைய தலம். யாவரும் விரும்பும் தலம் போற்றுதற்கரிய தலம். பூக்கள் மலரும் சோலையுள்ள தலம். வளப்பம் பொருந்திய விரிந்த பொழில்கள் சூழ்ந்த தலம். தேவர்கள் கூட்டமாய்ச் சென்று போற்றும் தலம். சிவபெருமான் நிலைபெற்று வீற்றிருக்கும் தலம். செவ்விய மலர் நிறைந்த குருந்த மரத்தின் கீழ்ப் பெருமான் வீற்றிருக்கின்ற தலம். நம் போன்ற அடியார்கள் சென்று நன்கு போற்றுந் தலம்.

திருப்பெருந்துறைப் பெருமான் பெரும் பித்தர், பெரும் வெள்ளம், பெருந்தோணியனையார், பாண்டி வள்ளல், பெருந்துறையை விட்டுப் பிரியாதவர். கலங்கி வந்துள்ள தமது (மணிவாசகருடைய) கண்ணீரை மாற்றி மும்மலங்களை ஒழித்தவர். பரியின் மேல் வந்த வள்ளல்; வெள்ளந்தரும் வள்ளல்; பெருந்துறைச் செல்வர்; ஒளிப்பிழம்பில் (சோதியில்) மறைந்த கள்வர்.

## பெருந்துறையின் சிறப்பு

நெஞ்சமே! நமது வினையைப் போக்கி அருளும் பெருந்துறையானுடைய தாமரையன்ன திருவடியை மயக்கந் தீர வாழ்த்துவாயாக; வாயாரப் போற்றுவாயாக; பெருந்துறை என்னும் தலத்தைச் சேர்ந்து அங்குக் கோகழி என்னும் திருக்கோயிலில் விற்றிருக்கும் அரசைக் காண்பாயாக. பெருந்துறையில் வீற்றிருக்கும்

நல்ல மருந்தனைய பெருமானது திருவடியை என் மனத்தில் வைத்து என் பிறப்பை அறுத்தேன்; பெருந்துறை வள்ளலை வாழ்த்துமின்கள்; வாழ்த்தினால் பிறவி என்னும் காடு மூலங் கெட்டு ஒழியும். திருப்பெருந்துறையை நன்கு வணங்கிப் போற்றும் நம்மவர் வாழ்ந்தவர்கள் ஆவார்கள், வல்வினையை ஒழித்தவர்கள் ஆவார்கள். உலகோர் வணங்கி வாழ்த்தத் தக்கவர்கள் ஆவார்கள். திருப்பெருந்துறையில் மரம் குருந்தம், தீர்த்தம் 'மொய்யார் தடம் பொய்கை', வீதிகள் தேரோடும் வீதி.

(31) திருவாஞ்சியம்

இத்தலத்தில் தேவி 'மருவார் குழலி'யுடன் சிவனார் மகிழ்ந்து வீற்றிருக்கின்றார்.

(32) தில்லை

அதிர்க்கும் (ஆரவாரிக்கும்) குலாத்தில்லை, அணி தில்லை அம்பலம்; அசைகின்ற நீர் நிலையை உடைய தில்லை; அம்பொன் குலாத்தில்லை. அன்னம் திளைக்கும் தில்லை; அனைத்துலகும் தொழுந் தில்லை; எல்லோரும் இறைஞ்சு தில்லை; களவுக் குணமில்லாத வானவர் தொழுந் தில்லை; குன்றாத சீர்த் தில்லை; சிட்டர்கள் வாழுந் தில்லை; தில்லைச் சிற்றம்பலம்; தென் தில்லை. நெருங்கிய பொழில்சூழ் தில்லை. அகலமான மதில்கள் சூழ் தில்லை; தேனுள்ள குளிர்ந்த வயல்கள்சூழ் தில்லை; நலமலி தில்லை. நான்கு மறைகளும் முழங்கும் தில்லை; பண் (நீர்நிலை)யுள்ள தில்லைப்பதி; பொன்னம்பலம் விளங்கும் தில்லை. வேதங்கள் தொழுதேத்தும் தில்லை — என்றெல்லாம் தில்லை அம்பலம் போற்றப்பட்டுள்ளது.

அம்பலக்கூத்தன், அம்பலத்தமுது, அம்பலத்தாடும் கழல், ஆடுங்குலாத்தில்லை யாண்டான்; தில்லை மூதூர் நடஞ் செய்வான்; சிற்றம்பலத்து எங்கள் செல்வம், தில்லை அம்பலவர், சிற்றம்பலத்தே தீயாடுங் கூத்தன், தில்லைச்

சிற்றம்பலவன், தில்லை நடமாடி, தில்லை நிருத்தன்; தில்லை மூதூர் ஆடிய திருவடி; தில்லைவாழ் கூத்தன்; தென் தில்லைக்கோன், தென் தில்லை மன்றினுள் ஆடி; தென் பாலுகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன். தில்லையுள் கோலமார் தரு பொது; பதஞ்சலிக் கருளிய பரம நாடக இறைவன் ஈண்டிய அடியவரோடும் பொலிதரு புலியூர்; மிக்க அழகு பெற்ற இமயமலை போல ஓங்கிய தன்மை உடைய, விளங்கும் பொன்னொளி பொலிகின்ற, புலியூர்; புலியூர் அம்பலத்தில் நடஞ் செய்கின்ற இறைவன்; வித்தகனார் விளையாடல் விளங்கும் தில்லை—என்றெல்லாம் பெருமான் தில்லையில் நடஞ்செய்வது குறிக்கப் பட்டுள்ளது.

(33) தேவூர்

தேவூருக்குத் தென்பக்கத்தில் விளங்கும் தீவின்கண் அரசுபுரி கோலங் கொண்டனர் சிவனார்.

(34) நந்தம்பாடி

இத்தலத்தில் இறைவர் முடிவிலாத நான்மறை ஆரியனாக அமர்ந்துள்ளார்.

(35) பஞ்சப்புள்ளி

இங்கு இறைவர் தேவியுடன் குறைவிலாத திரு அருளைப் பாலித்து அமர்ந்துள்ளார்.

(36) பட்டமங்கை

இத்தலத்தில் இறைவர் அன்புடன் வீற்றிருந்து (இயக்கிகள் அறுவருக்கு) அட்டமா சித்தியை விளக்கி அருளினார்.

(37) பராய்த்துறை

அழகிய இத்தலத்தில் இறைவர் வீற்றிருக்கின்றார்.

(38) பழனம்

வனப்பு மிகுந்த திருப்பழனத்தில் பெருமான் அழகராய் உறைகின்றார்.

(39) பாண்டூர்

இங்கு இறைவர் பொருந்தி வீற்றிருக்கின்றார்.

(40) பாலை

சிவலோகத்திலிருந்து இறங்கிவந்து அழகு மிக்க பாலை என்னும் தலத்தை விடாது அழகான தன்மையில் இறைவர் வீற்றிருக்கின்றார்.

(41) புலியூர்

'தில்லை' பார்க்க.

(42) புறம்பயம்

இங்கு இறைவர் பலவகைத்தான அறவுரைகளைப் போதித்தருளினார்.

(43) பூவணம்

இங்குக் கயிலை மலைப்பெருமான் (சித்தராக) எழுந்தருளித் தமது பரிசுத்த மேனியைக் காட்டி அருளினார்.

(44) பூவலம்

இந்தப் பதியில் இறைவர் விளக்கமாக நன்கு வீற்றிருந்து அருளி (அடியார்களின்) பாவங்களைப் போக்கி அருளுகின்றார்.

(45) பொன்நகர்

'சிவபுரம்' பார்க்க.

(46) மகேந்திரம்

இங்கு இறைவர் தாமே எழுந்தருளித் தேவர் வணங்குகின்ற தமது திருவடியை (என் தலைமீது) வைத்து அருளினார். அவர் அளவிலாத பேரருளாளர். இங்குத் தான் அவர் ஆகமங்களைத் தோற்றுவித்தருளினார். தமது ஐந்து திருமுகங்கள் வாயிலாக உபதேசித்து அருளினார். குறைபாடுகளை உடைய தேவர்கள் தம்மைத் தேடும்படி இத்தலத்தில் இறைவர் வேடுவ வடிவத்துடன் வீற்றிருந்தார்.

(47) மதுரை

இது பொன்வண்ணத் தலம். இது பெருமான் அரசராய் வீற்றிருக்கும் தலம். ஒலி மிக்க தலம். பெருமான் மண் சுமந்து பிட்டமுது உண்ட தலம். குருமூர்த்தியாய்ப் பொலிகின்ற தலம். பெருமை பொருந்திய பாண்டியனுக்கு உரிய தலம். மங்கையர் நிறைந்த தலம். குதிரைச் சேவகனுகப் பெருமான் எழுந்தருளிய தலம். மதுரையில் அரசு புரிந்த மன்னனுக்கு மறுப்பிலாவகை இறைவன் செய்தருளிய தலம்.

(48) வாதவூர்

இஃது இறைவன் தமது பாதச் சிலம்பின் ஒலியைக் காட்டிய தலம்.

(49) வெண்காடு

இத்தலத்தில் பெருமான் புதுமையுடன் தோன்றிக் குருந்த மரத்தின் கீழ் வீற்றருளினர்.

(50) வேலம்புத்தூர்

இத்தலத்தில் இறைவர் (உக்கிர குமாரனுக்கு) வேல் கொடுத்தருளித் தமது அழகிய கோலத்தைக் காட்டி அருளினர்.

## 94. தலமும் பதிகமும் [104]

["பதிகமும் தலமும்" என்னும் தலைப்பு 134 பார்க்க]

உத்தரகோசமங்கையில் பதிகம் 6, 16 எண் உள்ளவையும், திருக்கழுக்குன்றத்தில் பதிகம் 30-எண் உள்ளதும், திருப்பெருந்துறையில் 8, 19, 20, 22, 23, 28, 29, 34, 43; 47, 48-எண்ணுள்ள பதிகங்களும், தில்லையில் 21, 31, 40 எண்ணுள்ள பதிகங்களும் பாடப்பட்டன என்பது அவ்வப் பதிகங்களிற் பாடல் தோறும் அல்லது நிரம்பச் சொல்லப் பட்டமையால் ஏற்படுகின்றது.

## 95. தவம் - தவத்தினர் [105]

[தலைப்பு I-67, பக்கம் 80 பார்க்க]

அருந்தவம், கீழ்ச் செய்தவம், அருந்தவர் கூறப்பட்டுள.

## 96. தானியம் [107]

எள், கொள், தினை, மஞ்சள் கூறப்பட்டுள.

## 97. திசை [108]

இந்திரன் திசை, திசை பத்து கூறப்பட்டுள.

## 98. திருநீறு [110]

1. சுண்ண வெண்ணீறு, சுந்தர நீறு, தத்துறு நீறு, திருநீறு, தூய வெண்ணீறு, தூ வெள்ளை நீறு, நீற்றுக் கவசம், பால் திருநீறு, பொடி,—என நீறு விளக்கப்பட்டுள்ளது. திருநீற்றை உத்தூளித்து அணிதல் உண்டு. திருநீறு சிவபிரானுக்கு உரியது என்பதைக் காட்ட "*தன் சுண்ண வெண்ணீறு" எனக் கூறப்பட்டுள்ளது.

2. திருநீறு அணியாதவரைக் கண்டால் தாம் அஞ்சுவதாக மணிவாசகர் கூறுகின்றார்.

3. தோள், நெற்றி இவைகளில் திருநீறு பூசுதல் வேண்டும். 'போற்றி! எம்பெருமானே' என்று குறையாத அன்புடன் திருநீற்றை நிறையப் பூசினால் பிறப்பு, இறப்பைக் கடக்கக்கூடும்.

## 99. திருமால் [111]

(1) திருநாமம்

அரி, ஆழியான், கண்ணன், கருமால், செங்கணவன், ஞாலம் உண்டான், திருமால், நாரணன், நாராயணன், நெடுமால், மால், மாலவன்.

---

* "என்னையும் தன் சுண்ண வெண்ணீறு அணிவித்து" 51—4 "ஈறும் ஆதியும் இல்லான்...தன்நீறு" 16—3.

(2) இருப்பிடம்

பாற்கடல்.

(3) திருமாலின் கண்

செங்கண்.

(4) காப்பவர்

படைத்தவை காப்பவர்.

(5) கொடி

கருளக்கொடி (கருடக் கொடி)

(6) படை

ஆழி (சக்கரம்)

(7) கையில் ஏந்துவது

சங்கு (வளை)

(8) தக்கன் வேள்வியில் திருமால்

தக்கன் வேள்வியில் திருமால் அவிப்பாகம் கொண்டு சாவாதிருந்தார்.

(9) நலம்

நலமுடைய நாரணன்.

(10) நிறம்

கருநிறம், கார்முகில் நிறம்.

(11) பிரமன் தாதை

சதுர்முகன் தாதை.

(12) திருமாலின் பெருமை

முழுவதும் கண்ட பிரமனைப் படைத்துத் தான் அவருக்கும் முன்னானவர்; பூமியை உண்டவர்; முனிவர்களாலும், பிரமன் முதலிய தேவர்களாலும் தொழப்பட்டவர்.

(13) திருமாலின் அவதாரங்கள்

(1) கிருஷ்ணவதாரத்தில் கன்றால் விளா எறிந்தார். (2) "வாமனவதாரத்தில் பிரமன் முதலிய தேவர்கள் தொழ, நீண்டவராகி, ஈரடியால் மூவுலகு அளந்து, முனிவர்கள் மகிழ்ந்து போற்றி செய்ய விளங்கினார்.

(14) திருமாலுக்கு இறப்பு உண்டு

அன்று சிவபிரான் நஞ்சை உண்டிலரேல் திருமாலும் பிற தேவர்களும் இறந்திருப்பார்கள். சிவபிரான் திரிபுரம் எரித்த பின்னர் மால் பலர் இறந்தனர்.

(15) திருமாலும் பூமியும்

"பூமியில் போய்ப் பிறவாமையால் காலம் வீணாபிற்று. இந்தப் பூமிதான் சிவன் உய்யக் கொள்கின்ற இடம்" என்பதை அறிந்து திருமால் பூலோக வாழ்வை விரும்புகின்றார்.

(16) திருமாலும் சிவனும்

["சிவனும் திருமாலும்" என்னும் தலைப்பு I-71 பார்க்க]

நிலத்தைத் திருமால் ஏனமாகி (பன்றியாகி)ப் பிளந்து சென்றும் சிவபிரானது சேவடியை அவரால் காணமுடியவில்லை. சிவபிரானைத் திருமால் ஆயிரம் தாமரைப் பூக் கொண்டு பூசித்தபோது ஒரு பூ குறைந்ததால் தமது கண்ணையே பேர்த்து மலராக இட்டுப் பூசித்தார். திருமாலுக்குச் சிவபிரான்மீது மிக்க ஆசை உண்டு. சிவபிரான் மாலுக்கு அரியர்; மால், அயன் முதலிய தேவர்களுக்குக் கோமான். தமது குடி கெட்டாலும் இந்திரன், திருமால், பிரமன் முதலியோர் வாழ்வு தமக்கு வேண்டாம் என்கின்றார் மணிவாசகர்.

## 100. திருவிளையாடல் [112]

(1) அட்டமாசித்தி உபதேசித்தது (2) இரசவாதம் செய்தது (3) உக்கிர குமாரனுக்கு வேல் அளித்தது (4) கரிக் குருவிக்கு உபதேசித்தது (5) சோழனை மடுவில்

வீழ்த்தியது (6) தண்ணீர்ப் பந்தல் வைத்தது (7) நரி பரியாக்கியது (8) பன்றிக் குட்டிகளுக்கு முலை கொடுத்தது (9) புலி முலை புல்வாய்க்கு (மானுக்கு) அருளியது (10) மண் சுமந்தது (11) மணம் செய்தது (12) மலையத் துவசனை அழைத்து அருளியது (13) மாயப் பசுவை வதைத்தது (14) மெய்க் காட்டிட்டது (15) யானை எய்தது (16) வலைவீசினது (17) வளையல் விற்றது (18) விருத்த குமார பாலரானது (19) வெள்ளை யானையின் சாபம் தீர்த்தது என்னும் திருவிளையாடல்கள் கூறப்பட்டுள.

## 101. துன்பம்—துயர் [114]

அல்லற் படை, அல்லற் பிறவி, அவலக் கடல், இடர்க் கடல், இந்திரஞால இடர்ப் பிறவித் துயர், உள்ளத்து உறு துயர், செல்வம் என்னும் அல்லல், துக்க சாகரத் துயர், துன்பப் புயல் வெள்ளம், நஞ்சாய துயர், வெந்துயர்க் கோடை—எனத் துன்பம், துயர், அல்லல் விளக்கப் பட்டுள.

"எல்லா அல்லலையும் இகழ்மின்" என்பது மணி வாசகர் செய்யும் உபதேசம்.

பெருமானால்தான் இடரைக் களைய முடியும். அவர் இன்பமும் துன்பமும் இல்லாதவர்.

தாய் வயிற்றில் உள்ள கருவுக்கு ஒன்பதாம் மாதத்தில் துன்பம் வரும்.

மடவாரின் கடைக்கண்ணால் இடர்ப்படுவார் (மாந்தர்கள்).

## 102. தெய்வம் [115]

இறைவன் திருவருளால் தெய்வம் ஒன்று உண்டு என்ற எண்ணம் சித்தத்தில் உதிக்க வேண்டும். குறைகள் நிறைந்த சிறு தெய்வங்களைப் போற்றுதல் கூடாது. "சிவனே! உன்னை யல்லால் வேறு தெய்வம் எதையும் நான்

நினைக்கமாட்டேன் ; அறியேன். வேறொரு தெய்வம் உண்டென்று நினைத்து, எம்பெருமானைப் போற்றி வழிபடாதவரைக் கண்டால் நான் அஞ்சுவேன்''—என்கின்றார் மணிவாசகர்.

## 103. தேர் [116]

மணிவாசகர் காலத்தில் திருப்பெருந்துறையில் தேர் ஓடும் வீதி இருந்தது.

## 104. தேவதைகள் [117]

(1) இலக்குமி [தலைப்பு 30 பார்க்க]

தாமரையில் வீற்றிருப்பவள். சோமனுடன் (சந்திரனுடன்) பிறந்தமையால் 'சோமி' என்று இலக்குமிக்குப் பெயர் உண்டு.

2) இயக்கிமார் 64 பேர்

இவர்கள் இறைவனைப் பூசித்து எண்குணம் பெற்றனர்.

(3) கங்கை

[தலைப்பு 55 பார்க்க]

(4) கலைமகள்

நாமகள், தாமரையில் வீற்றிருப்பவள். தக்கன் யாகத்தில் நாமகளின் நாசி அறுபட்டது. பெருமானுக்கு, பொற் சுண்ணம் இடிக்கும்போது நாமகள் இலக்குமியுடன் இறைவனுக்குப் பல்லாண்டு பாடவேண்டும். மற்றைத் தேவர்களுடன் நாமகளும் சிவனது சேவடியைக் கண்டறியாள்.

(5) பார்மகள் (பூதேவி)

நாமகளுடன் கூடிப் பல்லாண்டு பாடவேண்டும் (பொற் சுண்ணம் இடிக்கும்போது).

(6) பார்வதி

[தனித் தலைப்பு 142 பார்க்க]

தேவதைகளுக்கு மணிவாசகர் இட்ட திருப்பணி

(பிரானுக்குப் பொற்சுண்ணம் இடிக்கும்போது) ருத்திர சத்தி (ரௌத்திரி), திருமகள், நிலமகள், கலைமகள் இவர்கள் பிரானுக்குப் பல்லாண்டு பாடவேண்டும். கணபதி சத்தியும், காளியும், உமையும், கங்கையும் கவரி வீச வேண்டும்.

## 105. தேவர்—பொது [118]

அண்டர், அந்தரர், அமரர், இமையவர், உம்பர், தேவர், புத்தேளிர், வானவர், வானோர், விண்ணவர்—இவை தேவர்களின் பெயர்களாக வந்துள்ளன.

பன்னூறு கோடித் தேவர்கள் உண்டு. தேவர்கள் 'சேட்டைத் தேவர்கள்' என்று கூறப்பட்டுள்ளார்கள். மூப்பு அடையாத தேவர்களும் உண்டு. வானவர் கணக் கற்றவர். களவு (வஞ்சனை) இல்லாத தேவர்கள் தில்லையில் பெருமானைத் தரிசிக்கின்றார்கள்.

## 106. தேவர்—சிறப்பு [119]

(1) அக்கினி

[தலைப்பு 4-1 பார்க்க]

அங்கி, அனல், 'வெய்யவன் அங்கி' எனக் கூறப் பட்டுள்ளான்.

(2) அயன் (பிரமன்)

['பிரமன்' என்னும் தலைப்பு 147 பார்க்க]

அயன் - மேலான தேவன்.

(3) அருக்கன்

['சூரியன்' என்னும் தலைப்பு 36 பார்க்க]

(4) அருணன்

காலையில் கிழக்கில் உதிப்பவன் (சூரியனுடைய தேரோட்டி.)

(5) இந்திரன்

['இந்திரன்' என்னும் தலைப்பு 4-26 பார்க்க]

உருத்திரன், எச்சன், தக்கன், முப்பத்து மூவர் மூவர், வருணன், வீரபத்திரர் இவர்கள் கூறப்பட்டுள்ளார்கள்.

## 107. தேவர் செய்கை முதலிய [120]

தக்கன் வேள்வியில் தேவர்கள் ஆட்டின் ஊனைத் தின்றனர்.

கடலில் நஞ்சு எழுந்தபொழுது அஞ்சி ஓடினர். தேவர்கள் பிரானை ஏன் வணங்குகிறார்கள் என்றால், தாம் வாழ்தற் பொருட்டும், தாம் மேன்மை அடைந்து தம்மை எல்லாரும் வணங்கி வழிபடவேண்டும் என்னும் கருத்தைக் கொண்டும்தான்.

## 108. தேன் [121]

(1) தேறல்

கரும்பின் தேறல், தெளிவந்த தேறல் என வருகின்றது.

(2) தேன்

ஆனந்தத் தேன், இன்தேன், உகுபெருந்தேன், உலப்பிலா ஆனந்தமாகிய தேன், கருணைத் தேன், கருணைவான் தேன், களிதரு தேன், கொழும் தேன், கோற்றேன், தேன் மொழி, தேன் புரையும் சிந்தை, தேனமர் சோலை, தேனுடு கொன்றை, தேனார் அமுது, தேனார் கமலம், பூவினில் தேன்.

(3) நறவறம்

விரையார் நறவம்.

(4) மட்டு

கருணை மட்டு, மடலின் மட்டு.

(5) வெறி

வெறி மலர், வெறி வாய் அறுகால்

—எனத் "தேன்" என்னும் சொல் ஆட்சி பெற்றுள்ளது.

## 109. தொகை [122]

எண்களில்—

ஒன்றில்: இறைவனும்,

இரண்டில்: இறைவன் திருவடியும், வினையும்,

மூன்றில்: எரியும், மூர்த்தியும், புரமும், மலமும்,

நான்கில்: மறையும், வேதமும், நிலமும்,

ஐந்தில்: அஞ்செழுத்தும், புலனும், பூதங்களும், மலங்களும்,

ஆறில்: சமயமும், வண்டின் காலும்,

ஏழில்: உலகமும்,

எட்டில்: குணமும், சித்தியும்,

ஒன்பதில்: உடலில் உள்ள வாயில்களும்,

பத்தில்: பொறி - புலனும், திசையும்,

இருபத்தொன்றில்: உலகும், சுற்றமும்,

முப்பத்து மூன்றில்: தேவர்களும்,

அறுபத்து நான்கில்: இயக்கிமாரும்,

ஆயிரத்தில்: இறைவன் பெயரும்,

கோடியில்: அண்டங்களும், தேவர்களும்,

எண்ணிலாதனவாக: இந்திரரும், சித்திகளும், வானவரும், பிரமரும்.

"பல" என்பதில்: அறமும், உயிரும், குணமும், சமயங்களும்—கூறப்பட்டுள.

## 110. தோத்திரம் [123]

இருக்கு, தோத்திரம் ஓதுவதாகக் கூறப்பட்டுள்ளது.

## 111. தோத்திர வகைகளும், வாழ்த்தும [124]

### 1. போற்றி என வரும் துதிகள்

இவை ஒளிநெறியில் அகராதி முறைப்படி 'அஞ்சே லென்றிங் கருளாய் போற்றி'' முதல் ''வேதி போற்றி'' வரையில் 255 போற்றிகள் காட்டப்பட்டுள.

அதுவன்றி, "அண்ணு போற்றி" முதல் "சயசய "போற்றி வரை அருச்சனைக்கு உரியனவாக 108 போற்றிகள் தனியாகக் காட்டப்பட்டுள.

இவையன்றி, இறைவனுடைய உறைவிடங்களைத் (தலங்களைக்) குறிப்பனவாக "அண்ணுமலையெம் அண்ணு போற்றி" முதல் "எந்நாட்டாவர்க்கும் இறைவா போற்றி" வரையில் 28 போற்றிகள் காட்டப்பட்டுள.

மேற்கூறியவை திருவாசகத்தில் 1-(11-16); 3-(106-108), (119-121); 4 (86-225); 5-1; 20-1; 23-6; 27-2 பாடற் பகுதிகளிலும், போற்றிப் பாட்டாக உள்ள 5-97, 100; 7-20 பாடல்களிலும். போற்றிப் பதிகமாக உள்ள 5-(61-70) பாடல்களிலும் காணக் கிடைக்கும்.

### 2. 'காண்க' என வரும் துதிகள் 3-(29-65.)

"அணுத்தருந் தன்மையில் ஐயோன் காண்க" (3-45) என்பது போல 38 "காண்க" உள்ளன.

### 3. வெல்க எனவரும் துதிகள் 1-(6-10)

"கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க" (1-9) என்பது போல 5 'வெல்க' உள்ளன.

### 4. வாழ்க எனவரும் துதிகள்
### 1(1-5 ; 3-(95-105)

"அச்சந்தவிர்த்த சேவகன் வாழ்க" (3-98) என்பது போல 16 'வாழ்க' உள்ளன.

## 112. நகரலக்ஷணம் [125]

கொடி, கோயில், தேர், மதில், மாளிகை, வீதியில் சிவபஜனை கூறப்பட்டுள.

**கொடி :-** ஏற்றுவது ஒரு மங்கலச் செயல்.

**கோயில் :** உத்தரகோசமங்கைக் கோயிலும்; திருப் பெருந்துறைத் தேரும்; திருவாரூர், இலங்கை, தில்லை, திருப்பெருந்துறை தலங்களில் உள்ள மதிலும்—கூறப் பட்டுள.

திருவாரூரிலும், இலங்கையிலும் "ஓங்கு மதில்", தில்லையில் "தடமார் மதில்", திருப்பெருந்துறையில் "தீட்டார் மதில்", இருந்ததாகக் கூறப்பட்டுள.

**மாட மாளிகை :** "இடவை" என்னும் தலத்தில் 'கோல மணி மாடம்' விளங்கினதாகவும், உத்தரகோச மங்கையில் "நீலமணி மாடம்", 'மேகம் தோய் மாடம்' 'மின்னேறு மாடமாளிகை 'நிலவினதாகவும் கூறப்பட்டுள.'

**புனிதத் தன்மை :** உத்தரகோசமங்கையில் சீலம் பெரிதும் விளங்கினதாகக் கூறப்பட்டுள்ளது.

**சிவபஜனை :** சிவபிரானுடைய திருவடியை வாழ்த்தும் வாழ்த்தொலி (திருவண்ணாமலை) வீதியில் பலமாய்க் கேட்கும்.

## 113. நகைகள்—அணிகலம் [126]

பொது : அணி, இழை, கலன், பூண்.

சிறப்பு : கங்கணம், கழல், குண்டலம், குழை, சிலம்பு, தொடி, தோடு, பாடகம், மாலை (முத்துநல் தாமம்) மேகலை, வளை.

வளை - குருகு, கைவளை, கோல்வளை, சங்கம், சூடகம், தொக்கவளை, புஞ்சமார் வெள்வளை, வண்டு (கைவளை), பெய்வளை, வரிவளை, வெள்வளை-இவை வளையைக் குறிக்கும்.

## 114. நரகம் [128]

அருநரகம், கும்பி, (கும்பீ பாகம் என்னும் நரகம்), கொடுமா நரகம், பிறப்பென்னும் அருநரகு, முரணுறு நரகு—என நரகம் விளக்கப்பட்டுள்ளது.

நரகத்தில் விழுதற்குக் காரணம் இந்திரிய வய மயக்கம்.

## 115. நாகரிக நிலை [129]

1. படுக்கை : படுக்கையில் மலர் விரிப்பு.

2. பொய்கையில் நீராடும் போது இறைவனைப்பாடிப் புகழ்தல் மணிவாசகர் காலத்தில் மாதர்களின் பழக்கத்தில் இருந்தது.

## 116. நாடு—நாட்டவர்—தேசம்—தீவு [130]

(1) இலங்கை

கடல் சூழ்ந்தது! ஓங்கும் மதில்களை உடையது

(2) தீவு

தேவூரின் தென்பால் ஒரு தீவு இருந்தது.

(3) தேசம்

தேசம் எல்லாம் 'காஞ்சி (கச்சி) திரு ஏகம்பர் கோயிலை'ப் புகழ்ந்தன.

(4) நாடு

அண்டர் நாடு, உம்பர் நாடு, குட நாடு, தென்னாடு, பாண்டி நாடு, மலை நாடு, வான நாடு கூறப்பட்டுள.

குதிரையைக் கொண்டு குட நாடு அதன் மிசை பெருமான் எழுந்தருளினதாகக் கூறப்பட்டுள்ளது.

பாண்டி நாடு - தென்பாண்டி நாடு என்றும், தண்ணார் தமிழ் அளிக்கும் தண் பாண்டி நாடு என்றும், தென்னன் நன்னாடு என்றும், பாண்டி நன்னாடு என்றும், கூறப்பட்டுள்ளது. பாண்டி நாடே சிவபிரானுடைய பழம் பதி.

**நாட்டவர்:** தென்னாடுடைய சிவபிரான் எந்நாட்டவர்க்கும் இறைவன். சிவபிரானுடைய நாடு தென் பாண்டி நாடு.

## 117. நாயன்மார் [131]

(1) கண்ணப்பர்

பொருளைக் கொண்டு செய்கின்ற பூசைபோல் சிறந்து விளங்கும்படியாக, செருப்புக்கால், வாய்கலசம், ஊன் அமுதம் இவைகளைக்கொண்டு விருப்பமுடன் வேடராகிய கண்ணப்பர் செய்த பூசையை அவருடைய பெருமை விளங்கும்படி, தமது திருமேனி குளிரும்படி, பெருமான் ஏற்று அவருக்கு (கண்ணப்பருக்கு) அருள்புரிந்தார்.

(2) சண்டேசுரர்

குற்றம் இல்லாத பிரமசாரி ஆகிய (சண்டேசுரர்) தமது சிவபூசையைச் சிதைத்த தம் தந்தையாகிய வேதியருடைய இரண்டு கால்களையும் வெட்ட, அந்தப் பாதகமே தேவர்கள் தொழும்படியான புண்ணியச் செயலாக இறைவன் கொண்டு அவருக்கு (சண்டேசுரருக்கு) அருள் புரிந்தார்.

## 118. நிதி [132]

அருள் நிதி, வைத்த நிதி—கூறப்பட்டுள.

## 119. நீதி வாக்கியம்—பழமொழிகள் முதலிய [135]

(1) பழமொழிகள்

அழல் உறு மெழுகு, ஆள்வார் இலி மாடு, ஆனை வெம்போரிற் குறுந்தூறு என (புலனால் அலைப்புண்டு), இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பு ஒத்து, உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம், ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்து, எங்கெழிலென் ஞாயிறு எமக்கு, எட்டினோ டிரண்டும் அறியேனை, எள்ளும் எண்ணெயும் போல, எறும்பிடை நாங்கூழென (புலனால் அரிப்புண்டு), தடக் கையின் நெல்லிக்கனி என, தருக்கித் தலையால் நடந்து, தினையின் பாகமும், நாய்க்குத் தவிசு இட்டு, பசு மரத் தாணி அறைந்தாற் போல, பலாப் பழத்து ஈ, பள்ளந் தாழுறுபுனல், மத்திடு தயிராகி, வலைத்தலைமான் அன்ன, வெள்ளத்துள் நா வற்றி யாங்கு, என்பன போன்ற பழமொழிகள் உள்ளன.

(2) நீதி மொழிகள்

அவனருளாலே அவன் தாள் வணங்கி, இருந்தேன் நோய்க்கு விருந்தாயே, கல்நார் உரித்தென்ன, கற்றாமனம் எனக் கதறி, கொடிறும் பேதையும் கொண்டது விடா, கொம்பர் இல்லாக் கொடி போல, தாயிற் பெரிதும் தயா வுடைய பெருமான், நாடவர் பழித்துரை பூணதுவாக, நகமின்றி விளாக்கைத்து, நுந்து கன்றாய் இங்கிருந்து, பட்டி மண்டபம் ஏற்றினை எட்டினோடிரண்டும் அறியேனை, பாவிடையாடு குழல் போல, பிழைத்தவை பொறுக்கை எல்லாம் பெரியவர் கடமை, பிறிவினை அறியா நிழலதுபோல, மழக்கை இலங்கு பொற்கிண்ணம், யான் எனதென்று அவர் அவரைக் கூத்தாட்டுவானாகி, யானை முதலா எறும் பீறாய, வன்பராய் முருடொக்கும், என்பன போன்ற நீதி மொழிகள் ஒளிநெறியிற் காணலாகும்.

## 120. நீர் நிலைகள், ஆறு முதலியன [136]

[கங்கை தனித்தலைப்பு 4-55 பார்க்க.]

ஆறு, குட்டம் (மடு), குளம், குளவாய், சுனை, தடம், நீர், *பண், புனல், பொய்கை, மடு, இவை நீரையும், நீர் நிலைகளையும் குறிப்பன.

அன்பெனும் ஆறு, கேதக்குட்டம் என்னும் சொற்றொடர்கள் ஆளப்பட்டுள.

## 121. நெஞ்சம்—மனம்—சித்தம் உள்ளம்—உணர்வு முதலிய [139]

அகம், உணர்வு, உள், உள்ளம், உளம், சித்தம், சிந்தனை, சிந்தை, நெஞ்சம், நெஞ்சு, மனம் இவை ஆளப்பட்டுள.

உள்ளம் : அள்ளூறுள்ளம், உருகா உள்ளம், உருகிப் பெருகும் உள்ளம், பாவிடை யாடுகுழல் போற் கரந்து பரந்ததுள்ளம்,—எனவும்.

சித்தம் : சித்தம் சிவமாக்கி, சித்தவிகாரக் கலக்கம்—எனவும்,

சிந்தனை : சிந்தனைக்கரிய சிவம், சிந்தனை நின் தனக்காக்கி, எனவும்,

சிந்தை : சீர்உறு சிந்தை, களிவந்து சிந்தை, திணியார் மூங்கிற் சிந்தை, தேன் புரையும் சிந்தை—எனவும்,

நெஞ்சம்—நெஞ்சு : இருப்பு நெஞ்சம், கல்நெஞ்சு, பாழ் நெஞ்சு, பிண நெஞ்சு, மட நெஞ்சு, வன்னெஞ்சம், வேட்ட நெஞ்சு—எனவும்.

---

* பண் : நீர்நிலை. "பண்கவர் செய் பட்டீசரம்"—சம்பந்தர்-3-73-5

**மனம் :** அழுக்கு மனம், அன்பாம் மனம், இரும்பு தருமனம், கல்மனம், கற்றாவின் மனம், செம்மை மனம், பழுத்தமனம், மத்தமனம், மருளார் மனம், விலங்கு மனம். எனவும் ஆட்சிதரப் பெற்றுள்ளது.

## 122. நெறி [141]

உய்யு நெறி, கயிலைபுகு நெறி, சிறு நெறிகள், தூய நெறி, நன்னெறி, பத்தி நெறி, பெருநெறி, பொய்ந்நெறி, முத்தி நெறி, மெய்ந்நெறி, வாரா உலக நெறி—என 'நெறி' என்னும் சொல் ஆட்சி தரப் பெற்றுள்ளது.

கடவுளை "நெறியே போற்றி!" என விளித் துள்ளார் மணிவாசகர் ;

## 123. நோய்—பிணி—மூப்பு [142]

நோய்க்கு விருந்து, கொடுவினை நோய், பண்டைக் கொடுவினை நோய், பிணி, மூப்பு, பிறவிப்பிணி, வினை நோய், வேட்கை நோய் என்னும் சொற்றொடர்களில் நோய், பிணி, மூப்பு என்னும் சொற்கள் ஆளப்பட்டுள.

## 124. பசுபாசம் [143]

இரும் பாசம், பசுபாசம், சுற்றமென்னும் தொல் பசுக் குழாங்கள், பத்திமையும் பரிசுமில்லாப் பசு பாசம், பாசம் என்னும் தாழ், பாசவினை, எனப் 'பசு, பாசம்' என்னும் சொற்கள் ஆளப்பட்டுள.

## 125. பஞ்ச பூதங்கள் [144]

### 1. மண்

**மண்,** மண்ணின் திண்மை, இறைவன் மண்ணிற் கடினத்தை வைத்துள்ளார்.

நிலம்

இரு நிலம், திணி நிலம், மா நிலம்—என ஆட்சி தரப் பெற்றுள்ளது.

பூமி

அவனி, குவலயம், சகம், ஞாலம், தரணி, பார், புவனம், புவனி, புனம், பூமி, வையகம், வையம்—என்னும் சொற்களால் பூமி குறிக்கப்பட்டுள்ளது.

பெருமான் பாரிடை ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் எனப்படும்—ஐந்து தன்மையராய் விரிந்துள்ளார்.

## 2. நீர்

அப்பு, அம், கம், நீர், புனல், என்பன நீரைக் குறிக்கும். இவற்றுள் நீர்—அலைநீர், சிறைபெறு நீர், தண்ணீர், தூநீர், எனவும்; புனல்—அலம்பார் புனல், சீதப்புனல், பூம்புனல், எனவும்; விளக்கப்பட்டுளது. பெருமான் நீரிடை ஓசை, ஊறு, ஒளி, சுவை எனப் படும் நான்கு தன்மையுடன் விளங்குகின்றார். பெருமான் நீரில் இன்சுவையை வைத்துள்ளார்.

## 3. தீ

அங்கி, அழல், அனல், எரி, கனல், தழல், தீ, நெருப்பு என்னும் சொற்களால் தீ குறிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் அழல், ஆரழல், முழங்கழல் எனவும்; அனல் - வெள்ளனல் எனவும்; எரி – வாளுலாம் எரி எனவும், தழல் - ஒண்தழல், கடுந்தழல், செந்தழல், மூரித்தழல், வான்தழல், வியன் தழல் எனவும்; தீ - அருட்பெருந்தீ, சுடுதீ, செந்தீ, திண்திறல் தீ எனவும்,—விளக்கம் தரப் பட்டுளது.

பெருமான் நினையப் பிறருக்கு அரிய நெருப்பு; நீண்ட மாலும், பிரமனும் அஞ்சும்படியாக நீண்ட நெருப்பு; ஓசை, ஊறு, ஒளி எனப்படும் மூன்று தன்மையுடன் தீயில் விளங்குகின்றார். தீயில் வெம்மையை வைத்துள்ளார்.

### 4. காற்று

உயிர், கால், காற்று, மாருதம், வளி என்னும் சொற்கள் காற்றைக் குறிக்கும். இவற்றுள் கால்—ஊழிதரு கால், மேதகு கால் எனவும், மாருதம்—சண்ட மாருதம், சூறை மாருதம் எனவும் விளக்கம் தரப் பெற்றுள்ளது.

காற்றினிடைப் பெருமான் ஓசை, ஊறு என்னும் இரண்டு தன்மையுடன் விளங்குகின்றார். காற்றில் கிளர்ச்சி வேகத்தைப் பெருமான் வைத்துள்ளார்.

### 5. வான்

அந்தரம், அம்பரம், ஆகாசம், வான், வானம், விசும்பு, விண், வெளி,—என வான் குறிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் வான்—பொய்தீர் வான் எனவும்; விசும்பு—நீள் விசும்பு எனவும்; விண்—பிறங்கு ஒளிசேர் விண்—எனவும் விளக்கம் தரப்பட்டுள்ளது.

பெருமான் வானில் எல்லாவற்றுக்கும் இடம் கொடுத்துக் கலந்து நிற்கின்றார்.

'ஓசை' என்னும் ஒரு தன்மையுடன் இறைவன் வானில் விளங்குகின்றான்.

பெருமான் நிலம், நீர், தீ, காற்று, வான் எனப்படும் ஐம்பூதங்களும் ஆனவர்.

## 126. படை, ஆயுதம், சேனை [145]

['சிவபிரான்படை' என்னும் தலைப்பு I—26 பார்க்க.]

அம்பு, ஆழி, கழுக்கடை, சிலை(வில்), வாள், வாளி, வேல், இவை வந்துள்ளன. இவற்றுள்ள வாள்—அறிவொண்கதிர் வாள், ஞான வாள் எனவும்; வேல்—அயில்வேல், சினவேல், போரார் வேல், மூஇலைவேல், வன்புலால்வேல் எனவும் விளக்கப்பட்டுள.

படை சேனை என்னும் பொருளில்—அல்லற்படை பூதப்படை, மாயப்படை வந்துள.

## 127. படையெழுச்சி (சேனை) [146]

அல்லற்படை வாராதிருக்க, அண்டர்நாடு நாம் ஆள, மணிவாசகர் பின்வருமாறு அணிவகுக்கின்றார். சித்தர்கள் பின் அணியாகவும், யோகிகள் நடு அணியாகவும், பக்தர்கள் பக்க அணியாகவும், தொண்டர்கள் முன் அணியாகவும், செல்லவேண்டுமாம்.

மாயப்படை வாராதிருக்க, பெருமானுடைய நாதப் பறை அறையவேண்டும். மதிவெண் குடையை எடுத்துப் பிடிக்கவேண்டும். திருநீறு என்னும் கவசத்தை அணிய வேண்டும்; இங்ஙனம் செய்தால் வானிலுள்ள இன்பஊரை நாம் கைப்பற்ற முடியும் என்கிறார் மணிவாசகர்.

## 128. பத்தி-பத்திமை [147]

[‘பத்திநிலை-மெய்ப்பாடு’ என்னும் தலைப்பும் 129 பார்க்க]

உள்ளம் கசிந்து, தேடும் பொருளும் சிவன் கழலே எனத் தெளிந்து, உடலும் உயிரும் ஆனந்தம் மேலிட்டு உச்சநிலை அடைதல்.

2. எம்பிரான்! என்னுடைய அப்பன்—என்றென்று தொழுத கையினராய்க் கண்களில் நீர் மல்குதல்.

3. இறைவனுடைய மலர்ப் பாதத்தை மனத்தில் வைத்து, உள்ளுருகத், தெருவு தோறும் மிக அலறிச் சென்று, சிவபெருமான் என்று ஏத்தி அவருடைய பரங் கருணைத் தடங்கடலிற் படிதல்—இவையே பக்திக்கு அடையாளம்.

## 129. பத்திநிலை மெய்ப்பாடு [148]

அகம் குழைதல், மெய் விதிர்ப்பு உறல், சகம், பேய் என்று தம்மைச் சிரித்தாலும் மானம் ஒழிந்து நாட்டினர் பழித்துரையைப் பூணதுவாகக் கொண்டு, கோணுதல் இல்லாது இருத்தல், மலர் தூவி வாய்விட்டலறுதல், ஆகம்

நடுக்குறுதல், ஆடுதல், அலறுதல், பாடுதல், பரவுதல், உள்ளம் கசிந்து கடலென மறுகி அகம் குழைதல், உரை தடுமாறுதல், உரோமம் சிலிர்த்தல், உள்ளம் நெகிழ்தல், ஊடி, ஊடி உள்ளுருகி ஆடி ஆடி ஆனந்தம் அடைதல், கண்களில் நீர் ஆறுகப் பெருகுதல், கரமலர் மொட்டித்து இருதயம் மலர்தல், கற்றுமனம் எனக் கதறுதல், பதறுதல், குனித்தல், சிரித்தல், களித்தல், சிவன் எம்பெருமான் என்று ஏத்தி ஊற்று மணல்போல நெக்கு நெக்கு உள்ளே உருகி, ஓலம் இட்டுப் போற்றி நிற்றல், தழலது கண்ட மெழுகதுபோல உளம் உருகி அழுது உடல் கம்பித்தல், பெருமானுடைய நாமத்தைப் பிதற்றுதல், கண்ணீர் மல்கப் பெருமானை வாழ்த்தி வாய் குழறுதல், பெருமானைத் தவிர வேறு யாரையும் பணியாது இருத்தல், மெய் (உடலை) மறத்தல், விம்மி விம்மி அழுதல்.

## 130. பதவி—பதம் [149]

ஈறிலாப் பதங்கள், சிவபதம், பாண்டிப் பெருப்பதம், மெய்ப்பதம் கூறப்பட்டுள. இவற்றுள் சிவபதம்—செம்மையே ஆய சிவபதம் என்றும், தித்திக்கும் சிவபதம் என்றும், அமுதாம் சிவபதம் என்றும் கூறப்பட்டுள்ளது.

## 131. பதிகத் தொடக்கம் [150]

பதிகத் தொடக்கத்திற் சிவபெருமானைப் பற்றியும், தம்மை (மணிவாசகரைப்) பற்றியும், பார்வதி, திருமால் இவர்களைப்பற்றியும் வரும் பதிகங்கள் அதிகமாக உள்ளன.

## 132. பதிக பாகுபாடு-இயற்றமிழ் வழியும், சீர்வழியும் [151, 152]

வெண்பா, கலிவெண்பா, ஆசிரியப்பா, கட்டளைக் கலித்துறை, கொச்சகக் கலிப்பா, கலிவிருத்தம், கலிநிலைத் துறை, தாழிசை, 4-சீர். 5-சீர், 6-சீர், 7-சீர், 8-சீர், 12-சீர் விருத்தங்கள் ஆளப்பட்டுள.

## 133. பதிக முடிவு [153]

பாடல்தோறும் வரும் சொல்லோ சொற்றொடரோ பதிக முடிவில் வருவனவாக 30 பதிகங்களுக்கு மேல் உள்ளன.

## 134. பதிகமும் தலமும் [154]

பதிகத்தில் பாடல் தோறும் அல்லது பெரும்பாலும் சொல்லப்பட்ட தலங்கள்:— (1) திரு உத்தர கோசமங்கை 6, 16 எண்ணுள்ள இரண்டு பதிகங்களிலும், (2) திருப் பெருந்துறை 8, 19, 20, 22, 23, 28, 29, 34, 43, 47, 48 எண்ணுள்ள பதினொரு பதிகங்களிலும், (3) தில்லை 21, 31, 40, எண்ணுள்ள மூன்று பதிகங்களிலும் (4) திருக்கழுக் குன்றம் 30 என்னும் எண்ணுள்ள ஒரு பதிகத்திலும் சொல்லப்பட்டுள.

## 135. பதிக விசேடங்கள் [155]

அடைக்கலப் பதிகம், அந்தாதித் தொடைப் பதிகம், ஆற்றுப் படைப் பதிகம், தசாங்கம் கூறும் பதிகம், சிவ பராக்கிரமப் பதிகம், திருப்பள்ளியெழுச்சிப் பதிகம், 'புயங் கன்'எனப் பாடல்தோறும் வரும் பதிகம், மகளிர் விளை யாடல்களைக்கூறும் பதிகம், மணிவாசகர் "தமக்குத் தலைவர் யார்" என்று கூறும் பதிகம், மாதர் மையலைப் பற்றி வரும் பதிகம், முறையீட்டுப் பதிகம், விளி நிறைந்த பதிகம், வினா விடைப் பதிகம், வேண்டுகோட் பதிகம், ஆகிய பதிகங்கள் உள.

## 136, பழக்க வழக்கங்கள் [156]

அறுகு எடுத்தல் மங்களம் (முழுக்கும்போது), கரங் குவித்துச் சிரங்குவித்து வழிபடுதல், காலையில் (பள்ளி யெழுச்சியின்போது) வாத்தியங்களுடன் கடவுளை வணங்கு தல், பெண்கள் (காலையில்) மார்கழி மாதத்தில் நீராடுதல்— இவை மணிவாசகர் காலத்திற் பழக்கவழக்கமாக இருந்தன.

## 137. பழங்கள் [157]

(கன்னல் கனி), கொவ்வை (க்கனி), (செங்கனி), நெல்லிக்கனி, மதுரக் கனி, மென்கனி, தேன்பழம், பலாப் பழம், புளியம் பழம், வாழைப் பழம் - என்பன வந்துள.

## 138 பாடல்—பாட்டு [158]

ஆண்டுகொண்ட நேர்பாடல், தனிப் பெரியோன் சீர்பாடல், தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட புண்பாடல், பண்களி கூர்தருபாடல், பண் சுமந்த பாடல்; திருவடிக் கீழ்ச் சொல்லிய பாட்டு - எனப் பாடல், பாட்டு என்னும் சொற்கள் ஆளப் பட்டுள.

## 139. பாடல்—கரந்துறை பாடல்கள் [159]

பதிகம் I எண்ணுள்ளதிலிருந்து நான்கு பாடல்களும், பதிகம் ஐந்திலிருந்து இரண்டு பாடல்களும், ஆறிலிருந்து ஒரு பாடலும், [ஏழிலிருந்து இருபது பாடல்கள் வரும் என்பதும், பதிகம் எட்டிலிருந்து பதினெட்டுப் பாடல்கள் வரும் என்பதும்], பதிகம் பன்னிரண்டிலிருந்து ஒரு பாடலும், பதிகம் பதினாறிலிருந்து இரண்டு பாடல்களும், பதிகம் பதினேழிலிருந்து மூன்று பாடல்களும், பதிகம் பத்தொன்பதிலிருந்து நான்கு பாடல்களும், பதிகம் இருபத்தேழிலிருந்து இரண்டு பாடல்களும், பதிகம் இருபத்தெட்டிலிருந்து ஒரு பாடலும், பதிகம் முப்பத்து மூன்றிலிருந்து ஒரு பாடலும், நாற்பத்தேழிலிருந்து பத்துப் பாடல்களும், பதிகம் நாற்பத்தெட்டிலிருந்து நான்கு பாடல்களும், பதிகம் நாற்பத் தொன்பதிலிருந்து இரண்டு பாடல்களும் கரந்து உறைவனவாக ஒளிநெறியில் எடுத்துக் காட்டப்பட்டுள.

ஆயினும் இங்கு உதாரணமாக 27ஆம் பதிகம் 10ஆம் பாடலிற் கரந்துள்ள பாடலைக் காட்டுவாம்.

“காப்பாய் படைப்பாய் கரப்பாய் முழுதும்
மூப்பாய் மூவா முதலாய நின்ற
பார்ப்பானே எம்பரமா என்று
பூப்போ தணைவ தென்று கொல்லோ.”

## 140. பாடல்—சுவை வகை [161]

அவலச் சுவை, அற்புதச் சுவை, அருவருப்புச் சுவை, இன்பச் சுவை, (சிற்றின்பம், பேரின்பம்), கருணைச் சுவை, கோபச் சுவை, சாந்தச்சுவை, நகைச் சுவை, பயச் சுவை, வியப்பு - மகிழ்ச்சிச் சுவை, வீரச்சவை, - இச்சுவை உள்ள பாடல்கள் திருவாசகத்திற் காணக்கிடக்கின்றன. அவற்றுள் சில ஒளிநெறியிற் காட்டப்பட்டுள.

உதாரணமாக - 'யாமார்க்குங் குடியல்லோம் யாதும் அஞ்சோம்' என்பது வீரச்சுவையின் பாற்படும்.

## 141. பாடல் விசேடங்கள் [162]

உருவகம் நிறைந்த பாட்டு, எதிர்மொழிகள் நிறைந்த பாட்டு, ஐந்தெழுத்தின் சிறப்பைக் கூறும் பாட்டு, வஞ்சப் புகழ்ச்சிப் பாட்டு, நெஞ்சுக்கு உபதேசப் பாட்டு, மூக்கரணங் களாலும் (மனம், வாக்கு, காயம்) வழிபடுதல் வரும் பாடல்கள் - முதலிய ஒளிநெறியிற் காட்டப்பட்டுள.

இவையன்றி, "எம்பிரான் வருக, எம்பிரான் வருக," எனவரும் பாட்டு, 'என்கோ, என்கோ' என வரும் பாட்டு, 'போற்றி! போற்றி' எனவரும் பாட்டு, 'வருக! வருக!' எனவரும் பாட்டு, "வேண்டும் வேண்டும்" எனவரும் பாட்டு, 'வேண்டேன் வேண்டேன்' - எனவரும் பாட்டு— இவை போல்வன ஒளிநெறியிற் காட்டப்பட்டுள.

## 142. பார்வதி [163]

### (I) திருநாமம்

(i) பொது: அணங்கு, உடையாள், ஏழை, கோதை, கோமளம், திரு, தேவி, தையல், நல்லாள், பிராட்டி, பெண், பெருந்தேவி, பேதை, மாது—முதலிய.

(ii) சிறப்பு: உமை, பார்ப்பதி, மலைமகள், இவற்றுள் மலைமகள் என்னும் காரணத்தால் ,வந்துள்ள

பெயர்கள் - (1) இமவான் மகள், (2) பருவரை மங்கை, (3) மலையரையன் பொற்பாவை, (4) வரை மங்கை முதலிய.

### (II) பார்வதி—அங்க லட்சணங்கள் முதலிய

(1) அல்குல்

பட அரவு போன்றது.

(2) அழகு

கோல அழகுள்ளவள்.

(3) இடை

கொடி போன்றது, சிறியது, துடி போன்றது.

(4) உருவம்

கொம்பு அனையாள்.

(5) கண்

விசாலமானது, மை பூசியது, கரியது, கயல்மீன், கடல், காவி, குவளை, மாவடு வகிர், மான், வாள், வேல், போன்றது.

(6) கூந்தல்

நறுமணம் உள்ளது, சுருண்டுள்ளது, நீண்டுள்ளது, மலர் சூடியது, குராமலர் சூடியது,

(7) கொங்கை (முலை)

இளமை கொண்டது, குவிந்து உள்ளது, தேமல் படர்ந்துள்ளது, பருமை கொண்டது, பூண் அணிந்தது, கச்சு அணிந்தது, கோங்க மலர் போன்றது, செப்புப் போன்றது, ஒன்றோடொன்று ஒத்துள்ளது.

(8) திருவடி

பஞ்சு போன்றது, மென்மை வாய்ந்தது, பாடகம் அணிந்தது.

(9) தோள்

வேய் (மூங்கில் போன்றது), தோள்வளை பூண்டது.

(10) நுதல்—(நெற்றி)

ஒளி வாய்ந்தது,

(11) பல் (நகை)

வெண்மையானது.

(12) புருவம்

அழகியது

(13) மொழி

அழகுள்ளது, கிளியின் பேச்சு ஒத்தது, பண் போன்றது, பால் ஒத்தது.

(14) வாய்—இதழ்

சிவந்தது. கொவ்வைக் (கனி) போன்றது, முருக்கம் பூப்போலச் சிவந்த நிறத்தைக் கொண்டது.

(15) விரல்

பந்து பூண்டது.

### (III) பார்வதி அணிவன

(1) ஆடை

துகில்.

(2) கையில் ஏந்துவது

பைங்கிளி.

(3) சாந்து

பசுஞ் சாந்து.

(4) நகைகள்

சுருள் தோடு, பாடகம், பொன்னஞ் சிலம்பு, வளை (கோல் வளை, தொக்கவளை.)

(IV) புகழ்

குற்றமற்ற பழைமையான புகழை உடையவள்.

## 143. பார்வதி தேவியும், சிவனும், அடியார்களும் [164]

பிரானும் பிராட்டியும் அடியார்களுடைய பழைய இல்லங்கள் தோறும் எழுந்தருள்வார்கள்.

## 144. பால் [165]

பால் மொழி, தேனொடு பால் கட்டி, பாலூறு தேன் வாய், பாலில் நெய், பிரை சேர்பால், என்னும் சொற்றொடர்களில் பால் வந்துள்ளது.

## 145. பிணக்கு [166]

பெருமானுக்குப் பிணக்கு இல்லை. "பெண், அலி, ஆண்" என்பதில் பால் பிணக்கும், "நாம்" என்பதில் ஆணவப் பிணக்கும் வரும்.

## 146. பிணம் [167]

பிணநெஞ்சு, முடையார் பிணம் (நாற்றம் கொண்ட பிணம்) என்னும் சொற்றொடர்களில் "பிணம்" என்னும் சொல் வந்துள்ளது.

## 147. பிரமன் [169]

1. அயன், அரைவன், நான்முகன், சதுர்முகன், திசைமுகன், படைப்போன், பிரமன், மறையோன், நான்மறையோன், வேதியன் இவை பிரமனைக் குறிக்கும்.

1. பிரமன் ஆசைப் படுதல்

இந்தப் பூமியில்தான் சிவபிரான் உயிர்கள் உய்யும் பொருட்டு வந்து ஆட்கொள்ளுகின்றார். அப்படிப்பட்ட

பூமியில் நான் போய்ப் பிறவாமல் காலத்தை வீணுகக் கழிக்கின்றேன் என்று நினைத்து இந்தப் பூமியில் வந்து பிறக்கப் பிரமதேவன் ஆசைப்படுகின்ருன்.

### 2. பிரமனுக்கு இறப்பு உண்டு

அன்று எழுந்த நஞ்சைச் சிவபெருமான் உண்டிரா விட்டால் அயன், மால் உள்ளிட்ட மேலான தேவர்கள் எல்லாம் இறந்து பட்டு இருப்பர்.

எத்தனையோ பிரமர்கள் இறந்துள்ளார்கள். மதி மயங்கி* யாம் பிரமனுடைய தலை ஓட்டில் பெருமான் பலி தேருவர்.

## 148. பிறப்பு இறப்பு [171]

பவம், பிறப்பு, பிறவி, பிறவு - இச்சொற்கள் பிறப்பைக் குறிக்கும்.

(1) பவம், பிறப்பு, பிறவி.

பவங்கள்—"பேரறியாத அநேக பவங்கள்" என்றும், பிறப்பு—"தொடர்ந்த பிறப்பு" "பிறந்த பிறப்பு" "பிறப் பென்னும் சுழி," "பிறப்பு முந்நீர்," "மறு பிறப்பு" "மாயப் பிறப்பு," "மானுடப் பிறப்பு", "மண்ணார்ந்த பிறப்பு," "மேலைப் பிறப்பு" என்றும், பிறவி—"அல்லற் பிறவி", "இடர்ப் பிறவி"—"எந்தம் பிறவி", "பிறவிக் காடு," "தொல் பிறவி". "பிறவி ஐவாய் அரவம்", "பிறவித் தாழ்" "பிறவித் துயர்", "பிறவிப் பகை", "பிறவிப் பிணி", "பிறவி வேர்", "வினைப்பிறவி" எனவும் விளக்கப்பட்டுள.

(2) பிறப்பு வகைகள்

புல், பூடு, புழு, மரம், மிருகம், பறவை, பாம்பு, கல், மனிதன், பேய், கணங்கள், அசுரர், முனிவர், தேவர் முதலிய.

---

*மதி மயங்கி—இது தனது மதி மயங்கி இறைவனைப் பழித்த பிரமனைக் குறிக்கும்.

(3) இறப்பு

இறப்பு, இறவு :—இச்சொற்கள் இறப்பைக் குறிக்கும்.

(4) பிறப்பிறப்பு

'சாதல் பிறப்பு என்னும் பெரிய சுழி', * கறங்கோலை போல்வதோர் காயப் பிறப்போடிறப்பு, துன்பமே விளைவிக்கும் பிறப்பிறப்பு—எனப் பிறப்பிறப்பு விளக்கப்பட்டுள.

பிறப்பு என்பது உலர்ந்து போகாதது. அறிதற்கு உரிய கருவிகளெல்லாம் பேரின்பமயமாகக் கண்டு போற்றுகின்ற அடியார்களுடைய பிறப்பு ஒழியும்: பெருமான் நம் முன் எதிர்ப்படுவாராயின் இந்தப் பூமியில் வந்து பிறக்கின்ற விதி நிகழாது. 'பிறப்புக்கு அஞ்சமாட்டேன்' என்கின்றார்—மணிவாசகர்; ஆயினும் 'இறப்புக்கு என் கடவேன் :—இறப்பை ஒழிக்க வழி யாது?' என முறையிடுகின்றார் அவர்.

## 149. புகழ் [172]

'புகழ் தனக்கு வேண்டாம்' என்கின்றார் மணிவாசகர். பெருமானைப் "புகழ்ச்சியைக் கடந்த போகமே!" என அழைக்கின்றார். தேவியைக் குற்றமிலாத பழைமையான புகழை உடையவள் என்றும் கூறியுள்ளார்.

## 150. பூசை (மலர்ப் பூசை) [173]

நல்ல மலரிட்டு இடைவிடாது இறைவனை வணங்க வேண்டும். ஐந்தெழுத்து ஓதிப் பணிந்து, அலர் தூவி அவரை ஏத்துதல் வேண்டும். பல மலர் பறித்துப் பூசனை புரிந்து போற்றுதல் வேண்டும். மொட்டு அறாத நறு மலர் தூவி இறைஞ்சுதல் வேண்டும். பொருட்பற்றிச் செய்கின்ற பூசனை போல் விளங்கிற்று (கண்ணப்பருடைய) செருப்புற்ற பூசனை.

---

* கறங்கோலை : ஓலைக் காற்றாடி.

## 151. பூதம்=பூதப்படை [174]

பூதப் படைகள் விண்ணில் உறைவன.

## 151.A பூமி [174A]

[தலைப்பு 125—3 பார்க்க.]

## 152. பேதம் [175]

பலவிதமாக வேறுபட்ட உலகாயதம் என்னும் பாம்பின் நஞ்சு தம்மைத் தாக்குதல் இல்லாத சிறந்த அறிவைப் பெருமான் தமக்கு அளித்தனர் என்று மணிவாசகர் கூறுகின்றார்.

## 153. பேய் [176]

பிறப்பு வகைகளில் பேய் ஒன்று; பெருமான் காட்டிடைப் பேயுடன் நடனம் ஆடுவர். உலகோர் தம்மைப் (மணிவாசகரைப்) பேய் என்று கூறிச் சிரிப்பர்.

## 154. பேய்த்தேர் [177]

பேய்த் தேரை (கானல் நீரைப்) பூக்கள் நிறைந்த பொய்கையென்று மருண்டு ஆசைப்படுவது பேதையின் குணமாகும்.

## 155. பொய் - பொய்ம்மை [178]

பொய் பேசிப் பொழுதைச் சுருக்கும் பொய்யன் தாம் என்று மணிவாசகர் தம்மைக் கூறுகின்றார். பெரியோர் ஒருவர் 'கண்டு கொள்' என்று, பெருமானே! தமது திருவடியைக் காட்டி 'உன்னைவிட்டுப் பிரியேன்' என்று அன்று அருளிய திருவருள் பொய்யோ? என முறையிடுகின்றார்.

தாமும் பொய்; தம் நெஞ்சும் பொய்; தம் அன்பும் பொய் என்கின்றார். பொய்யை நீக்கும் மெய்யர்

கடவுள். அவர் பொய்யர்க்குப் பொய்யர்; மெய்யர்க்கு மெய்யர்; பொய்யிலாத மெய்யர் அவர்.

உடலும் செல்வமும் பொய்யானவை; நிலைத்து நில்லா. "அன்பர்களே! நீங்கள் பொய்யிற் கிடந்து புரளாமல் பெருமானுடைய திருவடியிற் சேர ஒருப் படுமின்கள்; பொய்யைவிட்டுப் பெருமானுடைய திருவடியைச் சேரச் சமயம் வந்துவிட்டது போவோம் வாருங்கள்!' என்று மணிவாசகர் அடியார்களை அழைக்கின்றார். பொய்யான தேவர்கள் உண்டு. பொய்யர்க்கு மறுபிறப்பு உண்டு.

## 156. பொருள் [179]

[தலைப்பு (I–19-188; 51 பக்கம்) பார்க்க.]

அரும் பொருள், ஒண்பொருள், கலை நவின்ற பொருள், தேடும் பொருள், நான் மறையின் உட்பொருள், பரம்பொருள், பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள், பாட்டின் பொருள், பேசும் பொருள், மறையின் பொருள், மன்னுகலை துன்னு பொருள், முன்னைப் பழம்பொருள், வாழ் முதலாகிய பொருள், வான்பொருள், விழுப்பொருள், வேத விழுப்பொருள்— என்றெல்லாம் 'பொருள்' என்னும் சொல் ஆட்சி தரப் பெற்றுள்ளது.

நாம் தேட வேண்டிய பொருள் சிவன் கழலே எனவும், ஒரு பொருளாகத் தம்மை மதித்துப் பெருமான் ஆண்டார் எனவும் மணிவாசகர் கூறுகின்றார். பெருமான் முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருள்: அவர் 'வான்பொருள்', 'வேத விழுப்பொருள்.'

வினைக்கு ஈடாகிய இந்த உடலாகிய சிறுகுடிலை ஒரு மெய்ப்பொருள் என்று கருதிக் களிக்கின்றேன்—என மணிவாசகர் தம்மைப்பற்றிக் கூறுகின்றார்.

## 157. பொழிலும் சோலையும் [180]

[சோலை-தலைப்பு 90 A பார்க்க]

அணி பொழில்; கடிபொழில், செந்தார்ப்பொழில், திருந்து வார் பொழில், பூம் பொழில்; மது வளர் பொழில், வண்பொழில், வார் பொழில், வான் பொழில், விரி பொழில், —எனப் பொழிலும், கொந்தணவும் பொழிற் சோலை, தாதாடு பூஞ்சோலை, தெங்குதிரள் சோலை - தேன் பழச் சோலை, போதலர் சோலை, எனச் சோலையும் விளக்கப்பட்டுள.

## 158. பொன்-மணி, முத்து முதலிய நவரத்தினங்கள் [181]

(1) பவளம்

அம் பவளம், செந்துவர், செம்பவளம்.

(2) பொன்

அம்பொன், ஆடகம். சுண்ணப்பொன், செம்பொன், தூயபொன், நன்பொன்.

(3) மணி

அருமாமணி, ஏதாமணி, கொழுமணி, கோலமணி, சுடர்மாமணி, திருமாமணி, நன்மணி, நன்பொன்மணி பேச்சிறந்தமணி, பொல்லாமணி, மாசிலாமணி, மாமணி, மேதாமணி.

(4) மரகதக் குவாஅல்

(5) மாணிக்கம்

மாணிக்கத்தொளி

(6) முத்து

கொழுமணி (முத்து), தோளாமுத்து, நித்திலம், முத்தம், வெண்மணி.

(7) வயிரம்

துளங்கொளி வயிரம்

## 159. போகம் [182]

புகழ்ச்சியைக் கடந்த போகம், புங்கமான போகம், புணர்முலையார் போகம், எல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள். மாடுஞ் சுற்றமும் மற்றுள்ள போகமும்.

## 159. A [182A]

போற்றி, காண்க, வெல்க, வாழ்க, எனவரும் துதிகள்.

[தலைப்பு 111 பார்க்க]

## 160. மக்களைக் குறிப்பன [183]

[அடியார், அரசர், மறையோர், தனித் தலைப்பு பார்க்க.]

அகம் நெகாதவர், அயலார், அருந்தவம் முயல்வார், அருவராதவர், அலி, அளியிலாதவர், அறிவிலாதவர், அறுவகை சமயத்தறுவகையோர், அன்பர், அன்பிலா தவர், ஆணலாதவர், ஆத்தமானூர், ஆளானவர், ஆள லாதவர், இம்பர், இருநிலத்தோர், இன்னிசை வீணையர், உலகர், ஏதிலார், ஓராதார், கலைஞானிகள், கற்றூர், சமயவாதிகள், சிட்டர்கள், சிவபுரத்தார், செந்நாவலர், ஞாலம்பரவுவார், தழைப்பவர், தெளிந்தார், தேற்றம் இலாதவர், தொண்ட உழவர், நமர், நாட்டவர், பல் லோர், பாரோர், பித்த உலகர், பித்தர், பிறவிக்கு நல்லவர், பிறவிப் பிணிப்பட்டு மடங்கினர். புலவோர், புன்மையர், பூதலர், பெரியவர், பேதையர், பொய்யர், பொய்யிலா மெய்யர், மக்கள், மத்தர், மதுரையர், மலங்கழுவுவார், மனிதர், மாற்றூர், மானுடர், முத்தி நெறியறியாத மூர்க்கர், மெய்யர், யாழினர், விரவார், வெண்ணீறு அணிகிலாதவர்; பாதாளத்தார், புறத்தார்.

## 161. மங்கலப் பொருள்கள் [184]

அறுகு, எழிற்சுடர், கவரி *கற்பகம், காசு, காம்பு (பட்டாடை), சுந்தர நீறு, தீபம், தூபம், நிதி, பூமாலை, பொற்சுண்ணம், பொன், முத்துமாலை, முளைக் குடம் முதலிய பொருள்கள் மங்கலப்பொருள்கள்.

## 162. மத்தம்—உன் மத்தம் [185]

உன் மத்தன், மத்தக்களிறு, மத்தமனம், மத்தர்.

## 163. மரம், செடி, கொடி, வித்து முதலிய [186]

(1) அகில்

இது சிறந்த புகையுடையது.

(2) அறுகு, தாளி, அறுகு

தாளி அறுகு சிவபிரானுக்கு உகந்தது.

(3) ஆல்

(4) இத்தி (கல்லால மரம்)

(5) கரும்பு

(6) *கற்பகம்

'இந்திரன் கற்பகம்' இது தெய்வ விருக்ஷங்கள் ஐந்தினில் ஒன்று.

(7) குருந்தம்

(8) குறுந்தூறு

(9) கொடி (பூங்கொடி)

(10) கொம்பர் (கொம்பு)

(11) கொவ்வை

(12) கோங்கு

(13) சந்து (சந்தன மரம்)

(14) சுரை (தோளாச் சுரை)

(15) செடி

(16) தான்றி

(17) தெங்கு

---

* கற்பகம் - தென்னை.

(18) நச்சுமாமரம் (24) மரம்
(19) நெல்லி (25) மூங்கில்
(20) பராய் (26) வாழை
(21) பலா (27) விச்சு (வித்து)
(22) புல் (28) வேய்
(23) பூங்கொடி (29) வேர்

இவை தம்முள், மரம் என்பதில் - அடலி மரம், ஆற்றங்கரை மரம், நச்சுமா மரம், பசு மரம், மர இயல், மா மரம், வற்றல் மரம், என வருவன காண்கின்றோம். கொம்பு என்பதில் வஞ்சிக்கொம்பும்; வித்து என்பதில் அன்புவித்து, உணக்கிலாததோர்வித்து, பாதாளத்தார் வித்து, முதல் வித்து என வருவன காணலாம்.

## 164. மருள், மயக்கம் [187]

ஆறுகோடி மாயாசக்திகள் நம்மை மயக்குகின்றன. 'நான், எனது' என்னும் மயக்கம் நம்மைப் பீடிக்கின்றது. நமது பிறப்பு மாயப்பிறப்பு; நமது வாழ்க்கை மாய வாழ்க்கை. வஞ்சம் நிறைந்த ஐம்புலன்களும் மாறி மாறி நம்மை மயக்குகின்றன. மாய இருள் நம்மை மறைக்கின்றது. பெருமான் ஆனந்தமால் ஏற்றுவர், மாய இருளைக் கெடுப்பர், மரணம் பிறப்பு என்னும் இரண்டினால் உண்டாகும் மயக்கத்தை அறுப்பார்; 'யாம், எமது பாசம்,' என்னும் மாயைகளைப் போக்குவார். மனதில் உள்ள மலத்தை அறுப்பார். மூலமாகிய மும்மலங்களை அறுப்பார்.

பெருமான் அளித்த திரு அருளைத் தன் மருளினால் மறந்த வஞ்சன் தான் என்றும், வாழவேண்டிய வழி தெரியாத மருளன் தான் என்றும், மருள் கொண்ட தன் மனத்தின் மயக்கைத் தமது கண்நோக்கால் பெருமான் ஒழித்தனர் என்றும், தன்னை மூடிய மாய இருளைப் பெருமான் ஒழித்தனர் என்றும் மணிவாசகர் கூறுகின்றார்.

நமது மயக்கம் நீங்கவேண்டுமானால் பெருமானை நாம் வாழ்த்த வேண்டும்.

பிரமனும், திருமாலும், இறைவன்பால் மால் (ஆசை) கொள்வார்.

## 165. மலம்—அழுக்கு—குற்றம்—[188]

1. காலை மலம், சித்த மலம், பழமலம், மும்மலம், மலங்கள் ஐந்து, மூலமாகிய மும்மலம், கடலின் திரையது போல் வரு கலக்கம் மலம் என்றும், மலஞ்சோரும் ஒன்பது வாயில் என்றும்—மலம் என்னும் சொல் ஆட்சி பெற்றுள்ளது.

## 166. மலர் [189]

அரத்தம்

(செம்பரத்தம்)

அரும்பு

அல்லி

அலர்

ஆர்—(ஆத்தி) இது பெருமான் திருமேனியில் விளங்குவது.

கமலம்

(தாமரை பார்க்க) அங்கமலம், அல்லிக்கமலம், செங்கமலம், செழுக்கமலம், சேற்றிதழ்க் கமலம், தேனார் கமலம், நற்கமலம், நாதம் (வண்டுகளின் ரீங்காரம்) உடைய நற்கமலம், பூங்கமலம், மலர்க் கமலம் என வந்துள.

கழுநீர்

செங்கழுநீர், இன்னியற் செங்கழுநீர் வந்துள.

காந்தள்

இதன் பூ அஞ்சலி கூப்பிய கைபோல் விளங்கும்.

காவி

இது தேவியின் கண்களுக்கு உவமிக்கப்பட்டுள்ளது.

கிஞ்சுகம்

இது கிளியின் வாய்க்கு ஒப்பிடப்பட்டுள்ளது. (கிஞ்சுகம்—முருக்கம் பூ)

குரவு

(குராமலர்) இம் மலர் மாதர்கள் கூந்தலிற் சூடுவது.

குருந்தம்

இம்மலர் திருப்பெருந்துறைக் கோயில் மரத்து மல

குவளை (நீர்ப்பூ)

கூவிளம் (வில்வம்)

கொக்கிறகு

கொன்றை

தேனும், வண்டும் நிரம்பப் பெற்றது, மணம் உள்ளது பொன்னிறம் உள்ளது, வட்டம் ஆனது.

கோங்கு

இதன் மலர் மாதர்களின் கொங்கைக்கு ஒப்பிட படும்.

தளிர்

இளந்தளிர், செந்தளிர் கூறப்பட்டுள.

தாமரை

அழகுள்ளது. மாலைக்கு உரியது, தாள்உடையது செந்தாமரை, தாளதாமரை—என வந்துள.

தார்

(பூ அரும்பு)

தோன்றி

இது செங்காந்தள் (இது சிந்தாமணியில் சேவலின் சூட்டுக்கு உவமிக்கப்பட்டுள்ளது) மிக்க அழகும், ஒளியும் உள்ளது.

நீலம்

இது வயலிலும் மலரும்.

பங்கயம்

'தாமரை' பார்க்க.

பானல்

(கருங்குவளை) இது கருநிறத்தது.

புண்டரீகம்

'தாமரை' பார்க்க.

பூ

மணம் உடையது. வண்டு மொய்ப்பது.

போது

(மலர்) மணம் உடையது, கொத்தாக இருப்பது. கழற்போது, பைம்போது, பாதப்போது, பூப்போது எனப் 'போது' என்னும் சொல் ஆட்சி தரப்பெற்றுளது.

மடல்

(பூ இதழ்)

மத்தம்

(ஊமத்த மலர்)

மந்தாரம்

வாசனை உடையது. தேன் நிறைந்தது.

மலர்

இணைமலர், ஏய்ந்த மாமலர், ஒண்மலர், கடிமலர், கரமலர், கார்மலர், குவிமலர், செச்சை மலர், செம்பொன் மாமலர், செம்மலர், செய்யார் மலர், செழுமலர், சேயமா

மலர், தடமலர், தண்மலர், துணைமலர், தூய்மலர், தூயமா மலர், தேன்பாய்மலர், நல்ல மலர், நறுமலர், நன்மலர், நாட் கொண்ட நாண்மலர், நிறைமலர், பன்மலர், பாதமலர், பிணை மலர், புதுமலர், பொங்கு மா மலர், பொன்மலர், மட்டவிழ் மலர், மணிமலர், மருவார் மலர், மாமலர், மென்மலர், மொட்டறுமலர், வட்டமலர், வழுவிலா மலர், விரைமலர், வெண்மலர், வெறிமலர், வேனில் வேள்மலர்—எனவும்; மலர்க் கழல், மலர்த்தாள், மலர்ப்பாதம் எனவும்—'மலர்' என்னும் சொல் ஆட்சி தரப்பெற்றுள்ளது.

## 167. மலை [190]

### 1. போது

கல், குன்று, சிலை, மலை, வரை, விலங்கல், வெற்பு - இவை மலையைக் குறிக்கும் சொற்கள். இவற்றுள் ஆடகச் சீர் மணிக்குன்று, ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்று, கரிக் குன்று, கனகக்குன்று, கொங்கைக் குன்று, திருவருட் குன்று, மணிக்குன்று எனக் 'குன்று' என்னும் சொல்லும், 'பொற்சிலை' என்பதில் 'சிலை' என்னும் சொல்லும் அருள்மலை, ஆனந்தமலை, கருணைமலை என 'மலை' என்னும் சொல்லும், அருவரை, கோலவரை, திண்வரை, பருவரை, என 'வரை' என்னும் சொல்லும்; செம்பவளவெற்பு என 'வெற்பு' என்னும் சொல்லும் ஆட்சி தரப்பெற்றுள.

### 2. சிறப்பு

(1) அண்ணாமலை

(2) இமயம்

இஃது அழகும் பருமையும் உடையது.

(3) ஈங்கோய்மலை

(4) கயிலைமலை

இஃது ஒலி உடையது. அழகும், பெருமையும் உடையது. சிகரங்களை உடையது.

(5) சிராப்பள்ளி—சிராமலை

(6) திருக்கழுக்குன்றம்

(7) மகேந்திரவெற்பு

(8) மந்திரமலை

(9) மேருமலை—

இது பொன்மலை. பெருமானுக்கு (திரிபுரம் எரித்த போது) வில்லாக அமைந்தது.

## 168. மறை [191]

[வேதம் - தனித்தலைப்புப் பார்க்க]

அருமறைகள், செப்பமாமறை, நான்மறை, பெருமறை, மாமறை எனவும்; நான்மறையுள்-திமில நான்மறை, தெருளு நான்மறை, பண்டாய நான்மறை, மூவா நான்மறை, எனவும்; 'மறை' என்றும் சொல் ஆட்சியும், விளக்கமும் தரப்பட்டுளது.

## 169. மறையோர், அந்தணர் [192]

மறையவர், வேதியர், நாட்டுத் தேவர், அந்தணர்,— இவை மறையோரைக் குறிக்கும். விரதங்கள்தாம் கொள்ள வேண்டிய சத்தியப் பொருளாம் என்று சாத்திரம் காட்டினர் வேதியர்.

## 170. மனப்பாடத்துக்குரிய பாடல்கள் [193]

திருவாசகம் முழுவதுமே மனப்பாடத்துக்கு உரியது, எனினும் இங்குச் சில பாடல்கள் குறிக்கப்படுகின்றன.

1. சிவபுராணம்

5—14 ஆமாறுன்

5—15 வாஞுகி

5—27 தனியனேன்

22—5 குறைவிலா
22—10 தந்ததுன்
33—6 வேண்டத் தக்கது
33—8 நாயிற்கடை
34—7 வேண்டேன் புகழ்
37—3 அம்மையே
37—9 பால் நினைந்து
39—3 உற்றுரை

இவையன்றி வேறு சில ஒளிநெறியிற் காணலாகும்.

## 170. A. மனம், சித்தம் முதலிய [193A]

['நெஞ்சம்' என்னும் தலைப்பு 121 பார்க்க.]

## 171. மாதர் [194]

### I. பொது

#### 1. மாதரைக் குறிக்கும் சொற்கள்

அணியிழையார், ஏழையர், காரிகையார், கிளியனார், கொங்கையர், கோல்வளையார், தையலார், நல்லார், நன்னுதலார், நுண்ணிடையார், நேரிழையார், பிணாப் பிள்ளைகள், புணர்முலையார், பூங்கொடியார், பெண்டிர், மங்கைமார், மடந்தையர், மாதர், கருங்குழலினார், மைப்புறுகண்ணியர், வளைக்கையார்.

#### 2. மாதர் அவயவ வர்ணனை

(1) அடி

1. பஞ்சாய அடி

(2) அல்குல்

பையரவல்குல்

(3) இடை

துடியேர் இடுகிடை, நடங்கிடை, நுண்ணிடை, மின்னிடை.

(4) கண்

அயில்வேற்கண், அரிக்கண், உழைதரு நோக்கு, கருங்கண், கெண்டையங்கண், கயற்கண், சேலனகண், தடங்கண், பானலார்கண், மாவின்வடுவகிரன்னகண், மான் நிலாவிய நோக்கு, மின்கண், மைப்புறு கண், வாள் தடங்கண், வேற்கண்,

(5) காது

காதார் குழை.

(6) குழல்—கூந்தல்

அணி குழல், ஏலக் குழல், கருங் குழல், குரவு வார் குழல், கோதை குழல், சுருள்புரி கூழை, செறி குழல், தாழ்குழல், மொய்குழல், வார் குழல்,

(7) கை

வளைக்கை

(8) கொங்கை—முலை

(i) கொங்கைக் குன்று, கொங்கைப் பலாப்பழம் கொள்ளேர் பிளவகலாத் தடங் கொங்கை, வண்கொங்கை.

(ii) இளமுலை, குவிமுலை, சாந்தமார்முலை, செப்பு நேர்முலை, புணர்முலை, பூண்முலை, வனமுலை, ஈர்க்கிடை போகா இளமுலை.

(9) சாயல்

குலமஞ்ஞை போன்றங் கனநடை.

(10) தோள்

பொற்றொடித் தோள்.

(11) நகை (பல்)

ஏர் நகை, ஒள் நித்தில நகை, முத்தன்னவெண்ணகை, கொழுமணியேர் நகை.

(12) நடை

அன்ன நடை, குலமஞ்ஞை போன்ற கனநடை.

(13) நுதல் (நெற்றி)

நன்னுதல், வாணுதல்

(14) பல்

'நகை' பார்க்க.

(15) மொழி (சொல்)

அஞ்சொல், கிளி அனார் கிளவி, கிளி மொழி, மென் மொழி.

(16) வாய்—வாய் இதழ்

கனியை நேர் துவர் வாய், கொவ்வைச்செவ்வாய், செந் துவர்வாய், செவ்வாய், பாலூறுதேன்வாய், *முதலைச் செவ் வாய்.

(17) விரல்

பந்தணை மெல் விரல்.

3. மாதர்வலையிற் படுதல்

1. மாதர்களின் கண் ஆகிய மத்திடை, உடை படுதல்.

2. மாதர்களின் வெகுளி வலையில் அகப்படுதல்.

3. மாதர்களின் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு நஞ்சாய துயர் உறுதல்.

---

* முதலை - செங்கிடை.

## 4. மாதர் அணிகலம்

குழை, சங்கம் (வளை), சிலம்பு, தொடி, மேகலை.

## 5. மாதரின் பழக்க வழக்கங்கள்

1. அம்மானை ஆடுதல்: கையில் வளைகள் ஒலிக்கவும், காதில் குழை ஆடவும், கருங்குழல் புரளவும், கூந்தலில் உள்ள வண்டுகள் ஒலிக்கவும், அன்பர்க்கு மெய்யனும், அல்லாதார்க்கு அல்லாதவனும் ஆன வேதியனைத் திருவையாற்றில் அமர்ந்த பெருமானைப் பாடி மாதர்கள் அம்மானை ஆடுவார்கள்.

2. திருநீறு பூசுவார்கள்.

3. கூந்தலிற் பூமாலை அணிவார்கள்.

4. மார்கழி மாதத்திற் சாலையில் சிவபஜனையுடன் நீராடுவதற்குப் போவார்கள்.

5. நீராடும் வகை: பூம்புனலில் பாய்ந்து ஆடுவார்கள். பெருமான் கழல் பாடி நீராடுவார்கள்; நீராடும் போது காதில் உள்ள குழை ஆடவும், அணிந்துள்ள அணிகலன்கள் ஆடவும், மாலை அணிந்துள்ள கூந்தல் ஆடவும், அம் மாலையில் உள்ள வண்டின் கூட்டங்கள் ஆடவும், குளிர்ந்த நீரில், தாமரைக் குளத்தில் ஆடுவார்கள்; ஆடும்போது சிற்றம்பலத்து எம்பெருமானை பாடியும், அப்பெருமானுடைய திறத்தைப் பாடியும், தேவியின் திருவடித் திறத்தைப் பாடியும் நீராடுவார்கள். ஆழ்ந்த மடுவிற் பாய்ந்து, பாய்ந்து கைவளை ஒலிக்கவும், கொங்கைகள் பொங்கவும் குடைந்து ஆடுவார்கள்.

## 6. மாதர் விளி

அன்னே, அனநடையீர், சேயிழையீர், நங்கைமீர், நல்லீர், நேரிழையீர், பிணாப்பிள்ளைகாள், பூண் முலையீர், மங்கை நல்லீர், மடந்தை நல்லீர், மடவீர், வெண்ணகையீர், வனமுலையீர்,—இவை போன்ற விளிகளை ஒளிநெறியிற் காணலாகும்.

II. மாதர் சிறப்பு

1. இடவை மட நல்லாள்.
2. கடல் வாணனுடைய பெண்கள்
3. வண்டோதரி
4. வலைஞர் மகளாக வந்த (பார்வதி)

## 172. மாயை [195]

ஆறுகோடி மாயாசக்திகள், ஈண்டிய மாய இருள், 'யான், எனது' என்னும் மாயம், மாய இருள், மாயப் பிறவி - என 'மாயை' விளக்கப்பட்டுளது.

## 173. மாலை [196]

['சிவபிரான் மாலை' என்னும் தலைப்பு (I-28) பார்க்க]

கழுநீர்மாலை, குடர்நெடுமாலை, சொன்மாலை, தாழ் குழல் சூழ்தருமாலை, பூமாலை, கொன்றையம் மாலை, தாளி அறுகின் தார், பனிமாமதிக் கண்ணி, முத்து நல்தாமம், கொன்றை அலங்கல்—என மாலை வகைகள் வந்துள.

## 174. முத்தி, வீடு, பேரின்பம் [197]

மேலை வீடு, முத்தி, வாரா உலகம், வீடகம் என முத்தி விளக்கப்பட்டுள்ளது.

முனிவர் குழாம் முத்திவேண்டி மிக வாடி உழைப்பர்.

## 175. முருகவேள் [198]

முருகவேள்-'நல்வேலன்' என்றும், 'குமரன்' என்றும் குறிக்கப்பட்டுள்ளார். சிவபிரான் முருகவேளின் தந்தை என்பதும் குறிக்கப்பட்டுளது.

## 176. முனிவர், தவத்தினர், பெரியோர் [199]

### 1. பொது

அருந்தவர், உணர்ந்த மாமுனிவர், நாற்றிசை முனிவர், பல மா முனிவர், பிறப்பிறப்பைக் கடந்தவர், பெரியர், மிக்கார், முனிவர் குழாம்—சிட்டர்கள், என முனிவரும், பெரியோரும் இடம் பெற்றுள்ளார்கள்.

### 2. சிறப்பு

1. ஏகாசம் இட்ட இருடிகள்.
2. பதஞ்சலி.
3. (உப மன்யு.)

இவர்களுள் (1) ஏகாசம் இட்ட இருடிகள் என்பார் திருமுருகாற்றுப் படையில் "விண் செலல் மரபின் ஐயர்" எனக் கூறப்பட்டுள்ளார். சூரியனுடைய வெப்பம் உயிர்களை அதிகமாகத் தாக்கா வண்ணம் இம் முனிவர்கள் காக்கின்றனர்கள். இவர்களை, "வேணுவியோர்" என்பர். இதன் விரிவை ஒளிநெறியிற் காண்க.

(2) பதஞ்சலி

இவர் காணும்படி பெருமான் நடனம் ஆடினர்.

(3) உபமன்யு

இவர் குழந்தையாய் இருக்கும்போது பால் வேண்டி அழுதனர். அவருக்காகப் பெருமான் பாற்கடலையே வரவழைத்துத் தந்தனர்.

## 177. மெய், மெய்யர் [200]

['சிவனும் மெய்யும், மெய்யரும்' என்னும்
தலைப்பு I—19 (210) 94-பார்க்க.]

பொய்யிலா மெய்யர், பொய்யர் தம்மெய், மெய்க் கருணை, மெய் கலந்த அன்பர், மெய்ஞானம், மெய்ம்மை,

மெய்யர் மெய்—என்ற சொற்றொடர்களில் 'மெய்' என்னும் சொல் ஆட்சி தரப்பெற்றுள்ளது. மெய்தருவேதியன், மெய்த்தேவர் தேவர்—மெய்யே,—எனப் பெருமானை மணிவாசகர் குறித்துள்ளார்.

## 178. மேகம், மின், இடி, மழை [201]

I. உருமு, மஞ்சுலாம் உருமு—என இடியும்; மழை, பூமழை என மழையும்; மின், திருத்தகுமின், மின்னொளி, என மின்னும்; கொண்டல், புயல், மஞ்சு, முகில், மேகம் என மேகமும்; "சிலை" என வான வில்லும்—குறிக்கப் பட்டுள.

மேகத்திற்கும் தேவிக்கும் உவமை கூறப்பட்டுள்ளது.

[தலைப்பு 187—4 பாக்க]

## 179. யாக்கை [202]

[உடல்: ஊன்; தலைப்பு 33 பார்க்க]

ஆக்கை, உடம்பு, உடல், உடலம், காயம், குடில், குப்பாயம், குரம்பை, கூடு, கூரை, மெய், யாக்கை - என யாக்கை கூறப்பட்டுள்ளது.

இவற்றுள், அள்ளூறுக்கை, அழிதரும் ஆக்கை, ஆக்கையின் திண்வலை, இருளார் ஆக்கை, செடியார் ஆக்கை, துயர் ஆக்கை, படிற்றாக்கை, வெற்றுயிராக்கை என ஆக்கையும்; விகார விடக் குடம்பு என உடம்பும் செடிசேர் உடலம் என உடலும், சிதலைச் செய்காயம் எனக் காயமும்; 'ஒன்பது வாயிற்குடில், இருள் திணிந்து எழுந்திட்ட குடில், வல்வினைக் குடில், சிறு குடில் எனக் குடிலும்; என்பு, தோல் போர்த்த குப்பாயம் எனக் குப்பாயமும்; ஊன் தழை குரம்பை கள்ளப் புலக் குரம்பை, புழுக் குரம்பை, மலமாக் குரம்பை எனக் குரம்பையும்; ஊனார் புழுக்கூடு, முடையார் புழுக்கூடு- எனக் கூடும்; ஊன் சுவர் புழுப் பொதிந்தளுத்

தசும்பொழுகிய பொய்க் கூரை எனக் கூரையும்; இருள் புரியாக்கை, புலால் யாக்கை என யாக்கையும் விவரிக்கப் பட்டுள.

இதனால் உடல் ஆனது அழியக்கூடியது. பாபம் நிறைந்தது. துயர்க்கும், வஞ்சத்திற்கும் இடம் ஆனது. ஊன் நிறைந்தது. ஊத்தையும், அழுக்கும் நிறைந்தது. நோய்க்கு இடம் ஆனது. அறம், பாபம் என்னும் கயிற்றினால் கட்டப்பட்டு, தோலினால் மூடப்பட்டுப் புழு, அழுக்கு, மலம் இவைகள் வெளிவரும் ஒன்பது வாயிலை உடையது என்பதும்; நரம்பு, மூளை, எலும்பு, தோல், இவைகளால் அமைந்த நாற்றம் உள்ள ஒரு புழுக்கூடு என்பதும், ஒரு திண் வலைச் சிறுகுடில் என்பதும் அறியக் கிடக்கின்றன.

## 180. யான், எனது [203]

'யான், எனது', என்பது ஒரு மாயம், 'யான், எனது' என்று பெருமான் அவர் அவரைக் கூத்தாட்டுகின்றான். 'யான், எனது' என்னும் தன்மை அறுதல் வேண்டும். அஃது அற்றுப்போனால், ஊன், உயிர், உணர்வு, உள்ளம் எல்லாம் அற்றுப்போகும்.

## 181. யோகம் - யோகியர் [204]

யோகிகள் நல்ல திறமை வாய்ந்தவர்கள், 'எங்கும் நிறைந்துள்ள யோகமே', 'யோகத்தின் பொலிவே' எனப் பெருமானை மணிவாசகர் அழைக்கின்றார்.

யோகத்தில் சங்கு நாதம், மணி நாதம், வீணை ஓசை இவை எலாம் கேட்கும்.

## 182. ராவணன், வண்டோதரி [205]

(1) ராவணன்

இவன் வன்மை வாய்ந்தவன். தன்னுடைய தேரை நிறுத்திப் பெருமான் வீற்றிருந்த சயிலை மலையை

எடுத்தான். அப்போது பெருமானால் அவன் தலை பத்தும், தோள் இருபதும் நெரிந்தன; அவன் பெருமை குலைந்தது.

(2) வண்டோதரி

வண்டோதரி கடல்சூழ் தென் இலங்கையில் இருந்தவள்; அழகு வாய்ந்தவள்.

வண்டோதரிக்குப் பெருமான் பேரருள் இன்பம் அளித்தார். அவர் அங்ஙனம் அளித்த கருணையின் பெருமையை யார் அறிவார்களோ அவர்கள் எனக்குப் பிரான் (தலைவர்) ஆவார்கள் என்கின்றார் மணிவாசகர்.

## 183. வடமொழிச் சொற்கள் சில [206]

அகண்டம், சிவானுபவங்கள், துவந்துவங்கள், பந்த விகாரம், பரானுபவங்கள் - இவை போன்ற சில வட மொழிச் சொற்கள் ஒளி நெறியிற் காட்டப்பட்டுள.

## 184. வடவா முகாக்கனி [207]

இது "சுடு தீ" எனப்பட்டுளது.

## 185. வண்டோதரி [208]

["ராவணன்" என்னும் தலைப்பு 182-ம், வரலாறு என்னும் தலைப்பு 188-ம் பார்க்க.]

## 186. வயல் [209]

அருச்சனை வயல், கமலங்கள் மலரும் தண்வயல், சீதங் கொள்வயல், செய், சேலும்-நீலமும் நிலவியவயல், சேற்றூர் வயல், தண்பணை - என 'வயல்' விளக்கப்பட்டுள்ளது.

## 187. வர்ணனை [210]

(1) காலை வர்ணனை

(i) அண்ணாமலையாருடைய திருவடிக் கமலத்தை வணங்குகின்ற தேவர்களின் முடிகளில் உள்ள மணித்

தொகுதிகள் பொலிவு அற்றது போலாக்கிச் சூரியனுடைய கதிர்கள் தோன்றின.

(ii) இருள் நீங்கி உதயம் வரக், குயிலும், கோழியும், பறவைகளும் கூவின. சங்குகள் ஒலித்தன. தாரகைகளின் (நட்சத்திரங்களின்) ஒளி மறைந்தது; நாதசுரமும், சங்கங் களும் ஒலியை எழுப்பின.

(2) சிவபிரான் சடைவர்ணனை

சிவபிரானுடைய சடையில் உள்ள பாம்பைப் பார்த்து அங்குள்ள பிறை (சந்திரன்) பயந்து அயலில் உள்ள கங்கை நீரில் மூழ்கி ஒளித்துக் கொண்டது.

(3) மடுவின் வர்ணனை

பிராட்டியின் கருநிறமும், பெருமானுடைய செந்நிற மும், மடுவில் உள்ள கருங் குவளைக்கும், செந்தாமரைக்கும் ஒப்பாகும் என்பதும், மடுவில் உள்ள குருகினம் (பறவைக் கூட்டம்) தேவியின் கையில் உள்ள குருகினத்துக்கும் (வளையல் தொகுதிக்கும்), பறவைகளின் அரவம் (ஒலி) பிரான், பிராட்டி இடத்திலுள்ள அரவத்துக்கும் (பாம்புக் கும்), புற அழுக்கு நீக்கும் மடு அக அழுக்கைப் போக்கும் பிரானுக்கும் பிராட்டிக்கும் ஒப்பாகும் என்பதும் சிலேடை வகையால் ஒப்பிடப்பட்டுளது.

(4) மழை மேக வர்ணனை

மேகத்திற்கும் தேவிக்கும் பின்வருமாறு உவமை கூறப்பட்டுள்ளது.

மேகமானது தேவியின் திருமேனி போலக் கருநிறம் உடையது; அவளுடைய சிற்றிடைபோல மின்னலை வெளி விட்டு விளங்குவது; அப்பெருமாட்டியின் திருவடியின்மேல் உள்ள சிலம்பின் ஒலிபோல ஒலித்து முழங்குவது. அவளது திருப்புருவம்போல வானவில்லை வீசுவது.

## 188. வரலாறுகள் [211]

### 1. கிராதவேடம், வேட்டுவர் வேடம் [211-11]

தவம் செய்து கொண்டிருந்த அருச்சுனனுடைய தவத்தைக் குலைக்கப் பன்றி உருவுடன் வந்த மூகாசுரனைச் சிவபிரான் வேட்டுவ உருவுடன் வந்து அம்பு எய்திக் கொன்ற வரலாறு இது. பாரதத்தில் அருச்சுனன் தவநிலைச் சருக்கத்திற் காணலாகும். [2-15, 40-8]

### 2. மொக்கணி அருளிய மேளி [2-33-3]

சிவதரிசனம் செய்த பின்னரே உண்ணும் நியமத்தை வைத்திருந்த செட்டியார் ஒருவர் வெளி ஊருக்குச் சென்ற போது சிவ பூசை செய்யச் சிவலிங்கம் எங்கே இருக்கும் எனத் தேடினபோது, அவருடைய மைத்துனன் அவருக்குத் தெரியாமல் குதிரைக்குக் கொள் வைக்கும் பையை ஓர் இடத்தில் வைத்துச் சிவலிங்கம் போலக் காட்சி தரும்படி அமைத்து, அந்தச் செட்டியாருக்கு இதோ சிவ லிங்கம் இருக்கின்றது என்று காட்டினன். செட்டியார் அதை நம்பிப் பூசித்து வணங்கிப் பின்பு உண்டனர்; மைத்துனன் நீங்கள் வணங்கினது லிங்கம் அன்று, குதிரைப் பையை நான் லிங்கமாக அலங்கரித்தேன் என்று நகைத்துச் சொல்லி அந்தப் பையை எடுத்துக்காட்ட முயன்றான். ஆனால் அஃது அசையவில்லை. அது லிங்கம் ஆக மாறிற்று. மொக்கணி என்பது குதிரையின் கொள்ளுப்பை. மொக் கணி லிங்கம் ஆனபின் மொக்கணீசுரர் என்னும் பெயர் பெற்றது. இவ்வரலாற்றின் விரிவை ஒளிநெறியிற் காண்க.

### 3. ஐயாறதனிற் சைவனானது [2-85]

திருவையாற்றில் ஐயாறப்பருக்குப் பூசை செய்யும் ஆதி சைவர் ஒருவர் தனியாகக் காசிக்குச் சென்றனர். திரும்பிவர நெடுநாள் ஆகியும் அவர் வாராமையால், அவருக் குரிய காணி முற்றும் தமக்கு உரிமை ஆக மற்றைய 23 ஆதி சைவர்கள் கைப்பற்றிக் கொண்டனர். காசிக்குச்

சென்ற ஆதிசைவரின் மனைவியும், மைந்தனும் மிக வருந்தி ஐயாறப்பரிடம் முறையிட்டனர். பெருமான் காசிக்குச் சென்ற ஆதி சைவர் போலக் கங்கை நீருடன் வந்து சேர்ந்து சிவலிங்கத்திற்குப் பூசை செய்தார். மனைவியும், மைந்தனும் மிக மகிழ்ந்தார்கள். பின்னர், உண்மையாகவே சென்ற ஆதி சைவர் வந்தனர்.

இதைக் கண்டு யாவரும் திகைத்தனர். இருவருக்கும் வழக்கு உண்டாயிற்று. அப்போது முதலில் வந்த ஆதி சைவர் திடீரென மறைந்தனர். இவ்வரலாற்றின் விவரத்தை ஒளிநெறியிலும், திருவையாற்றுப் புராணத்திலும் காணலாகும்.

## 4. குற்றாலத்தில் குறியாய் இருத்தல் [2-90]

முன்பு ஒருகால் திருமுற்றம் என்னும் பெயர் கொண்ட தலத்திற்கு அகத்திய முனிவர் சென்றனர். அத்தலத்தில் திருமால் கோயில் கொண்டிருந்தனர். அகத்தியரைக் கண்ட திருமாலின் அடியார்கள் அவருடைய திருநீற்றினையும், கண்டிகையையும் பார்த்து, நீர் இத்தலத்தில் அணுகல் ஆகாது; நீங்குக - என அவரை வெருட்டினர். வெருட்டப்பெற்ற அகத்தியர் திருமாலின் அடியார் போல வேடம்பூண்டு அந்தத் தலத்திற்கு வந்தனர். வந்து யாம் அழகர் மலையினின்றும், அத்திகிரிக்கு செல்கின்றேம், இங்கு எம்பெருமானைப் பூசிக்க விரும்புகின்றேம் என்றனர். வைணவர்கள் உடனே பூசைக்கு வேண்டிய பொருள்களைக் கொண்டுவந்து தந்தனர். அப்போது அகத்தியர் அவர்களை நோக்கி, "யாம் செய்யப்போகும் பூசையைப் பாருங்கள்" என்று சொல்லிச் சிவபிரானை மனதிற்கொண்டு திருமாலின் திருமுடிமேல் தமது கையை வைத்துக் "குறுகு குறு"கென அழுத்தினர். உடனே திருமாலின் உருவம் சிவலிங்கம் ஆகக் குறுகிற்று. இதைக் கண்ட வைணவர்கள் முன் வந்தவன்தான் இவன் என்று கண்டு அவரை வளைந்து கொண்டனர். அப்போது முனிவரின் வெகுளித் தீ அவர்

களைச் சுட்டெரிக்க அவர்கள் ஓடி மறைந்தனர் என்பது வரலாறு. அத்தலம் தான் இப்போது குற்றாலம் என வழங்குகின்றது. திருநெல்வேலி ஜில்லாவில் உள்ளது. இவ்வரலாற்றின் விரிவைக் கந்தபுராணம் 2-28 திருக் குற்றாலப் படலத்திற் காண்க.

## 5. அத்திக்கு அருளியது [4-163, 11-12]

இது வெள்ளையானையின் சாபந் தீர்த்த திருவிளை யாடலைக் குறிக்கும்; திருவிளையாடல் என்னும் தலைப்பு. 100 பார்க்க, ஒளிநெறியிலும் பார்க்க.

## 6. புலி முலை புல்வாய்க்கு அருளியது [4-207]

ஒரு காட்டில் ஒரு பெண்மான், தன் கன்றை ஒரு புதரில் மறைத்து வைத்து, நீர் பருகும்போது வேடன் அம்பால் மாண்டது. தாயை இழந்த மான்கன்றை ஒரு பெண் புலி பால் கொடுத்து வளர்க்கும்படி பெருமான் அருளினர். இவ் வரலாறு பழைய திருவிளையாடலிற் காணலாகும்.

## 7. "உங்கையிற் பிள்ளை—உனக்கே அடைக்கல மென்று அங்கப் பழஞ்சொல்" [7-19]

இராவணன் மனைவி வண்டோதரி சிவபக்தி நிறைந் தவள். அவள் ஐந்தெழுத்தை ஓதுபவள். தான் விரும்பிய போதெல்லாம் சிவபிரான் தனக்குக் காட்சி தந்தருள வெண்டும் என்னும் வரத்தை அவள் பெற்றிருந்தனள். ஒருநாள் தனது பள்ளியறையில் இருந்து கொண்டே சிவ தரிசனத்தை விரும்பினள். பெருமானும் பள்ளிக் குப்பாயத்தினராய்க் காட்சி கொடுத்தனர். வண்டோதரி ஆனந்த பரவசம் அடைந்தவளாய் உரத்த குரலில் தோத்திரம் செய்தனள். இந்த ஆரவாரத்தை அடுத்த அறையில் இருந்த இராவணன் கேட்டு, 'என்ன ஆரவாரம்' என வினவிக் கொண்டே அங்குவர, இறைவன் குப்பாய ஆடவன் உருவை நீத்துக் குழந்தை உருவெடுத்தனர்.

வந்த இராவணன் 'இக் குழந்தையின் ஆரவாரம் தானே' என வினவினன். வண்டோதரி "தனது சேடி ஒருத்தி மறுநாட் காலையில் வருவதாகச் சொல்லி அக் குழந்தையைத் தன்னிடம் அடைக்கலமாகக் கொடுத்துச் சென்றனள்," எனக் கூற, இலங்கேசன் தன் பள்ளி யறைக்கு மீண்டனன். உடனே குழந்தையும் மாயமாக மறைந்தது. இதன் குறிப்பு "எவ்வுருவும் தன்னுருவாய்:— இலங்கை அழகமர் வண்டோதரிக்குப் பேரருள் இன்ப மளித்த பிரானை" எனக் குயில் பத்திலும் (18-2), 'பள்ளிக்குப் பாயத்தர்' (17-7) என அன்னைப் பத்திலும், "உங்கையிற் பிள்ளை, உனக்கே அடைக்கலம்" என்று திருவெம்பாவையிலும் (7-19), "பித்த வடிவுகொண்டு இவ்வுலகிற் பிள்ளையுமாம்....உத்தர கோச மங்கை, வள்ளல் புத்தி புகுந்தவா" (13-19) என்று திருப் பூவல்லியிலும் காணக் கிடக்கின்றது. (கதிரைமலைப் பள்ளு பக்கம்— 82-85). ஒளிநெறி 211-7.

## 8. "தாயான தத்துவனை" (8-7), (பெருமான் தாயான வரலாறு) [211-8]

சுவாமி இடத்தில் அன்பு மிக்க ஒருமாது பிரசவ காலத்தில் தன் தாய் வந்து உதவப் பெறாமல் சங்கடப்படும் போது, சுவாமியே அவள் தாயைப்போல் வந்து மருத்துவம் பார்த்து ஆதரித்தார்—என்பது வரலாறு. அங்ஙனம் ஆதரித்த தலம் திரிசிராப்பள்ளி; இதனால் சுவாமிக்குத் 'தாயுமானவர்' என்ற பெயர் வந்தது; தாயான தத்துவன் ஆனார்.

## 9. இந்திரனைத் தோள் நெரித்தது (8-15) [211-9]

முன்பு ஒரு காலத்தில் இந்திரன், சிவபிரானை மதியாமல் திருமாலை வைத்துக்கொண்டு யாகம் செய்ய ஆரம்பித்தான். அதனால் பெருமான் அவனைத் தண்டித் தனர். இவ்வரலாற்றைச் சிவ பராக்கிரமம் "இந்திர யாக பங்க பராக்கிரமம்" என்னும் தலைப்பிற் காணலாகும்.

திருவாசகம்,—திருவுந்தியார் 14-14, கந்தபுராணம் 3-9-70 இவற்றிற் காண்க.

10. அத்தி உரித்தது [(13-19) 211-12]

பிரம தேவரிடம் வரம்பெற்ற 'கயாசுரன்' என்பவன் தேவர்கள் முதலியோரை அழிக்கத் தொடங்கினன். பெருமான் யானை உருவு உடைய அவனைக் கிழித்து யானையின் தோலைப் போர்த்துக் கொண்டார். இவ் வரலாற்றைக் கந்தபுராணம் 6-13-146-ற் காண்க.

11. பாலகனுர்க்குப் பாற்கடல் ஈந்தது [(14-17) 211-13]

உபமன்யு முனிவர் குழந்தைப் பருவத்திற் பால் வேண்டி அழுதபோது சிவபிரான் திருபாற் கடலையே அவர் பருக வரவழைத்துத் தந்தனர் என்பது வரலாறு.

12. பிரமன் தலை அறுபட்டது [(14-18) 211-14]

பிரமனுடைய உச்சித்தலையில் உள்ள வாய் சிவபிரானை இகழ்ந்தது. பெருமான், வைரவக் கடவுளை ஏவ, அவர் அவ் வுச்சித் தலையை நகத்தாற் களைந்தனர் என்ப.

கந்தபுராணம்:—6-13-162 to 172.

13. இராவணன் தேரை நிறுத்தி மலையை எடுத்தது (14-9) [211-15]

தலைப்பு 182 பார்க்க.

14. "பள்ளிக் குப்பாயத்தர்" (17-7) [211-16]

வரலாறு 7 பார்க்க.

15. "எவ்வுருவும் தன் உருவாய்" வண்டோதரிக்கு அருளியது (18-2) [211-17]

வரலாறு 7 பார்க்க.

16. இயக்கிமார் அறுபத்து நால்வரை
எண்குணம் செய்த ஈசன் (30-7) [211-18]

உத்தர கோச மங்கையில் இயக்கிமார் அறுபதது நால்வர்க்குப் பெருமான் ஆகமம் அறிவுறுத்தினர் என்ப.

17. "பச்சைத்தாள் அரவாட்டீ' (38-4) [211-19]

கரிகால் சோழனுக்கு எதிரியான குறும்ப ராஜன் ஒருவனுக்கு உதவியாக, ஒரு பெரும் பாம்பைக் குடத்தில் விட்டுச் சமணர்கள் சோழனிடம் அனுப்ப, அச் சோழனுக்கு உதவியாகச் சிவபெருமான் அப் பாம்பை எடுத்து ஆட்டியருளினர் என்பது வரலாறு.

18. "ஏனப்பின் கானகத்தே நடக்கும் திருவடி
40-8, [211-20]

வரலாறு 1 பார்க்க.

19. "மங்கை மார் கையில் வளையுங்கோண்டு"
42-3, [211-21]

இது 'வளையல்விற்ற திருவிளையாடலை' நினைப்பிக்கும். திருவிளையாடல் என்னும் தலைப்பு 100 பார்க்க.

20. இடவை மட நல்லாட்கு அருளியது 43-2, [211-22]

இடவை—இஃது 'இடைவாய்' என்னும் தலம் என்ப. இதனைத் திருவிடைவாய் எனச் சம்பந்தரது கல்வெட்டுப் பதிகத்திற் காணப்பட்ட தலம் என்ப. இத்தலம் பாண்டவ நதிக்கு அருகில் உள்ளது. கொரடாச்சேரி ஸ்டேஷனில் இறங்கிக் கூத்தாநல்லூருக்குப் போகும் வழியாகப் போக வேண்டும். 'திருவிடை வாசல்' என வழங்குகிறது. பதினோராம் திருமுறை - க்ஷேத்திரத் திருவெண்பாவில் இத் தலம் "பாண்டவாய் தென்னிடைவாய்" எனக் கூறப்பட்டுளது. அப்பர் தேவாரத்தில் "இடை மருது, ஈங்கோய்,

இன்னம்பர், ஏர், இடவை, ஏமப்பேறூர்'' (6-70-3) என வருவதால் இடவை வேறு, இடைமருதூர் வேறு என்பது பெறப்படும்.

"மட நல்லாட்கு அருளிய வரலாறு" அத்தலத்துப் புராணத்தால் ஒரு வேளை விளங்கும் போலும்.

21. "மணிவலை கொண்டு மீன் விசிறும் 43-3, [211-23]

இது 'வலை வீசின திருவிளையாடலை'க் குறிக்கும். திருவிளையாடல் என்னும் தலைப்பு 100 பார்க்க.

22. இலங்கை, பந்தணை மேல் விரலாட்கருளும் பரிசு 43-5, [211-25]

வரலாறு 7 பார்க்க.

23. பன்றிக்குட்டிக்குப் பால் கொடுத்தது 43-6, [211-26]

இது "பன்றிக் குட்டிக்கு முலை கொடுத்த திருவிளையாடலைக்" குறிக்கும் திருவிளையாடல் என்னும் தலைப்பு 100 பார்க்க.

24. "புலி கொன்ற வீரன்" 43-8, [211-27]

"தாருக வனத்து முனிவர் ஏவிய புலியைக் கொன்று புலித்தோலாடையைச் சிவபிரான் பூண்டனர்." கந்த புராணம் 6-13-101.

25. கடல்வாணன் ஓவிய மங்கையர் 43-8, [211-28]

இவ் வரலாறு விளங்கவில்லை.

26. வெள்ளம் தரும்....வள்ளல் 48-2, [211-29]

சிவபுரம் என்னும் பெயரும் திருபெருந்துறைக்கு உண்டு; சிவபுரத்து அந்தணர்களுக்கு ஒரு பாண்டியன் அளித்த நிலங்களைச் சில ஆண்டுகளுக்குப் பின் அவ்வூர்

அதிபன் ஆன 'வுண்டாக்கன்' என்பவன் கைப்பற்றிக் கொண்டான். அந்தணர்கள் இந்த அநீதியை, அப்போது ஆண்டு இருந்த பாண்டியனிடம் முறையிட்டனர். நடந்த விசாரணையில் அந்த நிலங்கள் தனக்கு உரியது என்றும், எங்கு வெட்டினாலும் எவ்வளவு ஆழத்துக்கு வெட்டினாலும் நீர் கிடைக்காத நிலம் அந்நிலங்கள் என்றும் வுண்டாக்கன் கூறினான். அப்போது அந்தணர்களின் பிள்ளைகளுக்கு வேத பாடம் சொல்லும் வாத்தியார் எங்கு வெட்டினாலும், ஒருமுழ தூரத்துக்கு வெட்டினாலும் நீர் பெருகும் அந்த நிலங்களில் என்று கூறினர். ஆனால் உண்மையில் அந்நிலங்களில் வெகு ஆழம் வெட்டினால்தான் நீர் கிடைக்கும். ஆதலால் அந்தணர்கள் இந்த வாத்தியார் ஏன் இப்படிக் குழறி விட்டார் என வருந்தினர். பாண்டியன் நேரில் வந்து அந்நிலங்களை வெட்டிப் பார்க்க, எங்கு வெட்டினாலும் ஒரே வெட்டில் நீர் பொங்கிக் கிளம்பி, அங்கு எங்கும் வெள்ளமாய்ப் பரவிற்று. இதைக் கண்ட வுண்டாக்கன் அச்சம் உற்றனன். வாத்தியார் யாரும் காணா வண்ணம் மறைந்தனர். அந்த வாத்தியார் சிவபிரானே எனத் தெளிந்த பாண்டியனும் அந்தணரும் வியப்புற்றனர். எங்கும் நீர் பெருகி வெள்ளமாய்ப் பரவின காரணத்தால் சிவபுரம் 'பெருந்துறை' ஆயிற்று. இதுவே திருப்பெருந்துறை எனப் பெயர்வரக்காரணமாகும். இதன் விரிவை ஒளி நெறியிற் காண்க.

27. கடலில் வலைவாணன் [48-3]
மீன் வலை வீசிய கானவன் 49-1, [211-31]

இந்த இரண்டும் 'வலை வீசின திருவிளையாடலை'க் குறிக்கும். திருவிளையாடல் தலைப்பு 100 பார்க்க.

## 189. வலை [212]

ஆக்கையின் திண்வலை, கடலில் வலை, பத்திவலை, மணி வலை, என "வலை" என்னும் சொல் ஆட்சி தரப்பெற்றுள்ளது.

## 190. [213]

### 1. வழிபாடு—வழிபாட்டு வகை

பக்தியால் கூத்தாடுதல், பாடுதல், பதைத்தல், பணிதல், சிவன் எங்குற்றான் என்று தெருவுதோறும் அலறித் தேடுதல், நல்ல மலர் புனைதல், நாத்தழும்ப ஏத்துதல், சிந்தனையைப் பிரானுக்கு ஆக்குதல், கண்ணிணையை அவருடைய திருவடி மலருக்கு ஆக்குதல், சிந்தை செய்கை கேள்வி வாக்கு - இவை எல்லாம் அவருக்கே ஆக்குதல், சிவன் எம்பெருமான் என்று இயம்பி, ஊற்று மணம்போல நெக்கு நெக்கு உள்ளே உருகி ஓலமிட்டுப் போற்றி நிற்றல், திருக்கோயிலைப் பெருக்குதல் - மெழுகுதல், பெருமானை மலரிட்டு முட்டாது இறைஞ்சுதல், பூமாலை புனைந்து ஏத்துதல் - இவை எல்லாம் வழிபாட்டு வகையாகும்.

### 2. வழிபாடு—மனத்தால்

மனத்தால் நினைந்து உருகிப் பலகால் பெருமானைப் பாவித்துப் பரவுதல்.

### 3. வழிபாடு—வாக்கால்

'ஐயா' என்றும், சிவன் எம்பெருமான் என்றும் ஏத்துதல். திரண்டு திரண்டு பெருமானுடைய திருவார்த்தையை விரித்தல், அவர் நாமத்தைப் பிதற்றுதல்; 'பரமா-பரமா' என்று பாடுதல்.

### 4. வழிபாடு—காயத்தால்

கை எடுத்துத் தொழுதல், கண்ணீர் மல்குதல், அழுது தொழுதல், வாய் குழறுதல்; பெருமானையே பாடிப் புரண்டு அழுது தொழுதல் வேண்டும்.

## 191. வழிபாட்டுக்குரிய மங்கலச் செயல்கள் —அலங்காரம் முதலியன [214]

பெருமான் முழுக்காட்டுக்குப் பொற்சுண்ணம் இடித்தல்; இடிக்கும் உலக்கைக்குப் பொன்மணி கட்டுதல்-

உரலுக்குப் பட்டு அணிதல், கொடி எடுத்தல், திருநீறு அணிதல், தூபம் வைத்தல், தீபம் வைத்தல், பொன் சிந்துதல், பூமாலே தூக்குதல், முளைக்குடம் வைத்தல், இடத்தை மெழுகுதல் முதலியன மங்கலச் செயல்கள் ஆகும்.

## 192. (1) வழிபடுவோர் [215]

அமரர், இந்திரன், பிரமன், திருமால், நான்மறை, பாரோர், மறையவர், முனிவர்.

### (2) வழிபட்டுப் பேறுபெற்றவர்

1. திருப்பெருந்துறையில் தேவர்கள், புலவோர், திருமகள், கலேமகள் முதலியோரும்,

2. இடவை என்னும் தலத்தில் மடநல்லாளும்,

3. தில்லேயில் மறையும், மறையவரும், வானவரும்,

4. இலங்கையில் வண்டோதரியும்

இறைவனேப் பூசித்துப் பேறுபெற்றனர். தில்லேயில் பதஞ்சலி முனிவருக்காகப் பெருமான் தமது நடன தரிசனத்தைத் தந்தனர். இலங்கையில் வண்டோதரிக்குப் பேரருள் இன்பத்தை அளித்தனர்.

## 193. வழிபாட்டினுல் வரும் பயன் [216]

கச்சித் திரு ஏகம்பர் செம் பொற் கோயிலேப் பாடினுல் பாசவினேகள் ஒழிந்து போகும். பெருமானேப் புகழ்ந்து தொழுது பூப்புனேந்து அவர் திருவடியை நமது புத்தியில் வைத்தால் நாம் எல்லா அல்லலேயும் கடப்போம். இடையூறு ஒன்றும் வாராது. தேவர்கள் போற்றுகின்ற திருப் பெருந்துறையை நண்ணினுல், நம் இடர்கள் அகலும். அத் தலத்தை நன்று போற்றினுல் நாம் வாழ்வோம், வல்வினேயை மாய்ப்போம்.

## 194. வாத்தியங்கள் [217]

(1) இயம்

இன்னிசை தரும்.

(2) ஏழில் (நாதசுரம்)

(3) சங்கம்

இது வெண்ணிறம் உடையது. பல சங்குகள் ஒன்று கூடி ஒலி எழுப்பும்.

(4) துடி (உடுக்கை)

(5) நாதப்பறை

(6) மணி

(7) முரசு

(8) யாழ்

(9) வீணை (இன்னிசை வீணை)

## 195. வாழ்க்கை வர்ணனை [218]

ஊனுடன் கூடிய உயிர் வாழ்க்கை வெறுக்கத் தக்கது. இவ்வுடல், கொம்பிலுள்ள அரும்பு - மலர் - காய் - பழம் போல் பழுத்து மாண்டு போகும் தன்மையது. இந்த வாழ்க்கைக் கடலில் துன்பம் என்னும் அலைகளால் மோதுண்டு, மங்கையர் என்னும் சுழற் காற்றினால் கலக்குண்டு, காமம் என்னும் சுறாமீனின் வாயில் அகப்பட்டு, இனி எப்படிப் பிழைப்பது என்று நெஞ்சம் கலங்கும் வாழ்க்கை இது. தோல்பாவைக் கூத்தாட்டுப் போலச் சுழன்று விழுந்து கிடக்கும் வாழ்க்கை இது நோயுற்று மூத்து நந்து கன்று போலச் செல்லும் வாழ்க்கை இது. அறம், பாவம் என்னும் கயிற்றினாற் கட்டப்பட்டு, வெளியே தோலால் போர்க்கப்பட்டு, எங்கும் புழு அழுக்கு மூடி, மலம் சோரும் ஒன்பது வாயிலை உடையதாய், வஞ்சனை செய்யும் புலன்களை உடையதாய் இருப்பது இவ்வுடல்.

நமது வாழ்க்கை மாய வாழ்க்கை. தாயின் வயிற்றிற் கருவாய் இருக்கும்போது சிதைவுபடாமல் ஒரு மாத அளவில் தான்றிக் காய் அளவு அடைந்து - பிளவுபடாது தப்பியும், இரண்டாவது மாதத்தில் ஒன்றுபட்டு வளர்தலிற் பிழைத்தும், மூன்றாவது மாதத்தில் மதநீருக்குத் தப்பியும், நான்காவது மாதத்தில் உண்டாகும் இருளுக்குப் பிழைத்தும், ஐந்தாவது மாதத்திற் சாவாமல் தப்பியும், ஆறாவது மாதத்தில் தினவு மிகுதியால் உண்டாகிய துன்பத்தினின்றும் தப்பியும், ஏழாவது மாதத்தில் கீழே நிலத்தில் வீழ்தற்குத் தப்பியும், எட்டாவது மாதத்தில் உண்டாகும் கஷ்டத்தில் பிழைத்தும், ஒன்பதாவது மாதத்தில் உண்டாகும் துன்பத்திற்குப் பிழைத்தும், பத்தாம் மாதத்தில் வெளிப்படும் துன்பத்தினின்றும் தாயும் தானும் பிழைத்துத் தப்புதலையும் உடையது இவ்வாழ்க்கை; அப்படிப் பிறந்த பின்பும், பலவித இடையூறுகளில் தப்ப வேண்டும். மலம் கழித்தல், பசி தவிர்த்தல், தூக்கம், யாத்திரை இவைகளிற் பிழைத்தல், மாதர் மயக்கிற் பிழைத்தல், மூவாசைகளிற் பிழைத்தல், கல்வி என்னும் கடலிற் பிழைத்தல், செல்வம் என்னும் அல்லலிற் பிழைத்தல், வறுமை என்னும் விடத்திற் பிழைத்தல் - ஆகப் பல துறைகளிற் பிழைக்க வேண்டிவருவது இவ் வாழ்க்கை.

## 196. வாழ்த்து [219]

நேசம் உடைய அடியவர் (உலகில்) நின்று நிலவுக என்று வாழ்த்துதல் வேண்டும். மாதேவனுடைய கழல்களை வாழ்த்துதல் வேண்டும். நாம் அவரை வணங்கத் தலையை வைத்துள்ளார்; அவர் திருவடியை வாழ்த்த வாயை வைத்துள்ளார் பெருமான். பெருமானைத் தாம் வாழும் பொருட்டுத் தான் தேவர்கள் வாழ்த்துகின்றார்கள்.

## 197. விரதம் [220]

விரதம் தான் சிறந்தது என்றும் உண்மையானது என்றும் வேதியர் சாத்திரங்களைக் காட்டினர்.

## 198. விழா [221]

பெருமானுக்குப் பொற்சுண்ணம் இடிக்கும் விழா வின்போது நாட்டில் எங்கும் பொன் சிந்தி, நிதிபரப்பித், தீபம் வைத்து, தோரணம் கட்டி, கொடி ஏற்றப்படும்.

## 199. விளக்கு [222]

இறைவனைச் சுழொளி விளக்கு, தூண்டா விளக்கு, தேசுடை விளக்கு என மணிவாசகர் போற்றுகின்றார்.

## 200. வினு விடை [225]

1. வினு: சிவபுரம் செல்பவர் யார்?

விடை: சொல்லுதற்கு அரிய பெருமானைச் சொல்லும் பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவர் சிவபுரம் செல்வர்.

2. வினு: பிறப்பு, இறப்பைக் கடந்தார் யார்?

விடை: "ஈசனே, எந்தாய், எந்தை பெருமானே!" என்றென்று ஏத்தித், திருநீறு நிறையப் பூசிப் போற்றி, எம்பெருமானே' என்று குறையாதஅன்புடன் இறைவனைப் பணிபவர்கள் பிறப்பிறப்பைக் கடப்பார்கள்.

3. வினு: தேடும் பொருள் எது?

விடை: திருவோடும், கோவணமுமே உறவு என்று கொண்டு, உள்ளம் கசிந்து, நாம் தேட வேண்டிய பொருள் சிவபிரானது திருவடியே.

4 வினு: யாருக்கு இறைவனுடைய திருவடி தவருது பலன் அளிக்கும்?

விடை: 'ஈசன், எம்பிரான், என்னுடை அப்பன், என்றென்று தொழுத கையினராய்க், கண்கள் நீர்மல்கும் தொண்டர்க்குத் தவருது பெருமான் திருவடி கிடைக்கும்.

குறிப்பு 1. இவை அல்லாமல் திருச்சாழல் (12) என்னும் பதிகத்தில் உள்ள சில வினுக்களும் விடைகளும் பின்வருமாறு.

வினு 1. பெருமானுடைய கோவணம் எது ?

விடை. கலைகளின்பொருளும் மறைநான்கும் சரடாகத் தன்னையே கோவணமாகக் கொண்டுள்ளார் பெருமான்.

வினு 2. மலைமகளைப் பெருமான் ஏன் மணம் செய்து கொண்டார் ?

விடை. அவர் திருமணம் செய்யாவிடில் எல்லாப் பொருள்களும் கலங்கி அழிந்து இருக்கும்.

வினு 3. பெருமான் தில்லையில் ஏன் நடனம் ஆடுகின்றார் ?

விடை. அவர் நடம் புரியாவிடில் உலகம் எல்லாம் காளிக்கு ஊண் ஆகி ஒழிந்துபோய் இருக்கும்.

வினு 4. யானை, குதிரை, தேர் இவைகளில் ஏறுமல் ஏன் விடையின்மேல் ஏறுகின்றார் பெருமான் ?

விடை. திரிபுரத்தை எரித்தபோது திருமால் பெருமானின் விடையாகத் தாங்கின காரணத்தால் விடையை விரும்பி ஏறுகின்றார்.

வினு 5. பெருமான் புரத்தை ஏன் எரித்தார் ? அறம் ஏன் நால்வர்க்கு உரைத்தார் ?

விடை. பிரான் அறம் உரைத்ததும், புரம் எரித்ததும் அவருடைய அறக் கருணையையும், மறக் கருணையையும் காட்டும்.

குறிப்பு 2. திருத் தசாங்கத்தில் (19) உள்ள வினுக் களும் விடைகளும் பின்வருமாறு :—

வினு 1. பெருமான் திருநாமம் என்ன ?

விடை. தேவர் பிரான்.

வினு 2. அவருடைய நாடு எது?
விடை. தென்பாண்டி நாடு.

வினு 3. அவர் வாழும் ஊர் எது?
விடை. உத்தரகோசமங்கை.

வினு 4. அவருடைய ஆறு எது?
விடை. மலங்கழுவ வந்திழியும் ஆனந்தம்.

வினு 5. அவருடைய மலை எது?
விடை. இன்பமரு முத்தி அருளு மலை.

வினு 6. அவர் ஊர்தி எது?
விடை. வான் புரவி (ஆண் புரவி).

வினு 7. அவருடைய படை எது?
விடை. கழுக்கடை (சூலம்).

வினு 8. அவருடைய பறை எது?
விடை. பேரின்பத் தோங்கும் பருமிக்க நாதப் பறை.

வினு 9. மாலை எது?
விடை. தாளி அறுகு.

வினு 10. கொடி எது?
விடை. ஏறு.

## 201. வினை [226]

அருவினை, அருவினைச் சுற்றம், இருள் திணிந் தெழுந்திட்டதோர் வல்வினை, இருவினை, உள்வினை, கடியவினை, கடுவினை, கொடு வினைநோய், தீயவினை, தீவினை, தொல்லை வினை, நல்வினை, பழவினை, பாசவினை, பிரியாவினை, பொல்லாவினை, முந்தைவினை, மும்மலப் பழ வல்வினை, முன் வினை, முன்னை வினை இரண்டு, மேல்வினை,

யோனியின் உள்வினை; வல்வினை, வல்வினைக்காடு, வல் வினைப்பகை, வினைக்கடல், வினைநோய், வினைப் பிறவி, வினையின் தொகுதி, வெய்ய வினை இரண்டு—என்றெல் லாம் "வினை" விளக்கப்பட்டுள்ளது. இருவினைகள் தாம் நமது உடல், உயிரை ஊசல் ஆட்டுகின்றன. நமக்கு மயக்கம் தருவதும் மும் மலப்பழவினையே.

## 202. விஜயன் [227]

விஜயன் தவத்தைச் சோதிக்கப் பெருமான் வேடு உரு எடுத்தனர்.

[‘சிவனும் விசயனும்’ என்னும் தலைப்பு I-99 பார்க்க.]

## 203. வெள்ளம் [228]

அருள் வெள்ளம், அவலக் கடலாய வெள்ளம், அவா வெள்ளம், ஆனந்த வெள்ளம், இன்ப வெள்ளம், உகு பெருந்தேன் வெள்ளம், கருணை வெள்ளம், செஞ் சுடர் வெள்ளம், துன்பப் புயல்வெள்ளம், பாண்டிவெள்ளம், பேரின்ப வெள்ளம், மங்கையர் வாய் இதழ்ப்பெரு வெள்ளம், மதுவெள்ளம், மாறிலாத மாக் கருணை வெள்ளம் என ‘வெள்ளம்’ என்னும் சொல் ஆட்சி தரப்பெற்றுள்ளது.

## 204. வேதம் [229]

[தலைப்பு I-103 பார்க்க.]

இருக்கு, நால்வேதம், வேத மெய்ந்நூல், என வேதம் சொல்லப்பட்டுள்ளது. தில்லையை வேதங்கள் தொழுது ஏத்துகின்றன. பெருமான் வேதம் ஆயினராவர்.

## 205. வேள்வி [230]

தக்கன் வேள்வி, புரந்தரன் வேள்வி, மகம் (வேள்வி) எனவும்; தக்கன் வேள்வி கலங்கிற்று, மடிந்தது, மயங் கிற்று என்றும்; அவ்வேள்வி ‘வெஞ்சின வேள்வி’ என்றும், பெருமான் வேள்வி ஆயினர்" என்றும் கூறப்பட்டுள்ளன.

## 206. ஜீவராசிகள் [231]

### I. ஊர்வன

(1) எறும்பு

'யானை முதலா, எறும்பு ஈறாய்' என்பது பழமொழி. இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு, எறும்பிடை நாங்கூழ், நெய்க்குடத்தை மொய்க்கும் எறும்பு. என்பனவும் வழக்குச் சொல்.

(2) கிருமி

(3) கீடம் (புழு)

சிவபிரான் முன்னிலையில் தேவர்கள் கீடம் ஒப்பர்.

(4) கோபம் (தம்பலப் பூச்சி)

இது நமது பிறவி போலக் கணக்கற்றவையாய்த் தோன்றும்.

(5) நாங்கூழ் (நாகப்பூச்சி)

(இறந்து போன) நாங்கூழை எறும்புகள் மொய்க்கும்.

(6) பாம்பு

அர, அரவம், ஐவாய் அரவம், பட அரவம், பொங்கு அரவம், வாள் அரவம், நச்சு அரவு, பச்சைத்தாள் அரவு, புற்றில் வாழ் அரவு, பைந்நாப் பட அரவு, பை அரவு, நாகம், கரும்பணம், பாம்பு, புயங்கம், மாசுணம், இவை பாம்பைக் குறிக்கும். இதனால், பாம்பு படம் உடையது, பொங்குவது, விடம் உடையது. கால் இல் லாதது, புற்றில் வாழ்வது என்பது விளங்கும். பாம்பு சிவனுக்கு அணியாகவும், அரைக் கச்சை யாகவும் உள்ளது. பிறவியும், ஐம்புலனும் (ஐவாய்) அரவுக்கு ஒப்பிடப்பட்டுளது.

(7) புழு

நமது உடல் புழுவினாற் பொதிந்தது. நாற்றம் உடைய புழுக்கூடு.

## II. நீர் வாழ்வன

(1) கயல், கெண்டை, கெளிறு, சுறவு, சேல், மீன், இவை மீன் வகைகள்; பெருநீர் அற்றுப் போனல் சிறுமீன்கள் துவளும். காமம் பெரிய சுறு மீனுக்கு ஒப்பிடப்பட்டுளது.

கயல், கெண்டை, சேல்—இவை மாதர்களின்—பார்வதியின்—கண்களுக்கு ஒப்பிடப்பட்டுள்ளன:—

[தலைப்பு 142, 171 பார்க்க.]

சேல்—வயல்களிற் காணலாம். 'வயல்' எனும் தலைப்பு 186 பார்க்க.

(2) முதலை

## III. பறவை

(1) அன்னம்

இதன் நடை பெண்களின் நடைக்கு ஒப்பிடப் படுகிறது.

(2) ஈ

சீயிலும், பலாப்பழத்திலும் மொய்க்கும்.

(3) கருளன் (கருடன்)

இது திருமாலின் கொடி.

(4) கிளி

கிள்ளை, கிளி, சுகம், தத்தை இவை கிளியின் பெயர். கிளி அழகு உள்ளது. பூஞ்சோலையிலும், கூட்டிலும் இருக்கும். இதன் சிறகு பசுமையானது. இதன் நிறம் பச்சை (மரகத நிறம்). இதன் மொழி-மென்மொழி, தேன் மொழி, இன்பம் தருவது, குற்றம் இலாதது. இதன் வாய் சிவந்தது. மாதர்களின் மொழி கிளியின் மொழிக்கு ஒப்பிடப்பட்டுளது.

(5) குயில்

அழகுள்ளது; இதன்கீதம் இனிமை தருவது. இதன் நிறம் கறுப்பு, நீலம். இதன் வாய் சீரியது. இதன் இடம் பொழிலும் பழச்சோலைகளும். கொம்பிலிருந்து கீதம் எழுப்பும். இதன் உருவம் சிறியது. குயிற் பிள்ளை எனப் படும்.

(6) குருகுகள் (பறவைகள்)

ஒலி செய்வன.

(7) குருவி (கருங்குருவி)

ஒரு கரிக் குருவிக்குப் பெருமான் திருஅருள் புரிந்தனர்.

[திருவிளையாடல் என்னும் தலைப்பு 100 பார்க்க.]

(8) கொக்கு

இஃது இரைக்காகக் காத்து இருக்கும். கொக்கு உருவம் எடுத்த குரண்டாசுரனுடைய இறகைப் பெருமான் அணிந்துள்ளார்.

(9) கோழி

காலையிற் கூவும்.

(10) பறவை

இந்திரியங்கள் பறவைக்கு ஒப்பிடப்பட்டுள.

(11) பார்ப்பு

பறவைக் குஞ்சு 'பார்ப்பு' எனப்படும்.

(12) மயில்

அழகுள்ளது, கூத்தாடுவது; சிறப்புடையது. கார் காலத்தில் வளம் உடையது.

(13) வண்டு

அளி, அறுகால், அறுபதம் - என்பன வண்டைக் குறிக்கும். வண்டு தேனை நாடிச் சென்று தேன் உண்ணும். வண்டு ரீங்காரம் செய்யும். இரங்கற் பண் பாடும்.

தும்பிவண்டு:—அரச வண்டைக் கோத்தும்பி என்பர். இக் கோத்தும்பியை நோக்கி, 'நீ பூவிலுள்ள தினை அளவுத் தேனை உண்ணாதே; எப்போதும் ஆனந்தத் தேன் சொரியும் கூத்தப் பெருமானுடைய திருவடி மலரிடத்துச் சென்று ஊதி ரீங்காரம் செய்வாயாக' என்கின்றார் மணிவாசகர்.

கொன்றை மலரை விட்டு வண்டுகள் நீங்கா. மாதர்களின் கூந்தலில் உள்ள மலர்களில் வண்டு ஒலி செய்யும்.

தேன் நிறைந்து ததும்பும் மந்தார மலரில் வண்டுகள் உச்ச இசை (எடுத்தல் ஓசை)யும், மந்த இசை (படுத்தல் ஓசை)யும் எழுப்பும்.

(14) விட்டில்

விளக்குப் பூச்சி, தீயிற் புகும்.

## IV. மக்கள்

தலைப்பு 160 பார்க்க.

## V. விலங்குகள்

(1) அத்தி

'யானை' பார்க்க.

பெருமான் ஒரு யானையை உரித்தனர். *ஒரு யானைக்கு அருளினர்.

(2) ஆ (பசு)

ஊர்ப்பசு கனைக்க, குருட்டுப் பசு அதனுடன் கூடக் கனைக்கும். 'ஊராமிலைக்கக் குருட்டாமிலைக்கும்' என்பது பழமொழி.

பசு (தர்மப் பசு) சிவபிரான் வாகனம். கன்றை உடைய பசு கன்றைக் காணாவிட்டால் கதறும். 'கற்றாவின் மனம்போலக் கதறுதல்' என்பது பழமொழி.

---

* 'திருவிளையாடல்' தலைப்பு 100 (19) பார்க்க.

(3) ஆடு

தக்கன் செய்த யாகத்தில், தக்கனது இழந்த தலைக்குப் பதிலாக ஆட்டின் தலையை (வீரபத்திரர் வைத்தார்).

(4) ஆன்

(பசு) ஆன் நெய் கூறப்பட்டுள்ளது.

(5) ஆனை

'யானை' பார்க்க. ஆனைகள் கொடிய போர் செய்யும்.

(6) இடபம்

'விடை' பார்க்க. சிவபிரானுக்கு இடபம் உகந்த வாகனம். திருமால் சிவனை இடபமாய்த் தாங்கினார்.

(7) உழுவை

'புலி' பார்க்க. இதன்கண் நெருப்பு வீசும். இதன் தோலைப் பெருமான் அணிந்து உள்ளார்.

(8) உழை

'மான்' பார்க்க. மானின் கண் மாதர்களின் கண்களுக்கு உவமை கூறப்பட்டுள்ளது.

(9) ஏறு—'விடை' பார்க்க.

'சிவபிரான் வாகனம்' என்னும் தலைப்பு I-31 பார்க்க. சிவபிரானுடைய வாகனமும் கொடியும் ஏறு.

சிவபிரான் 'வானத்தவர் ஏறு' என்று கூறப்பட்டுள்ளார். ஊர் ஏறு, கண் கெட்ட ஊர் ஏறு, கோதிலா ஏறு, போர் ஏறு-என்று 'ஏறு' கூறப்பட்டுளது.

(10) ஏனம்

'பன்றி' பார்க்க. கரிய நிறத்தது ஏனம். பன்றிக் குட்டியை ஏனக் குருளை என்றார். வன்மை வாய்ந்த பன்றியின் உருவத்தைத் திருமால் எடுத்தனர்.

(11) கயம்

'யானை' பார்க்க. கயத்தைச் சிவபிரான் கொன்றனர்.

(12) கரி

'யானை' பார்க்க. இது வலிமை உடையது. காட்டில் உள்ளது. பெரிய கால்களை உடையது.

(13) களிறு

'யானை' பார்க்க. கரும்புபோல் இனிய பழங்களை உண்பது. மதம் உடையது. கட்டும் தறியை முறிப்பது.

(14) கன்று

(கண்ணபிரான்) கன்றால் விளா மரத்தை எறிந்தார். 'கன்றை நினைக்கும் தாய்ப் பசு போல' என்பது பழமொழி. நுந்து கன்று (தள்ளப்பட்ட கன்று) போல இருக்கின்றேன் என்று தம்மைப்பற்றி மணிவாசகர் கூறுகின்றார்.

(15) குதிரை

குதிரைப் பரி, பெருங் குதிரை என்று குதிரைகளான நரிகள் குறிக்கப்பட்டுள.

(16) கேழல்

'பன்றி' பார்க்க. கேழற் குட்டிகளுக்கு முலைகொடுத்த திருவிளையாடல் குறிக்கப்பட்டுளது. தலைப்பு 100 (8)

(17) சே 'ஏறு' பார்க்க

சிவபிரானது கொடி-சே (ஏறு)

(18) தகர் 'ஆடு' பார்க்க

யாகத்தில் ஆட்டின் ஊனைத் தேவர்கள் உண்பர்.

(19) நரி

நரிகளைப் பெரிய குதிரைகளாக ஆக்கினர் பெருமான்

(20) நாய்

ஊர் நாய், கடி நாய், சிறு நாய், புழுத்தலை நாய், பொல்லா நாய் - என நாய் விளக்கப்பட்டுளது. "நாயின் மேல் தவிசிட்டு," "நாய் சிவிகை ஏற்றுவித்த", "நாயிற் கடைப்பட்ட"—என்பன பழமொழிகள்.

(21) பரி

பரிமா—குதிரை பார்க்க. குதிரைப் பரி, பாய் பரி, வனப் பரி எனப் பரி விளக்கப்பட்டுள்ளது. பெருமான் ஆடற் பரிமேல் ஏறிவந்தனர். அப் பரி 'மாயனப்பரி' என்று கூறப்பட்டுளது.

(22) பன்றி

(ஏனம், கேழல், வராகம் பார்க்க.) ஏவுண்ட பன்றி – அம்பினால் இறந்த பன்றி கூறப்பட்டுள்ளது. இது பன்றிக் குட்டிகளுக்கு முலை கொடுத்த திருவிளையாடலைக் (தலைப்பு (100—8) குறிக்கும்.

சிவபெருமான் திருவடியைத் தேடத் திருமால் பன்றி யான வரலாறு குறிக்கப்பட்டுளது.

(23) புரவி

'குதிரை' பார்க்க. பெரிய குதிரையின்மேல் பாண்டி யனார் (சிவபெருமான்) வந்தது விளக்கப்பட்டுளது.

(24) புல்வாய்

'மான்' பார்க்க. மான் கன்றுக்குப் புலி முலை தந்த திருவிளையாடல் (தலைப்பு 188-6) குறிக்கப்பட்டுளது.

(25) புலி

'வேங்கை' பார்க்க. கானப் புலி, கானார் புலி, கொல் புலி, வன் புலி, போருகிர் வன் புலி - எனப் புலி கூறப் பட்டுள(து) இதனால் புலி காட்டில் உள்ளது, கொல்லும் குணத்தது, வலிமை வாய்ந்தது, போருக்குரிய நகத்தை உடையது என்பன பெறப்படும்.

(26) மா

'குதிரை', 'யானை' பார்க்க. பெருமான் குதிரையின் மேல் (மா மேல்) ஏறி வந்தார். ஒரு யானையை (மாவை) உரித்தார்.

(27) மாடு

'ஆள்வார் இல்லாத மாடு' என்பது பழமொழி.

(28) மான்

(சிவபிரான் கையில் ஏந்துவன,) 'சிவபிரான் உடை' என்னும் தலைப்புக்கள் 1-3(5),7 பார்க்க. உழை, புல்வாய் என்னும் தலைப்புக்கள் பார்க்க.

மான் நெடுங்கண்ணை உடையது. நீர் ஆசை கொண்ட மான் கூட்டம் பேய் தேரை (கானல் நீரை) நல்ல நீர் எனக் கருதிப் பருகச் செல்லும். வலையில் அகப்பட்ட மானின் கண் மாதரின் கண்ணுக்கும், பார்வதியின் கண்ணுக்கும் உவமை கூறப்பட்டுளது. மான் போன்றவள் தேவி எனவும் கூறப்பட்டுளது.

(29) முயல்

மென்மை வாய்ந்தது.

(30) யானை

(அத்தி, ஆனை, கயம், கரி, களிறு, மா பார்க்க.) 'யானை முதலா எறும்பு ஈறாய்' என்பது பழமொழி. பெருமான் ஒரு யானையை உரித்தார். இருகை யானை ஒத்திருந்தேன் என்று மணிவாசகர் தம்மைக் குறிக்கின்றா(ர்).

(31) வராகம்

'பன்றி' பார்க்க. "அழகிய மேனியுடைய வராகமே" என்று பெருமானை மணிவாசகர் அழைக்கின்றார். இது பன்றிக் குட்டிகளுக்குப் பெருமான் தாய்ப் பன்றியாய்ப் பால் கொடுத்த திருவிளையாடலைக் [100 (8)] குறிக்கும்.

(32) விடை

இடபம், ஏறு, சே—பார்க்க:— 'சிவபிரான் வாகனம்' என்னும் தலைப்பும் (I-31) பார்க்க. சிவபிரானுக்கு மிக உகந்த வாகனம் விடை. அவர் ஏறும் விடை 'திண் போர் விடை, மழவிடை, மால் விடை—என விளக்கப் பட்டுளது.

(33) விருகம் (மிருகம்)

பல் விருகம் என வந்துள்ளது.

(34) வேங்கை

'புலி' பார்க்க. வேங்கை வலிமையுடையது. இதன் தோலைப் பெருமான் உடையாகக் கொண்டுள்ளார்.

(35) வேழம்

'யானை' பார்க்க. பெருமான் உரித்த யானை அகன்ற, பெரிய, நீண்ட துதிக்கையின்கண் தொளையுடைய அழகிய யானை என்று விளக்கப்பட்டுள்ளது.

---

# 5. *இலக்கணப் பகுதி

திருவாசகத்தில் உள்ள இலக்கண விசேடணங்களுள் சில ஒளிநெறியிற் காட்டப்பட்டுள. அவற்றுள் சில இக் கட்டுரையிற் சுருக்கமாகக் காட்டப்படுகின்றன.

[உ - ம்: உதாரணம்]

## 1. அசைச் சொற்கள் [1]

ஆங்கு, ஆல், கொல், முதலிய.

உ - ம்: பற்று ஆங்கு அது பற்றி, ஆள்வரால், எஞ்ஞான்று கொல் சாவதுவே.

## 2. அணிகள் [2]

### 1. இல் பொருள் உவமை அணி [2-1]

உ - ம்: ஆடகச் சீர் மணிக்குன்று.

### 2. உருவக அணி [2-2]

உ - ம்: i அன்பெனும் ஆறு கரையது புரள.

ii இருவினை மாமரம்.

iii பிறவி ஐவா யரவம்.

iv வாழ்வெனும் ஆழி - தையலார்என்னும் சுழி.

### 3. உவமை அணி [2-3]

பெருநீரறச் சிறுமீன் துவண்டாங்கு நினைப் பிரிந்த வெருநீர்மை யேனை.

### 4. முரண் அணி [2-5]

உ - ம்: i கண்டங் கரியான் வெண்ணீற்றன்.

ii வெளியாய் கரியாய்.

---

* இப் பகுதியில் உ - ம் குறியிட்ட உதாரணங்களின் பதிக எண் ஒளி நெறியிற் காணலாம்.

### 3. 'அல்' ஈறு எதிர்மறைப் பொருளில் [3]

உ - ம் : புறமெனைப் போக்கல்.

### 4. அளபெடை [5]

உ - ம் : i நடப்பன நடாஅய்.

ii நிற்பன நிறீஇ.

### 5. அன்மொழித் தொகை [6]

உ - ம் : i பால்மொழி.

ii பணைமுலை.

### 6. ஆகு பெயர் [7]

உ - ம் : i 'சகந்தான் அறிய'

[சகம் : சகத்துள்ளோர்].

ii மானேர் பங்கா [மான் (கண்) போன்ற கண்ணை உடைய பார்வதி].

### 7. இசை யெச்சம் [8]

உ - ம் : "போனகம் ஆனவா பூவல்லி கொய் யாமோ."

['ஆனவா' என்பதன் பின் 'பாடி' எனச் சேர்த்துப் பொருள் கொள்ள வேண்டும்.]

### 8. இடைநிலைத் தீபம் [9]

உ - ம் : i "முட்டிலேன் தலைகிறேன்"

[முட்டிலேன் தலை; தலைகிறேன்.]

ii தாதாய் மூவேழுலகுக்குந் தாயே.

[தாதாய் மூவேழுலக்கும் ;

மூவேழுலகுக்குந் தாயே.]

## 9. எதுகை [10]

### 1. எதுகை அழகு

உ - ம்: ஒருங்கு திரை ; பெருங் குதிரை.

[ஒருங்கு+திரை ; பெருங்+குதிரை.]

### 2. எதுகை விசேடம்

உ - ம்: i அழகே - திகழா.

[அழகே புரிந்திட்டு, திகழா நின்று.]

ii சோமன் - தூய்மை.

[சோமன் கலை - தூய்மைகள் செய்தவா]

iii பூவலர் - மாதுநல்.

[பூவலர் கொன்றை - மாது நல்லாள்.]

## 10. ஏகாரம் [11]

உ - ம்: i அடியே நினைந்துருகி (அடியே என்பதில் ஏகாரம் பிரிநிலை.)

ii உயிரோயாதே (ஏகாரம் எதிர்மறைப் பொருளை உணர்த்திற்று.)

iii சாவதுவே (இதில் 'ஏ' ஈற்றசை.)

iv அடியார்தாம் இல்லையே—(இல்லையோ).

(ஏகாரம் வினப் பொருளில் வந்துள்ளது).

v புகவே தகேன் (ஏகாரம் - தேற்றப் பொருளில் வந்துள்ளது).

## 11. ஓகாரம் [12]

### 1. 'ஓ' - இரக்கக் குறிப்பு

உ - ம்:

" விடிலோ கெடுவேன் "

2. 'ஓலம்' என்னும் பொருளில்

உ-ம்: i "அரனேயோ என்றென்று"

ii "அல்லற் பிறவி அறுப்பானே" 'ஓ' வென்று.

## 12. குறை [14]

1. இடைக் குறை

உ-ம்: i கூங்குயில் [கூவுங் குயில்]

ii போம் வழி [போகும் வழி]

2. கடைக் குறை

உ-ம்: i ஆமா கேள் (ஆமாறுகேள்).

ii மாளா வாழ்கின்றாய். [மாளாது வாழ்கின்றாய்]

iii தீதிலா நன்மை. [தீதிலாத நன்மை].

iv அறமுதலா நான்கு. [அறமுதலாக நான்கு].

v ஆடுமா பாடி. [ஆடுமாறு பாடி].

3. முதற் குறை

உ-ம்: கலைகள் - மேகலைகள்.

## 13. சாரியை [16]

1. 'அத்துச்' சாரியை தொக்கு நிற்பது

உ-ம்: ஏனப்பின் - நடக்கும்.

[ஏனத்தின் பின் நடக்கும்].

2. 'இன்' சாரியை

உ-ம்: ஆக்கையின் திண்வலை.

## 14. தன்வினை பிறவினைப் பொருளில் [17]

உ-ம்: "நிகழ்ந்தோன்" இது 'நிகழ்வித்தவன்' என்னும் பொருளில் வந்துள்ளது.

## 15. திணை [18]

### 1. உயர்திணை அஃறிணைப் பெயர்கள் ஒருங்கு இயைந்து அஃறிணை முடிபு ஏற்றது

உ-ம்: "கொடிறும் பேதையும் கொண்டது விடாது" (இழிவினால் 'விடாது' என்னும் அஃறிணை முடிவு).

### 2. திணைபால் வழுவமைதி

உ-ம்: i "அன்பு ஆர், யாம் ஆர்"

அன்பு எத்தகையது, யாம் எத்தகையோம் என்பது பொருள். ஆதலால் 'அன்பார்' என்பதில் 'ஆர்' அஃறிணைக்கண் வந்தது. திணை வழுவமைதி.

ii "தாதாய் மூவேழுலகுக்குந் தாயே"

இங்குச் சிறப்பின் 'ஆண்பால்' 'பெண்பால்' ஆயிற்று.

## 16. துணைச் சொற்கள் [19]

### 1. 'அது' துணைச்சொல்

உ-ம்: i இளமதி அது வைத்த.

ii நிழல் அது போல்.

### 2. 'அவர்' துணைச்சொல்

உ-ம்: அஞ்சுவார் அவரைக் கண்டால்.

### 3. 'அவன்' துணைச்சொல்

உ-ம்: பிரான் அவன் மருவும் திருவாரூர்.

### 4. 'அவை' துணைச்சொல்

உ-ம்: தடமதில்கள் அவை மூன்றும்.

5. 'தங்கள்' துணைச்சொல்

உ - ம்: அடியார்கள் தங்கள் அருட் குழாம்.

6. துணை வினை

உ - ம்: உய்ந்தொழிந்தோம்.

(உய்ந்தொழிதல் என்புழி ஒழிதல் துணை வினையாகும்).

## 17. மரூஉ, போலி, விகாரம் [21]

1. மரூஉ

உ - ம்: i அருமந்த [அருமருந்தன்ன].

ii நைஞ்சேன் - [நைந்தேன்].

2. போலி

உ - ம்: நிலம் - [நிலன்]

3. விகாரம்

(1) வலித்தல் விகாரம்

உ - ம்; i தொழுப்பு - [தொழும்பு].

ii நற்றுங்கதி - [நன்றுங்கதி].

(2) விரித்தல் விகாரம்

உ - ம்: "இன்னிதாய் ஆண்டு கொண்டு"

['இனிதாய் ஆண்டு கொண்டு' என்பது 'இன்னிதாய் ஆண்டு கொண்டு' என வந்தது. விரித்தல் விகாரம்.]

## 18. மாட்டு [22]

உ - ம்: போற்றித் திரு அகவல் 10ஆம் வரியிலுள்ள "வழுத்துதற் கெளியாய்" என்பது வரி 75இல் "அவனியில் வந்து" என்னும் வினை கொண்டு முடிகின்றது. இது - மாட்டு.

## 19. முதனிலைத் தொழிற்பெயர் [23]

உ - ம்: 'வெண்தலை முழைையிற் பதியுடை வாளர'. [பதி - பதிதல்].

## 20. முற்று எச்சப் பொருளில் வந்தது [24]

உ - ம்: "வந்தனை.......புகுந்த" [5-26].

[என்பது "வந்து புகுந்த" எனப் பொருள் தந்து முற்று எச்சப் பொருளில் வந்துள்ளது.]

## 21. மோனை [25]

[முதல் எண் - பதிக எண், இரண்டாவது எண் பாட்டின் எண், மூன்றாவது எண் அடியின் எண்.]

### 1. முற்று மோனை

உ - ம்: i "பன்னாட் பரவிப் பணி செய்யப் பாத மலர்" 13-9-1.

ii "மூத்தானே மூவாத முதலானே முடிவில்லா" 38-8-1.

### 2. மோனை யின்மை

உ - ம்; i "இடபமதாய்த் தாங்கினன் திருமால் காண் சாழலோ" 12-15-4.

ii "வித்தகத் தேவர்க்கே சென்றாதாய் கோத்தும்பீ" 10-6-4.

[இவை போன்ற பிற ஒளி நெறியிற் காண்க.]

## 22. விகுதி [26]

### I. விகுதிகள்

(1) அர் - விகுதி

உ - ம்: கொம்பர்.

(2) ஆர் - விகுதி

உ - ம்: i சூரியனுர். ii பாண்டியனுர்.

(3) பான் - விகுதி

உ - ம்: காண்பான் நனி வாட.

(4) மார் - விகுதி

உ - ம்: ஏலவார் குழலிமார் ('மார்' பன்மை விகுதி).

(5) மின் - விகுதி

உ - ம்: i இகழுமின். ii வம் மின்.

(6) மீர் - விகுதி

உ - ம்: நங்கைமீர் [பன்மை முன்னிலே].

(7) வான் - விகுதி

உ - ம்: ஆட்கொள்வான் வந்து.

## II. விகுதி இடைநிலை கெடுதல்

"வருக என்னெனே" [என்னே வருக என்] என்புழி என்பாய் என்பது விகுதியும் இடைநிலேயும் புணர்ந்து கெட்டு 'என்' என்று ஆயிற்று. இதற்கு 'வருக' என்று கட்டளேயிடுவாய் என்பது பொருள்.

—கதிர்மணி விளக்கம் (சதகம்) பக்கம் 450.

## III. விகுதிமேல் விகுதி

உ - ம்: i செல்மின்கள். ii விடுமின்கள்.

## IV. வினையெச்ச விகுதி

உ - ம்: கால்.

"நடுவாய் நில்லாது ஒழிந்தக்கால் நன்றே"

## 23. வியங்கோள் வினைமுற்று [27]

உ - ம்: i 'எங்கொங்கைசேரற்க' ii 'போற்றி அருளுக'

## 24. வினைத்தொகை [28]

உ - ம்: i காய்சின ஆலம். ii குரை கழல்.

## 25. வினைமுற்று [29]

உ - ம்: "பொன்னூசலாடாமோ" 'ஆடுவாமோ' என்னும் தன்மை பன்மை முற்று 'ஆடாமோ' என எதிர் கால இடைநிலை கெட்டு வந்துள்ளது.

## 26. வினையாலணையும் பெயர் [30]

உ - ம்: 'மன்றினுள் ஆடி போற்றி'
[ஆடி - ஆடுபவர்].

## 27. வேற்றுமை [33]

### I. உருபுகள்

(1) மூன்றும் வேற்றுமை உருபு
உ - ம்: ஒடு. 'அயனொடு மால்'.

(2) நான்காம் வேற்றுமை உருபு
உ - ம்: கு. i "சக்கரம் மாற்கு அருளியவாறு"
ii [கு - பொருட்டு]. 'என்னை ஆண்டாய்க்கு'
[என்னை ஆளாகக் கொண்ட நின் பொருட்டு].

(3) ஐந்தாம் வேற்றுமை
உ - ம்: "நாயிற் கடைப்பட்ட நம்மை"
(நன். சூத் 299 உரை).

(4) ஆறும் வேற்றுமை
உ - ம்: 'அ' - "என நெஞ்சில்"
[என - என்னுடைய].

(5) ஏழாம் வேற்றுமை

| | |
|---|---|
| உ - ம்: i அகம். | "விண்ணகத் தேவர்" |
| ii இடை. | "சடை இடைக் கங்கை" |
| iii இல். | "கடலில் வலை வானன்" |
| iv உள். | "காயத்துள் அமுது" |
| v கண். | "சேவடிக்கண் நம் சென்னி" |
| vi கீழ். | "அரனடிக் கீழ்" |
| vii தலை. | "வலைத் தலை மான்" |
| viii பால். | "மண்பால் மதுரை" |
| ix மிசை. | "பரிமிசை வந்த வள்ளல்" |
| x முன். | "கடைத்தலை முன்" |
| xi மேல். | "பார்மேல் சிவபுரம்" |
| xii வயின். | "சேண் வயின்" |
| xiii வாய். | "வீதி வாய்க் கேட்டலுமே" |

## II. வேற்றுமை உருபு தொக்கது

எந்தை பெருமானே - [எந்தைக்கும் பெருமானே]. [நான்கன் உருபும், எச்ச உம்மையும் தொக்கு நின்றன.] (கதிர்மணி விளக்கம் (சதகம்) பக்கம் 116.)

## III. வேற்றுமை உருபு மயக்கம்

i "உன்னைப் போற்றி". 5-1

(இரண்டாம் வேற்றுமை நான்கன் பொருளில் வந்தது)

(கதிர்மணி விளக்கம் (சதகம்) 12)

ii 'வாயிடைப் பருகி' - 3-81. வாயால் பருகி [ஏழன் உருபு மூன்றன் பொருளில் வந்துள்ளது.]

iii 'பொன்னகர் வாய் நீ போந்து' 5-53.

(பொன்னகரினின்றும் நீ போந்து) 'வாய்' ஏழன் உருபு ஐந்தன் பொருளில் வந்துள்ளது.

கழக வெளியீடு: கஉஎடு

பதிப்பாளர்:
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்.,
1/140, பிராட்வே, சென்னை-1.
தலைமை நிலையம்:
98, கீழைத் தேர்த்தெரு, திருநெல்வேலி-6.

அப்பர் அச்சகம், சென்னை-1.